ஸ்ரீ

# விராட நகரத்தின் இரகசியம்

சென்னைத் தொண்டை மண்டலம்
உயர்தர கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர்
மே. சக்கரவர்த்தி நயினர்,

T010577
Sarasvati Mahal Library. Thanjavur

அமரர். P. ..., I.A.S.
(முன்னாள் ... அறநிலையத் துறை ஆணையர்)
அவர்களின் நினைவாக அன்பளிப்பு.
அளிப்பவர்:
திரு. எஸ். ராஜேந்திரன் B.E..
... நகர், தஞ்சாவூர்.

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,
புக்ஷாப் புதுமண்டபம், மதுரை.

காபிரைட்] 1926. [விலை அணு 12.

Printed at
The Excelsior Press,
Madura.

# முகவுரை.

---

"நல்லோர்கள் போயவழி நாலடிப் போயினும்
பொல்லாங்கு நீங்கிப் புகழாய்ப் புண்ணியமுமாகும்"

என்னும் பொன்னுரையைக் கருத்திலுன்னுவோரெவரும், நன்னெறியைக்கடைப்பிடித்தொழுகிநல்லிசைநாட்டிய மன்னர், மதிவல்லோர், மாண்புடைப் பெரியோர் முதலியவர்களுடைய சரித்திரங்களையே பெரிதும் கற்கவும் கேட்கவும் விரும்புவர். அங்ஙனம் பெரிதும் விரும்பப்படும் ஆன்றோர் சரித்திரங்களெல்லாம் நமது செந்தமிழ் மொழியில் யாப்பு நடைபடக் கோத்த செய்யுள் நூல்களாகவே இயன்றுள்ளன. அவை யாவும் மதிவல்லார்க்கே புலனாகி மாணவர்க்கும் மற்றவர்க்கும் புலனாகாதிருத்தலின், மக்கள் தொகுதியில் பெரும்பாலராயுள்ளோரான மேற் கூறியார், பண்டைக்காலத்திலிருந்த நமது பாரத புத்திரர்களின் அறிவின் விரிவும், கல்வியின் பெருக்கும், ஆண்மையின் உயர்வும், கேண்மையின் தர்மமும், அறியாதவர்களாகி நமது நாட்டை வெறுக்கத்தலைப்பட்டனர். இக்குறையை அறிந்த அறிஞர் பலர் இப்பொழுது, பண்டைய தண்டமிழ்ப் புராணேதிகாசங்களில் பொதிந்துள்ள அரிய பெரிய விஷயங்களைத் தொகுத்தும் விரித்தும் செந்தமிழ் உரைநடையில் வெளியிடுவாராயினர். அவை யெல்லாம் தமிழுலகிற்குப் பயன்படுமாறு அமைந்தமையின், அரசாங்கத்தார் கல்விகற்கும் மாணவர்கட்குப் பாடமாகவும், உபபாடமாகவும் வைத்துக் கற்கும்படி செய்து வருகின்றனர். இது மொழியின் வளர்ச்சிக்கும், அறிவின் பெருக்குக்கும் ஆதரவேயாகும்.

அடியேனும் இந்நன் முறைக் கியைய, பாரதப் பெருங் காப்பியத்திலே விராடபருவம் என்னும் ஒரு பகுதியிலே

யுள்ளபொருள்செறிந்த கதையைச்சுருக்கமாக,இடக்கரான விஷயங்களை முதனூலுக்கு விரோதமில்லாமல் நீக்கிச் சிறுவர் சிறுமியர் ஆகிய இருபாலரும் விரும்பி வாசிக்கத்தக்க விதமாகச் செந்தமிழ் வசன நடையில் இயற்றியுள்ளேன். இடையிடையே அரிய நீதிகளைக் கூறும் செய்யுட்களையும் பொருத்தமான இடங்களிற் சேர்த்திருக்கின்றேன்.

இந்நூலை அச்சிடுங்காலத்து ஒப்பு நோக்கி வழுக் களைந்து உதவிய எமது இயற்றமிழாசிரியர், தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் கொ. இராமலிங்கத்தம்பிரான் அவர்களுக்கும், தொண்டை மண்டலம் உயர்தரக் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத் எதிராஜுலு நாயுடு அவர்களுக்கும், இப்பதிப்பில் சில முக்கிய திருத்தஞ் செய்துதவிய எனதன்பிற்குரியாரும்,மதுரைத் தமிழ் வித்வானுமாகிய ஸ்ரீ நா. கிருஷ்ணசாமி நாயுடவர்களுக்கும் நெஞ்சார நன்றி செலுத்தும் கடமைபூண்டுள்ளேன்.

இக்கதை நிகழ்வதற்கு இடமாயிருந்தது, விராடநகரமாதலினாலும், பாண்டவர்கள் அந்நகரத்தில் அஞ்ஞாத வாசத்தை இரகசியமாயிருந்து கழித்ததினாலும் இந்நூலுக்கு விராடநகரத்தின்இரகசியம் எனப்பெயரிடலாயிற்று.

இந்நூலை வித்தியா இலாகா அதிகாரிகளும்,கலாசாலைப் போதகாசிரியர்களும் அங்கீகரித்து, மாணவர்களுக்கு உபபாடமாக வைதது, எனது இம்முயற்சியை மேலும் மேலும் ஊக்குவார்களென்று மிகவும் பிரார்த்திக்கிறேன்.

| | | |
|---|---|---|
| பாலபாரதி விலாசம்<br>சென்னை. | } | இங்ஙனம்<br>மே. சக்கரவர்த்தி. |

# அட்டவணை.

| அத்தியாயம். | பக்கம். |
| --- | --- |


1. பூர்வ வரலாறு ... 1
2. இரகசிய ஆலோசனை 7
3. சேவகத்திறம் ... 19
4. மற்போர்த்திறம் ... 28
5. கீசகன் வரலாறு ... 37
6. கீசகனும் விரதசாரணியும் ... ... 41
7. விரகதாபம் (சகோதர வாஞ்சை) ... 48
8. திரௌபதையும் வீமனும் ... ... 67
9. போலிக்காதல் ... 72
10. கீச்கன் வதம் ... 75
11. உபகீசகர்கள் வதம் 81
12. ஒற்றர் சுற்றுப் பிரயாணம் ... ... 90
13. ஆபத்தில் அரிய உதவி ... ... 97
14. வல்லமையில்லார் வாய்வளப்பம் ... 107
15. மாற்றானுக் கிடங் கொடேல் ... 113
16. மேன்மக்கள் சொற் கேள் ... ... 123
17. ஆநிரை மீட்சியும் போரும் ... ... 138
18. கோபம் பாவத்திற் கஞ்சாது ... ... 156
19. உரு வெளிப் பாடு ... ... 163
20. விராட நகரத்தின் இரகசியம் வெளியாதல் ... ... 170
21. உத்தரை திருமணம் ... 175

# விராட நகரத்தின் இரகசியம்.

I

## அத்தியாயம் 1—4.

திணைத்துணைய ராகித்தம் தேசுள் ளடக்கிப்
பனைத்துணையார் வைகலும் பாடழிந்து வாழ்வர்;
நினைப்பக் கிடந்த தெவனுண்டாம்? மேலை
வினைப்பயன் அல்லாற் பிற.

—நாலடியார்.

II

## அத்தியாயம் 5—11.

மாசிலாத குடிப்பிறப்பு மானம் கீர்த்தி யிவைமாய
ஆசை நோயா னதுபெருக அனங்க சரத்தா லேவுண்டு
ஊசலின்றிக் குலத்தவரைக் குலையச்செய்தார்குலத்தோடு
நாச மெய்திப் பழியோடு நரகம் உறுவர் தவறுமே.

—கம்பர்.

III

## அத்தியாயம் 12—21.

தனக்குத் துணையாகித் தன்னை விளக்கி
இனத்துள் இறைமையுஞ் செய்து—மனக்கினிய
போகம் தருதலால் பொன்னே அறத்துணையோ(டு)
ஏகமா நண்பொன்று மில்.

— அறநெறிச்சாரம்.

# விராட நகரத்தின் இரகசியம்.

## அத்தியாயம் 1.

### பூர்வ வரலாறு.

சகல வளங்களும் நிறைந்த இப்பரதகண்டத்தில், பூர்வம் சந்திரகுலத்திலே புதன் புரூரவன் ஆயு நகுஷன் யயாதி பூரு துஷ்யந்தன் பரதன் ஹஸ்தி குரு பரீக்ஷித்து முதலிய பலஅரசர்கள் தோன்றியபின், அம்மரபில் சந்தனு வென்னும் அரசன் உதித்து, அத்தினபுரியை அரசிருக்கை நகராகக்கொண்டு, குருநாட்டை அரசுபுரிந்து வந்தான். அவனுக்கு, முதல் மனைவியாகிய கங்கையின் வயிற்றில் வீடுமன் எனும் புத்திரனும், இரண்டாவது மனைவியாகிய யோசனகந்தியின் வயிற்றில் சித்திராங்கதன் விசித்திர வீரியன் எனும் இரு புத்திரரும் தோன்றினர். வீடுமன், தந்தையின் நன்மையின் பொருட்டுப் பிரமசரிய விரதம் பூண்டு விவாக மின்றியே இருந்து விட்டான். சித்திராங்கதன் மேன் மாளிகையில் துயிலுகையில் அப்பேர் கொண்ட கந்தருவனொருவனாற் கொல்லப்பட்டு இறந்து விட்டான். அவர்களிருவரும் அங்ஙனமாகவே, விசித்திர வீரியனென்பவனே தந்தையின் அரசுரிமையை அடைந்தான்.

விசித்திர வீரியன் அம்பிகை அம்பாலிகை எனும் இரண்டு பெண்களை மணந்தான். அவ்விருவருள் வியாச முனிவர் அருளால், அம்பிகை திருதராட்டிரனையும், அம்பாலிகை பாண்டுவையும் பெற்றனர். அம்பாலிகையின் தாதிப் பெண் விதுரனைப்பெற்றாள்.

திருதராட்டிரன் பிறவிக் குருடனாதலால், பாண்டு விதுரனை மந்திரியாகக் கொண்டு, திருதராட்டிரனுக்கு முடி சூட்டித் தானே அரசாங்க காரிய முழுவதையும் பார்த்து வந்தான்.

திருதராட்டிரன் காந்தாரி என்பவளை மணந்து துரியோதனன் முதலிய நூறு புத்திரர்களையும் துச்சலை எனும் ஒரு புத்திரியையும் பெற்றான். பாண்டு, குந்தி, மாத்திரி எனும் இரண்டு பெண்களை மனைவியாக வரித்தான். அவ்விருவர்களில், குந்தி, கன்னிப்பருவத்தினளாய்த் தன் தந்தையின் இல்லத்தில் வதியும்போது துருவாசமுனிவர் அவளுக்கு ஐந்து மந்திரங்களை உபதேசித்தனர். பேதமைப் புத்தியால் உடனே அம்மந்திரத்தைப் பரிசோதிக்கக் கருதி, அரண்மனையின் அந்தரங்கமான ஓரிடத்திலிருந்து சூரியனை நினைத்து, ஒரு மந்திரத்தை உச்சரித்தாள். சூரியன் அக்கணமே அவள் முன் தோன்றி அவளுக்கு ஒரு மகவளித்து மறைந்தான். அவள் அப்பருவத்தில் அம்மகவைப் பெற்றதற்கு மிகவும்நாணி, அதனைஒருமிதவைப்பேழையில் வைத்துப் பேராற்றிற் போக விட்டனள். அப்பேழையைத் திருதராட்டிரனது தேர்ப்பாகன் கண்டெடுத்து, அதிலிருந்த குழந்தையைத் தன் குழந்தையாகப் பாவித்துக் கன்னன் எனப் பெயரிட்டு வளர்த்து வந்தான். குந்தி கன்னிப்பருவம் நீங்கிப் பாண்டுவை மணந்த பின்பு,

எமன், வாயு, இந்திரன் முதலிய தேவர்களை முனிவர் உபதேசித்த மந்திரத்தால் உபாசித்து, முறையே தருமன், வீமன், அருச்சுனன் என்னும் புத்திரர்களைப் பெற்ருள். எஞ்சியிருந்த ஒரு மந்திரத்தைத் தன் சக்களத்தியாகிய மாத்திரிக்கு உபதேசித்தாள். அவள் அம்மந்திரத்தால் அசுவனி தேவர்களை யுபாசித்து நகுலன் சகாதேவன் என்னும் இரட்டைப் பிள்ளைகளைப் பெற்ருள்.

பாண்டுமன்னன் ஒருநாள், வேட்டையாடக் கருதித் தன் மனைவியரிருவரையும் உடனழைத்துக்கொண்டு காட்டிற்குச் சென்ருன். அங்கே சென்று, அவன் மிருக வேட்டையாடுகையில் மான் வடிவத்துடனிருந்த ஒரு முனிவரைக் கண்டு அறியாமல் அம்பாலெய்தான். அம் முனிவர் அவனுக்குக் கடுஞ்சாபமிட்டனர். அதனுல் அவன் சின்னுளிருந்து அச் சாபத்தின்படியே இறந்து போனுன்.

பாண்டுமன்னன் மாண்டபின்பு, தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகிய ஐவரும் திருதராட்டிரன் பாதுகாப்பில் துரியோதனுதியர் நூற்றுவருடன் கூடி விளையாடி வாழ்ந்து வந்தார்கள். அப்பருவத்திலேயே வீமன் புயவலியில் நூற்றுவரினும் விஞ்சி விளங்கி, அவர்களுக்கு அச்சத்தை விளைத்து வந்தான். அதனுல் அவர்கள் அவன் மீது அழுக்காறுகொண்டு, அவனுக்குப் பல இடையூறுகள் இழைத்து வந்தனர். அத்தனைக்கும் அவன் தப்பிப் பிழைத்தான்.

பாண்டவர் ஐவர்க்கும் துரியோதனுதியர் நூற்றுவர்க்கும் பெரிய பாட்டனுராக விளங்கும் வீடுமர், இவ் விளைஞர் நூற்றைவர்க்கும்கிருபாசாரியரைக்கொண்டும்,துரோணுசாரி

யரைக் கொண்டும் படைக்கல வித்தைகளைப் பயிற்றுவித்த னர். அப்பயிற்சியில் துரியோதனாதியரைவிடப் பாண்ட வரே சிறந்து விளங்கினார்.

பின்பு வீடுமர், திருதராட்டிரனோடும், விதுரனோடும் ஆலோசித்துச் சகல குணசம்பன்னனாய் விளங்கும் தருமபுத் திரனை இளவரசனாக்கி முடி சூட்டினார். அதுகண்டு துரியோ தனன் அவர்கள் மீது அழுக்காறு கொண்டு, தன தந்தை யிடத்துக்கூறி அவர்களை வாரணாவதத்தி லிருந்து அரசா ளும்படி கட்டளையிடச் செய்தனன். அவனும் அங்ங னமே கட்டளையிட அவர்களும் மூத்த தாதையின் மொழிப் படியே வாரணாவதஞ் சென்று வதிந்தனர்.

பாண்டவர்கள் அத்தினபுரியை விட்டு அகன்றும், துரியோதனன் அவர்கள் மீது கொண்ட அழுக்காறு அகல வில்லை. மீண்டும் அவன் அவர்கள் ஐவரையும் ஒருமிக்கக் கொல்லக் கருதி, தந்தை திருதராட்டிரனோடும், மந்திரி புரோ சனனோடும் சதியாலோசனை செய்து, வாரணாவதத்தில் அரக்குமாளிகை யொன்று கட்டி, அதில் அவர்களைக் குடி யேற்றி இரவில் எவரும் அறியா வண்ணம் தீ வைத்துக் கொளுத்தி விடுவதென்று முடிவு செய்து கொண்டனன். அவ்வாறே அவன் வாரணாவதத்தில் அரக்கு மாளிகை யொன்றுகட்டி முடித்துப் பாண்டவர்களை அதில் குடியேற்று வித்தனன். இவ்வஞ்சகத்தைப் பாண்டவர்கள் விதுரனே விய சிற்பியாலறிந்து, அம்மாளிகையினுள் சுரங்கமொன்று செய்துகொண்டு, துரியோதனன் அம் மாளிகையைக் கொளுத்துவதற்கு முன் தாங்களே அதைக் கொளுத்தி விட்டுச் சுரங்கத்தின் வழியாய்ச் சென்று, எவரும் அறியா

வண்ணம் ஐவரும் அவர்கள் தாய் குந்தியும் இடும்ப வனம் போய்ச் சேர்ந்தனர்.

அவர்கள் அவ் வனத்தை யடைந்ததும், ஓர் அரக்கன் வந்து வீமனை எதிர்த்தான். வீமன் அவனோடெதிர்த்து அவனைக்கொன்று அவன் தங்கையாகிய இடும்பியை மணந்தான். அவன் அவளுடன் சிலநாளிருந்து கடோற்கசன் என்னும் ஒரு புத்திரனைப் பெற்று, அப்புத்திரனையும் மனைவியையும் அவ் வனத்திலேயே இருக்கவெனப் பணித்துப் பின்பு, தன் சகோதரர்களுடனும், தாயுடனும் பார்ப்பன வேடம் பூண்டு வேத்திரகிய நகரை நண்ணினன்.

பாண்டவர் அந் நகரடைந்ததும், அவ் வூரை வருத்தி வந்த பகாசுரன் என்னும் இராக்கதனைக் கொன்று அவ்வூராரின் துன்பத்தைக் களைந்து, அவர்களால் நன்கு மதிக்கப் பெற்றுச் சிலநாள் அங்கேயே தங்கியிருந்தனர்.

அங்ஙனம் அவர்களிருக்கின்ற காலத்து, அந்தணனொருவன் அவர்களைக் கண்டு, பாஞ்சால தேசத்தரசன் புத்திரி திரௌபதிக்குச் சுயம்வரமென அறிவித்தனன். அவர்களும் அதைக் காண்போம் எனப் பாஞ்சால தேசத்தைப் போயடைந்தனர். ஆங்கடைந்ததும், அர்ச்சுனன் பாஞ்சால தேசத்தரசன் தன் புத்திரி சுயம்வரத்துக்கென அமைத்திருந்த பொறியின் இலட்சியத்தை அறுத்து வீழ்த்தித் திரௌபதையை யடைந்தான். பின்பு தாயின் சொற்குப் பழுதுவராவண்ணம் ஐவரும் விதிப்படி திரௌபதியை மணந்தனர்.

இது செய்தியறிந்த திருதராட்டிரன், விதுரரின்சொற்படி பாண்டவர்களைத் திரௌபதியுடன் வரவழைத்து,

அவர்களுக்குக் காண்டவவனத்தைச் சார்ந்த பாதி இராஜ்யத்தைக் கொடுத்தனன். பெரிய தந்தையார் அளித்த அவ்வனத்தைக் கண்ணபிரானருளால் இந்திரப்பிரத்த மென்னும் ஒரு அழகிய நகராக நிர்மாணஞ் செய்து கொண்டு, செய்வதற் கரியதும் பெருமையைத் தருவதும் புகழ்தற் குரியதுமான இராஜசூய யாகத்தைச் செய்து பாண்டவர் அந் நகரத்தில் பெரும் புகழுடன் வாழ்ந்து வந்தனர்.

அவர்கள் இங்ஙனம் புகழோடு வாழ்வதைக் கண்ட துரியோதனன் பொறாமை கொண்டு, தரும புத்திரனைத் தந்திரத்தால் தன் நகருக்கு வரவழைத்தான். உடனே தருமனோடு தனக்குப் பதிலாகத் தன் மாமன் சகுனியைச் சூதாடச் செய்து, அவனது நாடு நகரம் முதலிய செல்வங்களெல்லாவற்றையும் பறித்துக் கொண்டு, அவனையும் அவனது தம்பிமாரையும் அவர்களது பத்தினியான பாஞ்சாலியையும் அடிமையாக்கிக் கொண்டான்.

அங்ஙனம் அவர்கள் தனக்கு அடிமையானதும் துரியோதனன், தன் தம்பி துர்ச்சாதனனைக் கொண்டு, திரௌபதியைச் சபையில் நிறுத்தித் துகிலுரியச் செய்தான். அப்பொழுது அவள் கண்ணபிரானை மனத்தில் நினைத்துத் துதித்துத் தன் மானத்தைக் காப்பாற்றியருளப் பிரார்த்தித்தனள். அப்பரந்தாமனும் அவள் பக்திக்கிரங்கி அவளுக்கு மேலும் மேலும் ஆடை வளரச்செய்து அவள் மானத்தைக் காப்பாற்றி யருளினன்.

பின்பு அவளது கற்பின் பெருமையைத் திருதராட்டிரன்கேள்வியுற்றுஅஞ்சி, அவர்களை அடிமைத்தனத்தினின்றும் நீக்கி, அவர்களுக்குரிமையான செல்வத்தையும்,

கொடுத்தனுப்பினன். துரியோதனன் அதுகண்டு பொருமல் அவர்களுக்குத்தன் தந்தையளித்த செல்வத்தை யெல்லாம் கவர்ந்துகொண்டு, பின்னும் மறுசூதாடி அடிமை நீங்கிய அவர்களைப் பன்னிரண்டு வருடம் வனவாசமும் ஒரு வருடம் அஞ்ஞாதவாசமும் செய்துவந்தால் பழையபடி அரசு பெறலாமென்று நியமனஞ்செய்து அனுப்பினுன்.

---

## அத்தியாயம் 2.

### இரகசிய ஆலோசனை.

" குடை நிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்"

சத்தியமே நித்தியம், சன்மார்க்கமே நன்மார்க்கமெனக் கொண்ட பாண்டவர்களுடைய நாடு நகரங்களைத் துரியோதனன் சூதினுல் வென்று, அவர்களைப் பன்னிரண்டாண்டு வனவாசமும், ஓராண்டு அஞ்ஞாதவாசமும் செய்து திரும்பும்படி கூறியவண்ணம், அவர்கள் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டுத் தருமமே துணையென்று கொண்டு கானகம் புகுந்து, கல்லும் முள்ளும் காலில் உறுத்த, பல கானகம் திரிந்து காய் கனி கிழங்குகளையுண்டு பன்னிரண்டாண்டு களையும் கழித்தனர்.

இங்ஙனம் ஈராறுண்டு இருள்சூழ்ந்த வனத்திற் கழித்த பாண்டவர்கள் ஒருவருடம் அஞ்ஞாதவாசத்தைக் கழிப்பான்வேண்டி அவர்கள் தங்கள் புரோகிதர் தௌமியருடன் ஒரு தனியிடத்திலிருந்து ஆலோசிக்கலாயினர்.

தருமபுத்திரர் தம் தம்பியர்களை நோக்கி, "என் அரிய சகோதரர்களே! கல்லும் புல்லும் நிறைந்த காடுகளையும் மேடுகளையும், கருங்கல்லினுலுயர்ந்த மலைகளையும் நமக்கிருப்பிடமாகக்கொண்டு பலருமறியப் பன்னிரண்டாண்டையுங் கழித்தோம். இனிப் பகைவர் கண்ணுக்குப் புலப்படாமல் ஒருவருடத்தை அஞ்ஞாதவாசஞ்செய்து கழிக்கவேண்டும். இதனை நாம் எங்குத் தங்கியிருந்து கழிக்கலாம்? இதற்குத் தகுதியான இடம் எங்கிருக்கிறது? நீங்கள் அறிந்த நாடுகளில் ஒன்றைத் தேர்ந்து சொல்லுங்கள்" என்றார்.

அங்ஙனம் வினவிய தன்தமையனை அருச்சுனன் வணங்கித்தொழுது, "அண்ண! நமது குருநாட்டைச் சூழ்ந்து பாஞ்சாலதேசம், மச்சதேசம், சாளவதேசம், விதர்ப்பதேசம், விதேகதேசம், தசாரணதேசம், சூரசேனதேசம், கலிங்கதேசம், மகததேசம், முதலிய பலதேசங்களிருக்கின்றன. அவற்றில் மச்சதேசமே சிறந்தது. அத்தேசம் நீர்வள நிலவளங்களிற் குறையாது பல வளங்களையும் பெற்றுளது. பல பெரியோர்கள் ஆங்கு வசிக்கின்றனர். அத்தேசத்தைப் புரக்கும் அரசன் விராடனென்பான், அறநெறி வழுவாதவன்; ஆன்ற பலகலைகளையும் ஆராய்ந்தவன்; தண்ணளியான்; செங்கோலான். இத்தகைய நற்குணம் வாய்ந்த விராடனென்னும் வேந்தன் விராடநகரத்தை அரசிருக்கையாகக் கொண்டு ஆட்சிபுரிந்து வருகின்றான். அந்நகரத்தில் நாம் நமது அஞ்ஞாத வாசத்தைச் சுகமாய்க் கழிக்கலாம். அந்நாட்டில் நமக்கு யாதொரு தீங்கும் நேராது. இதைத் தவிர்த்து வேறு நாடு செல்வோமானல் நமது இரகசிய வாழ்க்கை ஒரு வேளை வெளிப்பட்டாலும் வெளிப்படும். மற்றநாடுகளில் துரியோதனனது ஒற்றர்கள் அடிக்கடிவந்து

போதலுங் கூடும். அதனால் நமக்கு மிகுந்த கஷ்டம் நேரிடும். விராடன் நகரத்திலே இந்தக் கஷ்டம் கிடையாது. அம்மன்னன் அரவக்கொடியோனுக்கு அடங்கினவனல்லன் கப்பமும் கட்டுபவனல்லன். துரியோதனனுடைய ஒற்றர்கள் அங்கு வருவதற்கு யாதொருகாரணமுமில்லை. ஆதலால் விராடநகரமே நாம் கரந்துறைவதற்குத் தகுதியானது. இது என் சித்தத்திற்பட்டது. தங்கள் சித்தம் எப்படியோ" என்றனன்.

தருமபுத்திரர், அர்ச்சுனன் ஆராய்ந்து சொன்ன அந்நகரமே வசித்தற்குத் தகுதியானதென்று ஒப்புக்கொண்டு, தங்களைப் பிரிய மனமில்லாமல் வனவாசம் செய்ய உடன் வந்திருந்த அந்தணர் பலர்க்கும், அஞ்ஞாதவாசஞ் செய்ய வேண்டியதன் நிமித்தம் தாங்கள் கரந்துறைய வேண்டியதைத் தெரிவித்து, அவர்களை யெல்லாம் அத்தினபுர மேகும்படி அன்பான வசனங்கள் சொல்லியனுப்பினர். அதன் பின் தருமபுத்திரர் தம்பியர் நால்வரையும் மனைவி திரௌபதையையும் புரோகிதர் தௌமியரையும் அழைத்துக்கொண்டு காடுமலை கான்யாறு முதலியவைகளைக்கடந்து சூரியோதயத்திற்கு முன்னரே விராடநகரத்தின் எல்லைப் புறத்தை வந்து அடைந்தார்.

அவர்கள் இரவிலே காட்டைவிட்டுப் புறப்பட்டவர்களாதலால் இரவு முழுவதும் வழி நடந்த இளைப்பை யாற்றுவதற்காக, அந் நகரத்தின் புறத்திலிருந்த ஆழ்ந்து அகன்ற தடாகத்திலிறங்கி நீராடி, நித்திய கருமங்களை முடித்துக் கொண்டு ஒரு மரத்தடியில் தங்கினர்கள். அப்பொழுது தருமபுத்திரர், அருள்மனத்தராகிய தமது புரோகிதர் தௌ

மியரை நோக்கி "அந்தணர்பெரும! நாங்கள் இதுவரையில் தங்களாசீர்வாத பலத்தாலும தங்கள் துணையாலும் வனத்தில் யாதொரு இடுக்கணுமின்றிச் சுகமாகக் காலங்கழித்தோம். இனி அஞ்ஞாதவாசத்தை நாங்கள் தங்கள் துணையின்றி எப்படிக் கழிப்போம். தேவரீர் உரைத்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

அதற்குத் தௌமியர், "தருமபுத்திர! நீர் அறியாத விஷயம் நானென்ன அறிந்து சொல்லப் போகின்றேன். ஆயினும் என் அறிவிற் கெட்டியதைக் கூறுகின்றேன். கேட்பாயாக: நீங்கள் பன்னிரண் டாண்டையும் காட்டிலிருந்து கழித்தது ஒரு பெரிய காரியமன்று. இவ்வொரு வருடத்தை நாட்டில் மறைந்திருந்துஒழிப்பதே பெரிதான காரியமாகும். நீங்கள் உருக்கரந்துறையும் நாளையில் உங்கள் சொரூபத்தினுலாவது, பேச்சினுலாவது, செய்கையினுலாவது உங்கள் பகைவர்கள் உங்களை யறிவார்களாகில், மறுபடியும் நீங்கள் பன்னிரண்டாண்டு வனத்திலுறைய நேரிடும். ஆதலால், நீங்கள் ஒருவரும் அறியாவண்ணம் மாறுவேடம் பூண்டு வேறு பெயர்கொண்டு விராடராஜனிடஞ் சென்று உங்கட்கு விருப்பமானதொழிலைச் செய்து, அத்தொழிலுக்கிணங்க நடந்து காலங்கழிப்பதே உறுதியைத்தருவதாகும்" என்றார். தருமபுத்திரரும், "அவ்வாறு நடக்கிறதைவிட வேறு இன்பம் இல்லை" எனத் தௌமியர் கூறிய உறுதிமொழியை ஒப்புக்கொண்டனர்.

தருமபுத்திரர் தௌமியர் கூறிய மொழியை ஒப்புக்கொண்டதைக் கண்ட தம்பியர் நால்வரும் தமயனைவணங்கிச் "சந்திரகுலத்துக் கொரு இந்திரன் போன்றவரே! வெண் கொற்றக் குடைக்கீழிருந்து தனி யரசு செலுத்தும்

தாங்கள் மற்றொரு சிற்றரசனிடத்தில் அடங்கியிருந்து சேவகஞ் செய்வதா? சேவகம் தங்கள் பெருமைக்கு ஏற்றதா? சுதந்தர புருஷராகிய தாங்கள் ஒருவனிடத்திலடங்கி இளைத்து ஒதுங்கி ஏவற்றொழில் புரிவது எவ்வளவு ஈனம்; அதமம் சேவகாவிருத்தி யென்பதைத் தாங்கள் அறியீர்களோ?

ஓவா வறுமை யுழந்தாலு மற்றொருவர்
ஏவா துயிர்வாழ்ந் திருத்தலே நன்றாகும்;
தாவாத செல்வம் தருமேனும் குற்றேவல்
ஆ! ஆ! கொடிது கொடிது..................

மூவுலகத்தையும் முற்றுகையிட்டு வெற்றிபெற வல்ல தம்பியர் நால்வருக்கும் முன் பிறந்த தாங்கள் சேவகம் செய்ய நாங்கள் பார்த்திருப்போமா! ஆ! வினையின் விளைவு வெகு நன்றாயிருக்கின்றது" என்றனர்.

தம்பியர் நால்வரும் அவ்வாறு கூறி வருந்துவதைக் கண்ட தருமபுத்திரர் அவர்களைப் பார்த்து, "அன்புள்ள சகோதரர்காள்! 'ஊழிற் பெருவலியாவுள? எல்லாம் ஊழின் படி நடக்குமே யல்லது வேறுவிதமாய் நடவாது. 'குடை நிழலிருந்து குஞ்சர மூர்ந்தோர்க்கும் தீவினை வந்து மூளுமேல் அவர்களும் நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்' வினை யாரையும் விடாது. முற்காலத்தில் நளனென்னும் நரேந்திரனும் இங்ஙனமே தீவினையின் காரணத்தால் நாடிழந்து நகரிழந்து தன் மனைவி மக்களையுந்துறந்து ஒரு சிற்றரசனிடத்தில் தேர்ப்பாகனயமர்ந்து காலங்கழித்துப் பின் நல் வாழ்வு பெற்றதை நீங்கள் கேட்டதில்லையா? நாம் அனுபவிக்கும் இத்துன்பம் ஒரு பெரிதன்று. நம் தீவினை கழியுந்தனையும் இச்சேவக வினையை மேற்கொண்டு

பின்பு நம் நாட்டைப்பெற்று நல்வாழ்வடைவோம். வருந்தாதீர்கள்"—என்று தேறுதலான பல வசனங்களைச் சொல்லித் தேற்றி, அவர்கள் வருத்தத்தை யொழித்தார்.

அதன் பின்னர்த் தம்பியர் நால்வரும் தருமபுத்திரர் எடுத்துரைத்த நன்மொழிகளால் தேறுதலுற்றுத் தமையனைப்பார்த்து, "அண்ணலே! தாங்கள் விராடராஜனை யடுத்து எத்தொழில் புரிவீர்? அத்தொழிலுக்கேற்ப எவ்வேடத்தைப் பூண்டுகொள்வீர்?" என்றார்கள்.

அதற்குத் தருமர், "நான் இங்ஙனம் நேருமென்பதை முன்னமே உணர்வேன். நீங்கள் முன்பு நச்சுப்பொய்கையிலிறங்கி நச்சுநீரருந்தி மாண்டபோது உங்களைப் பிழைப்பிக்க வந்த தென்றிசைக் கடவுளாகிய தருமராஜன் எனக்கொரு மந்திரம் அருளியிருக்கின்றார். அம்மந்திர பலத்தால் நான் ஒரு வேதியனாக வேடம் பூண்டு கண்டவர் எவரும் வணங்கவும், விராட ராஜன் எதிர்கொண்டு தொழுது அழைக்கவும் அவன் சபையை நண்ணுவேன். அம்மன்னன் 'நீர் யார்? எவ்வூரிலிருப்பீர்? இங்கு எழுந்தருளியதற்குக் காரணம் யாது? என்று வினவுவானாயின், நான் கங்கபட்டர் என்னும் பெயரை யுடையேன்; பாண்டுவின் புத்திரர்களில் மூத்தோனாகிய தருமபுத்திரன்றன் பிரிய நண்பன்; அவருடன் பன்னிரண்டு வருஷம் வனவாசத்திலிருந்து கழித்தேன்; அவர் ஒருவருடம் அஞ்ஞாதவாசங் கழிக்க எங்கேயோ சென்றமையால் அவ்வொரு வருடம் உமது அவைக்கணிருந்து கழிக்க வந்தேன். வேத வேதாங்கம் உணர்வேன்; தருக்கம் அறிவேன்; சோதிட சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், சிற்ப சாஸ்திரம், யோகசாஸ்திரம், நீதி சாஸ்திரம், முதலியவை நன்கு தெரிந்து சொல்வேன்.

இன்னும் பிற கலைகளிலும் நன்கு வல்லேன்; அன்றியும் பொழுது போக்குக்காக ஆடும் சொக்கட்டான் விளையாட்டிலும் கை தேர்ந்தவன்; என்னை ஏற்றுக்கொள்ளும் என்று கூறி, அவன் விரும்பி ஏற்க அரசவையில் வீற்றிருப்பேன். அவ்வொரு வருடமும் அவன் பக்கலிலிருந்து, அவன் கருத்துக்கிசைந்த தேச வர்த்தமானங்களைச் சமயமறிந்து பேசி, விநோதமான விந்தைகளை நிந்தையில்லாமற் சொல்லி அவன் அரசாட்சியைப் பெருமையுடன் நடத்தி அவனுள்ளங் களிக்கச் செய்து, அரசனைச் சூழ்ந்த தந்திரி மந்திரிகளும், கற்றோரும், சுற்றத்தோரும் 'உத்தமர் இவர்' என்று புகழும்படி மிகவும் மேன்மையாகக் காலங் கழிப்பேன்" என்றார். இதைக்கேட்ட தம்பியர் நால்வரும் "இவ்வேடமும் இத்தொழிலும் உமக்குத் தகும்! தகும்?" என்று புகழ்ந்துரைத்தனர்.

அங்கனம் உரைத்த தம்பியர் நால்வரையும் தருமபுத்திரர் முறையே நோக்கி,"நீங்கள் பிறரை வணங்காச் சூரர்கள் அன்றோ; மூவுலகத்தையும் வெல்லும் வீரர்கள் அன்றோ; நீங்கள் என்ன மாறு வேடம்பூண்டு எத்தொழில் செய்து இவ்வொருவருட காலத்தைக் கழிப்பீர்கள். உரைமின்" என்றார். அதற்கு,

வீமன்:—"அண்ணலே! நான் விராடனை யணுகி, அறுசுவையுண்டி நால்வகை யுணவுடன் பதார்த்தங்களைச் சமைக்க வல்லேன்; பலவித பலகாரங்களையுஞ் செய்ய அறிவேன்; புளியன்னம் எள்ளன்னம் மிளகன்னம், ததியன்னம், பாலன்னம் முதலிய அன்ன வகைகளை அருமையாய்ச் செய்வேன். என்று என் தொழிலைச் சிறப்பிக்கக்கூறிச் சுயம்பாகி வேலையிலமர்வேன்.

அவ்வேலையிமர்ந்து அமுதத்தைப் பழிக்கும்படி உண வாதிகளைச் சமைத்து அரசரும் மற்றவரும் மகிழ்ந் துண்ண அளித்து, அவர்கள் என்னை பாகசாஸ்திரங்கற்ற பண்டிதனென்று புகழும்படி யிருப்பேன். ஒருசமயம் அரசன் என்னைப் மல்லர்களுடன் சண்டைசெய்ய விடு வானுகில், மற்போர் வல்லாரைச் சுலபமாய் அழித்துப் பற்பல பரிசும் பெறுவேன். என்னையாரென வினவு வானுயின், நான் பலாயனன் என்னும் பெயரையுடை யேன். தருமபுத்திரருக்கு அடிமை செய்யும் அடியேன் எனக்கூறுவேன்" என்முன்.

தருமர்:—தம்பி! அத்தொழில் உனக்குரியதே. என் றென்றும் உனக்கு அன்னத்திற்குக் குறைவில்லை. அஞ் ஞாத வாசத்தைக் கஷ்டமில்லாமல் கழிக்கலாம்.

அர்ச்சுனன்:—(தருமரை நோக்கி)" தருமகுணுலயமே நான் என் விருப்பத்தின்படி பேடியுருவம் எடுக்க எனக் கொரு சாபமுண்டு; அச் சாபவிசேஷத்தினுல் நான் பேடி யுருவம் தாங்கி அரசனைக் கண்டு, யான் பரத நாட்டியம் கற்பிக்க வல்லேன்; என் பெயர் பிருகந்நளை; திரௌபதா தேவிக்கு நடனம் கற்பித்து வந்தேன்; கால பேதத்தால் அவர்களைப் பிரிந்தேன்; என்று கூறி அரசன் புத்திரிக்குப் பாதங் கற்பிக்கும் தொழிலிலமர்வேன். அத்தொழிலால் அரசன் மனங்களிக்கச் செய்வேன்" என்முன்.

தருமர்:—அதுவும் உனக்கேற்றதே.

தருமர்:—(நகுலனைநோக்கி) "எந்நாளும் என்னை விட்டுப் பிரியாத இளஞ்சிங்கமே நீ நான் சொன்ன படி கேட்டு நடப்பவனே யன்றி உன் சுயமாக எதையும்

தொடங்கிச் செய்பவனல்லையே! மெய் வருந்தும் வேலையில் பிரவேசிக்க மாட்டாயே; அறியாச் சிறுவனன்றோ; நீ எப்படி உருமாறிப் பகைவர் கண்ணுக்கு அகப்படால் இவ்வொரு வருஷத்தைத் தள்ளுவாய்" என்றார்.

நகுலன்:—"தயாநிதியே! தேவரீர் அடியேனுக்குக் கற்பித்த சாஸ்திரங்களில் அஸ்வ சாஸ்திரத்தை நன்கறிவேன், அதனால் அஸ்வ சாஸ்திர அதிபதி யென்னும் வேடம் பூண்டு அரசனை யணுகி, நான் குதிரைகளின் குலமும், குணமும், சூரலும், நன்மையும், தீமையும், தேசமும், வாசமும், சீரும், சிறப்பும், சித்தமும், உன்மத்தமும், பேதமும், அபேதமும். அறிவேன்; குதிரைகளுக்குள்ள சுழிகளின் நன்மை தீமைகளை நன்கு உணர்வேன்; குதிரைகளுக்குண்டாகும் பிணிகளைத் தீர்ப்பேன்; என்று கூறி அவ்வேலையி லமர்ந்து அரசன் மகிழ நடப்பேன். என் பெயர் தாமக்கிரந்தி; தருமராஜனுடைய நாட்டில் அஸ்வ அதிபதியாயிருந்தேனெனச் சொல்வேன்" என்றான்.

தருமர்:—அத்தொழில் உனக்கு அமைவுடையதே.

தருமர்:—(சகாதேவனை நோக்கி) "அதிபாலிய சகாதேவனே! தந்தையான பாண்டு மகாராஜன் மார்பிலும், குந்திதேவி மடியிலும், என் தோளிலும், வேற்றரசர் முடியிலும், மிதித்து விளையாடிய உன் மெல்லடிகள், செம்பருக்கைக் கற்களுடன் தீப்பொறி கலந்த மலைச்சாரலிலும், வனங்களிலும், நடந்து பன்னிரண்டு வருஷம் வருத்த முற்றும் இன்னும் உனக்குத் துன்பம் ஒழியாமல் தொடர்கின்றதே. புத்தியில் பிருகஸ்பதிக் கொப்பாகிய நீ, எவ்வேடம் பூண்டு எத்தொழில் புரிந்து பிறர், அறியாவண்ணம் இவ்வொரு

வருடத்தைத் ஓட்டுவாய்! எனக்கதை விபரமாயெடுத்துரை" என்றார்.

சகாதேவன்:—"தரும பூபதியே! நான் பசுவினங்களைக் காக்கும் கோபாலன் வேடங்கொண்டு விராட மன்னனிடஞ் சென்று, பசுக்களைப் பரிந்து காப்பேன்; அவைகட்கு ஏற்படும் நோய்களைத் தீர்ப்பேன்; பசுக்களை நல்ல புற்களுள்ள புலங்களி லோட்டி வயிறார மேய்த்துக் குளிர்ந்த நிழலில் மடக்கித் தண்ணீர் காட்டிப் போஷிக்கவும், கறக்காப் பசுக்களைக்கறக்கவும், கன்றை மறக்காப் பசுக்களை மறக்கச்செய்யவும், ஆடிக்கறக்கும் பசு அதட்டிக்கறக்கும் பசு அணைத்துக் கறக்கும் பசு பாடிக்கறக்கும் பசு பழித்துக் கறக்கும் பசு முதலியவைகளைத் தெரிந்து கொள்ளவும் வல்லேன்; என் பெயர் தந்திரபாலன்; இதுவரையும் பாண்டவர் பசுக்களை மேய்த்துக் காலங்கழித்தேன். என்று கூறி, அவ்வேலையிலமர்ந்து அரசன் அகமகிழ நடப்பேன்" என்றான்.

தருமர்:—அது உனக்கு உகந்ததே.

தருமர்:—(திரௌபதையை நோக்கி) "பிறவிச் செல்வியாகிய பேதையே! நீ, அநேகந் தாதியர் உன் அருகிருந்து ஏவல்புரியச் செல்வமாய் வாழ்ந்த செல்வியன்றோ! நீ எத்தொழில் புரிந்து எங்ஙனம் காலங்கழிப்பையோ! யான் அறிகிலேன்; அஃதொன்றே எனக்குக் கவலையாயிற்று. உன் எண்ண மென்ன? அறிவிப்பாய்" என்றார்.

திரௌபதை:—பிராணபதி! தாங்கள் என்னைப்பற்றிக் கவலைகொள்ள வேண்டா. நான் விராடராஜன் மனைவியிடஞ்

சென்று, ஆபரணங்களைப் பூட்டி அலங்காரஞ் செய்யவும், கண்ணுக்கு மைதீட்டவும்,பலவகைமலரெடுத்துத் தொடுக்கவும், கோக்கவும், கொண்டையில் சூட்டவும், நெற்றியில் சிந்தூரத் திலகந் தீட்டவும்,சாந்துசந்தனம்சவ்வாதுசூட்டவும், கதம்பம் கலக்கவும் அறிவேன். என்பெயர் விரதசாரணி என்பேன்; தீவினைவயத்தால் வனவாசஞ்சென்ற திரௌபதைக்குத் தாதியா யிருந்தேன்; எனக்கு ஐந்து கந்தருவர் கணவராய்க் காவலிருக்கிறார்கள் என்று கூறி வண்ணப் பெண் வேலையிலமர்ந்து அரசி அகமகிழ அன்பாய் நடப்பேன்.

தருமர்—"பெண்கள் நாயகமே! நீ அத்தொழிலில் அமர்ந்து வாழும் நாளில் நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு, என்னும் நான்கையுமே நற்காவலாய்க் கொண்டு வாழ்வாய். நாங்கள் ஒருவனிடம் சேவகத்திலமர்வதால் உன்னைக் காப்பாற்ற எங்களுக்கு அவகாசமில்லை. ஆனதால்நீயே உன்னைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். கற்புடைய மனைவியைப் பெற்றகணவர்க்கு எல்லா நலமும் எய்துவதாகப் பெரியோர்கள் கூறியிருக்கின்றார்கள். உலகத்தில்மும்மாரி பொழிவது, வேதமோதிய வேதியராலும், நீதிமன்னர் நெறியாலும், கற்புடைய மாதராலுமே என்று நீதி சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. கற்பே மாதர்க்குச் சிறந்த அணிகலம். நாங்கள் அஞ்ஞாதவாசஞ் செய்யும்போது உனக்குக் காவல் இல்லையென்பதை நீ யறிவாய். காவல்தானே பாவையர்க்கழகு ஆகும். மாதர்கள் கன்னிப்பருவத்தினர்களாயிருக்கும்பொழுது பெற்றோர்கள் முதற்காவலாகவும்,விவாகமான பின் கணவன் இரண்டாவது காவலாகவும், கணவனுக்குப் பின் புத்திரர்கள் மூன்றாவது காவலாகவும் அமைகிறார்கள். இதுபொழுதோ உனக்கு அம் மூன்று காவலுமில்லை,நீயே

உன் புத்தியைக் கொண்டு காத்துக் கொள்ளக்கூடிய நிறை காவலொன்றே இருக்கிறது; அதுவே உறுதியான காவல்.

"சிறைகாக்குங் காப்பெவன்! செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பேதலை"—என்றபடி

மனைவிக்குக் கணவன் வைத்தகாவல் என் செய்யும்! பெண்கள் தங்கள் கற்பால் தங்களைக் காத்துக் கொள்ளுங் காவலே தலைமையான காவலாகும். இக் காவல் முன்கூறிய மூன்றுகாவலினுஞ் சிறந்தது. இதைக்கொண்டு உன் கற்பைக் காப்பாற்றிக்கொள். அறிவிலிகளாகிய துஷ்டர்கள் உன்னைப் பார்த்தாலும், நீ அவர்களைப்பாராதே. துஷ்டர்களைக் கண்டால் தூரவிலகு. இவ்வொருவருடத்தையும் இப் புத்தியை ஆதாரவாகக் கொண்டு பகைவர் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்து அரசி அகமகிழ நடந்துகொள். நமக்குநற்காலம் வந்ததும் நாட்டைப் பெற்றுச் சுகமாகவாழலாம். அதுவரையில் இந்தக் கஷ்டத்தைப் பொருட்படுத்தாதுவாழ்வாயாக" என்றனர்.

திரௌபதை:—"நீதிக்கிருப்பிடமே! தேவரீர் உரைத்த நீதிப்படி ஜாக்கிரதையாக நடந்துகொள்கின்றேன். எனக்காகத் தாங்கள் கவலை கொள்ளற்க"

என்று சொல்லி முடித்ததும் தருமர் தௌமியரை நோக்கி, "சுவாமி! எங்கள் வினை இவ்விதம் சூழ்ந்தது. தம்மைப் பணிவாரைத் தாம் பணியக் காலமாயிற்று! வினையின் விளைவு இங்ஙனமிருந்தது. இனி, தாங்கள் உரைத்தபடியே அரசனிடம் சேவகத்திலமர்கின்றோம்; நாங்கள் அஞ்ஞாதவாசத்தில் ஒருவருடம் கழிக்குந்தனையும் தேவரீர் மாதவருறையும் வனஞ்சென்று மாதவனை

மனத்திலிருத்தித் தவஞ் செய்துகொண்டிருங்கள், எங்கள் அஞ்ஞாத வாசநாட்கள் கழிந்து, நாங்கள் நாட்டைப் பெற்றதும் தாங்கள் எங்களை வந்து கடைக்கணிப்பீராக" என மொழிந்து, தம்பியருடன் அவர் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தனர். தௌமியர் அவர்களை ஆசீர்வதித்து அவர்களுக்குப் பல நீதிகளை எடுத்துக் கூறி, தவஞ்செய்ய வனமேகினர்.

அதற்குப் பின் பாண்டவர்கள், வெற்றி பொருந்திய தங்கள் ஆயுதங்களை ஒரு மான்தோலில் சுற்றிக்கட்டி, அந்நக ரத்தின் புறத்தேயுள்ள ஒரு காளி கோயிலின் அருகில் உயர்ந்து வளர்ந்திருந்த வன்னி மரத்தின் கிளையின் பொந் திலே வைத்து, அன்னியர் அவற்றைத்தொடாதபடி மந்திர மோதிப் பத்திரஞ் செய்தனர்.

அவ்வாறு ஆயுதங்களை அடக்கஞ் செய்த பின்பு, பாண்டவர்கள் முன் ஆலோசித்த வண்ணம் வேடந்தாங்கி விராட நகரத்துள் நுழைந்தனர்.

---

## அத்தியாயம் 3.

### சேவகத்திறம்.

தருமபுத்திரர் தம் பாதங்களிற் பாதக்குறடு மாட்டி அரையில் பட்டுக்கரை ஆடையைப் பட்டையாக மடி வைத்துக் கட்டி, மார்பில் முப்புரிநூல் பூண்டு, ஒரு கையில் வெண்குடை பிடித்து, மற்றொருகையில் ஜெப மாலை தண்டு கமண்டலம் தாங்கி, காதில் குண்டல

மும். கைவிரலில் பவித்திரமும் அணிந்து, நெற்றியில் விபூதி தரித்துக்கண்டோர் கைதொழுதேத்தவேதியர் வடிவம்பூண்டு, எப்பொழுதும் அரகர சிவ சிவ! நாராயணா! கேசவ!! என்று பகவன் நாமங்களையே சொல்லிக்கொண்டு விராடநகரத்தின் வீதிவழியாய்ச் சென்று அரசன் வதியும் அரண்மனையை அடைந்தனர். ஆங்கு அடைந்து அரண்மனைக் காவலரிடம் தன் வரவை அரசனுக்கு அறிவிக்கச் சொன்னார். அக்காவலர் விரைந்து சென்று அரசனுக்கு வேதியர் வரவைத் தெரிவித்தனர். அரசன் வேதியர் வரவறிந்து எதிர்கொண்டு வந்து அவரைக்கண்டு கைகூப்பித் தொழுது, "சுவாமிகள்! வருக! வருக!!" என்று முகமன்கூறி, அவரைச் சபாமண்டபம் அழைத்துச் சென்று பூந்தவிசொன்றிட்டு, அதில் அமரச்செய்து பூசனைபலபுரிந்தனன். வேதியரும் அரசன் அன்புடனிட்ட தவிசின்மிசை வீற்றிருந்து ஆசிகள் பல கூறிவாழ்த்தினர். அச்சபையிலிருந்த மந்திரி பிரதானி முதலிய அரசாங்க உத்தியோகஸ்தர்களும் அடிபணிந்து அவராசியைப் பெற்றனர்.

வேதியர் ஆசனத்திலமர்ந்ததும் அரசன் அவரை நோக்கி அடிகள் இங்கெழுந்தருளப் பெற்றது என் அரிய தவப்பயனேயாகும். தங்கள் நாடு எதுவோ? தங்கள் திருநாமம் யாதோ? இங்கு எழுந்தருளியதின் கருத்து யாதோ? அதை அடியேனுக்கு அறிவிக்க வேண்டும்" என்று பணிவுடன் கேட்டனன்.

அதற்கு அவர், "அரசனே! என்பெயர் கங்கபட்டர். நான் தருமராஜனது திருநகரத்திலுறைபவன். அவ்வரசனுடைய அன்புள்ள நண்பன். அவர் தீவினையின் காரணத்

தால் பன்னிரண்டாண்டு வனவாசம் செய்ய நேரிட்டது. அப்பொழுதும் நான் அவருடன்கூடி நேசமாயிருந்துவந்தேன். இப்பொழுது அஞ்ஞாதவாசத்தின் பொருட்டு அவர் ஒருவருடம் என்னைப் பிரிய நேர்ந்தது. அதனால் நான் நின்முகம் வந்தேன். அவ்வொருவருடமும் நின் சபையிலிருந்து கழிக்க விருப்பங்கொண்டுள்ளேன். நினது கருத்து யாதோ?" என்றனர்.

அவர் அங்ஙனம் உரைக்கவே அரசன் அகமகிழ்வு கொண்டு, "அடிகளே! தம் விருப்பத்தின்படி எத்தனை நாள் இங்கிருக்கலாமோ அத்தனை நாளும் இருக்கலாம். பெரியோர்கள் எழுந்தருளப்பெற்ற பேரவை பெருமை பெறுமன்றோ? தாங்கள் என் அவையிலிருந்து எனக்கு அறிவுச் சுடர்கொளுத்தி என்னைப் பெருமைப் படுத்தப் பிரார்த்திக்கின்றேன்" என்றான். கங்கபட்டராகிய தருமபுத்திரரும் "அங்ஙனமே ஆகுக" என இசைந்து, அவ்வரசவைக்கு அணியாக இருந்து விளங்கினர்.

தருமபுத்திரர் அங்ஙனம் அமர்ந்தபின் விற்போருக்கும் மற்போருக்கும் இவனே தக்கவனென்று புகழும் கதாபாணியாகிய வீமசேனன், விராடன் அரசசபைவந்து அச்சபைக்குப் பெரியோராய் விளங்கி வீற்றிருக்கும் கங்கபட்டர் பாதத்தை வணங்கி அரசனை நோக்கி, "அரசே! யான் மடைத்தொழில் வல்லோன்; கூட்டுக்கறி, குழம்புக்கறி, பொரிக்கறி முதலியவைகளை அறுசுவையுடன் சமைப்பேன்; விதம் விதமான அன்ன வகைகளைப் பதமாக வட்டிப்பேன்; ஒவ்வொரு சமையங்களில் மல்லருடன் மற்போரிட்டு மனங் களிக்கச் செய்வேன்; வேற்றரசர் சண்டைக்குவரின் வில்

லெடுத்துப் போர்புரிவேன். என் பெயர் பலாயனன். நான் காலபேதத்தால் தருமபுத்திரருக்கிளைபவனாகிய வீமனென்பவனை விட்டு உம்மிடத்தில் ஒருவருடம் தங்கியிருக்க வந்தேன். என்னை ஏற்றுக் கொள்வீராக'' என்றனன்.

பலாயனனென்று பெயர்புனைந்தவீமசேனன் அவ்வாறு கூறியதும், அரசன் அவனைப் பரிவுடன் அழைத்து, அவனுக்கு அணி யாடை முதலியவைகளைச் சிறப்புறக் கொடுத்து மகிழச்செய்து அரண்மனைச் சுயம்பாகிகளுக்குத் தலைவனாக இருக்கச் செய்தனன். அவனும் அத்தொழிலை விருப்புடன் ஏற்று இன்புற்றிருந்தனன்.

வீமசேனன் மடைத்தொழிலிலமர்ந்து தலைமை பெற்றதும், மறுநாள் அருச்சுனன் பேடியுருக்கொண்டு மன்னன் மாணவையடைந்து, முப்புரிநூலுடன் இலங்கும் முனிவராகிய கங்கபட்டர் பாதம் வணங்கி அரசனைப் பார்த்து,"மண்டலேச! எண்டிசையும் புகழ் காண்டீவக் கரத்தினனாகிய அர்ச்சுனன் அரண்மனையிலிருக்கும் பேடிகளுள் நானொரு பேடி, நடன சாஸ்திரத்தில் நன்கு பயின்றவள். பிருகந்நளை என்னும்பெயரினேன். உமதுநகரில் சில நாளிருக்கக் கருதி இங்கு வந்தேன். நீர் என்னை ஆதரிப்பீராகில் உலகுள்ளளவும் உமதுமரபு நிலைநின்றோங்கும்," என்றுவாழ்த்தினன்.

விராடன், "இத்தகையள் மேதினியில் கிடைப்பது அருமை; இவள் மிகவும் நல்லவள்" என்று பேடியைப் புகழ்ந்து பேசி, அப்பேடிக்கு அணியாடை முதலியன கொடுத்து அகங்களிக்கச்செய்து அவளைத் தனது அருமைக் குமாரத்தியாகிய உத்தரைக்கு உயிர்ப்பாங்கியாயிருந்து பாத

சாஸ்திரம் பயிற்றுவிக்க நியமித்தனன். அவளும்அந்தப்புர மடைந்து உத்தரகுமாரத்திக்குப் பரதசாஸ்திரம் பயிற்று வித்து வந்தனள்.

அதன் பின், அழகில் அநங்கனைப் பழிக்கும் அழகு வாய்ந்த நகுலன், கையிற்கடிவாளம், கயிறு, கட்டை, சாட்டை முதலியவைகளைப் பிடித்துக் கண்டோர் யாவரும் அசுவ இலக்கணந் தெரிந்தவனென்று புகழும்படி வேடம் பூண்டு விராடவேந்தனுடைய குதிரைப் பந்திக் கெதிராக வந்து நின்றனன். அப்பொழுது விராட மன்னன் அப்பந்தி யிலிருந்த குதிரை யொன்றின்மீது ஏறிவெளியே வந்தனன். வெளிவந்த வேந்தன் குதிரைப் பந்தியின் முன் நிற்கும் நகுலனைக் கண்டு, " குதிரைப் பாகனே ! நீ எவ்வூர் ? எங்கிருந்து இங்கு வந்தனை ? உன் பெயரென்ன?" என்று வினவினன்.

அங்ஙனம் வினவிய அரசனை, நகுலன் தன் தொழிலுக் கேற்க வணக்கத்துடன் வந்தனஞ் செய்து, "அரசனே! அருச்சுனனுக்கு இளையோன் நகுலன்; நல்லிசைபெற்றவன். அவன் குதிரைத் தளங்களுக்கெல்லாம் நானே தலைமையா யிருந்தவன். என் பெயர் தாமக்கிரந்தி. நான், குதிரை களின் நிறம், வடிவு, சுழி, வாசனை, குலம், குணம், குரல், அவை பிறந்த நிலம், ஆயுள் முதலியவற்றையும், பிறவற்றை யும் அறிவேன்; குதிரைப்பிணிகள் யாவற்றையும் தீர்ப் பேன்; தேர்க்குதிரை, ஏறுகுதிரை, பட்டத்துக் குதிரை, முதலியவைகளையும் தெரிந்து வகுப்பேன். இத்தகைய னாகிய நான், பாண்டு மைந்தர் வனவாசம் சென்ற பின்பு உண்டியும் இழந்தேன்; உறுதியும் இழந்தேன்; உறக்க

முதலியனவன்றிப் பல விடங்களும் அலைந்து திரிந்தேன்; கடைசியில் உமது கீர்த்தியைக் கேட்டு இங்கு வந்தேன். என்னை ஆதரித்தருளும்'' என்று வேண்டினன்.

நகுலன் அவ்வாறுரைத்ததும், அரசன் அவனை அரண்மனைக்கழைத்துப்போய், முன்னவருக்களித்த வெகுமானத்திலும் மும்மடங்கு அதிகமாகக் கொடுத்து குதிரை வீரர்களுக்கெல்லாம் தலைவனாயிருக்கச் செய்தனன். அவனும் அத்தொழிலை அகமகிழ்வுடன் ஏற்றுக் கொண்டனன்.

அதன் பின் நகுலனுக் கிளையோனான சகாதேவன் கோபாலன் வடிவங்கொண்டு, அசைகின்ற செவிகளுக்குக் குழையணிந்து கையில் புல்லாங்குழல் பற்றி தோளில் கவைக்கோலும், கன்றணைக்குங்கயிறும் மாடுகட்டும் தும்பும் கொண்டு, கம்புளம் போர்த்து அசைந்தசைந்தாடி விராடன் வேத்தவை புகுந்து, அந்தணர் வேடம் பூண்ட தருமபுத்திரரை வணங்கி, அரசனைக் குறிப்பால் தொழுது நோக்கி "பூபதியே! துரியோதனனுடன் சூதாடித் தோற்று நாடிழந்து காட்டில் வாசம் பண்ணிய பாண்டவர்களுக்கு இளைய சகோதரனாகிய சகாதேவமன்னன்றன் பசுக்களை மேய்த்துக் காத்து வந்தவன் நான்; என் பெயர் தந்திரபாலன்'' என்றான்.

சகாதேவன் அவ்வாறுரைத்ததும், அரசன் அவனை அன்புடன் அருகு அழைத்து அவனுக்கு வேண்டியவைகளைக் கொடுத்து, "நமது பசு மந்தைகளையும் சகாதேவன்றன் பசுமந்தைகளைப் போல் பாதுகாத்து வருவாயாக'' என்றுசொல்லி அவனை யனுப்பினன். அவனும் அரச

னுடைய ஆநிரைகளைக் கைப்பற்றிப் பசும் புற்றரைகளி லோட்டி மேய்த்துக் காப்பாற்றி வந்தனன்.

பாண்டவர் ஐவரும் முறையே விராடனிடத்தில் வந்து வேலையிலமர்ந்ததும், திரௌபதை வண்ணப்பெண் வடி வங்கொண்டு, விராடமன்னன் நன் மனைவியாகிய சுதேட் டிணை வதியும் அரண்மனை வாயில் அடைந்து வாயில்காக் கும் பெண்களை, நோக்கி "பாரோ ஒரு பெண் வந்து வாயி லண்டை நிற்கின்றாள். அவளைஉள்ளே வரவிடலாமா? என்று உங்கள் அரசியைக் கேட்டு எனக்குச் சொல்லுங்கள நற் பெண்டிர்காள்!" என்று வேண்டிக் கொண்டாள். அப் பெண்டிர்களும் அவள் வேண்டுகோளுக் கிரங்கி அரசி யிருக்கும் அந்தப்புரஞ் சென்று, தங்கள் அரசியைக் கண்டு அடிவணங்கி "அம்மையே! அணங்கை நிகர்க்கும் பெண்பெருமாள் ஒருத்தி இம்மனை வாயில் வந்து காத் துக்கொண் டிருக்கின்றார். உமது அநுமதிக்கு எதிர் பார்க் கின்றார்" என்றனர். அவ்வரசி, "உடனே அப்பெண்மணி யை இங்கே அழைத்து வாருங்கள்" என்று அவர்களுக்குக் கட்டளை யிட்டு அவள் வரவுக்கு எதிர்நோக்கிக்கொண்டிருந் தாள். வாயில்காக்கும் பெண்கள் விரைந்தோடி வந்து திரௌபதையைக் கண்டு "அம்மணி! எங்கள் அரசி உங்களை வரச்சொன்னார்கள், வாருங்கள்" என்று கூறி, அவளை அழைத்து அந்தப்புரத்திற் கொண்டுபோய்விட்டார்கள். சுதேட்டிணை அவளைக்கண்டு இவள் அந்தரமகளோ? கந் தருவ மங்கையோ? என வியந்தவளாய், "அம்மணி! வாருங்கள்! வாருங்கள்!" என்று நன் மொழி கூறி வர வேற்றுத் தன் பக்கத்திலிருத்தி கந்தகதம்பம், தாம்பூலம்,

மஞ்சள், புஷ்பம் இவைகளை வழங்கி, "அன்னையே! உமது சுதேசம் யாது? உமது பெயரென்ன? இவண் எழுந்தருளியதற்குக் காரணம் யாது? எனக்கறிய உரைமின்!" என்று பணி மொழிகளால் வினவினள்.

திரௌபதை அங்ஙனம் வினவிய அருண்மொழியாளை நோக்கி, "அன்பே யுருவாயமைந்த ஆரணங்கே! முன்பின் அறியாத என்னை இவ்வளவு கனப்படுத்தி உபசரித்ததற்காக நான் மிகவும் மகிழ்வு கொள்கிறேன். எனது சுதேசம் குருநாடு. என் பெயர் விரதசாரணி. நாட்டையும் நல் வாழ்வையும் தோற்றுக் காடே வீடாகவும், விலங்குகளே பந்துவாகவும் கொண்டு பன்னிரண்டு வருடம் வனவாசம் பண்ணிய பாண்டவர்களை மருவிய மான்விழியாள் திரௌபதையைப் பிரியாதிருந்தேன். காலக்கொடுமையால் அவ்வம்மணியை இப்பொழுது பிரியும்படி நேரிட்டது. நான் சந்தனம் கந்தகதம்பம் பூசுவதிலும், சேலை மாலை சிறக்கக் கட்டுவதிலும், பூஷணங்கள் பூட்டுவதிலும், கூந்தலை வகிர்ந்து முடித்துப் பின்னுவதிலும், கண்ணுக்கு மைதீட்டுவதிலும் கைதேர்ந்தவள். தங்கள் சமுகத்திலிருந்து தங்களுக்கு இப்பணிகளைச்செய்து வாழ நான் இங்கு வந்தேன். என்னை ஆதரித்தருள்வீராக.

பெண்கள் நாயகமே! இது தவிர தங்கட்கு இன்னொரு விடயமும் கூறுகின்றேன். நான் என் தாய் வீட்டில் கன்னிப் பருவத்தினளாயிருக்கும் பொழுது காந்தருவர் காவலிலடங்கிக் கற்புடையவ ளாயினேன். மனிதர் எவர் முகத்தையும் நோக்கி மகிழேன்! என்னை மனிதர் எவரும்

உற்றிட்டுப் பார்க்கக் கூடாது. அங்ஙனம் பார்க்கவோ ஏதும்நினைக்கவோ செய்வார்களாகுல் அவர்களை என்னைக் காக்கும் கந்தருவர்கள் எமபுரம் அனுப்பிவிடுவார் கள். இது என் வாழ்வின் இரகசியம். தங்கள் மனையிலிருந் தால் எனக்கு யாதொரு தீங்கு நேரிடாதெனக் கருதி வந் தேன். என்னையும் தங்கள் வண்ணப் பெண்களில் ஒருத்தி யாக வைத்து ஆதரிக்க வேண்டுகின்றேன்" என்ருள்.

வண்ணப் பெண்ணுக வந்த திரௌபதை இங்ஙனம் கூறவே, சுதேட்டிணை அவற்றைக் கேட்டுச் சிந்தை மகிழ்ந்தவளாய் அவளை நோக்கி, "சிந்தாமணியே! தெய்வப் பெண்போல் வந்த உன்னைச் செவ்வையாகப் பார்த்துச் சிந்தை களிகூர்ந்தேன். நீ எனக்கு என்னிரு கண் போல வும், என்னேடு ஒப்பாகவும், வண்ணப் பெண்ணுகவுமிருந்து என் னுயிரும் உடலும் உன் காவலாய்க்காத்து பெற்றதாயி னும் பெரியதாயாக என்மீது அன்புகொண்டு இம்மனையின் கண் வாழ்வாயாக" என்றனள். அவளும் அங்ஙனமே நடந்து கொள்ளுகின்றேனென்று பணிவாய்க் கூறி, அன்று முதல் சுதேட்டிணைக்கு வண்ணப் பெண்ணுயிருந்து, அவள் எந்தெந்த வேளையில் என்னென்ன விரும்புவாளோ அவை களை அவள் விருப்பப்படி செய்து அரசிக்குத் தன் மேல் நாளுக்கு நாள் அதிக விசுவாச முண்டாகும்படி நடந்து கொண்டாள்.

பாண்டவர்கள் ஐவரும், திரௌபதையும் உருவங் கரந்து இராஜ சின்னங்கள் யாவுந்துறந்து, உல்லாச வார்த் தைகள் மறந்து வாழும் நாளையில் அந்த நாட்டில், மிகுமழை, மிகுகாற்று, வெட்டுக்கிளி முதலியவைகளால் பயிர்கள் நாச

முறுமல் செழித்தன; மாதம்மும்மாரி பொழிந்தது; தானிய விளைவு பெருகிற்று; அரசனாலும் அவனுடைய பரிவாரங்களாலும் யாதொரு பயமில்லாமல் குடிகள் சந்தோஷமாக வாழ்ந்தனர்; கால் நடைகள் பெருகிப் பசுவினங்கள் கன்று பல வீன்று பால் கறந்தன; எப்பொழுதும் சுபகாரியங்கள் நிகழ்ந்தன; வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும், குடியுயர முடியுயரும் என்றபடி, அரசன் வாழ்வு பெருகியது.

---

## அத்தியாயம் 4.

### மற்போர்த்திறம்.

பலவளங்களும் மல்கிப்பெருகும் மச்ச நாட்டில் விராடநகரம் எல்லா நலங்களும் பெற்று விண்ணவர் நகரமும் பின்னிடும்படி வீறு பெற்று விளங்கியது. அந்நகரத்தில் திரௌபதையும், பாண்டவரும் பூரண சந்திரன் போலப் பிரகாசித்து, களங்கமின்றி விளங்கினர். அவர்கள் அறுவரும் தத்தம் தொழில்களைத் திறமையுடன் செய்து அரசனுக்கும் மற்றோர்க்கும் மனக்களிப்பூட்டி வந்தார்கள். அவர்களால் அரசனும் அந்நகரத்துக் குடிகளும் நல்வாழ்வு பெற்றனர். அரசனும் அவர்களையடைந்தது முதல் யாதொரு மனக்குறையுமின்றி விநோதங்களிலும் வேடிக்கைகளிலும் தன் மனத்தைச் செலுத்தி வாழ்நாட்களை மிக இனிமையாகக் கழித்து வந்தான்.

அங்ஙனம் அரசன் தன் வாழ்நாட்களைக்கழித்து வரும் போது ஒருநாள், வில்லுக்கு இராமனென்றும், வேலினுக்

குச்செவ்வேள் என்றும், சொல்லுக்கு அகத்திய னென் றும், மல்லுக்கு நானே மஹாதேவனென்றும் விருதுகள் பல கூறி தேசங்கள் பல திரிந்து நற்பரிசு பெற்ற வாசவ னென்னும் மல்ல னொருவன் விராட நகரம் வந்தான். அவன் உருவத்திலோ கொழுத்து பருத்த தேகத்தையும், உருண்டு திரண்ட புஜத்தையும், நீண்டு வலுத்த காலையும், திண்ணிய தலையையும் பெற்றுப் பார்ப்போர் எவரும் இவனுக்கு ஒப்பவார் யாருமில்லை யென்னும்படி விளங் கினான். அவனே யானையையும் செண்டு போலத் தூக்கி விளையாடும் மிக்க பலத்தையுடையவன். அம்மல்லன் ஆயிர மல்லர்கள் நிழல் போற் பிரியாது தன்னைச் சூழ்ந்து வரவும், வேறு பல மல்லர்கள் தன் பிரதாபத்தை எடுத்துப், பேசவும், இன்னுஞ் சில மல்லர்கள் விருது கொடி குடை பிடிக்கவும், மற்றுஞ் சிலர் ஜெயபேரி டங்கா பாங்கா கொம்பு தாரை பூரி, வீர சின்னம், எக்காளம் முதலிய வாத்தியங்களை முழக்கவும், தேரின் மிசை சிறக்க வீற் றிருந்து கண்டோர் 'இவனை வெல்வார் இவ்வுலகில் எவரு மிலர்' என்று புகழ விராட மன்னன் கொலு வீற்றிருக்கும் மண்டபத்தைக் குறுகினான்.

வேத்தவை யடைந்த மல்லன் வேந்தனை வணங்கி நின்று, "மண்டலேசா! இப்பூமண்டலத்தில் என்னுடன் மல் யுத்தம் பண்ணத் தக்கவர் எவருமிலர். நானோ பலதேசங் களிற் சென்று அநேக அரசர்களைக் கண்டு பற்பல விருது களும் வாகனாதி வரிசைகளும் பெற்றிருக்கின்றேன். அதைப் போல் தங்கள் சமுகத்திலும் ஏதாவது பரிசுகள் பெறலா மெனக் கருதி இந்நகரம் வந்தேன். தங்கள் பெருமைக்

கேற்ப எனக்குத் தகுந்த பரிசுகள் அளிக்கப் பிரார்த்திக்கின்றேன்" என்று வேண்டிக் கொண்டனன்.

மல்லன் அவ்வாறு தனபிரதாபத்தைக் கூறி வேண்டிக் கொள்ளலும், மன்னன் தம் ஆஸ்தான மல்லர்களை நோக்கி உதட்டைப் பிதுக்கித் தலையைபசைத்துப் புதிதாக வந்த மல்லனுக்குக் கொடுக்கத் தக்க பரிசுகள் கொடுத்து, 'நமது மல்லரில் இம்மல்லனோடு போரிட்டு வெல்லக்கூடியவர்கள் இல்லைபல்லவா' என்று வாய்விட்டுச் சொல்லக் கூடாமல், மனம் புழுங்கியிருந்தான்.

அப்பொழுது அச்சபையில் நின்றுகொண்டிருந்த அரசனுடைய மல்லர்கள் அரசன் குறிப்பை யுணர்ந்து, "நாம் மல்லரென்று பெயர்வைத்துக்கொண்டு அரசனிடத்தில் அநேக நாட்களாய்ச் சம்பளம் பெற்று வாழ்கின்றோம். நமக்கு வெட்கமில்லையா? மானமில்லையா? எதிரியில்லாத போது எங்களைப்போல வல்லவர்கள் யாருமிலர் என்று வல்லமை பேசினோமே. இதுபொழுது எதிரிவந்தபின்னர் பூனையைக்கண்டு எலி பதுங்குவது போல நாம் பதுங்குவது தகுமா? நம்மை அரசன் என்னவென்று மதிப்பான்? தற்பெருமைபேசும் அந்த மல்லனோடு மற்போரிட்டு வெல்வதோ அல்லது தோற்பதோ இரண்டிலொன்று பார்த்துவிடவேண்டும்" என்று தங்களுக்குள் குறிப்பாகப் பேசிக்கொண்டு, அம்மல்லனிடஞ்சென்று காரிடி போலப் பேரொலிகாட்டி முழக்கஞ்செய்து அதட்டி, தொடைமீதும் புயமீதும் கையைத்தட்டி மீசை முறுக்கிக் கண்கள் சிவக்க உருட்டி விழித்துப்பார்த்துப் பற்கடித்து "எங்களோடு சண்டைக்கு வருவாயாக" என்று அவனை மறித்து அவன்

பெற்ற வெகுமானங்களை எல்லாம் பறித்தனர். புது மல்லன் அவர்கள் செய்த ஆரவாரத்தினால் சினம் மிகுந்து "வாருங்கள் பூச்சிகளே!" என்று உரத்துப்பேசி தோள் தட்டிக்காலடி போட்டு அவர்கள் முன் வந்தனன். மல்லர்கள் ஒவ்வொருவராய்ப் புதுமல்லனை வந்து எதிர்த்து மற்போர் நூலில் வகுத்தபடி மல்யுத்தம் பண்ண ஆரம்பித்தனர்.

அரசனது மல்லர்கள் தனித்தனியாகப் புதுமல்லனோடு எதிர்த்துத் தானம் விட்டகலாமல் தத்தியும்,ஒருவனையொரு வன் சுற்றியும், உடலுடன் உடல் மொத்தியும் தோளுடன் தோள் முட்டியும், தாளுடன் தாள் பின்னியும் தலையோடு தலை மோதித்தாக்கியும், இடசாரி வலசாரி யோடி ஒதுங் கியும், ஒருவரை ஒருவர் தூக்கி மோதியும், இடைந்து முன்பாய்ந்து கூத்தாடியும் இடம் விட்டு இடஞ்சேர்ந்து கூடியும், வச்சிர முட்டியாலிடித்தும் வைரக்கையாலிடித்தும் காலுடன் கால் கோத்துக் கருங்கற் பாறையுடன் கருங்கற் பாறை இடித்துக்கொள்ளுங் காட்சிபோல மார்பும் மார்பும் கலங்க மோதியும், வாரி வாரி எடுத்து வீசி, நேரோடு வாது புரிந்து போராடி, பார்ப்பவர் யாவரும் பதறிக் கலங்கி மெய்விதிர்த்து வேர்க்க மல்லிட்டனர். அவர்களெல்லாரை யும் புதுமல்லன் எமலோகஞ் சேர்த்து விட்டான்.

அப்பொழுது அரசன்புதுமல்லனை நோக்கி "உன்னைப் போல் மல்யுத்தம் பண்ணுகிறவர்கள் இவ்வுலகில் யாருமே கிடையாது. பேஷ்! பேஷ்!! நல்ல யுத்தம் பண்ணினாய் நீயே சிறந்த வீரன்! தீரன்! சூரன்!" என்று புகழ்ந்து முன் கொடுத்த பரிசினும் மும்மடங்கு அதிகமாகக் கொடுத்து அவனைக் களிக்கச் செய்து, பின்பு மல்லிட்டு இறந்த மல்லர்

களை யெல்லாம் அடக்கஞ் செய்ய ஆஞ்ஞாபித்து அவையை நீக்கி அந்தப்புரஞ் சென்றனன்.

மறுநாள் மன்னன் கொலுக்கூடம் வந்து கங்கபட்டர் மந்திரி, தந்திரி முதலியவர்கள் சூழ மணியாசனம் வீற்றிருந்து அங்கு நடந்த மல்யுத்தத்தின் விசேஷத்தைப் பற்றி ஆங்குள்ளோரை நோக்கி "என்ன! புது மல்லன் வந்து நமது அரசாங்க மல்லர்களை யெல்லாம் அடியோடே அழித்துவிட்டானே! அவன் திறந்தானென்னே! தீரந்தானென்னே! நமது அரசாங்கத்தில் அவனை வெல்பவர் ஒருவருமிலரே! அரசாங்க மல்லரை யெல்லாம் வாரிப் பரிகொடுத்து விட்டோமே!" அம்மம்ம! என்ன அற்புதம்! அற்புதம்! நேற்றைய காட்சி எவ்வளவு பயங்கரமானது என்றான்.

அரசன் அவ்வாறு பேச, கங்கபட்டர் அவனைப் பார்த்து 'மன்னனே! நமது அரசாங்க மல்லர்களை வென்ற மல்லனை வெல்வதற்கோ அல்லது கொல்வதற்கோ மடைப்பள்ளியிலிருக்கும் பலாயனன் என்னும் மல்லனே தகுந்தவன். இத்தாணியில் என்னைவிட மல்லன் யாருமில்லையென்று தன்னைப் புகழும் மல்லனை வெல்ல அப்பலாயனனே ஏற்றவன்; இணையற்றவன். அவனே பூர்வம் தருமபுத்திரனுடைய தம்பி வீமசேனனிடம் இருக்கும்போது, பல மல்லர்களை வென்று பலாயனன் என்று சிறப்புப் பெயரும் பெற்றிருக்கின்றான். அவனைக் கொண்டு இம்மல்லனை வென்று நமது அரசாங்கத்திற்குப் பெருமை யுண்டாக்கலாம். வந்த மல்லன் தற்புகழ்ச்சியையுமடக்கலாம்" என்றனர்.

அங்ஙனம் அவர் பேசும்பொழுது புதுமல்லனும் வந்து தான் வேற்றூர் செல்ல விடைகொடுத் தருளும்படி

அரசனை வணங்கிக் கேட்டனன். அப்பொழுது அரசன் கங்கபட்டர் முகம் நோக்கிப் "புது மல்லனும் வந்துசேர்ந் தான். இப்பொழுது தாங்கள் சொன்னமல்லனை வரவழைக் கலாமா? கௌரவமாக விட்டு விடலாமா?" என்றனன். கங்கபட்டர், "அம்மல்லனைத் தாராளமாக வரவழைக்கலா" மென்றனர். உடனே அரசன் தூதரை விளித்து "மடைப் பள்ளிக்குச் சென்று பலாயனனை அழைத்து வாருங்கள்" என்று கட்டளையிட்டனன்.

தூதர்கள் விரைந்து சென்று மடைப்பள்ளியில் சமையல் வேலை செய்யும் பலாயனனைக் கண்டு "ஐயா உம்மை நமது அரசன் அழைத்துவரச் சொன்னார். உட னே புறப்பட்டுவாரும்" என்றனர். அவன் அவர் அழைப்ப தற்குக் காரண மென்னென்று வினவினான். அவர்கள், "ஐயா! எங்களுக்குக் காரண மொன்றும் தெரியாது. ஆனால் நேற்று யாரோ ஒரு மல்லன் வந்து நமது அர சாங்கமல்லர்களை யெல்லாம் வென்று கொன்று எமபுரம் அனுப்பி வெகுமானம் பெற்று, நமது அரசாங்கத்திற்கு ஒரு அவமானத்தையும் உண்டாக்கினான். அதைப்பற்றி இன்று அரசன் கங்கபட்டரென்னும் பெரியாரிடம் பேசிக்கொண் டிருந்தார். அப்பெரியார் அவரிடம் உம் மைப்பற்றி ஏதோமேன்மையாகப் பேசினார். அச்சமயத் தில் புதுமல்லன் அங்குவந்து சேர்ந்தான். அவனைக் கண் டதும் அரசன் உம்மை அழைக்கச் சொன்னார். ஒருசம யம் நீர் அவனோடு சண்டை போடுவதற்கோ அல்லது உம் மைக் கண்டு பேசுவதற்கோ நாங்கள் அறியோம்" என்றனர்.

பலாயனன் அம்மொழி கேட்டு, தினவு தின்னும் தோளுக்கு இன்றைக்குச் சரியான தேய்விடம் கிடைத்த

தென்று அகமகிழ்வு கொண்டு ஒருகுதிகுதித்து அரையிற் கச்சையை வரிந்திறுக்கிக் கைமேல் கைபோட்டு அரசன் சபையை வந்து அடைந்து கங்கபட்டரைத் தொழுது, அரசனை நோக்கி, அவனதுகட்டளைக்கு எதிர்பார்த்தனன்.

அரசன் குகையிலிருந்து புறப்பட்ட சிங்கத்தை யொத்த பலாயனனைப் பார்த்து, புது மல்லனைச் சுட்டிக் காட்டி" நீ இந்த மல்லனோடு மற்போரிடுவையோ?" என்ருன். பலாயனன், "அரசே! உமது அநுக்கிரகத்தாலும் இதோ எழுந்தருளியிருக்கும் பெரியோரின் ஆசீர்வாதத் தாலும என்னால் இயன்றவளவு போரிடுவேன்" என்று கூறினன்.

அங்ஙனம் பலாயனன் கூறவே, அரசன் புது மல்லனை நோக்கி,"நீஇவனோடு மல்லிடச் சம்மதந்தானு" என்ருன். புது மல்லன், "அரசே! நேற்று உமது சபையிலிருந்த மல்லர்களை யெல்லாம் வீணே மல்லிட்டுக் கொன்று விட்டேன். அதை நினைத்தால் எனக்கே வருத்தமாயிருக் கிறது. இவனாவது உமது சபையில் பேருக்கு ஒருமல்லனாக இருக்கட்டும்; உமக்காக இவனை இச்சபைக்கு ஒரு மருந்து போல் விட்டுவிடுகிறேன். அந்தோ! பாவம்! இவனது ஊழ் வினைப்பயன் இவனை நமனுக்கு விருந்தாக அமைத்திருக் கின்றதுபோலும்! நீங்களும் இவனுயிருக்கு உலைவைத்தி ருக்கின்றீர்கள். எமனுடன்எதிர்த்த உயிரும் சிங்கத்தைப் பகைத்த கரியும் என்னுடன் எதிர்த்தமல்லரும் பிழைப் பதிலர், உயிரிழப்பது நிச்சயம். கடைசியில் என்மேல் குற்றஞ்சொல்லாதீர்கள். இவன் இன்றைக்கு என்கையால் இறந்துபோவான். இவனுக்குயாராவது பெண்டு பிள்ளை,

அண்ணன் தம்பி, மாமன் மைத்துனன், உற்றூர் பெற்றூர் இருந்தால் முன்னதாகவே சொல்லியனுப்பித்தலைமுழுகச் சொல்லுங்கள். இவனும் அவர்களைப் பார்க்க அவாவிருந் தால்பார்த்துவிட்டு வரச்சொல்லுங்கள். எல்லாம்சொல்லி விட்டேன். என்பேரில் குற்றமில்லை. உங்களுக்கும் அவனுக் கும் சம்மதமானுல் அவன் என்னோடு சண்டைக்கு வரட் டும்.'' என்று படாடோபமான வார்த்தைகள் பேசி வலக் காலை முன்வைத்து இடக்கையை மடித்து வலக்கையால் அங்குள்ளார் காது செவிடுபடும்படி தோள்களைத்தட்டி மீசையை முறுக்கி ஆர்ப்பரித்துச் சபையிலுள்ளோரை ஒரு முறை உருட்டிப் பார்த்துப் பலாயனனண்டை வந்து சேர்ந்தனன். அந்தமல்லன் அங்ஙனம் செய்த ஆரவாரத்திஞல் அச்சபையி லிருந்தோர்களில் கங்க பட்டரொருவர் தவிர மற்றவ ரெல்லோரும் பயந்து 'இன்று பலாயனன் போனுன்' என்று திட்டமாய் எண்ணி ஞர்கள்.

வாசவனென்னும் புது மல்லன் பலாயனன் அருகில் வந்ததும், பலாயனன் தோள்தட்டி தொடைதட்டி அவன் எதிர் நின்றனன். அதற்குமேல் அவர்களிருவரும் உதபகிரியும்அத்தகிரியும்ஒன்றாய்ப் பொருந்திப் போரிடப் புகுந்தது போல் நெருங்கித் தோளடித்துப் பெருங்குரல் முழக்கிப் பிரதாபப் பேச்சுகள் பேசி, காலாலுங் கையா லும் பின்னலிட்டுப் போர்தொடங்கி, ஒருவரையொருவர் அடித்தார்கள் ; ஒருவர் காலை யொருவர் மிதித்தார்கள்; ஒருவரை யொருவர் உதைத்தார்கள். ஒருவரையொருவர் பற்றிஞர்கள்; ஒருவரையொருவர் சுற்றிஞர்கள்; ஒருவரை

பொருவர் எறிந்தார்கள்; மார்புடன் மார்பழுந்த இறுக்கிக் கட்டியணைத்துச் சுழன்றார்கள்; கைகளைமுடக்கிமார்புந்தோளும் துளைபடக் குத்தினர்கள்; கால்மேலாக விழ எற்றினர்கள்; புருவம்வாய்மூக்குகாதுமுதலியஉறுப்புக்கள் அழியச் சிதைந்தார்கள்; ஒருவரை யொருவர் தூக்கிப் பிடித்தார்கள்; ஒதுக்கிப் பதுங்கி ஒடுங்கி அடங்கிப் பாய்ந்து சாய்ந்து மாய்ந்தார் போல வருந்திவாடினர்கள். இத்தன்மையாக இருவரும் போர் புரிந்ததில் பலாயனன் புதுமல்லனுடைய மல்வரிசை நுட்பமெல்லா மறிந்துகொண்டு எளியவர் போல் எதிரிக்கிடங்கொடுத்து நின்றனன். அங்ஙனம் நின்ற பலாயனன்மீது மல்லன் திடீரெனப் பூமியிற் குனிந்து பாய்ந்து, காலிடையிற் கை கொடுத்துத் தூக்கிப் பூமியிற் குப்புறப்போட்டுத் தோள்மேலேறத் துணிந்த போது, பலாயனன் திடீரெனவெழுந்து பாய்ந்து நின்று கையை நீட்டிக் கரத்தைப் பிடித்து, உடலை நெருக்கிக் கழுத்தை மடக்கி யொடித்து, நிலத்தில் மோதி ஓரே அழுத்தாகப் பூமியில் அழுத்தி மல்லன் உயிரை மாய்த்து, "எங்கே இவன் பின்னால்வந்த மல்லர்கள்" என்று கூவிப் புயங்களைக் கொட்டிக் கண்கள் பொரியெழ விழித்து, முகம் வியர்க்க ஆர்ப்பரித்து வீறிட்டெழுந்தான்.

இவ்வாறு மல்லனைக் கொன்று வீறிட்டெழுந்த பலாயனனை விராடமன்னன் கண்டு, "மிக நல்ல யுத்தஞ் செய்தாய் உன்னைப்போன்ற பலவான் இந்த உலகில் யாருமே இரார். மிகமெச்சினேன். எல்லாப் போர்முகங்களுக்கும் உன்னைப்போன்றவரில்லர்" என்று புகழ்ந்து பேசி அவனை அருகுற அழைத்துத் தழுவி வெற்றியைக் குறிக்கப்

பொன்னரிமாலை யொன்று அவன் கழுத்திலிட்டுப் பல பரிசுகள் வழங்கிச் சிறப்புச் செய்தனன்.

அன்றுமுதல் அந்நகரில் பலாயனனைக் காண்பவரெல்லோரும் "இவன் அசுரகுலகாலன்! அஞ்சாத சூரன்! அரிய பெரிய வீரன்!" என்று புகழ்ந்து, அவன் விஷயத்தில் பயமுடையவர்களாகவே நடந்துகொண்டார்கள்.

---

## அத்தியாயம் 5.

### கீசகன் வரலாறு.

பாண்டவரும் பாஞ்சாலியும் மாறுவேடம் பூண்டு யாதொருகுறைவுமின்றிப் பத்துமாதங்களைக் கழித்துவிட்டார்கள். அவர்கள், அஞ்ஞாத வாசத்தவணை இன்னும் இரண்டுமாதந்தா னிருக்கிறது; இன்று ஒருநாளாயிற்று; நாளை இரண்டு நாளாயிற்று என்று எண்ணி அஞ்ஞாத வாச முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இங்ஙனம் அவர்கள், ஒருநாட்பொழுதை ஒருயுகம் போலெண்ணித் தேகசுகம்பாராமல் தாங்களெடுத்த கோலத்திற்கேற்கத் தொழிலைச்செய்து வரும் நாளையில், அறுவரும் வருத்தங்கொள்ளத்தக்க ஒரு சம்பவம் நடந்தது. அச்சம்பவத்திற்குக்கீசகனென்பவன்காரணனாயிருந்தான். அவன் பாண்டவர்களுக்கு இழைத்த இன்னலைக் கூறுவதற்கு முன் அவன் வரலாற்றை முன்னர் ஆராய்வோம்.

கேகயநாடு மச்ச நாட்டிற்கு அடுத்தது. அந்நாட்டுக் கேகயமன்னன் இராஜகன்னிகை என்னும் ஒரு பெண்ணை மணந்து சுதேட்டிணை என்னும்ஒருபுத்திரி ரத்தினத்தைப் பெற்றான். இப்பெண் பிறந்த பின்பு அம்மன்னனுக்கு ஒரு புத்திரனாவது பிறக்கவில்லை. அதனால் அவன்புத்திரப் பேற்றை விரும்பி மாளவதேவி என்பவளை இரண்டாவது மணம் புரிந்துகொண்டான். அவள்வயிற்றில் நூற்றுநான்கு புத்திரர்கள் பிறந்தார்கள். அப்புத்திரர்களில் மூத்தவன்கீசகனென்பவன். அவன் சிறுவயதிலேயே பெரியவர்கள் செய்து முடிக்காத பயங்கரமான காரியத்தையும் செய்வான். புலியின் வாலைப்பற்றி யிழுப்பான்.; சிங்கத்தின் வாயில் கையைக்கொடுத்துப் பிளப்பான்; யானையின் துதிக்கையைப் பற்றிப்பிடித்துப் பின்போகும்படி தள்ளுவான். விளையும் பயிர் முளையிலே தெரியும்'என்றபடி இளமைப் பருவத்திலேயே இவ்விதத் துணிகரமான காரியங்கள் செய்து வந்ததால்யாவரும் அவன்செய்கையைக்கண்டு "இவன் சிங்கபலவீரன்" என்று கூறுவார்கள். அவன் பெரியவனானபின்புமிகுந்தபலவானாய்விளங்கினான். அவன் தம்பியர் நூற்றுமூவரும் அவனைப் போலவே பலவானாக இருந்தார்கள். கேகய மன்னனுக்கு இப்புத்திரர்கள் பிறந்த பின்பு பகைவரேகிடையாது. பகைவரெல்லோரும் தானே வணங்கி வந்து நட்புக்கொள்ளலானார்கள். தெரியாமல்பகைப்பார்களானால் இப்புத்திரர்களைக்கொண்டு அப்பகைவர்களைத்தென்றிசைக் கடவுளுக்கு நல்விருந்து செய்வர். இப்புத்திரர்களில் மூத்தவனும் சிங்கபலவீரன் என்று சிறப்புப்பெயர் பெற்றவனுமாகிய இக் கீசகனே அந்நாட்டிற்கொரு சேனாதிபதியாகஇருந்தான்-இது நிற்க,

மச்சநாட்டுமன்னனாகிய விராடர்கோன் சுரதை என்பவளை மணந்து நான்கு புத்திரர்களைப் பெற்றனன். அவள் நான்கு புத்திரர்களைப் பெற்றுச் சிலநாளிருந்து இறந்து போனாள். அதற்குப்பின் அம்மன்னன் அபிமான ஸ்திரீயைக்கொண்டு சுவேதன் என்னும் ஒரு புத்திரனைப் பெற்றனன். முதல் மனைவி பட்டமகிஷியா யிருந்து இறந்த பின்பு தனக்குப் பட்டமகிஷியா யிருக்கக்கூடிய மனைவி இல்லை அதனால் அவன் கேகய நாட்டு மன்னன் புத்திரியாகிய சுதேட்டிணையை இரண்டாவது மனைவியாக மணஞ்செய்துகொண்டான். அவள் வயிற்றில் உத்திரன், உத்தரை என்னும் இருமகவு உதித்தன. அம்மன்னன் சுதேட்டிணையை இரண்டாவது மனைவியாகக் கொண்டு புத்திரப் பேறு பெற்றுச் சுகமாக வாழ்ந்து வரும் நாளையில், மச்ச நாட்டின் வளப்பத்தையும் சிறப்பையும் கண்ட அயல்நாட்டு மன்னர்கள் அடிக்கடி படையெடுத்து வந்து அம்மன்னனுக்கு அதிக சிரமத்தைக் கொடுத்தார்கள். அதனால் அம்மன்னன் எப்பொழுதும் 'எங்கே பகைவர்கள் வந்து விடுவார்களோ' என்று கலக்கமுள்ள சிந்தையனாயிருந்தான். அவனுக்கோ பக்கத்துணைவரில்லை. புத்திரர்களோ அதிபால்யர்கள்.

இந் நிலைமையிலிருந்த அவன், தன் இரண்டாவது மனைவியாகிய சுதேட்டிணையுடன் அடிக்கடி இராச்சியத்தின் மீது படையெடுத்து வரும் பகைவர்களைப்பற்றி ஆலோசித்தான். அவள் அவனுக்கு, "நீங்கள் ஏன் இவ்வளவு கவலைப்படுகிறீர்கள்? இதற்கு ஒரு வழி சொல்லுகின்றேன் அது போல்நடந்தால் இப்பகைவர்எெல்லோ

ரும் இரவியைக் கண்ட பனிபோல் நீங்குவார்கள். அது என்னவெனில்:—என் சகோதரர்கள் நூற்று நால்வர் என் தந்தை நாட்டிலிருக்கிறார்கள். அவர்களில் மூத்தவன் சிங்கபலம் படைத்த கீசகன் என்பவன், என் தந்தை நாட்டிற்குச் சேனாதிபதியாக இருக்கின்றான். அவன் சேனாதிபதியாக வருவதற்கு முன் என் தந்தைக்கும் தங்களைப் போல் தான் துன்பம் நேரிட்டது. கீசகன் சேனாதிபதியானதும் என் தந்தை பகைவர்களெல்லோரையுமே ஜெயித்து அவர்கள் நாட்டையெல்லாம் கைப்பற்றிக் கொண்டார். கீசகன் பெயரைக்கேட்டால் பகைவர்களெல்லோரும் கிடுகிடுவென்று நடுங்குவார்கள். அந்தக்கீசகனை நமது நாட்டுக்கு அழைத்துச் சேனாதிபதிப் பட்டங் கட்டினால் பின்பு பகைவர்களே தலையெடுக்கமாட்டார்கள்" என்றாள்

அரசன், அவள் மொழிகேட்டுச் சந்தோஷனாகி, உடனே தன் மாமனாராகிய கேகய நாட்டு மன்னனுக்குக் கடிதம் எழுதிக் கீசகனையும் உபகீசகர்கள் நூற்று மூவரையும், தன் நாட்டிற்கு வரவழைத்துக் கீசகனுக்குச் சேனாதிபதிப் பட்டமும், உபகீசகர்களுக்கு நாற்படையின்கண் தலைவர்கள் உத்தியோகமும் கொடுத்தனன்.

கீசகன் மச்சநாட்டுக்குச்சேனாதிபதியானதும் விராட மன்னன்மேல் பகைத்தெதிர்த்த திரிகர்த்த தேச மன்னன் மாளவதேச மன்னன், அங்கதேச மன்னன் வங்கதேச மன்னன், தக்கிணதேச மன்னன், நிடததேச மன்னன், முதலியமன்னர்களை எதிர்த்துப் போராடி, அவர்கள் "இனி எங்கள் ஆயுள்வரையும் விராட மன்னன்மேல் போருக்கெழோம்" என்று சொல்லி ஓடும்படி வெற்றிபெற்றனன்.

மைத்துனனுகிய கீசகனல் விராடனுக்குப் பகைவர்கள் தொலேந்தார்கள். மச்சநாட்டுக்குடிகள் 'இதோ பகைவர்கள் வந்தார்கள் ; அதோ பகைவர்கள் வந்தார்கள்' என்று கூறி மன வேதனைப்படும் காலம் போய் மன நிம்மதியான காலம் வந்தது. அதனல் அந்நாடு முன்னேயிலும் மும்மடங்கு செல்வம் பெருகிச் செழிப்புற்றது.

கீசகன் பலதேசத்துப் பகை மன்னர்களோடும் எதிர் நின்று வெற்றிபெற்று விளங்கியமையால், விராடமன்னன் அவனுக்கு அடக்கமாகவே நடந்துகொண்டான். அவன் பேருக்கு அரசனுக இருந்தானே ஒழிய, உண்மையாக அரசனுக்குள்ள ஆண்மையைப் பெற்றிருக்கவில்லே. கீசகன் எதுசெய்தாலும் ஏனென்று கேட்கமாட்டான். எங்கேஇக் கீசகன் நம்மை யொழித்து இந்த இராஜ்ஜியத்தைத் தன தாக்கிக் கொள்வானே என்ற பயம், அவன் மனத்தில் எப் பொழுதும் குடிகொண்டிருந்தது. அதனல் கீசகன்விராட நகரில் தனக்கு மேலதிகாரி இல்லாமல் சுயேச்சையுடன் தன்னரசு நாடாய் வாழ்ந்துவந்தான்.

இனி அவனல் பாண்டவர்களுக்கு என்ன வருத்த முண்டாயிற்று என்பதைக் கவனிப்போம்.

---

## அத்தியாயம் 6.

### கீசகனும் விரதசாரணியும்.

ஆண்மையிற் சிறந்தவனும் அழகில் மிகுந்தவனுமாகிய கீசகன், ஒருநாள் தன் அன்புள்ள சகோதரி சுதேட்டிணவதியும் அரண்மனைக்குவந்தனன். அங்குவந்து

சகோதரியைக்கண்டு க்ஷேமசமாசாரங்கள் சிலபேசி அவளி டம்செலவு பெற்றுக்கொண்டு,தன்மனைக்கேகஅரண்மனைச் சிங்காரத் தோட்ட வழியாகப் போனான். அப்பொழுது, சந்தனமும் சண்பகமும் தேமாவும் ஆசினியும் அசோகும் கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து, நாகமும் திலக மும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் முல்லையொடு மணங்கமழ்ந்து, பாதிரியும் பரவைஞாழலும் பைங்கொன் றையும் பிணியவிழ்ந்த பொரிப்புன்கும் புன்னாகமும் உருக் கொடுமுகைசிறந்து, வண்டறைந்துதேனார்ந்துவரிக்குயில்க ளிசைபாடத் தண் தென்ற லிடைவீராய்த் தனியவரை முனிவு செய்யும் பொழில் நடுவண், பாண்டவரின் தேவியாகிய விரதசாரணி மென்மலர் பல கொய்து கொண்டிருந்தாள். அவ்வழியாக வந்த கீசகன் இயற்கை யழகுமிகுந்த அவளைக் கண்டு“இவளைப்போல் அழகுள்ள பெண்களை நான் இதுவரையில் கண்டதில்லை. இவள் அந்தரத்தில் வசிக்கும் சுந்தர மகளோ? வெள்ளிமலையில் வசிக்கும் கந்தருவ மகளோ? என ஐயங்கொண்டு அவளரு கடைந்து“பெண்மணியே! நீ யார்? எங்குறைபவள்? இங்கு வந்ததன் காரணம் என்ன? உன் முத்தான வாய்திறந்து ஒரு உத்தரம் சொல்லு” என்று நயந்து கேட்டு, அவள் அழகை இமைகொட்டாமல் நின்றுபார்த்துக்கொண்டிருந் தான். விரதசாரணியோ, “இவனார் துஷ்டன் ? பெண்க ளிடத்தில் இவனுக்கென்னவேலை ? பெண்மணியாம் கண் மணியாம் ? அந்நியப் பெண்களை வருணித்து நெருங்கும் அயோக்கியனுக்கு இவ்விசாரணை என்? அதிகப் பிரசங்கி!” என மனதிற்கொண்டு பதிலுத்தரமொன்றுஞ் சொல்லா

மல் நாணமாக ஒருபுறம் ஒதுங்கி மௌனமுற்றிருந்தாள். தான் வினவிய கேள்விகளுக்கு அவள், விடையொன்று மிறுக்காமல் மௌனமுற்றிருத்தலைக் கண்டு ஓடி முன் வைத்து "ஆரணங்கே! நான் உனக்கு ஒரு பொருளாகத் தோன்றவில்லையா? சொல்வது கேட்கவில்லையா? உத்தரஞ் சொன்னால் முத்தஞ் சிந்துமா? சித்தங் கனிந்தொரு உத்தரஞ் சொல்லு" என்று கீசகன் மெத்தப் பசித்தவன் இரந்து கேட்பதுபோல் பல்லைக் காட்டிப் பரக்கக் கைநீட்டி நின்றனன். அவன் அங்ஙனம் தன்னைக் கிட்டிச் சரசமொழி கூறுவதைக் கேட்டு, அவள் மிகவும் மனம்வருந்தி, "இவனோர் புத்தியீனன்; இவனை மதித்துப் பேசாத என்னிடம் பிச்சைக்காரன்போல் லச்சை கெட்டு வருகின்றான். கண்ணில் காணும் மாதரெல்லாம் விலைமாதரென்றுநினைத்துக் கொண்டானோ? கற்புடைய மாதரென்றும் கற்பிலாக் கணிகையரென்றும் பகுத்தறியாக் கசடன்போலுமிவன்" என்று மனத்துள் உன்னி அவன் வினவுக்கு விடை யொன்றும் பகராமல் விலகி நின்றனள்.

அவன் என்ன கேட்டும் விரதசாரணி வாய்திறவாமல் சித்திரப் பதுமைபோ லிருக்கவே, அவளுடன் வந்திருந்த வண்ணப் பெண்களை நோக்கி, "இப்பெண்ணரசி யாவள்? என்றனன். அப்பெண்கள் மிகவும் வணக்கமாக அவனைப் பார்த்து, "பெருமானே! இப் பெண்பாவை உங்கள் தமக்கையாடரித்தில் வண்ணப்பெண் வேலையில் அமர்ந்திருக்கின்றாள் இவள்வந்து பத்து மாதங்களாகின்ன" என்றார்கள். அவன் "ஆ! இப்பெண்திருவா! வண்ணப்பெண்ணாக இருக்கின்றாள். இவளுக்கேன் இவ்விதி? இத்

தொழிலால் இவள் மேனி வாடுமே! ஐயோ பாவம்! நான் இப்பரிதாப நிலைமையிலுள்ள பெண்பாவையை இங்ஙனம் விட்டுப் போதல் பெரும் பாவமாகும். இவள் இத்தொழிலேன் செய்யவேண்டும்? என் தமக்கை இவளழகைக்கண்டு இத்தொழிலா செய்ய ஏவினுள்? என் தமக்கைக்குச்சிறிதும் இரக்கம் இல்லை போலும்!" என்று வண்ணப்பெண்களை நோக்கியுரைத்து விரதசாரணியைப்பார்த்து, "பெண்பெருமாளே! உனக்கேன் இவ்விதி. நீ ஓரிடத்தில்பணி செய்யக் கூடியவளா? இதை விட்டு என் அரண்மனைக்கு வா! என் மனைக்கு ஓர் அணியாக இருப்பாய்! உனக்குப் பணிசெய்ய அநேக தாதிப்பெண்களை வைக்கின்றேன்! ஆடகச் செம்பொன்னுலான ஆபரணங்களைப் பூட்டுகிறேன்! பட்டாடை பலவும் அளிக்கின்றேன்! உன்னையே என் மனைக்கு அரசியாக வைக்கிறேன். பூம்பாவாய்! உன்னைப் பூசிக்கின்றேன். என் மனைக்குவா" வென்று அழைத்தனன்.

அம்மொழிகேட்டு விரதசாரணிமிகவும்துடி துடித்தவளாய் ஒரு பூங்கொம்பின் மறைவில் நின்று அவன்கேட்கும் படி:" ஏபாபி! என்னை கூறினுய்! பாவம்இது புண்ணியம் இது என அறியாயோ இம்மை மருமையைக் கருதாயோ? உன்தீய எண்ணத்தை மாற்ருயோ? என்ன புன் சொல் உரைத்தாய்! இவ்வுரை தகுமா? இதனுலவரும்பழிஉன்னையுமன்றி இந்நாட்டையாளும் இறைவனையுமல்லவோசேர்கின்றது. அநேக உயிர்கள்ஒதுங்கிவாழும் குடைநிழல்வேந்தனுக்கும் நீ அழிவு செய்கின்றனைபோலும்! அறிவிலி! இனி இம்மாதிரிப்புன்சொல்உரையற்க! இங்கேநில்லாதே! வீணே ஏன் பாப மூட்டையைக் கட்டுகிருய். பெரியோர்கள்

பிறர்மனைவியைக் கருதார்கள்; கண்ணாலும் களிக்கப்பாரார்கள். இது அவர்களின் செய்கை. நீயோ அதற்கு மாறுகச் சோரன் போலச் சொற்களைப் பொழிகின்றாய்! சொல்லத் தகாதவைகளைச் சொல்கின்றாய்! சோகம் மேலிட்டு வருகின்றாய்! என்னை யாரென்றுபார்த்தாய்? நான்சாதாரணமானவளல்லள். எனக்குக் கந்தருவர் ஐவர் கணவராக இருக்கிறார்கள். அவர்களைப்பார்த்த கண்ணால் இந்தஅற்பர்களைப் பாரேன். அவர்களுக்கும் உனக்கும் எவ்வளவு ஏற்றத்தாழ்வு இருக்கின்றதென்பதை யோசித்துப் பார். அவர்களில் வீரபோஜனென்னும் சூரன் அறிவாரானால் கண்மூடித்திறப்பதற்குள் உன்னுடல் மண் மூடிப் போய் விடும். வீணே உயிரிழப்பாய்" என்று கூறினாள்.

அவள் அங்ஙனம் கூறவே, சீசகன், "பேதையே, உன்னைப்பார்த்தகண்ணால்உலகத்தில்வேறொருபெண்ணைப் பார்ப்பேனா? என்னுயிர் நீங்கினும் எனக்குக் கவலையில்லை. இன்னுயிரினுஞ்சிறந்த இறைவிஎன் இல்லில்எழுந்தருளின் அதுவே என்பாக்கியம். பெண்தெய்வமே! இரங்குவாய்" என்றுசொல்லி அவள்பாதத்தில்முடிபடும்படி வணங்கினான் அவள் திடுக்கிட்டு," பாவி! என்னகாரியஞ்செய்தாய்! ஏதுரைத்தாய்,துஷ்டனே! உன்கண்ணில்நான்ஏன்பட்டேனோ?

கொம்புளதற் கைந்து குதிரைக்குப்பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே-வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணிற் றெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி,

என்னும் நீதிப்படி, நான் உன் கண்ணிற்படாமல் விலகுவதே நன்மையாகும்" என்றுகூறிக்கொண்டே அரண்மனை

நோக்கி நடக்கலானாள். அவள் அரண்மனை ஏகுவதைக் கண்டு கீசகன், "அன்னமே! நில்! நில்!!" என்று நடைமறித்தான். அவளோ வலையிற்பட்ட மான்போல மனந்திடுக்கிட்டவளாய், "ஐயோ பழிக்கஞ்சாப் பாவி வழி மறிக்கின்றானே." என்று கூவிக்கொண்டு, வேறொரு பக்கமாய்த் திரும்பி ஓட்டமும்நடையுமாய் அந்தப்புரஞ் சென்றடைந்தாள். அத்துஷ்டனும் அவளைப்பின்தொடர்ந்தோடி அவ்விடமே வந்துசேர்ந்தான்.

நடுங்கு மெய்யினள், பேதுறு நெஞ்சினள், நாணு நீர்மையள், நாவினுள் நீரிலாதொடுங்கு மென்மையள், தன் மையினுற் புனலுகுத்த கண்ணினள், ஓவியம்போன்றவள். அந்தப் புரத்திலிருந்த சுதேட்டிணையைக் கண்டு, "அம்மையே! உங்கள் தம்பிசெய்தசெய்கையைக்கண்டீர்களா? நான் நந்தவனத்தில் சென்று நறுமலர் கொய்யும்போது, அவன் என்னைக்கண்டு தகாத வார்த்தைகள் கூறி அரண்மனைக்கு வா; உன்னைப் பூசிக்கின்றேன்; நேசிக்கின்றேன் எவ்கின்றான்.என்னசொல்லித் தடுத்தும் அவன்கேட்கிலன். துஷ்டன் முன் நின்றால் கஷ்டம் வரும்மென்றுன்னி அந்தபுரம் நோக்கி வந்தேன். அவன் 'என் இஷ்டதெய்வமே! என்று கூறிக்கொண்டு என்னை வழிமறித்தான். நான் வேறு வழியாகத் திரும்பி இங்கே ஓடிவந்தேன். அவனும் என் பின் தொடர்ந்து ஓடி வந்தான். அம்மணி இதுதகுமா? நான் உம்மிடம் ஊழியத்தில் அமர்வதற்கு முன் என்விரதத்தையும் என்கணவர் திறத்தையும் கூறவில்லையா? வீணே அவர்களால் உங்கள் தம்பி உயிரிழப்பான் போலும். அவனுக்கு அழகுள்ள ஒரு பெண் வேண்டுமாம். நீர்ஒரு விலைமாதைக் காட்டி அவன் வேண்டுகையைப் பூர்த்திசெய்யும். அவனை

நெறிதப்பாமலிருக்கச் செய்வீரேல் அவன் உயிர்தப்பும். இல்லையேல் தப்பாது. முக்காலுஞ் சொன்னேன். என்மீது பிழையில்லை" என்று கூறினாள்.

விரதசாரணி மெய்ந்நடுக் கத்துடன் வாய்குளறி, கண்ணீர் சொரிந்து இவ்வாறுரைத்ததைச் சுதேட்டிணை கேட்டு, இடியேறு கேட்ட நாகம்போல நடுங்கிக் கையை நெரித்து வயிற்றைப் பிசைந்து "பாவிஉன்னை அப்படியா சொன்னான்; நீ பயப்படாதே நானிருக்கின்றேன்" என்று அபயமொழிகூறி, அவள் கண்ணீரைத் துடைத்து அணைத்துக் கட்டித் துக்கத்தை மாற்றினாள்.

அவளும் அரசியின் அபயமொழியால் மனந்தேறி அந்தப்புரஞ் சென்று தன் காரியத்தைப் பார்க்கலானாள்

அதற்குப்பின் விரதசாரணியைத் தொடர்ந்து வந்த கீசகன் தன் தமக்கை சுதேட்டிணையிடம் வந்துபணிந்து "என் அன்புள்ள சகோதரியே எனக்கு முன் வந்த வண்ணப்பெண் உரைத்தவையாவையும்கேட்டிருப்பாய். அது விஷயமாகவே இப்பொழுது உம்மிடம் ஒரு விண்ணப்பம் செய்து கொள்ளுகின்றேன். அதை மனம் பொறுத்துக் கேட்டு எனக்கருள் புரிய வேண்டுகின்றேன்" என்றான். அதற்கு அவள் "அதுயாது?" என்றுவெகுண்டு கேட்டனள். அவன், இயற்கை யழகு மிகுந்த விரதசாரணி என்னும் பெண்ணணங்கைநீர் வண்ணப் பெண்ணாக வைத்து வேலைவாங்குவது என்மனம் தாளவில்லை. அனிச்ச மலரையொத்த அவளிணையடிகள் வருந்தவும், பத்தரை மாற்றுப் பசும்பொன் மேனி வாடவும் இங்ஙனம் வேலைவைப்பது உமது அருட்டிறத்திற்கு அழகன்று. அவ்வணங்கை என்

மனைக்கு அனுப்பினால், நான் இல்லுறைத் தெய்வமாக வைத்துப் பூசிப்பேன்; நேசிப்பேன். கருணைகூர்ந்து அவளுக்கு நற்புத்திகூறி என்மனைக்கு அனுப்பும். உமக்கு வெகுகோடி புண்ணிய முண்டு" என்றான்.

அம்மொழி கேட்டுச் சுதேட்டிணை,"சீ!புத்தியில்லாதவனே! என்னிடத்தில் என்ன புகன்றாய்? வண்ணமகளை யாரென்று மதித்தாய்? அவள் ஒரு தேவ மாதாயிற்றே. அவள் கணவர்கள் இதையறிந்தால்உன்னை எமபுரம்சேர்ப்பார்களே. இனி இத்தீயபுத்திகொண்டு என்மனை வராதே. நாணமில்லாமல் நீ இப்பொழுது என்னிட முரைத்ததற்கு மன்னித்தேன். அறிவு கெட்டவனே! இங்கே நில்லாதே போ! போ!!" என்று வெகுண்டுரைத்தாள்.

கீசகன் தமக்கை வெகுண்டுரைத்ததற்கு மிகவும் நாணி, மறுபடியும் வாய்திறந்து ஒன்றுஞ் சொல்லாமல் தலைகவழ்ந்துகொண்டே தன்மனை ஏகிப் பஞ்சணைமீது படுத்து;விரதசாரணியின் அழகியஉருவத்தையே நினைத்து நினைத்து வருந்திவாய்பிதற்றிப்புரண்டுகொண்டிருந்தான்.

---

## அத்தியாம் 7.

### விரகதாபம்

கீசகன் விரதசாணியைக் கண்டது முதல் அதே நினைவாக' ஊணுறக்கம் யாதுமின்றிப் பித்தம்பிடித்து விரதசாரணி! விரதசாரணி!! என்றுபிதற்றிக் கொண்டிருந்தான். அவன் நாளுக்கு நாள் மிக இளைத்தும் போனன். இஞ்சிபோன்ற அவன் மேனிசுக்குபோலானது அரண்மனை

வைத்தியர்கள் இவனுக்குப் பித்தம் உயர்ந்திருக்கிறது என்றார்கள். மந்திரவாதிகள் ஏதோ எந்திரம் பிடித்துக்கொண்டது என்றார்கள். சோதிடர்கள் அங்காரக விரோதம் ஆகாதென்றார்கள். அப்படிப் பலரும் பல விதமாகச் சொல்லி அவனுக்குச் சிகிச்சை செய்யலானார்கள்! ஒருவித சிகிச்சையிலும் அது நீங்கினபாடில்லை. நோயொன்றிருக்க மருந்தொன்று கொடுத்தால் அது தீருமா? தீராதன்றோ! எதனாலும் அவன் பிணி தீராமற்போகவே, சிகிச்சை செய்தோரும் கைவிட்டார்கள்.

அவன் நாள் செல்லச்செல்ல நாடித்துடிப்பும் அடங்கி நமனுலகு சேர்வோர் நிலைமையிலிருந்தான். அரண்மனைத் தாதியரும் அவன் மனைவியரும் அவனை வாரி எடுத்து மெல்லணையிற் கிடத்திப் பனி நீர் தெளித்து உபசரித்தனர். எவ்வித உபசாரணையிலும் அவன் பித்தம் தெளியவில்லை. சித்தம் மயக்கத்திலேயே இருந்தது. எப்பொழுது பார்த்தாலும் "விரதசாரணி! பெண் தெய்வமே! வாவா! அருகிலுட்காருவாய். ஏன் பேசாமல் மௌனமாயிருக்கிறாய். என்னை அன்புகொண்டு பாரடி! அழகாலயமே!" என்று பிதற்றிக்கொண்டிருந்தான். அப்போது அவன் மனைவி தாதிகளைப் பார்த்து "எப்பொழுது பார்த்தாலும் இவர் விரதசாரணி! விரதசாரணி!! என்று பிதற்றுவதற்குக் காரணம் என்ன? விரதசாரணி என்பவள் யார்? அவள் மக்களில் சேர்ந்தவளா? தேவரில் சேர்ந்தவளா? உங்களுக்குத் தெரிந்திருந்தால்சொல்லுங்கள். மக்களில்சேர்ந்தவளாயிருந்தால் அவளை இங்கு அழைத்துவருவோம். தேவரில் சேர்ந்தவளாயிருந்தால் பொங்கலிட்டுப் பூசை போடுவோம்" என்ற

னள். தாதிகள், "அம்மா! அப் பெயருடையவள் தேவரில் சேர்ந்தவளல்லள்; மக்களில் சேர்ந்தவள் தான். அவள் மக்களில் சேர்தவளாயிருந்தாலும் தேவர்களைச் சேர்ந்தவள் போலிருக்கிறாள். அவளுக்குக் கணவர் ஐவர் கந்தருவராம். அவளை மனிதர் யாவரும் பார்த்து இச்சிக்கக் கூடாதாம். அத்தகைய மாதை உமது கணவர் ஒருசமயம் கண்டு இச்சித்தாராம். அவள் அவரை நிந்தித்தாளாம். நாங்கள் சின்னாட்களுக்கு முன் அவர் மைத்துனர் அரண்மனையில் கேள்விப்பட்டோம். அவள், அவர் மைத்துனர் வீட்டில் சுதேட்டிணைக்கு வண்ணப்பெண்ணாக வந்து வேலை செய்கின்றாளாம். அவள் இந்நகர் வந்து இன்றைக்குச் சுமார் பத்து மாதங்களாகின்றனவாம்" என்றார்கள்.

தாதியர்கள் அவ்வாறுரைக்கவே கீசகன் மனைவி, "விரதசாரணி என்பவளை நமது அரசிக்குச் சொல்லி அழைத்து வாருங்கள். என் கணவன் உயிர் வர வர அடக்கத்திலிருக்கிறது. ஐயோ! பேச்சும் அடங்கிவிட்டதே! மூச்சும் அடங்குகிற நிலைமையிலிருக்கிறதே! நான் என் செய்வேன்! தாதிமார்களே! ஓடுங்கள்! ஓடுங்கள்!! ஒரு கணமேனும் காலந்தாழ்த்தாது ஓடி விரதசாரணியை அழைத்து வாருங்கள். அவள் கருணை முகத்தை மாத்திரம் காட்டிவிட்டுப் போகச்சொல்லுங்கள். அரசியை நான் வேண்டிக்கொண்டதாக மிகவும் வேண்டிக்கொள்ளுங்கள். ஆபத்து! ஆபத்து!! ஓடுங்கள் ஓடுங்கள்!!" என்றாள்.

தாதியர்கள், கீசகன் உயிர் நீங்குகிற நிலைமையிலிருக்கிறதைக் கண்டு மிகப் பரிதாபங்கொண்டு அவர் மனைவியார் கூறியதற்குத் தடுத்தொன்றுஞ் சொல்லாமல் ஓட்டமும்

[stamp]

பெருநடையுமாய்ச் சுதேட்டிணை யிருக்கும் அந்தப்புரம் போய்ச்சேர்ந்தார்கள்: அவர்கள் வந்த ஓட்டத்தினுல் பெரு மூச்சு வாங்கிக்கொண்டு அரசி காலில் விழுந்து அம்மணி! ஆபத்து! ஆபத்து!! உமது அருமைச் சகோதரர் ஆவி போகும் நிலைமையிலிருக்கின்ருர். பத்து நாளும் அன்ன ஆகாரம் யாதுமின்றிப் படுக்கையிற்புரண்டு சித்தப்பிரமை கொண்டவர் போல் எப்பொழுதும் விரதசாரணி! விரத சாரணி!! என்று பிதற்றுகின்ருர். வைத்தியரும் சிகிச்சை செய்து கைவிட்டார். மந்திரவாதியும் இத்தந்திரத்தா லொன்றும் ஆகாதென்று போய்விட்டார். சோதிடரும் அங்காரக தோஷம் ஆகாது என்று சொல்லி அகன்று விட்டார். இப்பிணி எந்த மருந்து மாயத்தாலும் நீங்கு வதாகக் காணும். இத்தனை நாளும் பேச்சாவது இருந்தது. இன்று அதுகூட இல்லை. மூச்சு மாத்திரம் வருவதும் போவதுமா யிருக்கிறது. இன்னும் ஒரு நாழிகையில் அவர் உயிர் எப்படியாகுமோ தெரியாது. அவர் மனைவியார் முகத்திலறைந்து ஓவென்று கதறி யழுகிருர். அந்த அம்மணி, 'விரதசாரணியை அழைத்து வாருங்கள். ஒருவேளை அவள் தரிசனத்தால் இவர் பிழைத்தாலும் பிழைப்பார்' என்று எங்களைத் தங்க ளிடம் ஓடச்சொன்னுர். தங்களுக்கு அநேக கோடி சரண முஞ் சொன்னுர். அம்மணி! உமது உடன்பிறந்த தோஷத் திற்காவது அவர் மீது கருணை வையுங்கள். கருணை வைத் தால் கீசகன் என்னும் ஆண் சிங்கம் சில நாளாவது இவ் வவனியில் பிழைத்திருக்கும். இல்லையேல் இன்றே அச்சிங் கம் ஒழிந்துவிடும். அவர் ஒழிந்தால் இவ்விராடநகர வாழ் வும் அன்றே ஒழிந்துபோகும். எங்களைப்போன்ற ஏழைக்

குடும்பங்களும் காற்றில் இலவம் பஞ்செனப் பறந்தோடும் நாட்டின் பகைவரும் இதுதான் சமயமென்று நாலாபக்கமும் வந்து வளைந்துகொள்வார்கள். அவ்வொருயிர் இருக்குமானுல் எவர்க்கும் எத்தீங்கும் நேராது. எவரும் சுகமாக வாழலாம். அம்மணி! கால தாமதமாகிறது. ஆபத்துச் சமயத்தில் சகோதரர்மீது கோபமொன்றும் வையாமல், விரதசாரணியை எங்கள் பின் அனுப்புங்கள். அவ்வம்மை முகதெரிசனத்தால் அவர் எழுந்து பழையபடி பேச்சும் மூச்சும் பெறுவாராஞல் உடனே அந்த அம்மையை இங்கு அனுப்பிவிடுகிறேம். அதற்குமேல் அவரை எப்படியாவது தேற்றிக்கொள்ளுகிறேம். அந்த அம்மாளுக்கு யாதொரு பங்கமும் வராமல் பார்த்துக்கொள்ளுகிறேம். தயவுசெய்து அனுப்புங்கள்" என்று மிகப்பணிவுடன் வேண்டினர்.

அவர்கள் அங்ஙனம் வேண்டவே, சுதேட்டிணை தன் தம்பிபால் வைத்த சீற்றத்தை மாற்றி 'ஐயோ! அவன இறந்து படும் நிலைமையிலிருக்கின்றுன். பல மன்னர்களையும் தன் கூரம்பிஞல் எய்து கொல்லும் பராக்கிரமனுகிய அவன் இப்பெண் விழியம்பு பட்டு இங்ஙனமா ஆனுன் இதற்காகவா கேகய நாட்டிலிருந்து அவனை யழைத்தது; சகோதரன் என்ன பொல்லாதவனு யிருந்தாலும் அவன் பிழைத்திருந்தால் போதும். சகோதரர் பலம் சிறந்த பலம். உடன்பிறப்பில்லா உடம்பு பாழாகும். அன்றியும்

தாயோ டறுசுவைபோம்; தந்தையொடு கல்விபோம்;
சேயோடு தான்பெற்ற செல்வம்போம்— ஆயவாழ்
வுற்ரு ருடன்போம்; உடற் பிறப்பால் தோள்வலி போம்
பொற்ருலி யோ டெவையும் போம்.

என்றபடி, நம் உடற்பிறபுக்கு உயிர் மோசம் வருமானல் நமது துணைவலி போமென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. நமது சகோதரன் துணைவலிவினுல் தான் நமது கணவரும் யாதொரு பகைவரின்றிச் சுகம் பெற்றிருக்கின்றூர். இந்நாடும் எந்நாட்டிலும் நன்ருடாய் விளங்குகின்றது. இத்தகையனுன இச்சகோதரனை எப்படி யிழப்பது? அவனே அடாத காரியத்திற்காக உயிரிழக்கின்றுன். அதற்கு எப்படித் துணை செய்வது? ஒரு பக்கம் சகோதர வாஞ்சையும், ஒரு பக்கம் அவன் அடாத செய்கையும் என்னைப் பிடித்து இழுக்கின்றது. எப்பக்கம் சார்வது? என் செய்வது? விரதசாரணியோ சாதாரணமானவளல்லள், விண்ணவர் சகாயம் பெற்று விளங்குகின்றுள்; மகாபதிவிரதை; அவளை எப்படி அவன் சமுகம் அனுப்புவது? அவளும் இதற்கு ஒப்புவாளோ? நாம் எப்படி இதைத் துணிந்து சொல்வது? தரும சங்கடமாயிருக்கிறது. ஆனல், ஒருயிர் அநியாயமாகப் போவதையும் எப்படிப் பார்த்திருப்பது? என்ன ஆகாதவனுனலும் உடன் பிறந்த சகோதரன். தான் ஆடாவிட்டாலும் தன் சதையாடுமல்லவா?—எதற்கும் அவளை யணுகி ஒரு வார்த்தை கேட்டுப் பார்ப்போம். தாதியர்களும் அவள் முகதரிசனமொன்றைத்தானே விரும்பினுர்கள்! அவளும் தன் தரிசனத்தால் ஒருயிரைப் பிழைப்பிப்பதென்றுல் புண்ணியந்தானே! அப்படிப் பிழைக்கச் செய்தால் அவ்வுயிர்க்கு அவள் ஒரு தெய்வமாகின்றுள்; அன்னையாகின்றுள். இதனுல் பாபமில்லை' என்று மனத்திற்குள்ளே ஆராய்ந்து, தன் கருத்தை விரதசாரணிக்குத் தெரிவிக்க அவளிருக்கும் இடம்போனுள்.

சுதேட்டிணை அவளைக் கண்டு அவளிணை யடிகளில் விழுந்து, அவளை நோக்கி "எங்கள் குலதெய்வமே! இன்று நின்வழி அருளுண்டெனில், என் காதலன் செங்கோலும் நீதியும் நெடுநாள் யாதொரு இடையூறின்றி வாழும். இல்லையேல் எங்கள் வாழ்வனைத்தும் இன்றே அழிந்துவிடும். இது நிச்சயம். நான் இனிச் செய்துகொள்ளும் வேண்டுகோளை மனம் பொறுத்துக் கேட்டருளப் பிரார்த்திக்கின்றேன்" என்றனள். அதற்கு விரதசாரணி, "நான் தங்கள் அடிமையாக இவ்வில்லிற்கு வந்திருக்கும்பொழுது தாங்கள் என் காலில் வந்து பணிந்து இங்ஙனம் வேண்டுவது நியாயமா? "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்றபடி எனக்கு எவ்வளவோ நன்மை செய்யும் உங்களுக்கு நான் என்னாலான உதவியைச் செய்யாதிருத்தல் தர்மமாகுமா? தங்கள் வாழ்வுக்கும் தாழ்வுக்கும் நானே காரணமுள்ளவளா யிருக்கின்றேனென்று தாங்கள கழறும்போது அத்தகைய அரிய உதவியை நான் செய்யாதொழிதல் கூடுமா? தங்கள் வேண்டுகோளை வெளியிடுங்கள். என்னாலான உதவியைச் செய்வதற்குக் காத்துக்கொண்டிருக்கின்றேன்" என்று சுதேட்டிணை மனம் மகிழக் கூறினள்.

விரதசாரணி இவ்வாறு அருண்மொழி கூறவே, சுதேட்டிணை நாவில் நீர் ஊறப்பெற்று நல்லுயிர் பெற்றவள்போல அவள் முகம் நோக்கி "வாழ்வளித்த செல்வியே! என் தம்பி எனக்கு இளையவனாதலின், அவன் அறிவும் இளமைத்தனமாகவேயிருக்கிறது. மிகவும் அறிவில்லாதவன். அறிவுள்ளவனானால் அவன் உன்னைக்கண்டு காதலிப்பானா? இதனாலே அவன் அறியாமை விளங்குகின்றதன்றோ? அவ்வறிவிலி அன்று உன்னைக்கண்டு காதலித்ததும், நீ அவனை வெறுத்து நிந்தித்ததும், நான் வெகுண்டு சீ போ வென்று கடிந்ததும்

உனக்குக் கவனமிருக்கலாம். அன்று முதல் அவன் உன்னையே நினைந்து நினைந்து உருகி ஊணுறக்கமின்றிப் பித்தம் பிடித்தானும். அப்பித்தம் நாளுக்கு நாள் வளர்ந்து இன்று அவன் மரணத்தறுவாயில் இருக்கின்றானும். பிராணன் இதுபொழுதோ பிற்பொழுதோவென் றிருக்கின்றதாம். பேச்சு அடங்கி விட்டதாம்; மூச்சு ஒன்றே போவதும் வருவதுமாயிருக்கின்றதாம். அவ்வுயிர் நின் தரிசனத்திலிருக்கின்றது. இன்று அவ்வுயிரை நீ இருவென்றால் இருக்கும்; போவென்றால் போகும்; நீயே அவ்வுயிருக்குத் தெய்வமும் அன்னையுமாகின்றாய். ஆபத்துக்காலத்தில் அவனைக் கைவிடாதுகடைக்கணித்தருளு. அவன் உயிர் தப்பின் எங்கள் செங்கோலும்வாழ்வும்நீதியும்நெறியும்சீருஞ்சிறப்பும் எங்களிடமிருக்கும். இல்லையேல்? அவைகள் அவனுயிரோடே பின்தொடர்ந்துபோகும். அவனால்தான் என் காதலனுக்கு ஏற்பட்ட எண்ணிறந்த பகைவர்கள் ஒழிந்தார்கள். அவன் எங்கள் நாட்டில் இல்லை யென்று பகைவர்கள் அறிவார்களானால் அன்றே இந்நாட்டை அவர்கள் சூழ்ந்து இவ்வாழ்வைக் கைப்பற்றிக் கொள்வார்கள். இதிலொரு சந்தேகமில்லை. இப்பொழுது உன் சம்மதத்திலேயே எங்கள் வாழ்வும் தாழ்வுமிருக்கின்றன. ஆதலால் அம்மணி! நான் சொல்லுகிறபடி சம்மதித்து அவன் மனைக்கேகினால் உன் விரதத்துக்கும் பங்கம் நேராது; எங்கள் வாழ்வுக்கும் தாழ்வு வாராது; எதற்கும் ஒரு குறைவு வாராது, அவன் மனைத்தாதியர்களும் உனக்குப் பங்கம் வாராமல் பார்த்துக் கொள்வதாக உறுதிமொழி கூறியிருக்கிறார்கள். நான் இப்பொழுது கொடுக்கிற வாசப் பூமாலையையும் தேனையுங்கொண்டு அவன் மனைசென்று

'உமது அக்காள் கொடுத்த வரிசை இது; பொற்றுக்கொள் என்று கொடுத்து விட்டு வந்துவிடு அவன் உன் வாய்மொழியைக்கேட்டுப் பழையபடிஉயிர்ப்பெற்று கண்விழிப்பான். கண் விழித்ததும் கடுக என்மனைக்கு வந்துவிடு. அவன் தாதியர்கள் அதற்குமேல் அவனுக்குச் சிகிச்சை செய்து அவனைப் பிழைப்பித்து விடுவார்கள் எங்கள் மீது சீவகாருண்யம் வைத்து இதனைப் பெற்றுச் செல்லக்கடவாய்'' என்று மிகப்பணிவுடன் சொல்லி வாசப் பூமாலையையும் தேனையும் வைத்த தட்டைக் கைநீட்டினாள்.

இவ்வாறு சொல்லிய சுதேட்டிணையை விரதசாரணி நோக்கி, "என்னை யாதரிக்கும் அன்னையே! உன் தம்பி கீசகன் மகா துஷ்டத்தனமாக என்னைப் பூந்தோட்டத்திலிருந்து துரத்தி வந்தபோது, அவனை நீர், மிகக் கடுமையான வார்த்தைகளால்சுட்டு ஓட்டிவிட்டீர். அவனோ என்மீது கொல்லத்தக்கபகைகொண்டு அவன் மனை சென்றிருக்கின்றான். அத்தகையானிடத்தில் நான்போவது தகுமா? தாங்கள் எல்லாம் அறிந்திருந்தும் என்னை இங்ஙனம் ஏவுதல் தருமமா? நான் தங்களை அடுத்தபோது என்னை மனிதர் எவரும் காதலிக்கக் கூடாதென்றும், அங்ஙனம் காதலித்தால் உயிரிழப்பார்களென்றும் கூறவில்லையா? அப்பொழுது தாங்கள் 'உனக்கு ஒரு குறைவும் வாராமல் உன்னைப் பாதுகாக்கின்றேன்' என்று மொழியவில்லையா? அம்மொழிப்படியே இதுவரையில் எனக்கொரு குறைவும் வாராமல் காத்து என்னை இப்பொழுது அப்பாபியிடத்திற்கு ஏவுவது முறையா? என்னை அவன் மனைக்கு ஏவுவதைவிட்டு வேறு தொழில் விடுங்கள் அதைச் செய்கிறேன்.'' என்றாள்.

அவள் இங்ஙனம் கூறவே, சுதேட்டிணை கண்களின்

ரும் நீர் பெருக, "அம்மணி! இன்ருேடு எங்கள் வாழ்வு நீங்கிவிட்டது. நாங்கள் பரதேசியாய் விட்டோம்" என்று மனக்கலக்கத்துடன் கூறினள்.

விரதசாரணி அவள் பரிதாப மொழியைக்கேட்டு மன மிரங்கி; "அம்மையே! தெய்வம் விட்ட வழியாகிறது. நீங் கள் மனம் வருந்தவேண்டாம். உங்கள் விருப்பத்தின்படியே அங்குச் செல்கின்றேன். தட்டினைக் கொடுங்கள்" என்று வாங்கிக்கொண்டு கீசகன்மனைக்குச்செல்லும்போது சுதேட் டிணையைத் திரும்பிப்பார்த்து, "அம்மணி! உமது சொல்லைத் தட்டக்கூடாதென்ற தாக்ஷண்யத்தின் பொருட்டு அங்குச் செல்கின்றேன். முடிவில் யாது விளையுமோ? அதை அறி கிலேன்" என்று கூறி, வீதியில்வந்து சூரியனை நோக்கிக்கை தொழுது "சுவாமியே! பாபியின்மனைக்குச் செல்கின்றேன். எனக்கொரு பாதகம் வாராமல் காத்தருள்வீர்" என்று பிரார்த்தித்துக்கொண்டு போயினள்.

அதுபொழுது தன் மனையில் கீசகன் கண்ணை மலர மலர விழித்துச் சாகுந்தருணத்தில் இருப்போர்களைப்போல இருந்தான். அவன் மனைவி,வாயிலும் வயிற்றிலும் அறைந்து 'ஐயோ! ஐயோ!!' என்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தாள். அச்சமயம்சுதேட்டிணை வீட்டிற்குச்சென்றிருந்த தாதியர் கள் "இதோ விரதசாரணியை அழைத்து வந்தோம்! விரத சாரணி இதோ! விரத சாரணி இதோ!!" என்று கீசகன் படுக்கையிடத்தை நெருங்கினுர்கள். கீசகன் காதில் விரத சாரணி என்ற பெயரின் ஒலி நுழைந்ததும் பட்டமரம் தளிர்விட் டெழுந்ததுபோல் படுக்கையினின்றும் எழுந்து, "எதோ! எதோ!!" என்றுகாக்கையைப்போல நாற்புறமும்

சுற்றிப்பார்த்தான். அப்படிப் பார்க்கையில் அவன், ஒரு புறம் பொற்றட்டை ஏந்தி நிற்கும் பொற்கொடி விரதசாரணியைக் கண்டான். கண்டு, "ஆ! விரதசாரணி! பசுங் கிளியே! பச்சை மாமயிலே! உன் சித்தங்கனிய இத்தனை நாளாயிற்றே?" என்று சொல்லிக்கொண்டு படுக்கையினின்றும் ஒரு குதி குதித்து, அவள் கை பிடிக்க ஓடி வந்தான். அவளோ வேடனைக்கண்ட மான்போலக்கையிலேந்தியிருந்த தட்டைப் பொட்டென்று போட்டு விட்டு பாபி! பாபி!! என்று கூவிக்கொண்டு அம்மனையை விட்டு அரசன் மனை நோக்கி ஓடலானாள். அவனும், மானைத் தொடர்ந்து ஓடும் வேடனைப்போல மான்விழியாள் விரத சாரணியைத் தொடர்ந்து ஓடினான். விரதசாரணி, இருதயம் பட பட வென்று அடித்துக்கொள்ளத் தேகம் குளிர்சுரம் கொண்டதுபோல் நடு நடுங்க அறிவு மயக்கங்கொள்ள அபயம்! அபயம்! என்று கூவிக்கொண்டு ஓடி, விராட மன்னன் அரசவை போய் விழுந்தாள். சபையிலுள்ளோரெல்லோரும் "என்ன! என்ன!! என்ன!!" என்று இரைந்தார்கள். அவள் பின்தொடர்ந்தோடிவந்த கீசகன், அரசவை யென்பதையும் மதிக்காமல் மண்ணில் விழுந்த பெண்திருவின் கையைப் பிடித்திழுக்கப்போனான். அச்சமயத்தில், கற்புக்கணியாய் விளங்கும் அவள் மகத்துவத்தால் ஒருபெருஞ் சுழற்காற்று தோன்றி அவள் மேற் கைபடாவண்ணம் அவனைப் புரட்டி ஒரு பக்கம் தள்ளிவிட்டது. அவன் அச்சுழற் காற்றினால் தலைகீழாகக் கவிழ்ந்து விழுந்து, அவமானம் அடைந்தான். அதனால் அவன் மிகவும் வெட்கிச் சபையை விட்டுத் தன் மனை நோக்கிப் போய்விட்டான்.

அப்பொழுது அவ்விடத்திலிருந்தவர்கள் அங்கு நடந்த அதிசயத்தைக் கண்டு 'திக்கற்றவர்க்குத் தெய்வமே

துணை யென்று சொல்வி, அரசன் இவ்வக்கிரமத்திற்கு யாது செய்யப்போகின்முன். யாது தண்டனைவிதிக்கப்போ கின்றான்?, என்று எண்ணிக்கொண்டு அவன் முகத்தையே நோக்கிக்கொண்டிருந்தார்கள்.

அரசனோ தன் சபையில் வந்து வீழ்ந்தழுத அவ் வண்ணப் பெண்ணின் அலங்கோலத்தையும், தன் மைத்துனன் அரச சபைக்கு ஓடிவந்து அப்பெண்ணைத் தொட்டிழுக்க முயற்சித்ததையும் கண்டு, மனத்திற்குள் பரிதாபமும் ஆத்திரத்தையும் கொண்டானே யொழிய "யாரடா! துஷ்டன் இக்காரியத்தைச் செய்யத் துணிந்தது! சேவகர்களே அவனைப் பிடியுங்கள்; பிடித்துக் கட்டி ஈண்டுக் கொண்டு வாருங்கள்" என்று கூறித் தன் அதிகாரத்தை நடத்தக்கூடியவனாக இல்லை. இதற்குக் காரணம் கீசகன் தோள் வலிமையே யாகும். அவன் தோள் வலிமைக்குப் பயந்தே ஒரு அதிகாரத்தையுஞ் செலுத்தாமலும் வாய் திறந்து ஒன்றுஞ் சொல்லாமலும் தானியம் பழுத்த நிலத்தில் வைத்த புல்லாடவனென அசையாதிருந்தான்.

அப்பொழுது அங்கு வந்திருந்த ஜனங்களுள் தானு மொருவனாக வந்திருந்த வீமசேனனாகிய பலாயனன், அஞ்சிப் பஞ்சுபோல் பறந்தோடிவந்த திரௌபதையையும், அவளைப் பின்தொடர்ந்து பிடிக்க வந்த கீசகனையும் பார்த்து, அங்கம் பதறத் துடித்து ஆசார வாசலின் முகப்பிலிருக்கிற தருவைப் பிடுங்கி பத்தினிக்குப் பங்கம் விளைத்த கீசகனையும், இதை ஏனென்று கேளாத விராட மன்னனையும் ஒரே அடியில் அடித்துக் கொல்ல நினைத்தான். அச்சமயம் பொறுமையே பூஷணமாகக் கொண்ட தருமராகிய கங்கபட்டர், எங்கே தம்பி வீமன் பதறப் போகின்றானோ

வென்று அதுவே கவலையாகப் பார்த்துக்கொண்டிருந்தவர், அவன் கண்ணோக்கால் அவன் உள்ளக் குறிப்பை யுணர்ந்து வீமசேனனாகிய பலாயனனை நோக்கி "அப்பா பலாயனா' நீ மடைப்பள்ளிக்குத் தலைவனாகையால் காய்ந்த விறகு எங்குண்டோ வென்று உயர்ந்த மரங்களைக் கண்ணோட்டமிடும் வழக்க மிருக்கின்றது போலும். நீ இப்பொழுது பார்க்கிற மரம் அவசரத்திற்கு விறகாகாது. இதைக் காயவைத்துக் கொள்ளலா மென்றாலோ விறகு காய நாட் செல்லும். அவசியம் விறகு வேண்டுமானால் தக்க மனிதர்களைக் கூட்டிக் கொண்டு காட்டுக்குப் போய் நீ கருதும் மரங்களை வெட்டிக் கொள்ளலாம். அங்ஙனம் செய்வதன்றி இவ்விராட மன்னன் சபை முன் நிற்கும் தருவை அவசரப்பட்டு அழிக்கக் கருதாதே. நீ மிகுந்த பலசாலி யாதலின் உனக்கு எதுவும் கஷ்டமல்ல. ஆதலால் நீ பட்டணத்திற்குப் புறம்பே சென்று வேண்டும் மரங்களை வேருடன் வெட்டி எரித்துக்கொள். இம்மரத்தை மாத்திரம் வெட்ட நினையாதே. இது அநேக பறவைகளுக்கு ஆதரவாகவும், நமது வாசத்திற்கு உதவியாகவும் குளிர்ந்த நிழலைக் கொடுத்து அரண்மனைக்கும் அழகாயிருக்கின்றது. இம்மரத்தை அறிவுடையோர் அழிக்க நினையார்கள். 'பச்சை மரத்தைப் பதைக்க வெட்டுவது பாவ' மென்று பெரியோர்கள் கூறியிருக்கின்றார்கள். என்ன ஆபத்து வந்தாலும் பாபத்திற்குப் பயப்படவேண்டும்." என்று கூறிப் பூமியைப் போல் பொறுமையாயிரு என்ற நீதியைக் குறிப்பித்துக்காட்டப் பூமியைக் காலால் தேய்த்துக் குறிப்பிட்டார். அவர் மரத்தின் மேல் ஏற்றி வெளிப்படையாகச் சொன்ன விஷயம் யாதெனில், 'நமக்கு உபகாரியும் இந்நாட்டுக் குடிகளுக்கு ஆதரவாகவு மிருக்கின்ற விராடமன்னனைக் கொல்லவேண்டாம்;

கீசகனைக் காட்டிற் கொண்டு போய்க் கொல்; இப்பொழுது அவசரப்படாதே' என்பதாம்.

அம்மறை பொருளை யறிந்து கொண்ட வீமசேனன் 'இவர் இங்குந் தடையானரே' யென்று உடலம் பதற வெழுந்த கோபா வேசத்தை யடக்கி 'என் அண்ணனால் தான் உன்னைப் பங்கம் செய்யத் துணிந்த அப்பாதகன் அங்கத்தைப் பிளக்க முடியவில்லை' என்ற எண்ணத்துடன் பாஞ்சாலியின் முகத்தை நோக்கினன். அக்குறிப்பை யறிந்து கொண்ட பாஞ்சாலி, தன்னைப் பங்கம் செய்யத் துணிந்த பாதகனைத் தண்டியாமலும் கண்டியாமலும் தனக் கெதிரில் வீற்றிருந்த விராட வேந்தனை நோக்கி "மன்பதை காக்கும்மன்னனே! பத்தினிப்பெண்டிரைத் தீண்டுதல்தகும் தகாதென அறியா மூர்க்கனுங் கீசகன் இங்ஙனம் செய்வது நீதியோ? "படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் என் னும் ஆறு அங்கமுடைய செங்கோலனுகிய நீர் உமது மைத்துனன் தீய புத்தியால் செய்ததை விசாரித்து முறை செய்து என் மனக்கலக்கத்தை மாற்றி ஆறுதல் சொல்லி ஆதரியா திருப்பது உமது அரசாட்சிக்கு அழகாகுமோ? உமது தேவியாருக்குப் பணிவிடை செய்து பிழைக்க வந்த ஏழையளாகிய என்னை இக்கோலங் கண்ட பாதகனுகிய கீசக மூர்க்கனைத் தீர விசாரியாமற் போவீராகில் எனக்கு வேறுகதியில்லை. 'திக்கற்றவர்க்குத்தெய்வமே துணை' யென் பார்கள், உலகில் அரசனே கண்கண்டதெய்வம்.

"குலமகட்குத் தெய்வம் கொழுநனே ; மன்ற
புதல்வர்க்குத் தந்தையும் தாயும்:—அறவோர்க்கு
அடிகளே தெய்வம்; அனைவோர்க்குந் தெய்வம்
இலைமுகப் பைம்பூ ணிறை.

நீர் அத்துடுக்கனை விசாரித்து நீதி வழங்கா திருப்பது உமது பதவிக்குத்தகுமா? வருத்த முற்று வந்தவர்களின் துன்பத்தை மாற்றிக் காக்கவேண்டியது உமது கடமையல்லவா? அக்கடமையினின்றும் தவறினால் நீர் அரசாவதெங்ஙனம்? உமது ஆஜ்ஞா சக்கரம் என்ன பயன்படும்? இத்தகைய அரசு கொடுங் கோலரசு என்றன்றோ உலகம் சொல்லும். துஷ்டர்களைச் சிக்ஷித்து முறைசெய்யா மன்னன் நாட்டில் குடிகளுக்கு நஷ்டமும் பெருங்கஷ்டமுமல்லவோ விளையும்'' என்றுகூறி. இத்தகைய கொடுங்கோலரசன் வாழும்நாட்டை விட்டுக் கடும்புலிவாழுங் காட்டிற் புகுந்து வாழ்வது நன்றல்லவா? பேதைப் பெண்ணுக்குற்ற துன்பத்தை மாற்றாத இவ்வரசன் முன் என்ன கூறினும் யாது பிரயோசனம்? 'பெண் ணொன்றாற் பேயு மிரங்கும்' என்பார்கள். மக்களில்மன்னனுயர்ந்தோர்க்கு அது கூடவில்லை'' என்று வெறுத்து விட்டு இன்று தன் வினையின் விளைவாய் வந்த துன்பத்தைக் குறித்து விம்மி விம்மி அழுதாள்.

அவள் அங்ஙனம் அரசனை வெறுத்துக் கூறி ஆற்றுவதைக் கண்டு உள்ளே மாச்சரியமும்வெளிக்கு ஆச்சரியமுங் கொண்டிருந்த தருமராகிய கங்கபட்டர் அவளை நோக்கி, "ஓ! வண்ணப்பெண்ணே! நீ பெண்களுக்குரிய நாணத்தைவிட்டு அரசசபையில் இங்ஙனம் பேசுவது அடாது. அறவுருவான விராட பூபதி அநியாயக்காரரல்லர்; அறநூல்களை அநேகம் வாசித்தவர்; சத்திய நெறிதவறாதவர்; சாதுசங்கப்பழக்க முள்ளவர்; சகலவிதசம்பத்துமுடையவர்; சதுர்வேதம் உணர்ந்தவர்; தநுர்வேதந் தேர்ந்தவர்; மநுமுறை கற்றவர்;மக்களைப்பெற்றவர். அவர் ஒருக்காலும் நடுநிலைமை தவறார். பக்ஷபாதமாக விசாரியார்.

நீ அவசரப்பட்டு ஒன்றுஞ் சொல்லாதே. உனக்குரியவர்களிடம் சொல்லி அவர்கள் மூலமாய்த் தக்கது தேடிக் கொள்; பெண்பால் அடக்கமின்றி அரசவை யேறுதல் தகாது. அந்தப்புரஞ் செல்'' என்றார்.

கங்கபட்டர் உரைத்த கருத்தை யுணர்ந்த விரதசாரணி ''மன்னிக்கவேண்டும்! மன்னிக்கவேண்டும்'' என்று அவரைப் பார்த்துக் கூறிக்கொண்டு அந்தப்புரம் போய்ப் பெருங்காற்றி லலைந்த முருங்கைபோல் சுருங்கி ஒடுங்கிச் சுதேட்டிணை முன் கண்ணீர் சோர நின்றாள். இவ்வாறு நின்ற விரதசாரணியைச் சுதேட்டிணை பார்த்து ''பெண்ணருங்கலமே! இங்ஙனம் வாடி வதங்கிச் சோர்ந்து கண்ணீர்பெருக வந்ததன் காரணம் என்ன? நீ போன இடத்தில் உனக்கேதாவது இடர் நேர்ந்ததோ? இப்பொழுதே சொல்லு இடர்செய்தவன் தலை இடறும்படி செய்கின்றேன்'' என்றாள்.

அங்ஙனம் அன்புடன் வினவிய சுதேட்டிணையைத் திரௌபதா தேவி பார்த்து, அம்மையே! கைவிரலால் கண்ணைக்குத்திவிட்டுக் கண்ணைக்குத்தினவர்கள் யார்? குத்தியதற்குக் காரணம் என்ன? என்று விசாரிப்பது போலிருக்கிறது? முன்னதாகவே நான் என்ன சொல்லியும் கேளாமல் என்னை உமது தம்பியிடத்திற் கனுப்பிப் பின்பு ஒன்றுந் தெரியாதது போல் நடித்துத் துடிதுடித்துக்கேட்கின்றீரே, நன்றாயிருக்கிறது. ஆயினும்பெரிதன்று. உமது வார்த்தையின்படி வாசப்பூமாலையும் தேனும் அவன் மனைக்குக் கொண்டு போனேன். அவன் அதைப் பெற்றுக் கொள்ள மனமில்லாமல்என்னைப் பற்றப்பதறிப்பேய்போல் ஓடிவந்தான். நான் அவன் கையிலகப்படாமல் மானென விரைந்தோடி மன்னன் பேரவையில்வந்து வீழ்ந்தேன்; அதன்பின் என்னை விரட்டித்

தொடர்ந்து ஓடிவந்த பாவி எப்பாடு பட்டாரோ, என்ன கதி கெட்டாரோ, என்பதை நானறிகிலேன்'' என்று கண்ணீருகுத்து வருந்தினள்.

அவள் அங்ஙனம் கூறி வருந்துவதைக் கண்ட அரசன் பத்தினி, அவள் கண்களினின்றும் வடியும் நீரைத் துடைத்து "அருந்ததி போல்வாய்! அப்பாவி என் தம்பியானாலும் மகா பதிவிரதையான உன்னிடத்தில் இப்படி முறைதப்பி நடக்க முயற்சித்தபடியால் அவன் எனக்கு இனித் தம்பியாகான்! நான் அவனுக்குத் தமக்கையாகேன். 'வீட்டுக்காகாத பிள்ளை ஊர்க்குமாகான்! என்பது போல் உனக்காகாத துஷ்டன் எனக்குமாகான்! இனி அவன் மண்ணில் இருந்தாலுமொன்று தான், இறந்தாலுமொன்றுதான், அவன் இனி மண்ணிலிருப்பது பூமிக்குப் பாரமே யொழிய வேறில்லை. அவனைக் கொல்ல வேண்டு மென்று உனக்கு எண்ணமிருப்பின் இப்பொழுதே தெரிவிப்பாய். அப்படுபாவியை யொழிக்க அரசனுடன் கலந்து பேசிக் காரியத்தை முடிக்கின்றேன். நீ வருந்த வேண்டாம் உனக்கொரு நாளுங் குறைவு வாராது'' என்று கூறி அவள் வருத்தத்தை மாற்றினாள்.

சுதேட்டிணையின் தேறுதலான வசனங்கேட்டு விரத சாரணி, "நீங்களொன்றுங் கவலையெடுத்துக் கொள்ள வேண்டாம். என் தீவினைப்பயன் இவ்வாறாயிற்று. நீங்களென் செய்வீர்கள். திக்கற்றவர்க்குத் தெய்வமிருக்கிறது. 'அடாது செய்தவர் படாது படுவர்' என்பதுபழுதாகாது. என்விஷயத்தில் அபராதியாகிய அவன் என்னைக் காவல்புரியும் கந்தருவரால் கால் சாய்ந்து போகாமலிரான். இன்றோ அல்லது நாளையோ அவர்கள் வருவார்கள். அப்பொழுது அவன் தலை யோடிப் போமோ? இந்தத் தரணி யோடிப் போமோ' அறியேன் நான். ஆயினும் உம்மை வந்தடுத்து உமது

உப்புந்தண்ணீரும் புசித்துக் காலங்கழித்த என்னால் உமக்கு யாதொருகுறைவும் வாராதிருக்கும்படி என் இஷ்டதெய்வத்தை நன்கு பிரார்த்தித்துக் கொண்டேன் அம்மையே!'' என்று சொல்லி வணங்கி வாழ்த்தினாள்.

நிற்க, அரசன் பேரவையில் என்ன நிகழ்ந்தனவென்பதைக் கவனிப்போம். திரௌபதை கங்கபட்டர் உரைத்த வாய்மொழிப்படி அந்தப்புரம் சென்றபின்பு அரசன், வண்ணப்பெண் தன் அரசாட்சியைத்தாக்கிப்பேசினதையும் சபையிலுள்ளோர் 'கீசகனை அடக்கியாள அரசனுக்கு ஆண்மை இல்லை' யென்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டதையும், அரசவை என்பதையுங்கூடப் பாராமல் தன் மைத்துனன் வண்ணப்பெண்ணைத் தொட்டிழுக்க முயற்சித்ததையும், அப்படி முயற்சித்த அவனை அக்கணமே தண்டித்து அரசதருமத்தை நிலை நாட்டக்கூடாமற்போனதையும் நினைத்து வருந்தி மௌனமுற்றிருந்தான்.

இங்ஙனமிருந்த விராடமன்னனை, வேதவிதியும் நீதிமுறையும் அறிந்த கங்கபட்டர் பார்த்து "சாந்தகுணவேந்தனே! ஆண்மையுடன் ஆட்சிபுரியும் அரசர்கள் தங்கள் நாட்டிலுள்ள துஷ்டர்களைத் தண்டிக்காமல் விடுவார்களானால், அந்நாட்டுச் செல்வமும், அரசநீதியும் எங்ஙனம் நிலைபெறும்? அரசர்கள் நீதி செலுத்தும் முறையில் தமர் பிறர் என்று பட்சபாதம் வைப்பார்களா? தனக்கு யாரும் திக்கில்லாத ஒரு பெண்பால், வயிறு வளர்ப்பதின் நிமித்தம் நின்மனைவியினிடத்தில் வண்ணப்பெண்ணாக வந்தமர்ந்தால் அவள்மீது மச்சநாட்டரசனுடைய மைத்துனன் இச்சை வைத்தான் என்பது இசையோ? அல்லதுவசையோ? சுத்த

வீரருக்குரிய ஆண்மையோ? மேன்மக்கள் செய்கையோ? கீழ் மக்களும் செய்வதற்கு நாணும் இத்தீத்தொழிலைக்கொண்ட அக்கீசகன் தன்னிலும் வலிய வீரர் உலகத்தில் ஒருவரு மில்லையென்று உம்மை மதியாதிருக்கின்றான். அவன் இத்தொழிலைச் செய்து உமது அரசாட்சியில் பிழைத்தான். மற்றொரு அரசாட்சியாயிருக்குமானால் அவன் பிழைக்கவே மாட்டான். உமது துரைத்தனத்தில் அவன் தப்பினாலும் தெய்வாணையில் தப்பமாட்டான். எல்லோருக்கும் பொது வாகத் தெய்வ மொன்றிருக்கிறது. அது நடு நிலைமையாக விசாரித்துத் தண்டிக்கும்.

அரசன் அன்று கொல்வான்:
தெய்வம் நின்று கொல்லும்

என்பது பொய்யாகாது" என்று கூறினர்.

எல்லா முணர்ந்த கங்கபட்டர் இவ்வாறெடுத்துரைத்த நீதிவாக்கியமும், கற்பில் மிகுந்த வண்ணப்பெண் கழறின வசனமும் அரசன் காதைத் துளைத்து ஊடுருவிப் போன தினால் அவன் மிகவும் களைத்துச் சித்தமழிந்து சிங்காசனம் விட்டெழுந்து அந்தப்புரஞ்சென்று அவலமுற்றிருந்தான்.

அரசன் அரியாசனம் விட்டெழுந்து போனபின்பு அச் சபையிலிருந்த வீமன், நெருப்பெனப் பொங்கிச் சினந்து,

கண்ணெருப்பெழ இருகைந்நெருப்பெழ
உண்ணெருப்பெழத் தனதுடனெருப்பெழ
மண்ணெருப்பெழ எழமடையிலெய்தினான்.

அதன்பின், தருமபுத்திரரும் மற்றதம்பியரும் தங்கள் காலபேதத்தை நினைத்து வருந்தித் தத்தம் இடம்போய்ச் சேர்ந்தார்கள். அப்பொழுது ஆதித்தனும் அன்று அரச

வையில் நடந்த அக்கிரமத்தைக்கண்டு மனம் பொறுதவன் போலக் குடபாலமர்ந்து மெய் சிவந்தான்.

---

## அத்தியாயம் 8.

### திரௌபதையும் வீமனும்.

இரவு வந்ததும், அரண்மனையிலுள்ளோர் யாவரும் தத்தம் தொழிலைச் செய்துவிட்டு நாழிகையானதும் துயில் கொள்ளச் சென்றனர் சுதேட்டிணையிடம் கூறி வருத்தமுற்றதிரௌபதை இராத்திரி பதினைந்துநாழிகைக்கு அரண்மனையில் யாதொரு சத்தமு மில்லாதிருந்த அச்சமயம் பார்த்து, அழுதகண்ணும் சிந்திய மூக்குமாய்ச் சந்தடி செய்யாமல் மெல்ல நடந்து கதாயுதவீரனான வீமனிருக்கும் மடைப்பள்ளி போய்ச் சேர்ந்தாள். அப்பொழுது வீமன் அன்று பாஞ்சாலிக்கு நேர்ந்த பங்கத்தைக் குறித்து எண்ணிக்கொண்டு கண் மூடிப்படுத்துக் கொண்டிருந்தான். அங்ஙனம் படுத்துக்கொண்டிருந்த வீமனைப் பாஞ்சாலி பார்த்து, "கவலையில்லாமல் உறங்குங்காவலனே எழுந்திரும்! எழுந்திரும்!!" என்றாள். கலவரத்துடன் கண்ணை மூடிக் கொண்டிருந்த கதாயுதனாகிய வீமன், திடுக்கென்றெழுந்து விழித்துப் பார்த்து "பேதையே! இந்நடுநிசியில் இங்குத் தனித்து வருவானேன்?" என்றான்.

அவன் அப்படி வினவியதும், திரௌபதை வணக்கத்துடன் அவனை நோக்கிக், "காரியமாகத்தான் வந்தேன். அந்நாளில், சூதாடி நாடிழந்த பாண்டவராகிய உங்கள் முன்னிலையில் என்னைத் துற்சாதனன் மன்

னவையில் மயிரைப்பிடித்திழுத்து மானபங்கம் செய்ய முயற்சித்தபோது நீங்கள் கையைக் கட்டிக்கொண்டு பொறுமை சாதித்தீர்களல்லவா? அன்றே போல் இன்றும் பொறுமை சாதிப்பீர்களோ வென்றெண்ணி முன் எச்சரிக்கை செய்யவந்தேன். நானே பிறந்த அகத்திலும் புகுந்த அகத்திலும் மிகப்பெருமையாய் வாழ்ந்தேன். பின்பு விதிவசத்தினால் கற்களும் முட்களுமுள்ள கானகமெங்கும் உங்களோடு திரிந்தலைந்து வருந்திக் காய்கனி புசித்துப் பன்னிரண்டு வருஷம் கழித்தேன். இப்பொழுது ஒரு வருஷம் அஞ்ஞாத வாசம் செய்வதற்கு உருமாறிப் பெயர் வேறுகொண்டு இவ் விராடமன்னன் மனைவி சுதேட்டிணையிடம் குற்றேவல் புரிந்து வருங்காலையில் பாதகனாகிய கீசகன் என்னை இப்பங்கத்திற்காளாக்கினான். அப்பாதகனை அரசனும் அழைத்துத் தண்டிக்க அஞ்சினான். அவன்தான் அவ்விதமானான், பதிகளாகிய பாண்டவர்களைக் கொண்டு அப்பாவியைத் தண்டிக்கலாமென்றாலோ, பூமண்டல முழுதும் புகழ்பெற விளங்கிய தருமபுத்திரர் வைதீக வேடம் பூண்டு ஒருவிதமாயிருக்கின்றார். மூவுலகும் வென்று இசை பரப்பிய விசய சிகாமணியோ, பேடியுருவெடுத்து பெண்களுக்கிடையி லிருந்து பரதநாட்டியம் பயிற்றுகின்றார். வெற்றி வீரர்களாகிய இளைய சகோதரர், நகுல சகாதேவறென்றாலோ அவர்கள் வெளியிலிருந்து தத்தம் தொழிலைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்; இவர்களிடம் சொல்லிக் கொள்வதில் ஒரு பயனுமில்லை யென்று கருதியே உம்மிடம் வந்தேன். ஐவரில் நீரே வாயாற்கூறிய சபதத்தையும் மனத்தால் நினைத்த குரோதத்தையும் முன் பின் பாராமல் முடிக்கத்தக்க பலசாலி. அதனால்தான் உம்மிடம் என் குறையை முறையிட்டுக்கொள்ள வந்தேன்'' என்றாள்.

இவைகேட்ட வீமன் மிகவும் மனவருத்தத்தோடு பாஞ்சாலியை நோக்கிப் "பெண்ணே! புருஷர்களுக்குப் பொறுமையே ஆபரணமென்று சொல்லினும், நீதி தவறியவர்களை ஒருகணமேனும் தாழ்த்தாமல் அவர்கள் தலை நிலத்தில் விழத்துணிப்பதே சிறந்த ஆபரணமாகும். அங்ஙனமிருக்க எங்கள் அண்ணாவோ வென்றால், எந்தசமயத்திலும் பொறுமையே பெருமையாகக் கொண்டாடுகிறார். என்னிடத்தில் என் கைக்குத்தகுந்த கதாயுதமிருந்தும், அர்ச்சுனனிடத்தில் வெற்றிபொருந்திய காண்டீப மிருந்தும் என்ன பிரயோசனம்? அன்று அத்தினபுரியில் சகுனியுடன் சூதாடித் தோற்றபோதும், உன்னைத்துற்சாதனன் பற்றி அரசவைக்கு இழுத்துவந்து மானபங்கம் செய்ய முயற்சித்தபோதும், துரியோதனன கர்ணன் முதலியோர் உன்னையும் எங்களையும் பரிகசித்து அற்ப வார்த்தைகள் புகன்ற பொழுதும், அங்கம் பதற எழுந்த எங்களை 'ஆத்திரப்படவேண்டாம்! ஆத்திரப்படவேண்டாம்!!' என்று அடக்கிய தமையனவர் இப்பொழுதும் இவ்விராடன் சபையில் உன்னைத்துரத்தி வந்த கீசகனைக் கொல்ல வெண்ணிய என் கோபக்குறியறிந்து, மறைபொருள் கூறித்தடுத்துவிட்டார். இவர் எப்பொழுதும் இத்தன்மையாயிருந்தால் எங்கள் மானந்தான் கெட்டுப்போகும். இனி மானம் போகச் சும்மா இரேன். எங்களைச் சமயத்தில் மீறவொட்டாமல் தடுத்துச் சங்கடப் படுத்திவரும் தருமபுத்திராலுண்டாகிய மனத்தாங்கலையும் துரியோதனுதியரால் உண்டாயிருக்கிற கோபத்தையும் இந்தக் கீசகன்மீது காட்டி, யானையின் மத்தகத்தைப் பிளக்குஞ் சிங்கம் போலப் பாய்ந்து, நான் அவன் அங்கத்தைப் பிளக்கிறேன். இனி அவன் விஷயத்தில் யார் தலையிட்டு என்ன சொன்னபோதிலும் நான் அதற்கு உடன்படப்போ

கின்றதுமில்லை; அவனை உயிருடன் விடப்போகின்றது மில்லை; உன்னைப்பகைத்த அவன் இனி உயிருடன் பூமி யில் வாழப்போவதுமில்லை. இது நிச்சயம்" என்றான்.

அங்ஙனம் அவன் உரைக்கவே, பாஞ்சாலி அவனைப் பார்த்து, "வீர! தாங்கள், தங்கள் தமையனார் மீது முனிந்து கொள்வது நியாயமன்று; அவர் உமது கோபக் குறியறிந்து தடுத்தது நியாயமே. அங்ஙனம் அவர் தடுத் திராவிட்டால் நமது அஞ்ஞாதவாசத்தின் இரகசியம் வெளி யாயிருக்குமன்றோ? அதனால் பகைவர்கள் நம்மை யறிந்து மறுபடியும் பன்னிரண்டு வருஷம் காட்டில் வாசஞ்செய்ய நிர்ப்பந்தப்படுத்துவாரல்லவா? நமது சபதமும் நிறைவேறா தொழிந்துபோகுமன்றோ? இவற்றைக்கருதியே, காலதேச வர்த்தமானங்களை யறிந்த புத்திமானாகிய தருமபுத்திரர் உம்மைத் தடுத்தது; அவர்பேரில் குற்றமில்லை; அவர் பொறையெல்லாம் நன்மைக்கேயன்றி தீமைக்கன்று. இனி அவர் பொறுமைக்குக் குற்றஞ்செல்லாமல் பாதகனா கிய கீசகனை யொழிக்க வழிதேடுக. நான் அவன் கண்முன் பட்டபோது 'நீ என்னைக் காதலிக்காதே; காதலித்தால் என் கணவர் ஐவர் கந்தருவர்கள் உன்னைக் கொல்வார்கள்' என் றேன். அரசன் தேவிக்கும் இதையே கூறியிருக்கின்றேன்! அரண்மனை முழுதும் இவ்விஷயம் தெரியும். ஆதலால் நீர் அவனைக் கொன்றாலும் உம்மீது சந்தேகமேற்படாது. விரத சாரிணியின் கந்தருவர்கள் கீசகனைக் கொன்றார்போலு மென்று எண்ணிக்கொள்வார்கள். இன்னும் இரண்டு நாளைக் குள் இக்காரியத்தை முடித்துவிடுவீராக" என்றனள்.

வீமனும், "அப்படியே அவனைக் கொல்லுகின்றேன்; இப்பொழுது விடியற்கால நேரமாயிற்று; இன்று அவனைக் கொல்லத் துணிந்தால் அஞ்ஞாதவாச இரகசியமும் வெளிப்

பட்டுப்போய்விடும். இன்று இரவு முழுமையும் போய் நாளைப் பகல் முப்பது நாழிகையும் சென்று இரவு வரட்டும்; அப்பொழுது நீ நினைத்தபடி அவனை முடித்து விடுகின்றேன். ஆனால் அதை முடிப்பதற்கு நான் ஓர் உபாயம் சொல்லுகின்றேன்; அதன்படி நீ நடந்துகொள்; காரியமும் வெகு சுளுவில் முடிந்துவிடும்; இரகசியமும் எவருக்கும் புலனாகாது. நீ நாளைக்காலையில் சுதேட்டிணை மாளிகைக்குப் போவாயாகில் அவனும் அங்கு வருவான். வந்து உன்னைக்கிட்டி, 'ஓ! பெண்ணே! நீ நேற்று அரசன் அடைக்கலமென்று அடைந்தாயே; அரசன் உன்னைக் காப்பாற்றினனா? என்னையும் தடுத்தானா? இல்லையே! எனக்கு இங்கு எவரும் எதிரில்லை; உனக்கு யாரும் திக்கில்லை; ஆதலால் நீ என்மனைக்கு வந்து விடு. உன்னை வெகு சிறப்பாக வைக்கின்றேன்' என்று ஆசை மொழி கூறுவான். அப்பொழுது நீ அவன்மேல் அன்புள்ளவள் போல் நடித்து, இங்கு உன்னுடன் பேசுவதற்குச் சந்தர்ப்பமில்லை; பேசினாலும் பலரும் அறிவர்; நாளை இரவு பத்து நாழிகைக்கு இந்நகர்க்குப் புறம்பேயுள்ள வசந்த மண்டபத்திற்கு வா, அங்கு நானும் வருகின்றேன். எல்லாம் சாவகாசமாய்ப் பேசிக்கொள்ளலாம்' என்று சொல்லி, பக்குவப்படுத்திவிடு. அதற்குமேல் நான் பார்த்துக் கொள்கின்றேன்" என்று உபாயஞ் சொல்லி அவளை அந்தப்புரம் போகச்செய்து, நெய்வார்த்த நெருப்பெனப் பொங்கிச் சினந்து பொழுது விடிந்து பகல் முப்பது நாழிகையும் சென்று குறித்த இரவு பத்து நாழிகை எப்பொழுது வரப்போகிறது, கீசகனைக் கொன்று கை ஊறலைத் தீர்த்துக் கொள்ளப் போகின்றோம்' என்று எண்ணமிட்டுக்கொண்டு படுத்துக் கொண்டிருக்கும்

பொழுதே குண திசை வெளுத்தது; சூரியனும் உதய மானான்.

---

## அத்தியாயம் 9.

### போலிக்காதல்.

சூரியன்குண திசை யெழுந்ததும் திரௌபதை படுக்கை யினின்றுஎழுந்து, காலைக்கடன்களைமுடித்துச் சுதேட்டிணைக்கு மலரெடுத்துத் தொடுப்பதற்குப் பூக்குடலை எடுத்துச்கொண்டு பூஞ்சோலைக்குச் சென்றாள். அப்பொழுது கீசகன் தமக்கையைக்கண்டு, அவள் முன்னம் தன் மீதில் கோபித்து நிந்தித்ததை மாற்றிக்கொண்டு பண்டுபோல் அன்பாயிருக்கக் கேட்டுக் கொள்வதற்காக அப்பூங்காவின் வழியாக வந்தான். அவ்வழியாக அவன்வருவதைத் திரௌபதை பார்த்து, அந்தகனைக்கண்ட உயிரைப்போல நடு நடுங்கிப் பின்பு ஞான நூல்களைக் கற்றுத்தெளிந்தவர்போல் மனந்தேறிச் சங்கடப்படாமல், தள்ளாடிஓடாமல், தவித்து வாடாமல், அச்சம் சிறிதுமின்றித் தலைகுனிந்து, நிமிஷத்திற் கொருதரம் தன்கால் புறவடியையும் கீசகனையும் பார்த்துப் புன்முறுவல் பூத்து, அவன் துற்புத்தி தன்மீது படரும்படி நடித்து வீமனிடத்தில் பேசிக்கொண்டபடி நடந்து கொண்டாள்.

இங்ஙனம் நின்ற பொற்பாவை போல்வாளைப் பஞ்ச மகா பாவத்தினை அஞ்சாமல்செய்யும்கீசகன் கண்டு, கலைமதி கண்ட காந்தக் கல்லெனச் சிந்தையுருகி, ஆசை பெருகி, இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் அங்ஙனம் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது, அவள் தன்

கால்பெருவிரலைப் பார்ப்பதும், அவன் முகம் நோக்குவதும், புன்முறுவல் பூப்பதுமாயிருந்தாள். அந்நிலைப்பின்னை அவன் மெய்மெனக்கொண்டு அவள் முகம் நோக்கி "விரதசாரணி! முன்னம் நான் உனக்கு என் பெருமையைச் சொல்ல வில்லையா! அதை நீ நேற்றுச் சற்றேனும் எண்ணிப்பாராமல் அரசன் முன் ஓடினையல்லவா? ஓடி நீயடைந்த பலனென்ன? உன்னைத் துரத்திவந்த என்னை அரசன் என்ன செய்துவிட்டான்? எவராவது என்னிடம் நெருங்கினார்களா? என்னை ஏனென்று கேட்டார்களா? நேற்று என் பெருமை யெல்லாம் உனக்கு அனுபவத்தில் நன்குவிளங்கியிருக்கும்; அவற்றைநான் விரித்துக்கூறவேண்டுவதில்லை; சுருக்கிச்சொல்லின் இந்நகரமும், இந்நாட்டு வளப்பமும், விராட மன்னனுடைய வாழ்வும், என் தமக்கையின்மாங்கல்யசூத்திரமுமெனதுஇந்த இடக்கையிலிருக்கிறது; இதை விரித்தேனானால் அவ்வாழ்வெலாம்காற்றிலகப்பட்ட பஞ்செனப்பறந்தோடும்.வேண்டுமென்றால் பார். இந்த விராட மன்னனுக்குக் கட்டிவைத்திருக்கும்பட்டத்தைமாற்றி உனக்குச்சூட்டிஉன்னைப்பெண்ணரசி யாக்குகின்றேன். என்னை ஜெயிப்பார் எவ்வுலகிலுமில்லை. உனக்குக் கந்தருவர் ஐவர் இருக்கிறாரென்றும், அவர் உன்னைக் காப்பாற்றுவாரென்றும் கூறினையல்லவா? அவர்கள் நேற்றுவந்து உன்னைக் காத்தார்களா? அவர்களை ஒரு மலைபோல் நம்பி என்னைப் பேசாதும் பேசி ஏசினையே. நீ என்ன வாசியடைந்தாய்? இப்போர்ப்பட்ட சமயத்தில் வந்து காப்பாற்றாத அவர்களை, இனி நீ நம்பலாமா? நம்பி மோசம் போகலாமா? அவர்கள் அன்பும் ஆண்மையும் இப்பொழுது விளங்கவில்லையா! இனியேனும் என்மீது இரக்கமுண்டாகுமா? நான் ஆருக்குமடங்காத வீரன்; நமனையும் பக்ஷணம் செய்யும் சூரன்; உன் நாணயத்திற்கேற்ற மாரன்

என்பதை இப்பொழுதாவது நீ அறிந்து கொண்டனையா? உன் கன்மன முருகி நன்மனமாக வேண்டும் ஆரணங்கே'' என்று அவளிணையடிகளில் விழ்ந்தான்.

அவளும் இதுதான் சமயமென்று அவனைநோக்கி, "ஆருக்கும் அஞ்சாதவீர! நீ என்மீது அன்புகொள்ளுமுன் னமே நான் உன்மீது அன்புகொண்டிருந்தேன். ஆயினும் நீ கொண்ட அன்பு நிலையுள்ளதா? அல்லது நிலையற்றதா? எனப் பரிக்ஷிப்பதற்கே இங்ஙனம் உன்னை அலைக்கழித் தேன். இப்பொழுதே உன் அன்பின் முதிர்ச்சியை அறிந்து கொண்டேன். இது பெண்களின் சுபாவம். இந்திரனே வந்து இச்சித்தாலும் அவர்கள் எளிதில் மனம் ஒருப்படார். ஆதலால் நீ மனத்திலொன்றுங் கருதவேண்டாம்; நடந் ததை நினைக்கவேண்டாம்; போனது போகட்டும்; இப் பொழுது நான் சொல்லுகிறபடிநடந்துகொள்; உன்இச்சை நிறைவேறும். அஃதென்னவெனில்: நாம் இருவரும் இங் குத் தனித்துப்பேசுவதை உன் தமக்கையாவது வேறுதாதி யர்களாவது,மற்றும்இந்நகரத்து மாந்தர்களாவது கண்டால் "இவள் என்ன நீலியாய் இருக்கிறாள் ; நேற்று வானம் கிழிக்க வாய்விட்டு அரற்றினவள், இன்று மானம் இழக்க மன்னன் கீசகனோடு பேசுகின்றாள்; வெகு அழகு! வெகு அழகு!! என்று வேண்டுவனவெல்லாம் பேசுவார்கள். ஆதலால், நீ இன்று இரவு பத்து நாழிகைக்கு இந்நகரத் தின் புறம்பேயுள்ள வசந்தமண்டபத்திற்கு வந்துவிடு; அங்கே நானும் வருகின்றேன்; அப்பொழுது எல்லாம் சாவ காசமாகப் பேசிக்கொள்ளலாம்'' என்றாள்.

அம்மொழியைக் கேட்ட கீசகன், அமிர்தமுண்ட அம ரரைப்போல ஆனந்தக் கூத்தாடி அவளை நோக்கி, "அன்ன நடைப் பெண்மயிலே! கன்னல் பழிக்கும் உனதுமொழி

என்னுள்ளங் குளிரச்செய்தது. உன் வாய்மொழிப்படியே இன்றிரவு அம்மண்டபத்தில் வந்திருக்கிறேன். நீ தவறாமல் அங்குவந்து சேர்வாய்" என்று கூறிவிட்டு, தன் மனையை யடைந்து அந்தகன் பாசம் தன்னைச்சுற்றும் அன்றைய அந்திப்பொழுதை எதிர்பார்த்துக்கொண் டிருந்தான்.

கீசகன் பூஞ்சோலையைவிட்டு அகன்றதும், திரௌபதை பறித்த மலர்களை அந்தப்புரத்திற்கு எடுத்துக்கொண்டு போய், அவைகளை அணிபெறத்தொடுத்து அரசி கையிற் கொடுத்து, அவளுக்குச் செய்யவேண்டிய குற்றேவல் பலவும் புரிந்து, பின்பு அவளுத்தரவின் மேல் மடைப்பள்ளி எய்தி வீமனைக்கண்டு, "நாம் பேசிக்கொண்டபடி அவனை இசையச் செய்துவிட்டேன். இனி நீர் உமது காரியத்தைப் பார்க்கலாம்" என்று கூறி அந்தப்புரம் வந்து சேர்ந்தனள்.

வீமனும் நெடுநாளாய்த் தினவு தின்னும் என்னிரு தோளுக்கு இன்று நற்போர் கிடைத்ததென்றெண்ணி, இரவியின் மறைவை எதிர் நோக்கிக்கொண்டிருந்தான்.

---

## அத்தியாயம். 10.

### கீசகன் வதம்.

எண்டிசையும் மறைந்தொளிந்தோடிய இருளெல்லாம் திரண்டு தலைகாட்ட ஆரம்பிக்கவே, பாபத்திற்குப் பயந்தோடும் புண்ணியவான்களைப்போலக்கதிரவனும் குடகடலெய்தி யொளித்தனன். கதிரவன் குடபாலெய்தவே, தனக்குத் தரணியில் எவரும் எதிரில்லையென்னும்படி இருள் எங்கணும் வந்து சூழ்ந்து கொண்டது. அப்பொழுது அஞ்

ஞான விருள் பரவிய அகத்தினனாகிய கீசகன் அவ்விருளைக் கண்டு களித்தனன். அவன் களிப்பைக்கண்டு நகைந்தன போல ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் ஒளி விட்டு விளங்கின, அவை தோன்றவும்; கெடுமதி கண்ணுக்குத்தோன்றாத கீசகனும் அவற்றை நோக்கி நாழிகையை எண்ணிக் கொண்டிருந்தான். ஒவ்வொரு நாழிகையும் அவனுக்கு ஒவ்வொரு யுகமாக இருந்தது. ஒன்பதாவது யுக முடிவில் பத்தாவது யுகம் பிறப்பது போல, ஒன்பதாவது நாழிகையின் முடிவில் பத்தாவது நாழிகை பிறந்தது. கீசகனும் பணிபலபூண்டு கறுத்த இருளில் காலால் வழிதேடி வசந்த மண்டபத்தை நோக்கித் தென்றிசை நடந்தான்.

வீமனும், பெண்களைப் போல ஆடை அரையில் சுற்றிக் கையில் வளையல் கலகலவெனவும், காலில் சிலம்பு கலீர் கலீரெனவும், அணிந்து, பெண்ணுருக் கொண்டு, திரௌபதையும் உடன்வரக் கன இருளில் காட்டிலுள்ள மண்டபத்தைப்போய்ச் சேர்ந்தான். சேர்ந்ததும் வீமன், ஆங்கோர் மறைவிடத்தில் திரௌபதையை இருத்திப், "பெண்ணே! உனக்குப் பங்கம் தேடியவனின் அங்கம் என்ன வாகின்ற தென்பதைப் பார்த்துக் கொண்டிரு" என்று சொல்லி மறைத்து விட்டு, அம்மண்டபத்தின் கற்றூணொன்றில் மறைந்து நின்று கொண்டு, கண் இமைக்காமல் காட்டு வழி மேல் நாட்டம் வைத்தான்.

அப்பொழுது செத்தபிணமானது மெத்தப்பணிபூண்டு வருவதைப்போன்று கீசகன் ஆடையாபரண அலங்கிருதனாய் மரங்கள் சூழ்ந்த பொழிலிடையிருக்கும் வசந்த மண்டபம் வந்து சேர்ந்தனன். இவ்வளவு தெரிந்த வீமன் காற்சிலம்பாலும் கைவளையல்களாலும் கலீர் கலீர் எனச் சத்த முண்டாக்கினன். இச்சத்தத்தைக் கேட்ட கீசகன் போனகந்த

முற்று "அன்பின்வடிவே! நீ யெனக்கு முன்னேயே இங்கு வந்து விட்டாயா? நீ பெண்பால்; இவ்வளவு சீக்கிரத்தில் இங்கு வந்திருக்கமாட்டாய்; வருவதற்குச் சிறிது தாமத மாகும் என்றல்லவோ எண்ணியிருந்தேன். நான் இந் நேரம் உன்னை இங்குத் தனித்துக்காத்திருக்கச் செய்ததற்கு மன்னிக்கவேண்டும் ஆரணங்கே!" என்று சத்தம் வந்த இடத்தை நோக்கிக்கும்பிட்டான். அச்சமயம் பெண்ணுருக் கொண்ட வீமன், அவன் பிதற்றலெல்லாங் கேட்டுப்பின்பு தலையை நீட்டுவதும், நாணி உள்ளே இழுத்துக் கொள்வ தும், கையை வீசுவதும், பின்பு அடக்கிக்கொள்வதுமாய்ப் பெண்கள் செய்யும் சாகசமெல்லாம் செய்தனன். அது கண்ட கீசகன், 'நம்மைக்கண்டு விரதசாரணி நாணப்படு கின்றாள்போலும்' என்றெண்ணி வீமன் மறைந்திருக்கும் தூணருகு சென்று "நங்கையே! உனக்கு இன்னும் என்ன நாணம்? என்னுடன் அன்பாய்ப்பேச என் முன் வா! கிளி மொழியே! உன் பவள வாய் திறந்து கிள்ளை மொழிபேசி என்னுள்ளம் குளிரச் செய்" என்றான்.

வீமன், இன்னும் சிறிது நேரத்தில் உன்னுள்ளம் ஒரே முடிவாகக் குளிரச் செய்கின்றேனென்று மனதிற் கொண்டு, தூண்மறைவிலிருந்தபடியே கையை நீட்டினான். கீசகன், "விரதசாரணி! உன்கையைப் பிடிப்பதற்கு நான் என்ன தவ மியற்றினனோ" என்று கூறிமிகுந்த ஆசையுடன் அவன் கைகளைப் பிடித்தான். பிடித்தபிடியை வீமன் விடாமல் கெட்டியாகப் பிடித்துத் தூணைச் சுற்றி வந்தான். இவ்விதமாகத் தயிர் கடைவதுபோல் வீமன் அவன் வலக் கையையும் இடக் கையையும் மாற்றி மாற்றிப் பிடித்துத் தூணைச்சுற்றியதால் கீசகன் கைகள் கற்றூணில் உராய்ந்து

இரத்தஞ் சொட்டின. பிடித்த பிடி தேள்கொட்டிக்குடை வது போலிருந்தது. கீசகன் இவ்வலி பொறுக்கமாட்டாமல் "என்ன பெண்ணே! இப்படி விளையாடுகிருய்?" என்று சொல்லி 'இவள் கைகள் என்ன இவ்வளவு உரத்திருக்கிறதே. தாமரை போன்ற இவள் கைகள் இப்படித் தடித்திருப் பதற்குக் காரணம் என்ன! இவள் வண்ண மகள்தானே! அல்லது கள்ள மகள்தானே! என் அக்காளிடத்தில் அண்டிப் பிழைக்க வந்தவள் இவ்வளவு சூது செய்வாளா? ஆகிலும் ஸ்திரீகளை நம்பலாகாது என்று பெரியோர்கள் சொல்வாகள். எல்லாரையும் அப்படி நினைத்து விடலாமா? நான் விரதசாரணி! விரதசாரணி!! என்ற பேரவாக் கொண்ட சித்தப்பிரமையினுல் இவ்வாறு தோன்றுகிறதோ? அல்லது உண்மையாக அவள் சூது செய்துஅனுப்பிய பெண்பாலோ? இதை நன்ருய்ச் சோதித்தறிவோம்' என்று தனக்குள்ளே கலவரங்கொண்டு "விரதசாரணி! என் கையை விடடி; நீ பிடித்த பிடிக்கு இளையாதிருக்கிற என் கை வலியைப்பாரடி, உன் பலத்திற்கு என் பலம், ஒன்பது பங்கு உயர்ந்த தென்பதை அறியடி. ஆசைக் கிளியே! உன்னை அடி பிடி என்பதற்கு ஆயாசப் படாதே. இது அன்பின் பெருக் கால் வரும் நேசவார்த்தை" என்று கூறித் தன் கையை விடுவிக்க முயற்சித்தான். கை விடுபடவில்லை. பின்பு இவன் எத்தனையோ ஆசை வார்த்தைகள் பேசி வேடிக்கை காட் டிக் கையை விடுவிக்கப் பார்த்தான். இவை ஒன்றிற்கும் ஏமாருத வீமன், அவன் இரு கைகளையும் ஒருகையால் கெட்டியாக இழுத்துப்பற்றி அவன் முதுகில் "இதுஆசைக் குத்து; இது நேசக் குத்து" எனச் சொல்லிப் பல குத்

துகள் குத்தினன். தொடையைப் பற்றிக்கொண்டு "இது ஆசைக்கிள்ளு! இது நேசக்கிள்ளு!" என்று சொல்லிப் பல கிள்ளுகள் கிள்ளினன். ஒவ்வொரு கிள்ளுக்கும் ஒவ்வொரு உழக்கு இரத்தம் பீரிட்டது. இத்தகைய குத்தும் கிள்ளும் பெற்ற கீசகன், 'இது என்ன விபரீதமாயிருக்கிறது? வகை தப்பி வந்து அகப்பட்டுக் கொண்டோம்' என்று மனக் கிலேச மடைந்து, மிகவும் பிரயாசையோடு தன்கைகளை விடுவித்துக் கொண்டு வீமன் முன் வந்து நின்றனன். வீமன் அவன் கண்ணுக்குக் கரும்பேய் போலத் தோற்றியதால் இது என்ன சங்கடமென மனத்திகிலடைந்து, பின்பு ஒரு வாறு தேறி, கோபம் மூண்டு பேயென நினைத்த வீமனை இருகையாலும் ஓங்கிப் புடைத்தனன்.

வீமன் அப்புடைத்தலைத் தன் இருகைகளாலும் தடுத்துக்கொண்டு அவனை மண் மீது விழும்படி குத்தித் தள்ளினன். மண் மீது விழுந்த கீசகன் மிக்க சீற்றங் கொண்டு எழுந்து, வீமன் உடலைக் கெட்டியாகத் தழுவிப் பிடித்துத் தூக்கி எறிந்தான். வீமன் அவன் கையினின்றும் தப்பிக் கீசகனுடைய இருகைகளையும் ஒரு கையால் கெட்டியாய் இறுக்கிப் பிடித்துக் கொண்டு, மற்றொரு கையால் அவன் விலா வெலும்புகள் மள மள வென்று முறி யும்படி ஓங்கப் பல குத்துகள் குத்தினன். ஒவ்வொரு குத் தும் மேகம் முழங்கி இடி இடிப்பதுபோலிருந்தது. அவன் பல குத்துகளை வாங்கிப் பிடி திமிர்த்துக்கொண்டு ஆண் சிங்கம் போன்று கர்ச்சித்து வீமனோடு மற்போர் செய்ய இருகை களையும் பிடித்திழுத்துக் கால்களை எற்றினன். வீமன் அவன் தோளிற் கையைப் போட்டுக் காலால் எற்றிக் கீழே தள்ளி

அவன் தலையில் இரத்தம் பெருகும்படி கையால் பல குட்டு கள் குட்டினான். கீசகன் தலையில் விழுந்த குட்டுகளைப் பொறுக்க மாட்டாது இளைத்து நாய்போல் நாக்கைத் தொங்கவிட்டுக்கொண்டு, கோபம் மென்மேலெழ எழுந்து வீமன் பிடியினின்றும் தப்பி, அவனை மீண்டும் இறுகத் தழு விப் பிடித்து எடுத்து, அங்கே யிருந்த கற்பாறையின்மீது தன் வலுவெல்லாங் கொண்டு மோதினான். அதனால் வீமன் சிறிது நேரம் சித்தம் கலங்கி இருந்தான். பின்பு அவன் சித்தந் தெளிந்து, நரசிம்ம மூர்த்திபோல் ஆவேசங்கொண்டு அக்கீசகன் மயிரைப் பற்றிப் பிடித்துக் கீழே தள்ளி, அவன் தலைமீது பல குட்டுகள் குட்டித் தலையைப் பிளக்கச் செய்த னன். அதனால் வன் தலைகிழிந்துமூளைசிதறி இரத்தம்பெருகி உயிர் போயிற்று. விராடன் மைத்துனன் பிரேதமானான்.

அதன் மேலும் வீமன் கீசகனாகியபிரேதத்தைச் சும்மா விடாமல், அதன் கைகால்களை யெல்லாம் ஒட்டி ஒன்று பட மாமிசப் பிண்டமாக உருட்டி, அப்பிண்டத்தின்மேல் அவன் மீசையையும் கண்ணையும் வைத்து, மண்டபத்தில் மறைந்து இதையெல்லாம் பார்த்துக்கொண் டிருந்த திரௌபதை யைக் கூப்பிட்டுப், "பெண்ணே! பார்த்தனையா உனக்குத் தீங்கு நினைத்தவனை எமனுக்கு மாவிளக்காகப் போட்டு விட்டேன்; வெளியே வந்துபார்" என்றான்.

திரௌபதை அவன் கூப்பிட்டதும் வெளியே வந்து தன்னைத்துரத்தி அலைக்கழித்த துஷ்டன் ஒழிந்தான் என்று சந்தோஷப்பட்டாள்.

அதன் பின் வீமன் ஒருமரத்தை வேரோடு பிடுங் கிக் கிளையோடு கிளை தேய்த்து அனலுண்டாக்கிக் காட்

டைக்கொளுத்திப் பெருவெளிச்ச முண்டாகச் செய்தனன். அவ்வெளிச்சத்தில் வீமன் திரௌபதையை அருகழைத்து, "பெண்ணே! வெளிச்சத்தில் அவன் அங்கம் என்ன விதமாயிருக்கின்றது என்பதைப் பயப்படாமல் பார்" என்றுகாட்டினான். அவள் அதைப்பார்த்து "இது என்ன உருண்டை போலிருக்கிறதே; இவ்வுருண்டையா கீசகன் என்றாள். அதற்கு வீமன் "ஆம்; அவ்வுருண்டைதான் கீசகன்" என்றான் "பாவி ஒழிந்தான்; இனி நமக்கு இங்கு என்ன வேலை? பொழுதும் விடிகிற சமயமாயிருக்கிறது. நாம் இனிஇங்கிருப்பது தகாது நகர்க்குச்செல்வோம் வாருங்கள்" என்றுதிரௌபதை வீமனை யழைத்துக்கொண்டு வந்தாள். வரும் வழியில் ஒரு தாமரைப்பொய்கை யிருந்தது. அதில் இருவரும் இறங்கித் தேக சுத்தி செய்துகொண்டு கரையேறியபின் வீமன் திரௌபதையைப் பார்த்துப் "பெண்ணே! நாம் இனி இருவரும் ஒன்று சேர்ந்து நகர் நோக்கிச் செல்வது கூடாது. யாராவது நம்மைக்கண்டால், இவர்களிருவரும் சேர்ந்து வருவதற்குக் காரணமென்ன என்று சந்தேகிப்பார்கள். ஆதலால், வேறொரு வழியாக நான் மடைப்பள்ளிக்குச் செல்லுகின்றேன். நீ மற்றொரு குறுக்குப்பாதை வழியாகச் சுதேட்டினை அந்தப்புரம் போய்ச்சேர்" என்று சொல்லி விடை கொடுத்துவிட்டு, விரைவாக நடந்து மடைப்பள்ளியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான்.

---

## அத்தியாயம் 11.

### உபகீசகர்கள் வதம்.

வீமனுக்கும் கீசகனுக்கும் சண்டை நேரும்பொழுது சுமார் இரவு பதினைந்து நாழிகைக்கு மேல்தானிருக்கும்.

அப்பொழுது விராடநகரமும் விராடநகரத்தையடுத்த கிராமங்களும்பாதொருசந்தடியுமில்லாமல்நிச்சத்தமாயிருந்தது. எல்லா மாந்தர்களும்பகலில் தாங்கள் பட்டபாட்டினுல்இரவில் மெய்மறந்து தூங்கினுர்கள். அப்பொழுது, அநேக மரங்கள் வளர்ந்து சூழ்ந்து கதிர்மதியொளியும் நுழையக் கூடாத இருண்ட தோப்பிலிருந்த மண்டபத்தில் கீசகனுக்கும் வீமனுக்கும் போர் நிகழ்ந்தபடியால், அவர்களிருவரும் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்ட வீரவார்த்தைகளின் ஒலியும், கைக்குத்துகளால் எழுந்த ஒலியும் மற்போரிடுதலாலுண்டான ஒலியும், மண்டபத்தின் எதிரொலியும்' தருக்களைப் பிடுங்கி எறிந்த பேரொலியும் கோடையிடி குமுறுவதுபோலிருந்தது. இச்சத்தம் நிச்சத்தமாயிருந்த நகரத்திலும், நாட்டுப்புறத்திலும் நன்ருய்க் கேட்டது. தூக்கமயக்கத்திலிருந்த நகரத்தாரும் நாட்டாரும் திடுக்கிட்டு விழித்து ஆகாயத்தை அண்ணுந்து பார்த்து, "ஆகாயத்தில் மேகமொன்றுமில்லையே. இப்பொழுது இடிமுழக்கம் கேட்பதற்குக் காரணமென்ன?" என்று சந்தேகித்துப் பின்பு காரணமறியாது "எல்லாம் காலையில் தெரிகிறது" என்று கூறிக்கொண்டு நித்திரை போனுர்கள்.

ஆனுல் முன்னமே கலவரங்கொண்டிருந்த கீசகனுடைய தம்பிமார்கள் இப் பேரொலி கேட்டு எழுந்து இவ்வொலி உண்டாவதற்குக் காரணமென்னவென்று ஆராய்ந்தார்கள். அப்பொழுது அவர்களுக்கு வண்ணப் பெண்ணின் வாய்மொழி நினைவுக்கு வந்தது. அது நினைவுக்கு வந்ததும் அண்ணான் படுக்கையறையிலிருக்கின்ருனு என்று பார்த்தார்கள். அவன் படுக்கையறையில் இல்லை. அங்கு அவன் காணுமற்போகவே அவர்கள் அரண்மனை வேலைக்காரரை யழைத்து

"எங்கள் அண்ணனைப்பார்த்தீர்களா?" என்றனர். வேலைக்காரர்கள் "ஐயன்மீர்! உங்கள் அண்ணு இரவு பத்து நாழிகைக்கு ஆடையாபரண அலங்கிருதராய்த் தெற்கு நோக்கிச் சென்றார். அதை நாங்கள் அறிவோம்" என்றார்.

அம்மொழிகேட்டதும், உபகீசகர்கள் நூற்றுவரும் மிகவும் விசனமுடையவர்களாய்ச் "சரிதான் சரிதான் விளங்குகிறது, இப்பொழுது சந்தேகம் தீர்ந்தது. நமது தமக்கை சுதேட்டிணையினிடம் வண்ணப் பெண் வேலையிலிருக்கும் விரதசாரணி யென்பவளை நமது அண்ணன் காதலித்தது முதல் ஊணுறக்கமின்றியிருந்தாரல்லவா? அதனால் அவர் தேக சுகத்திற்காகச் சுத்தக் காற்றுலாவ வசந்த மண்டபத்திற்குப் போயிருக்க வேண்டும். அங்கு விரதசாரணி தன் கந்தருவர்களைச் சந்திப்பதற்கோ அல்லது வேறு எந்தக் காரணத்தை முன்னிட்டோ சென்றிருக்கவேண்டும். அவளை நமது அண்ணன் கண்டு "நேற்று என்னைக்கண்டு ஓடாத ஓட்டமெல்லாம் ஓடினையே; இப்பொழுது ஒண்டியாக என்னிடம் அகப்பட்டுக் கொண்டாயா; இனி என்ன செய்வாய்" என்று பயமுறுத்தியிருக்கவேண்டும். இதற்கு முன்னாள் அவளைத்துரத்தி மன வருத்தம் உண்டாக்கிய செய்தியை அவள் தங்களுக்குரிய கந்தருவர் ஐவர்களுக்கும் உரைத்தவளாக வேண்டும்; அவர்கள் அவ்வாறே வசந்த மண்டபத்திற்கு வந்தவர்களாக வேண்டும், அவர்களுக்கும் நமது அண்ணனுக்கும் போர் மூண்டிருக்கவேண்டும்" என்று தங்களுக்குள் யூகித்து, "இனி நாம் சும்மாவிருக்கக் கூடாது; விரைவில் நாமெல்லோரும் வசந்தமண்டபம் போவோம்; அங்கு நமது அண்ணன் உயிரோடிருப்பாரானால் அவரை எதிர்த்த கந்தரு

வர்களை அட்டகாசம்செய்து அம்பலத்திலிழுப்போம்; அண்ணன் அவர்களால் மடிந்து போயிருந்தால் அக்கந்தர்வர்களோடு சண்டையிட்டு நமது அண்ணன் பொருட்டு உயிரை இழப்போம், என்று உறுதி செய்து கொண்டு எல்லோரும் தத்தம் ஆயுதங்களை ஏந்திக் காலதூதர்கள் போல் கூட்டமிட்டுக் காட்டை நோக்கிப் போனார்கள்.

அப்பொழுது காட்டின் சிலபாகம் எரிந்து கொண்டிருந்தமையால அவர்கள் அவ் வெளிச்சத்தினுதவியால் வசந்த மண்டபத்தை வெகு சீக்கிரத்திலடைந்தார்கள் அங்கு அடைந்து அந்த வசந்தமண்டபத்தைச் சுற்றி அண்ணன் எங்கிருக்கிறான் என்று தேடினார்கள். மண்டபத்தின் வெளியில் ஓரிடத்தில் மாமிசப் பிண்டமொன்று மொத்தாகாரமாயிருந்தது. அதைக் கண்டு "ஆ! இஃதென்ன இஃதென்ன!!" என்று ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். அது அவர்களுடைய அண்ணன் உறுப்புக்களாயிருந்தது. அதைப்பார்த்ததும் அவர்கள் வயிறெரிந்தது. எல்லோரும் பூமியில் விழுந்து அண்ணா! அண்ணா!!" என்று புரண்டு அழுது முகத்திலும் தலையிலும் கையை மோதிக்கொண்டார்கள். "நாங்கள் நூற்றுமூவர் தம்பிமாரிருக்க, நீ இப்படிக் காட்டில் அனாதைபோல் மாண்டு கிடக்கலாமா? அண்ணா! அண்ணா!!" என்று சொல்லி கோவென்றழுதார்கள். "உன்னைக்கொன்றவர்கள் இங்கேயிருந்தால் இப்பொழுதே அவர்களை எமலோகம் அனுப்பிவிடுவோம் அண்ணா" வென்று இரைச்சலிட்டுக்கொண்டு காட்டின் நாலாபக்கங்களிலேயும் மண்டபத்தின் பல பாகங்களிலேயும் தேடிப்பார்த்தார்கள். எங்கேயும் ஒருவரும் காணப்படவில்லை. பின்பு அவர்களெல்லோரும் ஒன்று சேர்ந்து . அண்ணனைத் தேவர்களாலும்

ஜெயிக்க முடியாதே. இத்தகைய சிங்கபலத்தானை எவர்கள் என்ன மோசம் செய்து கொன்றார்களோ? கொன்றாலும் இப்படியா மாமிசபிண்ட மாக்குவது? நமது அண்ணன் ஆண்மைக்கும் பெருமைக்கும் இது தாழ்வாயிற்றே. இப் பிண்டத்தை நமது தமக்கை சுதேட்டிணைக்குமாத்திரம் அறி வித்து விட்டுப் பிறர் எவரும் அறியாமற்படி தகனம்செய்து விடுவோம். பிறர் அறிந்தால் அதுநமது பெருமைக்குக் குறை வாகும்" என்று முடிவு செய்து கொண்டு இரகசிய மாகத் தமக்கை சுதேட்டிணையிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

சுதேட்டிணையை அந்தப்புரத்திற்கண்டு, அவர்கள் தலையி லும் முகத்திலும் அறைந்துகொண்டு "அம்மா! உமது அன் புள்ள தம்பி கீசகன் வண்ணப்பெண்ணுக்குரிய கந்தருவர் களால் காட்டில் மடிந்து கிடக்கின்றான்." என்றார்கள். இதைக்கேட்டுச் சுதேட்டிணை அடியற்ற மரம்போல் கீழே விழுந்து "அடாபாவி! இக்கதியாவதற்கா பிள்ளை பிறந்தாய்! உன்னை ஒரு பெருமலையாக நம்பியிருந்தோமே! கடைசியில் எங்களை நடுத்தெருவில் விட்டுச் சென்று விட்டாயே!" என்று பலவாறு சொல்லியழுது பின்பு தம்பியர் நூற்றுமூவ ரையும் பார்த்துத் "தம்பிமார்களே! கீசகஇறந்தானென்று கேள்விப்பட்டால் இப்பொழுதே நம்மைப் பரதேசியாக்கி விடுவார்கள். கீசகன் பெயரை வைத்துக்கொண்டு இன்னும் சிலகாலம் தள்ளுவோம். ஆதலால் நீங்கள் இவ்விரவிலேயே இரகசியமாக அவனைக்காட்டில் தகனம் செய்துவிட்டு வந்து விடுங்கள். நான் அரசனுக்கு இவ்விஷயத்தை இரகசிய மாகச் சொல்லிப் பிறர் அறியாமல் செய்து விடுகிறேன். நீங்கள் உடனே புறப்பட்டுப் போய்வாருங்கள்!", என்றாள்.

அவர்கள் அப்படியே செய்கிறோமென்று அவளிடம் விடைபெற்றுக்கொண்டு காட்டைநோக்கிச் சென்றார்கள். அப்பொழுது குறுக்குப் பாதையின் வழியாகச் சந்தடி செய்யாமல் திரௌபதை அரண்மனை நோக்கி வந்துகொண்டிருந்தாள். அவளை அவர்கள் கண்டதும் "இந்த வண்ணப் பெண்ணாலல்லவோ நமது அருமந்த அண்ணன் இறந்தான். இவளைப் பிடியுங்கள்! இவளையும் அண்ணனோடு சேர்த்துத் தகனம் செய்து விடலாம்" என்று கூறி அப்படியே அவர்கள் யாவரும் அவளைச்சூழ்ந்து கொண்டு அவளைத் தூக்க முயன்றார்கள். திரௌபதை என்செய்வாள் பாவம். வேடர் கையிலகப்பட்ட மான் போல மருள மருள விழித்து "ஐயோ! ஐயோ!! என்னைத் துஷ்டர்கள் வந்து சூழ்ந்துகொண்டார்களே! அக்கினியில் தள்ள நினைக்கின்றார்களே! காட்டில் ஆறுமற்ற பாவியாகத் தவிக்கின்றேனே! என்னைக்காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!!" என்று அஞ்ஞாத வாசத்தில் வைத்துக்கொண்ட பெயரைக் கொண்டு தன் கணவர்களைக் கூவியழைத்தாள். அக்கூக்குரல் மடைப்பள்ளி நோக்கிச்சென்று கொண்டிருக்கும் வீமன் காதில் பட்டது. அவன் அக் கூக்குரலைக் கேட்டதும் 'ஓகோ, நாம் திரௌபதையைத் தனியாக விட்டு வந்தோமல்லவா? அவளுக்கு ஏதோ துன்பம் நேரிட்டிருக்கின்றது போலும்' என்று சந்தேகித்துச் சத்தம் வந்த வழியேநோக்கி "இதோ வந்தோம்! இதோ வந்தோம்!! பயப்படாதே" என்று அஞ்சலுரைத்துக் கொண்டு எதிரிலிருந்த மரங்களை வேரோடு அசைத்துப் பிடுங்கி விறுவிறெனச் சுழற்றிக் கையோடு கையறைந்து, காடுகலங்கக் குதித்து நீண்ட மரங்களை நெரிய

பிடித்து ஓடிவந்தான். அவன் அங்ஙனம் ஓடிவருவதை உபகீசகர்கள் கண்டு "ஆ! இவன் பெரிய இராக்ஷஸன் போன்றுவருகின்றான். இவன் வரும்பொழுதே மரங்கள் மளமளவென்று ஒடிகின்றன. காற்று சண்டமாருதம் போல் அடிக்கிறது; நாம் இவன் கையினின்றும் தப்போம்! இவனை விட்டு ஓடிப்பிழைப்பதற்கு வழிபார்ப்போம்" என்று ஓட வழிபார்த்தார்கள். அதற்குள் வீமசேனன் காற்றெனப் பறந்து வந்து மரத்தைப் பிடுங்கி அவர்கள் மீது மோதினான். அவர்கள் கூட்டம் கூட்டமாகப் பிரிந்து நாலா பக்கமும் சிதறி ஓடினார்கள். அவர்களையெல்லாம் வீமன் விடாமல் மடக்கி மரங்களைப்பிடுங்கி அவர்கள் மீது மோதி மோதியடித்து ஒரே காலத்தில் அவர்களை யெல்லாம் எமலோகம் போய்ச் சேர்ந்துவாழும்படி செய்து விட்டான்.

அதன்பின் வீமன், பாஞ்சாலியை அழைத்துக்கொண்டு வரும்போதே "கற்புள்ள ஸ்திரீகள் நினைத்தவை யெல்லாமாகும்; அவர்களால் ஆகாதது இந்த உலகத்தில் ஒன்றுமில்லை," என்று முன்னிருந்த பதிவிரதைகளின் சரித்திரத்தை யெல்லாம் அவர்களுக்குச் சொல்லிக்கொண்டு அரண்மனை வந்து அடைந்தான்.

அவர்களிருவரும் அரண்மனை வந்து சேருவதற்கும் அருக்கன் குணதிசையில் உதயமாவதற்கும் காலம் சரியாயிருந்தது. அதற்குப் பின் வீமன் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு 'இந்தப் பூனையும் பால் குடிக்குமா?' என்று பார்ப்போர் சொல்லும்படி, மடைப் பள்ளியில் தன் காரியமே கவலையாகப் பார்த்துக்கொண்டிருந்தான்.

திரௌபதையும் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு 'நம்மையார் என்ன நினைப்பார்களோ? என்ன பழி

சுமத்துவார்களோ? ஏதோ? என்னமோ?" என்று எண்ணிக்கொண்டு, இரவு நடந்தது ஒன்றும் அறியாதவள் போல் தன் வேலையிலேயே கண்ணுயிருந்தாள்.

சூரியன் கிழக்கிலுதித்து வெளிச்சம் எங்கும் பரவியதும் விராடநகரத்திலுள்ளோர் எல்லோரும் கூட்டம் கூடி "இராத்திரி என்ன இவ்வளவு இடிமுழக்கம்கேட்டது? இம்முழக்கத்திற்குக் காரணம்என்ன" என்றுபேசிக்கொண்டு காட்டை நோக்கிச் சென்றார்கள். காடு முழுவதும் உபகீசகர்களின் தலைகள்பனங்காய்களைப்போல் உருண்டுகிடப்பதைக் கண்டு பயந்து "இது என்ன விபரீதம்! இது என்ன விபரீதம்!!" என்று சொல்லிக் கொண்டு வசந்த மண்டபம் வரையில் போனார்கள். அங்கே ஆண் சிங்கத்தையொத்த பலவானாகிய கீசகனுடைய உடல் பிண்டமாயுருட்டப்பெற்று அதில் கண்களும் மீசையும் வைத்திருந்ததைக்கண்டார்கள். கண்டதும் அவர்கள் மிகப் பயந்து, "என்ன! என்ன!! கீசகன் இப்படியானானே! ஓடுங்கள்! ஓடுங்கள்!! அரசனுக்கு இச்சேதியைச் சொல்லுங்கள்" என்று ஜனங்களெல்லோரும், கூச்சலிட்டார்கள். சிலர் விரைந்தோடி விராட மன்னனைக் கண்டு "அரசனே! கீசகனும் உபகீசகர்களும் காட்டில் மடிந்து கிடக்கின்றார்கள்." என்று கூறினார்கள்.

கீசகன் இறந்தானென்று சுதேட்டிணையினால் இரகசியமாகக் கேள்விப்பட்டு வருந்தியிருந்த அரசன், உபகீசகர்களும் இறந்தார்களென்று ஜனங்களால் கேள்விப்பட்டதும் மிகவருந்திக் கண்ணீர்விட்டு மனங்கலங்கினான்.

பின்பு மன்னன், கீசகனும் உபகீசகர்களும் விரதசாரணிக்குரிய கந்தருவர்களால் இறந்தானென்று கேள்விப்

பட்டு, அதுமுதல் விரதசாரணியிடத்தில் மரியாதைக்குறை வாக யாரும் நடந்து கொள்ளக்கூடாது என்று கட்டளை யிட்டு, இறந்த தன் மைத்துனர்களுக்குச் செய்ய வேண்டிய ஈம விதிக்கடன்களைமுடித்து 'இனியென்ன மோசம்வருமோ வென்று ஏக்கம் மேலிட்டுத் தூக்கப் பிடியாதிருந்தான்.

அதன்பின் பாண்டவர்களும் பாஞ்சாலியும் ஒன்றுகூடி முன்னுளிரவு நடந்த சங்கதிகளைக்குறித்துப்பேசி, "நாம்அஞ் ஞாத வாசஞ் செய்ய வந்த இக்காலத்தில் இப்படியும் நேரு மா; போனது போகட்டும். இனிக்கழிக்க வேண்டிய சொற்ப நாளையாவது யாதொரு கலவரமில்லாமல் கழித்தால், பின்பு வெறுப்பாக எடுத்த இந்த வேடத்தைவிடுத்து, விருப் பாக நமது பழைய வேடத்தை யெடுத்துப் பகிரங்கமாகப் பேசிக் கொள்ள வேண்டியதைப் பேசிக்கொள்ளலாம். அது வரையில் நமது இரகசியத்தை வெளியாக்காதிருப்போம்" என்று முடிவு செய்துகொண்டு அவர்கள் தாங்களெடுத்த வேடத்திற்கேற்கத் தொழிலைச்செய்து காலங்கழித்தார்கள்.

அதுமுதல் விராடமன்னனும், அவன் தேவி சுதேட் டிணையும், அவர்கள் சுற்றத்தாரும் மற்றையோரும் விரத சாரணியிடத்தில் மிகவும் பயபக்தியாக நடந்துகொண்டு அவளைப்போற்றி வந்தார்கள். அவளும் யாதொரு குறைவு மின்றிச் சுகமாக அஞ்ஞாத வாசத்தைக் கழித்து வந்தாள்.

ஆனால் விராடமன்னன் மாத்திரம், "நனக்குத் துணைப் பலமாயிருந்த கீசகனையும் உப கீசகர்களையும் இழந்துவிட் டோமே; இனி என் செய்வோம்? பகைவர்கள் வந்து சூழ்ந்துகொள்வார்களே" என்று வருத்தப்பட்டுக்கொண் டிருந்தான். அதைக் கங்கபட்டர் அறிந்து "நீர், சத்தியம்

தப்பிய உமது மைத்துனனுக்காகவும் அவன் சகோதரர்களுக்காகவும் மனம் வருந்தவேண்டாம். அவர்கள் தொலைந்ததே உமது ஆட்சிக்கு ஒரு நன்மையாகும். இனி உமக்கு யாதொரு துன்பமும் வராது. உமது மடைப்பள்ளியில் பலாயனன் என்னும் சிறந்த வீரன் உம்மைக் காப்பாற்றுவான். உமது படைகளுக்கு முன்னிருந்து அவன் சேனாதிபத்தியம் செலுத்துவானானால் உமக்குப் பகைவர்களால் ஒரு துன்பமும் வராது. நீர் சுகமாக வாழலாம்" என்று கூறி, அவன் மனவருத்தத்தை நீக்கினார். அரசனும் அவர் கூறிவந்த தேறுதலான மொழிகளால் நாளுக்கு நாள் மனக் கவலை தீர்ந்து இன்புற்றிருந்தான்.

---

## அத்தியாயம் 12.

### ஒற்றர் சுற்றுப்பிரயாணம்.

இங்ஙனம் விராட வேந்தனிடத்தில் பாண்டவரும் பாஞ்சாலியும் தத்தம் வேடத்திற் கேற்கத் தொழில் செய்து அஞ்ஞாத வாசத்தைக் கழித்துவரும் நாளையில் குருநாட்டுக்கதிபதியான துரியோதனன் தனது இராஜதானி நகராகிய அத்தின புரியிலிருந்து கொலுக் கூடத்திலமர்ந்து, வஞ்சச் சூதினால் தோற்று வனவாசம் போன பாண்டவர்களைக் குறித்து, தன்மந்திரிபிரதானியர்களுடனும் மற்றவர்களுடனுமிருந்து ஆலோசிக்கலானான்.

அப்பொழுது துரியோதனன் தன் அரசாங்கக் கணக்கரை யழைத்துக் "கணக்காயர்களே! பாண்டவர்கள் சொக்கட்டானாடித் தோற்றுப் பன்னிரண்டு வருடம் வனவாசமும் ஒருவருடம் அஞ்ஞாத வாசமும் செய்யப்போனார்

களன்றே. அவர்கள் இப்பொழுது வனவாசத்திலிருக்கின்றார்களா? அல்லது வனவாசம் கழித்து அஞ்ஞாத வாசத்திலிருக்கின்றார்களா? அவர்கள் மொத்தம் கழிக்க வேண்டிய பதின்மூன்று வருஷத்தில் எத்தனை நாட்களைக் கழித்திருக்கின்றார்கள்? இன்னும் எத்தனைநாள் பாக்கியிருக்கிறது? இதைக்கணக்குப்பார்த்துச்சொல்லுங்கள்; என்றான்.

கணக்கர்களில் தலைவன், பாண்டவர்கள் வனவாசம் புகுந்த நாள் முதல் அதுவரையில் நாள் பிசகாமல் கணக்கிட்டு அரசன் முன் வந்து "அரசர்க் கரசே! கணக்குப் பார்த்ததில் பாண்டவர்கள் வனவாசம் பன்னிரண்டு வருஷத்தையும் அஞ்ஞாத வாசத்தில் முக்கால் பாகத்திற்கு மேலேயும் கழித்து விட்டார்கள். இன்னும் அவர்கள் அஞ்ஞாத வாசத்தில் ஒரு சொற்ப நாட்கள் தான் கழிக்க வேண்டியிருக்கிறது" என்று தெரிவித்தான்.

அரவக் கொடியோன் அது கேட்டு மனந்திடுக்கிட்டு, 'பாண்டவர்கள் அஞ்ஞாதவாசத்தைக் கழிக்க இன்னும் சொற்பநாட்களாவிருக்கின்றன?' என்று தனக்குள் வினவிக் கொண்டு வருந்தித் தன் அருகில் சூழ்ந்திருந்த சாரணர்களை அவசரத்துடன் அழைத்து "ஏ! சாரணர்களே! காடேகிய பாண்டவர்கள் இப்பொழுது எங்குறைகின்றார்களென்றும் என்ன வேடத்துடன் ஒளிந்து வசிக்கின்றார்களென்றும் நீங்கள் கண்டு பிடித்து எனக்குச் சொல்வீர்களேயாகில் உங்களுக்கு விசேஷதிரவியமும் ஊரும் கொடுக்கின்றேன்' என்றான்.

சாரணர்கள் அம்மொழி கேட்டு ஆனந்தபரவசர்களாகி "நம்முடைய பெருவாழ்வு பாண்டவர்களைப் பார்ப்பதிலிருக்

கிறது" என்று சொல்லிக்கொண்டு, கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து எண்டிசையும் போயினர். அவர்கள் உயர்ந்த மதில்களுள்ள கோட்டைகளிலும் மாடமாளிகை கூடகோபு ரங்களுள்ள பட்டணங்களிலும், சிற்றூர், பேரூர்களிலும், மரங்களடர்ந்த காடுகளிலும், மணல்கள்நிறைந்த பாலைவனங் களிலும், பெருங்குகைகளுள்ள பர்வதங்களிலும் பாண் டவர்கள் உறைகின்றார்களாவென்று தேடித்தேடி அலுத் துப் போனார்கள். எங்கேயும் அவர்கள் காணப்படவில்லை; கடைசியில் அச்சாரணர்களெல்லோரும் மனமுடைந்து "குதிரைக்கொம்பைக் கண்டாலும் காணலாம் போலிருக் கிறது; குந்திதேவி புத்திரர்களைக் காண்பது அரிதாயிருக் கின்றதே" என்று மொழிந்துகொண்டு, கொலுக் கூடத்தில் அமர்ந்திருந்த அரசனிடத்தில் வந்து, "மஹாராஜாவே ஈ நுழையும் அவ்வளவு இடமும் பாக்கி வைக்காமல் இவ்வுலக முழுதும் சுற்றி வந்தோம்; எங்கேயும் அப்பாண்டவர்கள் காணவில்லை. அவர்கள் உயிருடனிருந்தால் எங்கள் கண் முன் அகப்பட்டிருப்பார்கள்" என்றார்கள்.

ஒற்றர்கள் இங்ஙனம்கூறவே துரியோதனன், "அவர்கள் எங்கும் காணப்படவில்லையென்றால் எமனுலகுதான் சென்றிருப்பார்கள்" என்றான். அவனைச் சேர்ந்தவர்களில் பலரும் "ஆம்! ஆம்!! அப்படித்தானிருக்கு" மென்றார்கள். அதைக் கேட்டுத் துரியோதனனுக்கும் "பாண்டவர்க்கும் பாட்டனாகிய வீடுமர் துரியோதனனைப் பார்த்து "அரவக்கொடியோய்! பாண்டவர்களோ பன்னிரண்டுவருடம் வனவாசத்தையும் கழித்துப் பின்னர் அஞ்ஞாதவாசத்தில் ஒரு வருஷத்திலும் சற்றேறக்குறைய முக்காலே மூன்று வீசமுக்காணி பாகத்தையும் கழித்துவிட்டார்கள். இன்னும்

ஒருவருஷத்தில் காணிபாகமே அவர்கள் கழிக்கவேண்டி யிருக்கிறது. நீங்கள் முயன்று அவர்களைத் தேடுவதற்குள் அவர்கள் சொற்ப நாட்களையும் கழித்து வெளித்தோன்றி விடுவார்கள். அவர்கள் இறந்திருப்பார்கள் என்று எண் ணுவது புத்திசாலித் தனமாகாது. சதுர்வித உபாயமறிந்த அவர்கள் உங்கள் ஒற்றர் முன் வெகுசுலபமாய்க் காணப்படு வார்களா? ஒருக்காலும் காணப்படார்கள். அவர்களைக் கண் டறிய வேண்டுமானால், அவர்களுறையும் நாட்டில் மாதம்மும் மாரி பொழியும்; காடு கரம்புள்ள மலைகளெல்லாம் தேன் வாரி கசிந்தூறும்; நெல் விளையும் நிலங்களெல்லாம் வருஷத்திற்கு முப்போகந் தப்பாமல் விளையும்; பசுவினங்கள் நோயில்லா மல் வேளைக்குப் பத்துப்படி பால் கறக்கும்; ஸ்திரீகளெல் லோரும்கற்புள்ளவர்களாயிருப்பார்கள்; புருஷர்களெல்லோ ரும் அறநெறிவழுவாது புண்ணிய சீலர்களாயிருப்பார்கள்; நாட்டில் துர்வியாதி துர்மரணம் முதலியவைகள் நேராது; கள்ளர் துஷ்டர் பயமிராது; அந்நாடு எப்பொழுதும் நித்திய சுபமங்களகரமாயிருந்து, எல்லா நலன்களும் நிறைவிடமோ? அல்லது செல்வமகள் உறைவிடமோ என்று சொல்லும்படி பொலிவுற்றிருக்கும். அதுவே அவர்களுறையும் நாடு. அத்த கைய நாட்டையறிந்தால் அவர்களையும் அறியலாம் என்றார்.

சாரணர்களில் ஒருவன், துரியோதனனைப் பணிந்து நோக்கி "மன்னர் மன்ன! தங்கள் பிதாமகர் உரைத்தபடி, மச்சநாடு ஒன்றே எந்நாட்டிற்கும் பொன்னாடாய் விளங்கு கின்றது; அந்நாட்டில் மாதம் மும்மழை பொழிகின்றது; வருஷம் முப்போகம் செந்நெல் தப்பாமல் விளைகின்றது; அங்கங்கே ஆதுலர்க்கு அன்னசாலைகளும் அறச்சாலைகளும்

உள்ளன; இன்னும் அந்நாட்டின் சீரும் சிறப்பும், அறம் பொருளின்ப பேம்பாடும், பசுக்கள் நெருக்கமும் சுத்தமும், பாபச்சுருக்கமும், படையின் பெருக்கமும், வாழையும் கமுகும் வளர்தரு தெங்கும் கரும்பும் வளம்பட விளைந்து, பார்ப்பவர் மனத்தைக் கவரக்கூடியதாயிருக்கின்றன. இவையன்றியும் அங்கொரு விசேஷ சம்பவமொன்று சமீபத்தில் நிகழ்ந்தது. அஃதென்னெனில்:—விரதசாரணி என்னும் ஒரு பெண் மச்சநாட்டின் இராஜதானிய விராடநகரில் விராடமன்னன் மனைவியிடத்தில் வண்ணப் பெண்ணாக வந்து அமர்ந்திருக்கின்றாளாம்; அவளை அம்மன்னன் மைத்துனன் கீசகனென்பவன் காதலித்துத் துரத்தினனும்; பின்பு அவள் தன் கணவர் கந்தருவர் ஐவருக்குச் சொல்லி, கீசகனையும், அவன் தம்பி நூற்றுமூவரையும் ஒரே இரவில் கொல்வித்தாளாம். இவ்விஷயம் அந்நாட்டில் எல்லோரும் ஆச்சரிமாகப் பேசிக்கொள்ளுகிறார்கள். இப்பொழுதுதான் அதன் இரகசியம் விளங்குகின்றது. விரதசாரணி யென்னும் வண்ணப்பெண் திரௌபதையாக வேண்டும். கந்தருவர் ஐவர் என்றது பாண்டவர்களாக வேண்டும். இதிலொன்றுஞ் சந்தேகமில்லை" யென்றுரைத்தனன்.

இவ்வாறுகூறிய சாரணனுடைய நிச்சய வார்த்தையையும், தன் மூதாதையாகிய வீடுமர் மொழிந்த சத்தியமொழியையும் துரியோதனன் தன் கருத்துக்கிசையச் சீர்தூக்கிப் பார்த்து, அதன் காரண காரியத்தை யறிந்துதெளிந்து பின்பு சபையோரைப்பார்த்து, "ஐயன்மீர்! விராட நகரில் கீசகனைக் கந்தருவர்கள் கொன்றதாகச் சாரணன் உரைக்கின்றான். கீசகன் சாமானியனல்லன். தேவர்களாலும் அசுரர்களாலும் கந்தருவர்களாலும் அவன் ஜெயிக்கப்படாத

வன் அவனைக்கந்தருவர்கள் கொன்றாரென்பது நம்பத்தகுந்த தல்ல. வீமன் ஒருவனே அவனைக் கொல்லத்தக்கவன். விரதசாரணி யென்பவள் திரௌபதையே யாகவேண்டும். அவளுக்குக் கந்தருவர் ஐவர் கணவரென்பது பாண்டவரே. இதற்கொன்றும் ஐயமில்லை. பாண்டவர்கள் விராட நகரத்தில் மறைந்திருக்கின்றாரென்பது நிச்சயமே. அஞ்ஞாத வாசத்தவணை இன்னும் கழியாததனால்தான் அவர்கள் வெளிப்படாமல் சிங்கபலனாகிய கீசகனையும், உபகீசகர்களையும் கொன்றிருக்கின்றார்கள். இப்பொழுது நாம் அங்குச் சென்றால் அவர்களைக் கண்டுபிடித்து விடலாம். அங்குச் சென்று எப்படி அவர்களைப் பகிரங்கமாக வெளிக்குக் கொண்டு வருவது? இதை நன்கு ஆலோசித்து இதற்கொரு சூழ்ச்சி சொல்லுங்கள் என்றான்.

அச்சபையிலிருந்த கர்ணன் அரவக்கொடியோனாகிய துரியோதனனை நோக்கி "அரசர்க்கரச! தாங்கள் கருதியது சரியே. எனக்கும் அவ்வாறுதான் படுகிறது. இனித் தாமதம் செய்யாமல் சதுரங்க சேனைகளுடன் நாம் விராட நகரம் சென்று அந்நகரத்தின் புறம்பேயுள்ள காடுகளில் மேயும் அநேகாயிரம் பசுக்கூட்டங்களை மடக்கிக்கலகம் செய்வோம். நாம் கருதியவாறு பாண்டவர்கள் அந்நகரிலிருந்தால் விராடனுக்காகப் பரிந்து அவர்கள் நம்மேற் சண்டைக்கு வருவார்கள். அப்பொழுது அவர்களை வெளிப்படுத்திச் சத்திய மொழி தவறிய நீங்கள் மறுபடியும் பன்னிரண்டு வருடம் வனவாசம் செய்யுங்கள் என்று அனுப்பிவிடலாம். அவர்கள் அந்நகரில் இல்லையேல் பசுக்கூட்டத்தையாவது நம் நாட்டிற்குக் கொண்டுவந்து விடலாம். நாம் அங்குச் செல்வதில்

நமக்கு இரண்டு விதத்திலும் இலாபமேயிருக்கிறது. நஷ்டமொன்றுமில்லை'' யென்றான். சபையிலிருந்த வேறு நாட்டரசர்களும் இதுவே எங்களுக்குச் சம்மதம் என்று சொன்னார்கள். துரியோதனும் அதை ஒப்புக்கொண்டான்.

அப்பொழுது அச்சபையில் வீற்றிருந்த திரிகர்த்த தேசாதிபனாகிய சுசர்மா எழுந்து வணங்கி அரவக்கொடியோனை நோக்கி "வணங்காமுடி மன்னனே! முன்னொரு நாள் நான் மச்சநாட்டின் மீது படையெடுத்து போர்தொடுத்தேன். அப்பொழுது அட்நாட்டிற்குச் சேனாதிபதியாயிருந்த கீசகன் என்மீது எதிர்த்து என்படைகளைப் புறமிட்டோடச் செய்துஎன்னை இறுகப் பிணித்துத் தன் நகரத்திற்குக்கொண்டு போய் விட்டான். அதன் பின் அவன் கையிலிருந்து தப்பித்து வரப்பட்ட பாடு பிரமப் பிரயத்தனமாய் விட்டது. அந்நாள் முதல் இந்நாள் வரையில் அத்தச் சத்துருவை வெல்வதற்குக் கூடாமலிருந்தபடியால் நமக்கு நன்னாள் எப்பொழுது வருமோவென்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன் அதற்கு இப்பொழுது நாள் வந்தது. என்னை விராட நகரத்திற்கு அனுப்பும்; நான் போய். விராடனை வென்று அவனை என் தேரிற் கட்டி அவன் மைத்துனன் கீசகன் என்னைச் செய்த அவமானத்தை அவன்பாற் காட்டி, அவனையும் அவன் ஆநிரைகளையும் இங்கு கொண்டு வருகின்றேன். உமக்கு இது வரையில் இறை கட்டாமல் தன் மைத்துனன் பலத்தால் தள்ளி வந்த கொட்டத்தையும் அடக்குகின்றேன். வெளிப்படாத பாண்டவர்களையும் வெளிப்படுத்துகின்றேன். தாமதிக்கா

மல் என்னுடன் இப்பொழுதே ரதகஜதுரகபதாதி முதலிய நால்வகைச் சேனைகளையுங் கூட்டியனுப்புவீர் என்றான்.

அம் மொழிகேட்டுத் துரியோதனன் கர்ணனைப் பார்த்து, "உமக்கு இது விஷயத்தில் எப்படி அபிப்பிராயம்" என்றான். அதற்குக் கர்ணன், "சுசர்மா சொற்படி அவனுடன் சேனைகளை இக்கணமே அனுப்புவதுதான் உத்தமம்" என்றான். அவன் அவ்வாறுரைத்ததும் துரியோதனன் படைத்தலைவர்களை யழைத்து "நால் வகைச் சேனைகளுடன் சுசர்மா சொற்படி விராடநகரம் சென்று போர் புரியுங்கள்" என்று அவர்களுக்கு ஆஞ்ஞாபித்தான். அவர்களும் அப்படியே செய்கின்றோமென்று, அவனிடம் விடை பெற்றுக் கொண்டு சேனாவீரர்களை ஒருங்கு திரட்டிப் போர்க் கோலங் கொள்ளச் செய்து அணிவகுத்து நிறுத்தினர்.

---

## அத்தியாயம் 12.

### ஆபத்தில் அரிய உதவி.

திரிகர்த்த தேசாதிபனாகிய சுசர்மா, துரியோதனன் அனுப்பிய நால்வகைச் சேனைகளைக் கூட்டிக்கொண்டு திக்கெட்டும் செவிடுபட முரசவாத்தியம் முழக்கி, விராட நகரத்தின் தென்றிசையைப் போயடைந்தான்.

அத்தென்றிசையில் எதேச்சையாகமேய்ந்து கொழுத்துக் கன்றுகளுடன் கூடிக் குதித்துத் திரிந்து கொண்டிருந்த ஆயிரக்கணக்கான பசுக்களை யெல்லாம், சுசர்மாவுடன் வந்த சேனா வீரர்கள் "ஆ! ஊ!" என்று இரைச்சலிட்டுக்கொண்டு மடக்கினார்கள். அப்பொழுது அப் பசுக்களெல்லாம் காது

களை மேலுற நெரித்துக் கண்களை யுருட்டி விழித்துப் பார்த்துத் தலை யேறிட்டுத் தங்களை மடக்கினவர்கள் அன்னிய ரென்றறிந்து தங்கள் தங்கள் கன்றுகளுடன் பெயர்ந்து கும்பலினின்றும் பிரிந்து கும்மாளமிட்டு நாலுபக்கமும் திரிந்து "அம்மா! அம்மா!" என்று கதறியோடிக் கால் தவறி விழுந்து ஒன்றுகூடிக் கொம்பசைத்துக் கூட்டமாய்ச் சாய்ந்தன. அவைகளை யெல்லாம் சேனு வீரர்கள் கழிகளா லடித்துச் சிதறிப்போகாமல் ஒன்று சேர்த்து அத்தின புரியைநோக்கி ஓட்டிச்சென்றார்கள்.

அதைக் கண்ட கோவலர்கள் விரைந்தெழுந்து கோவென்று கூச்சலிட்டு ஒன்று சேர்ந்து மாட்டைத் தங்கள் நகரம் நோக்கித் திருப்பினார்கள். சேனுவீரர்கள் அக் கோவலர்களை யெல்லாம் முறிய அடித்துப் பசுக்களினருகில் அவர்கள் நெருங்காத வண்ணம் துரத்தினார்கள். கோவலர் களும் தங்கள் கையில் பற்றியிருந்த குண்டாந்தடி கிலுக் குத்தடி பாணுத்தடி முதலியவைகளைக் கொண்டு எதிரி களைத்தாக்கினார்கள். எதிரிகள் அதற்கு இளைக்காமல் வில் லெடுத்துப் பல அம்புகளை அவர்கள் மீது சரமாரியாகப் பொழிந்தனர். கோவலரோ சேனுவீரர்களைப் போல், போரில் பயின்றவரல்லராதலால், அவர்கள் எதிரிகளோடு சண்டைபோட முடியவில்லை. எதிரிகளெய்த அம்புக ளெல்லாம் அவர்கள் மீது பாய்ந்து அவர்கள் தேகத்தைச் சல்லடைக் கண்களாகத் துளைத்துப் புண்களாக்கின. அத ணல், அவர்கள் எதிரிகளோடுபோர் புரிய மாட்டாமல் புற மிட்டோடி, விராட நகரத்திற்குள் புகுந்து விராடமன்னன் கொலு முகத்திற்கு வந்து, "மஹாராஜாவே! திரிகர்த்த

தேசாதிபனுகிய சுசர்மாவும் குருநாட்டுச் சேனைகளும் கூடி நம் நகரத்திற்குத் தென்றிசைப் பக்கம் வந்து, நாங்கள் மேய்த்துக்கொண் டிருந்த பசுக்களில் அறுபதினுயிரம் பசுக்களை அவர்கள் வசப்படுத்திக்கொண்டார்கள். இன்னும் நாற்பதினுயிரம் பசுக்களைத் தங்கள் கைவசப்படுத்தப் பார்க்கின்ருர்கள். அவர்களை எங்களால் இயன்றவரையில் எங்கள் கைத்தடிகளால் அடித்து எதிர்த்தோம். அவர்கள் சமுத்திரம் போல் திரண்டு எங்களை எதிர்த்து மாரிபோல் அம்பெய்து முறிய அடித்து ஓட்டி விட்டார்கள். நாங்கள் அவர்கள் கையம்பினுல் அடிபட்டுப் புண்ணுனேம். நாதனே! இனி ஒருகணமேனும் தாமதியாமல் அவர்களை எதிர்த்தால் நமது மாடுகள் நமது வசமாகும்; இல்லையேல் நமது வசமாகாது. புறப்படுங்கள்! புறப்படுங்கள்!!" என்று இசைந்தார்கள்.

கோவலர்கள் இங்ஙனம் திரண்டு கோவென்று கதறிக் கூறியதைக் கேட்டவிராடமன்னன் பெருநகை செய்து கண்கள் சிவக்கக் கோபித்துக்கையோடு கைதாக்கிப் பற்கடித்துப் "பார்த்தீர்களா! முன்னெருகால் நம்மோடு போர் புரிந்து தோல்வியுற்று, நம்மால் கட்டுப்பட்டு நொந்து கால்மேல் வீழ்ந்திரந்து'என்றென்றைக்கும் நான் உங்களுக்கு அடிமை' யென்று புகன்று, அவமானப்பட்டுப்போன அந்தத்திரிகத்தர்கோன் நமது மாடுகளை மடக்கிக் கோவலர்களை வாட்டி ஓட்டி யிருக்கின்ருனும்! நல்லதாகட்டும்! சேனுதிபதிகளே! நமது நால்வகைச் சேனைகளையும் போர்க்கோலஞ் செய்து நிறுத்துங்கள். நானும் இதோ புறப்படுகின்றேன்" என்ருன். இந்தச்சொல் அரசன் வாயிலிருந்து புறப்பட்டதும் புறப்படாததுமாக இருக்கும் பொழுதே சேனுதிபதிகள்

குதிகுதித்தெழுந்து சேனைகள் தங்குமிடஞ் சென்று போர் குறிக்குஞ் சத்தங்காட்டி இரத கஜ துரக பதாதிகளாகிய நால் வகைச் சேனைகளையும் வெள்ளம் போற் கூட்டி வெளியிடத்தில் கொண்டுவந்து நிறுத்தினார்கள். அரசனும் தனது இளைய குமாரனான உத்தரன் தவிர, மற்றபுத்திரர்களெல்லோரையும் போர்க்கோலங் கொள்ளச்செய்து, தானும் வில் வாள் வேல் முதலியவைகளை ஏந்தி விரைந்தோடும் பரிகள் பூட்டிய இரதத்தில் ஏறி, சமுத்திரம் போல் திரண்டெழுந்த தனது சேனைகளுடன் சேர்ந்து கொண்டனன்.

இவற்றை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த தருமராகிய கங்கபட்டர், அரசனைநோக்கி "அரசனே! மல்லனை மற்போரிட்டு வென்ற பலாயனன் என்பவன் தங்களுக்குத் தெரியுமன்றோ? அவனையும், தருமபுத்திரரது சேனையில் உடனிருந்து ஆயுதப்பரீக்ஷைகளில் தேறிய தாமக்கிரந்தியையும், தந்திரபாலனையும்இப்போர்க்குத்துணையாக அழைத்துப் போதல் நலம். நானும் உங்களோடு இப்போர்க் காட்சியைக் காண வருகின்றேன்" என்றார். அரசன், "நல்லது அப்படியே செய்கிறது" என்று அவர் கருத்துக்கிசைந்து, அந் நால்வருக்கும் தேர் ஆயுதங்கள் முதலியவைகளையனுப்பிக் கொடுத்து அவர்களையும் தன்னோடு சேர்த்துக்கொண்டான்.

இப்படித் திரண்ட சேனாவீரர்களுடன் விராட பூபதி நகரத்தின் தென்றிசையைப் போயடைந்தான். அங்கே பசுமந்தைகளின் கூட்டத்தைச் சுற்றி குரு நாட்டுச்சேனா வீரர்கள் வில் வாள் முதலியவைகளை ஏந்தி நாலாபக்கமும் சூழ்ந்து ஆர்ப்பரித்து நின்றுகொண்டிருந்தார்கள். விராடன் அவ்வாறு நின்றுகொண்டிருந்தசேனாவீரர்களைக் கண்டு

கோபம் பொங்கித் தங்கள் வீரர்களைப் பார்த்து "அவர்களை அடியுங்கள்! பிடியுங்கள்!" என்று உத்தரவிட்டான். அரசன் உத்தரவைச் செவியிலேற்ற சேனாவீரர்கள் ஆரவாரித்து எதிரிகளின் சமீபமோடி வில்லைத்தொடுத்துப் பல அம்புகளை அவர்கள் மீது எய்தார்கள்; ஈட்டிகளைக் கொண்டு அவர்களைக் குத்தினார்கள்; வாளை வீசிச் சிரத்தை வெட்டினார்கள்; தடிகளைச் சுழற்றிச் சாடினார்கள்; இவ்விதமாக எதிரிகளைத் தாக்கவே எதிரிகள் இவர்களோடு நெடுநேரம் தங்களாலான சாமர்த்திய மெல்லாங்கொண்டு போர் புரிந்தார்கள். கடைசியில் சுசர்மாவுடன் வந்த கௌரவசேனை, விராடன் சேனை புரிந்த கோர யுத்தத்திற் காற்றாது புறங்காட்டி யோடியது.

அதுகண்ட திரிகர்த்தர்கோன் புறங்காட்டித்தோற்றோடும் சேனாவீரர்களை யெல்லாம் கூவியழைத்து, அவர்களுக்கு வீரவேசமான வார்த்தைகள் புகன்று உற்சாக மூட்டி, மறுபடியும் விராடன் சேனையின்மீது அப்படைகளை ஏவினான். அப்படைகள் திரிகர்த்தர்கோன் மொழிந்த வீரமொழிகளால்முன்னையினும்மும்மடங்கு உற்சாகங்கொண்டுவிராடன் சேனைமீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்துதாக்கின; விராடன் சேனைகள் வெற்றி பெற்றோமென்ற களிப்பினால் எதிரிகளைக் கவனியாதிருந்து விட்டார்கள். அந்தச் சமயம் பார்த்து எதிரிகள் அவர்கள் மீது செம்மான் பாய்வது போலப் பாய்ந்து தாக்கியதால் விராடன் சேனைகள்சிதறிமுறிபட்டுப் புறமுதுகிட்டோடின. விராடன், தன்சேனைகள் இவ்வாறானதைக் கண்டு வெருண்டு வெற்றிவேலெடுத்துத் திரிகர்த்தன் சேனைகள் மீது அம்புமாரி பொழிந்தனன். அதனால்

எதிரிகளின் படைவீரர்களில் பலர் அழிந்தார்கள்; குதிரைக ளழிந்தன; யானைகளழிந்தன; தேர்களழிந்தன; திரிகர்த்தர் கோன் ஏறிவந்த தேரும் குதிரைகளும் அழிந்தது; சாரதியும் இறந்தான்; திரிகர்த்தர்கோனும் அடிபட்டான்.

இங்ஙனம் திரிகர்த்தர்கோன் விராடனால் அடிபட்டுத் தேரிழந்து வருந்தவே, அவனுக்குத்துணையாக வந்திருந்த தம்பியும் மற்றவர்களும் வேறு தேர் கொண்டு மற்ற வீரர் களையும் அழைத்துக்கொண்டு ஓடிவந்தார்கள். அத்துணைச் சேனை வந்தவுடன் திரிகர்த்தன் வேறொரு தேர்மீதேறி மிக்க வீரவேசத்துடன் விராடனுடன் போர்தொடுத்தான். அவ னுக்கு அவன் தம்பியும் மற்றவரும் உடனிருந்து துணைபுரிய வே, அவன் விராடன் மீது விறுவிறு என அம்புகளைச் சர மாரியாகப் பொழிந்து அவன சேனைவீரர்களெல்லோரும் 'ஐயோ! ஐயோ!'" என்று புறமிட்டோடவும், விராடன் தேரிழந்து தனியாய் வாடவும் செய்தனன். விராடன் சேனைகள் திரிகர்த்தன் போருக்குத் தோற்றோடவே, திரிகர்த்தன்தேரிழந்து துணையின்றி நின்றுவாடிய விராடனை இறுகப்பிடித்துத் தன்தேரிற்கட்டிக்கொண்டு, பசுமந்தை களையும் ஓட்டிக்கொண்டு அத்தினபுரி நோக்கிச் சென்றான்.

அதைப் பார்த்துக்கொண்டிருந்த அவன் புதல்வர் களும், முறிந்தோடியசேனைவீரர்களும், 'எதிரிகள் அரசனைப் பிடித்துக் கொண்டார்களே, என்செய்வது! என்செய்வது!! என்று நாலாபக்கமும் திரும்பித் திரும்பி விழித்துப் பிதற்றி னார்கள். கைமெய்யாடாமல் திகைத்தார்கள். அப்பொழுது போர்க்களத்திற்குச் சற்று தூரத்திலிருந்து இப்போர்க்

காட்சியினைப் பார்த்துக்கொண்டிருந்த கங்கபட்டரைக் கண்டார்கள். கண்டதும், யுக்தி புத்திகளிற் சிறந்த கங்கபட்டர் இச்சமயத்தில் அரசனை மீட்பதற்கு ஏதாவது உபாயம் சொல்வாரென்று அவரிடம் ஓடி வந்தார்கள். வந்ததும் மிக்க பரபரப்புடன் கங்கபட்டரை நோக்கி, "சுவாமி! அரசனைத் திரிகர்த்தர்கோன் தேரிற்கட்டிக் கொண்டு போய்விட்டான்! நாங்கள் என்ன செய்வோம். ஏது செய்வோம்!!" என்று கூறி வருந்தினார்கள்.

கங்கபட்டர் அவர்களுரைத்ததைக் கேட்டதும் அருகிலிருந்த வீமனைக் கடைக்கண்ணால் பார்த்தார். வீமன் அக்குறிப்பினை யறிந்து, "இதோ கொண்டுவந்தேன் விராடமன்னனை" என்று ஒரு குதிகுதித் தெழுந்து ஓடினான். கங்கபட்டர் அவன் அவசரத்தைக் கண்டு 'எங்கே வீமன் தன் சொரூபத்தை எதிரிகளிடம் காட்டி அஞ்ஞாத வாச இரகசியத்தை வெளியாக்கி விடுவானோ' என்று பயந்து, விரைந்தோடும் வீமனைக் கூப்பிட்டு "தம்பி வீமா! நீ எதிரிகளிடம் மற்போரிட்டு உன் சொரூபத்தைக் காட்டாமல் வில்லும் பாணமுங் கொண்டே எதிரிகளை விரட்டி விராடனை மீட்டு, பசுக்களையும் உடன் கூட்டி வா" என்றனர்

வீமனும் "அங்ஙனமே செய்கின்றேன்" என்று அண்ணனிடம் விடைபெற்றுக் கொண்டு, அம்பறாத்தூணி தரித்து வில்லெடுத்துக் கையிற் பிடித்து அணிநெடுந்தேரேறி அதிவிரைவாகச் சென்றான்.

அதன்பின் கங்கபட்டர், 'வீமன் அவசரக்காரன்; ஒரு வேளை அஞ்ஞாதவாச இரகசியத்தை வெளிப்படுத்தி விடு

வான்' என்று அவனை நம்பாமல், மாறுவேடம் பூண்டிருக்கும் நகுலசகாதேவர்களாகிய தாமக்கிரந்திதந்திரபாலனென்னும் இளைய தம்பிமாரை அழைத்து, "அன்புள்ள தம்பிகளே! உங்கள் அண்ணனாகிய வீமனைப் போருக்கு அனுப்பியிருக்கின்றேன். அவன் மிகவும் ஆக்கிரகக்காரன்; அவசரமுடையவன்; முன்கோபமுடையவன்; ஒரு வேளை அவன் சுசர்மா பேரில் பாய்ந்து சுடு சரந்தொடுத்து அயர்புரியும் பொழுது, அவனுடைய வில்லும் பாணமும் முறிபட்டுமேனி வருந்துமானால் வீமன் விற் போட்டுவிட்டு மற்போர்தொடுத்து மரங்களைப்பிடுங்கி மோதுவான்; தேர்களைத் தூக்கிப் போடுவான்; வீரர்களைக் கையால் தூக்கி வீசுவான்; காலாலுதைத் துக்கொல்வான்; இப்படி அவன் மற்போர் தொடுப்பானால் வீமன் ஒருவனே இவ்வாறு போர்புரியக் கூடியவனென்று எதிரிகள் சந்தேகித்து இரகசியத்தை வெளிப்படுத்தி நம்மை மறுபடியும் பன்னிரண்டு ஆண்டு ஆரணியவாசத்திற்கு அனுப்பிவிடுவார்கள், நாமெண்ணிய எண்ணமும் நிறைவேறாமற் போய்விடும். ஆதலால் நீங்களும் அப்போர்முனை சென்று வீமனை மிஞ்சவிடாமலடக்கித், திரிகர்த்தனை மடக்கி யுத்தஞ் செய்து ஜெயித்து விராடனையும், ஆநிரைகளையும் மீட்டு வாருங்கள்" என்றனன்.

அவர்களும், "நல்லது அப்படியே செய்கின்றோ"மென்று அண்ணனிடம் செலவு பெற்றுக் கொண்டு, இருவரும் தேரேறி, வீமனுக்குப் பின்னே சென்று திரிகர்த்தர் கோன் சேனையைப் போய் நெருங்கினார்கள்.

இவர்களுக்கு முன்னால் சென்றவீமன், விரைந்தோடும் ஆறு சமுத்திரத்திற் போய்க் கலப்பது போல் திரிகர்த்தன் சேனா சமுத்திரத்திற் போய்க் கலந்தான். அவனைக்கண்ட

தும் திரிகர்த்தன் சேனைகளும், திரிகர்த்தனும் 'இவனுடா எம தூதனைப்போல வந்திருக்கின்ருர்'னென்று பேசி அவன் மீது பல பாணங்களைச் சொரிந்தனர். அவைகளை யெல்லாம் ஆண் சிங்கம் போன்ற வீமன் தன் பாணங்களால் தகர்த்தெறிந்து தனது தேரை திரிகர்த்தர்கோன் தேருக்கெதிர் முகமாக முடுக்கி நிறுத்தி, வெற்றிப் பாணங்களை வில்லில் தொடுத்து விட்டு அவன் வில்லையும், நாணியையும் அறுத்து, சாரதி தலையையும் குதிரைத் தலைகளையும்அறுத்து, தேரையும் தகர்த்துக் கீழே தள்ளினான். சேனைவீரர்களையும் புறமுதுகிட்டோடப் பல பாணங்களை ஏவினான். அவ்வீரர்களும் வீமன் பாணத்திற் காற்ருது செத்தோம் பிழைத்தோமென்று விழுந்தும் எழுந்தும் ஓட ஆரம்பித்தார்கள். அச்சமயம் பார்த்து வீமன், விராடனை ஒரு பொற்றேரி லேற்றித் திரிகர்த்தர்கோனை மயிரைப்பற்றி இழுத்து வந்து விராடனேறியிருந்த தேர்க்காலிற் பிணித்துப் பசுமந்தைகளையும் மடக்கிக் கொண்டு கங்கபட்டரிருக்கும் இடம் வந்து சேர்ந்தான்.

வீமன், தன் அண்ணன் அருகு வந்ததும் தேர் விட்டிழிந்து "தங்கள் ஆசிர்வாதத்தால் ஜெயம் பெற்றேன்" என்ருன். விராடன் அவர் பின் வந்து "சுவாமி! தங்கள் கிருபையாலும், பலாயனனுகிய வீரனுலுமே மீண்டேன்" என்று பணிந்தான். விராடன் புத்திரர்கள் "தங்கள் தயவாலும், இவ்வீரன் ஆண்மையாலுமே எங்கள் தந்தையைப் பெற்ருே" மென்று அடி வணங்கினூர்கள். அவர்களை யெல்லாம் கங்கபட்டர் வாரியெடுத்து ஆசிவசனங் கூறித் தன் பக்கத்திலிருத்திப் போரின் விருத்தாந்தம் வினவினர்.

விராடன் அவர்முன் எழுந்து நின்று வீமனைச் சுட்டிக் காட்டி, "ஆண்டவனே! இவ்வீரன் போர் முகத்தில் வீரர்

களைப் பொருதி, யோட்டி என்னை ஊர் முகத்தில் கொண்டு வந்தான்; நாங்கள் இழந்த பசுக்களையும் மீட்டான். இத் தகைய ஆபத்தில் அரிய உபகாரம் செய்த போரேறுக்கு நான் என்ன பதிலுதவி செய்யப் போகின்றேன். எவ்வுதவியும் அவ்வுபகாரத்திற் கீடாகாது.

"செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமும் மாற்ற லரிது."

என்று புகழ்ந்துரைத்தனன்.

அப்புகழுரையைக் கேட்ட தருமராகிய கங்கபட்டர், வீமன் தேர்க்காலில் பிணித்துக் கொண்டு வந்திருக்கும் திரிகர்த்தனுக்காக மிகவும் இரங்கி, அரசனைநோக்கி, "அரசே! நீர் பலாயனனுக்குச் செய்யும் பிரதியுபகாரத்திற் காக, இதோ தேர்க்காலில் கட்டியிருக்கும் திரிகர்த்த தேசாதிபனாகிய சுசர்மாவைக் கட்டவிழ்த்து விட்டு அவனுக்கு ஆடையாபரணங்களும் தேருங் கொடுத்து அவனை அவன் ஊர்போக அனுப்பிவிடும்" என்றார்.

அவரது கருணை மொழியைச் செவியிலேற்ற மன்னன், திரிகர்த்தன் முகம்நோக்கி "ஏ திரிகர்த்தனே! நீ முன்னொரு சமயம் என்னிடம் இம்மாதிரி அவமானப்பட்டுப் போயிருக் கின்றாய்; மறுபடியும் நீ வாய்மையின் மீது நோக்கமிராது என் மீது மல்லுக்கு வந்தாய்; இப்போது மன்னர் முறை மைப்படி உன் சிரத்தை வாளால் வீசி எறிய வேண்டும்; ஆனால் இங்குக் கருணை சொரூபியாய் வீற்றிருக்கும் கங்க பட்டர் அருண் மொழியால் உன் சிரத்தை உன் உடலில் பொருந்தியிருக்க விட்டேன்; இவரால் பெற்றாய் பிராண பிச்சை; இதையென்றும் மறவாதே" என்றுசொல்லிக் கட்ட விழ்த்து அவனுக்கு ஆடையாபரணங்கள் நல்கி ஒரு தேரும் கொடுத்து அனுப்பினன்.

விடுபட்ட திரிகர்த்தன் விராடன் முகத்தில் விழிப்ப தற்கு வெட்கி, மனம் வருந்தி, அரவக் கொடியோன் முதலிய அரசர்கள் தனக்குப் பின் துணையாக வந்து உதவி செய்ய வில்லையே என்று சித்தம் மெலிந்து, போரில் புறங்கொடுத்தோடிய தன் படையுடன் கலந்து, கங்கபட் டரைக் 'கருணையில் தருமராஜ' னென்று புகழ்ந்து, "இன்று பிழைத்தது தெய்வச் செயல்! தெய்வச் செயல்!!" என்று சொல்லிக் கொண்டு திரும்பியுங்கூடப் பாராது ஓடினன்.

அவன்போன பின்பு கங்கபட்டர் விராடனைப் பார்த்து, "ஒருசமயம், விடுபட்டுச் சென்ற திரிகர்த்தர்கோன் வேறு படை கூட்டிக் கொண்டு வந்தாலும் வரக்கூடும். அதற்குத் தகுந்த ஜாக்கிரதையோடு நாமிருக்கவேண்டும்" என்றார். அரசன் "அங்ஙனமாயின் இன்றிரவு முழுவதும் இப்பக்கமே நாற்படைகளுடன் கூடத்தங்கிக் காவல் காப்பது உத்தமம்" என்று அவருக்குச் சொல்லி, எல்லா வீரர்களும் சூழத்தன் புத்திரர்களுடனும் கங்கபட்டருடனும் அன்றிரவு முழுவதும் அங்கேயே தங்கியிருந்தான்.

---

## அத்தியாயம் 13.

### வல்லமையில்லார் வாய்வளப்பம்.

திரிகர்த்த தேசாதிபன் தன் வசப்பட்ட ஆநிரை களையும் விட்டுத் தானுங் கட்டுண்டு விடுபட்டுச் சேனை யுடன் முதுகிட்டோடினன் என்று ஒற்றர்களாலறிந்த துரி யோதனன்; ஆண்சிங்கம் போற் கர்சித்து "சுசர்மா, ஆண்மை யுடையானென்று நம்பி மோசம்போனேன்;

அவன் கையிலகப்பட்ட ஏராளமான மாடுகளை இந்நகரம் கொண்டு வாராமலும், பாண்டவர்களையும் வெளிப்படுத் தாமலும் என்ன வேலை செய்தான்? நமது சேனைக்குப் பேரவமானத்தை விளைவித்தான். நல்லது இருக்கட்டும்'' என்று வெகுண்டு எழுந்து துரோணர் கிருபர், அசுவத்தாமர், வீடுமர், விதுரர், கர்ணன் முதலியோர்களைக் கூட்டி நால் வகைச் சேனைகளுந் திரட்டிச் சூரியன் உதயமாவதற்கு முன் னரே விராடநகரத்தின் வடபாரிசத்திற் புகுந்து,நவதானி யம் விளையும் காடுகளை யழிக்க; உத்தரவிட்டான் அவர்கள் கருப்பஞ் சோலைகளைத் தீயிட்டுக் கொளுத்தினர்; நன்செய் புன்செய்ப் பயிர்களை நாசப்படுத்தினர்; போராக் குவித் துள்ள நெற்களைப் பொறி பறக்கக் கொளுத்தினர்; கிரா மங்களில் நால்வகைச் சேனைகளைக் கொண்டு நிறுத்தி கிரா மத்தி லுள்ளோரைப் பறக்கஓட்டினர்; ஓடினவர்களை மடக்கி யடித்தனர்; இவ்விதமாக விராடநகரத்தையடுத்த நாடுகளை யெல்லாம் காடாக்கினர்; காடுகளையெல்லாம் மேடாக்கினர். நாடுகளிலும் காடுகளிலும் எதேச்சையாகத்திரிந்து மேய்ந்த மாடுகளை யெல்லாம் ஒருங்கு திரட்டி மடக்கி யடித்து இடை யர்களுக்குப் பெருந்துன்பத்தை யுண்டாக்கினர். இடையர் களெல்லோரும் குய்யோ முறையோ வென்றடித்துக் கொண்டும் அழுதுகொண்டும் விராட நகரத்துக்குள் புகுந்து அரண்மனைக் கெதிரே வந்து பேரிரைச்சலிட்டார்கள்.

இவ்விரைச்சலைக் கேட்டு விராடராஜனுடைய இளைய குமாரனான உத்தரன் வெளியே வந்து "கோபாலர்களே! உங்களுக்குற்ற துன்ப மென்ன?'' என வினவினான். அவர்க ளெல்லோரும் உத்தர குமாரனைக்கண்டு "இளஞ்சிங்கமே! அரசன் ஆநிரை மீட்பதற்குத் தென்றிசைச் சென்றதை யறிந்த அரவக்கொடியோனாகிய துரியோதனன்,நால்வகைச்

சேனைகளும் கூட்டிக் கொண்டு நமது நகரத்தின் வடபாரிசத்தில் வந்து கலந்து பதாதிகளைப்பிரித்து விட்டு நாட்டிலுள்ள பயிர்களை யெல்லாம் அழித்துக் கூட்டமாய் மேய்ந்த மாடுகளையுங் கவர்ந்து எங்களையும் வாட்டித் துரத்திவிட்டான். நீர் இத்தருணத்தில் காட்டிலுள்ள கருடன் குஞ்சு போல் அரண்மனையிற் பதுங்கியிராமல் வெளிவந்து இப்பகைவர்களை யொழிப்பீராக'' என்று முறையிட்டார்கள்.

இவ்வாறு கோபாலர்கள் முறையிட்டதை விராடன் மனைவி சுதேட்டிணை கேட்டு மனம் வருந்தி 'இதென்ன! அரசன் நகரத்தில் இல்லாத சமயம் பார்த்துப் பகைவர்கள் நகரத்துக்குப் புறம்பேயுள்ள மாடுகளை படக்குவார்களோ? இது அரச நீதியாகுமா? பெண்பாலாகிய நான் இச்சமயத்திலென்ன செய்வேன்?'' என்று ஏங்கி, அருகிருந்த தாதியர்களைப்பார்த்து, என் அன்புள்ள தாதிகளே! இப்பொழுது குருகுலசேனை நமது நகரத்தை வந்து சூழ்ந்து கொண்டிருக்கின்றதாம். அச்சேனை அந்தப் புரத்திற்குள் புகுந்து நம்மை வருத்தாவண்ணம் நாம் முன் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அப்படி முன் ஜாக்கிரதையாக இருப்பதற்கு என்சிந்தையில் ஒரு சூழ்ச்சி தோன்றுகின்றது. அதென்னெனில், நீங்களெல்லோரும் ஆயுதங்களைக் கைக்கொண்டு கோட்டை மதிலைக் காத்தீர்களே யானால், எதிரிகள் நீங்கள் பெண்பாலரென்று உங்களோடு போர்புரிய மாட்டார்கள். பகைவரும் உள் நுழைய மாட்டார்கள்; அதனால் அரசன் வருகிறவரையாவது க்ஷேமமாக இருக்கலாம்'' என்று கூறினாள்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த உத்தரகுமாரன் கதுமென எழுந்து, தன் தாய் சுதேட்டிணையை நோக்கி ''அம்மா!

இப்பொழுது என்ன உரைத்தீர்; நன்று சொன்னீர்! நன்று சொன்னீர்!! இதுவரையில் நீர் என்னைச் செல்வமாக வளர்த்தது பெண்டிர்கள் பகைவரோடெதிர்த்துப் போர்புரிவதற்கோ? பெண்கள் நமது நாட்டிற்கு வந்த பகைவர்களை எதிர்த்துச் செயிப்பார்களானால் நான் உமக்கு ஆண்பிள்ளையாகப் பிறந்தது எதற்கு? நான்கற்ற வித்தைகளினால் பயனென்ன? க்ஷத்திரிய குலத்தில் சாண்பிள்ளையானாலும் ஆண்பிள்ளையாக வந்துதித்த என் முன் இவ்வாறுரைப்பது தகுமா? இனி நானிருக்க இவ்வுரை கூறுதீர்! எனக்குப் பலமில்லையென்று நீர் கருதினீர் போலும். அவ்வாறு கருதாதீர். இப்பொழுது பெரும்படை திரட்டி வந்தெதிர்த்த அப்பகைவர்களை இமைகொட்டி இமைதிறப்பதற்குள் வென்று நமது பசுமந்தைகளை மீட்டுவருவேன். ஆனால், போர் முகத்தில் தலைவன் குறிப்பறிந்து தேர்நடத்தவல்ல சாரதி ஒருவன் எனக்குத் தகுந்தபடி இல்லை. தகுந்தவன் ஒருவன் கிடைப்பானால் இப்பொழுதே அப்பகைவர்களைப் புறமிட்டோடச் செய்வேன்'' என்று வீரம் பேசினான்.

உத்தரன் இவ்வாறுரைக்க, சுதேட்டிணை அவனைப் பார்த்து "அப்பா செட்டியார் சிங்காரிப்பதற்குள் பட்டணம் பரிபோய் விடும் என்று உலகத்தார் சொல்வார்கள். அது போல் உனக்குத்தகுந்த சாரதியை நான் தேடுவதற்குள் பகைவர்கள் வந்து உள் நுழைந்து விடுவார்கள்போலிருக்கிறதே; இதற்கு என்செய்வது?'' என்று கூறிமிக்க வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாள்.

அந்தச்சமயம் வண்ணப் பெண், விரதசாரணி, அவள் முன் வந்து அவள் கருத்தறிந்து அவளைப்பார்த்து "அம்மா

நமது அரண்மனையில் தேரை நடத்தத்தகுந்தவள் ஒருத்தி இருக்கின்றாள். அவள் தங்கள் மகன் குறிப்பின்படி தேர் நடத்தவல்லவள்; அவளே தங்கள் மகள் உத்தரைக்கு நடனம் பயிற்றுவிப்பவள்'' என்றாள்.

சுதேட்டிணை, விரதசாரணி தேர்ந்து சொன்ன சாரதியை மகன் உத்தரனுக்குத் தெரிவித்தாள். அவன் "அம்மா, நன்றாய்ச்சொன்னீர்கள். என்னைப்பரிகாசம்செய்கின்றீர்களா என்ன? முன்னம் பெண்களைப் படையாகத்திரட்டி அனுப்புவது என்றீர்கள். இப்பொழுது எனக்குப் பேடியை இரதசாரதியாக அனுப்புகின்றேன் என்கிறீர்கள். இது மிக வேடிக்கையாயிருக்கிறது. உலகத்தார் ஆண்மைக்குறைவான விஷயங்களுக்குஉபமானமாகஎடுத்துக்காட்டும்பொழுதெல்லாம் பேடியையே குறிப்பார்கள். அப்படியிருக்கத் தாங்கள் பேடியைச் சாரதியாகத்தேர்ந்தெடுத்தது மிக நன்றாயிருக்கின்றது. தாங்கள் குறித்த ஆணுமல்லாதபெண்ணுமல்லாத பேடியைச் சாரதியாக அழைத்துக் கொண்டு போவது எனது ஆண்மைக்கு மிக நல்லது'' என்றான்.

உத்தரன் கூறிய உதாசின மொழியைக்கேட்டு மனந்தாளாதவிரதசாரணி சுதேட்டிணையைப்பார்த்து, "தேவியே உங்கள் குமாரர் பேடியின் பெருமையைக் கண்டறியாமல் கூறுகின்றார். பேடி சாதாரணமானவளல்லள். அவள் அர்ச்சுனனுக்கு இரதசாரதியாக இருந்து அநேக போர் முகங்களைக் கண்டிருக்கின்றாள். அவள் பெருமை பின்னால் தெரியும்'' என்று அர்ச்சுனனாகிய பேடியின் வல்லமையை மீண்டுஞ் சில பேசி வற்புறுத்திக் கூறினாள்.

அவள் அங்ஙனம் வற்புறுத்திக் கூறவே, சுதேட்டிணை தன் குமாரனை நோக்கி "அப்பா! விரதசாரணி கூறுவது

பொய்யா யிராது. விரதசாரணி புனைந்து கூறுபவளல்லள். ஆதலால் விரதசாரணி தெரிவிக்கும் பேடியையே சாரதியாகக் கொண்டு போர் முனைக்குப் போ" என்றாள். அதற்குமேல் அவன் தாயின் மொழியைத்தட்டாதுபேடியைச்சாரதியாக ஒப்புக்கொண்டு அப்பேடியைத் தன் முன் வரவழைக்குமாறு சொல்லினன்.

விரதசாரணி, உத்தரன் வாயிலிருந்து இம்மொழி வந்ததும் அந்தப்புரம் விரைந்தோடி அருச்சுன பேடியைக்கண்டு வணங்கி சமாசாரத்தைத் தெரிவித்தனள், அர்ச்சுனனும் அஞ்ஞாதவாசத்தின் நாட்களைக் கணக்கிட்டு இதுவே நாம் வெளிப்படுவதற்குத் தகுந்த காலமென வறிந்து 'இதோ வந்தே'னெனப் புறப்பட்டு உத்தரன் முன் வந்து நின்றான்.

தன் முன் வந்து நின்ற பேடியை உத்தரன் கண்டு "பேடியே! எனக்கு இசைந்தாப்போல் சாரதியாக விருந்து தேரோட்டுவையோ? தேரோட்டுந் தொழிலில் வல்லையோ? என வினவினன். அருச்சுனப் பேடி அவனைப்பார்த்துமிகுந்த வணக்கத்துடன் "எனக்குத் தெரிந்தவரையில் தேரோட்டுவேன்" எனது திறமை பின்னர் அறியலாம் என்றாள்.

அவள் அங்ஙனம் உரைக்கவே, உத்தரன் போர்க்கோலங் கொண்டு ஆயத்தமாய் அரண்மனை வாசலில் வந்து நின்றான். பேடியோ குதிரைப் பந்திக்குச்சென்று நல்லகுதிரைகளைத் தேர்ந்தெடுத்து தேரில பூட்டி அரண்மனை முன் கொண்டு வந்து நிறுத்தினள். உத்தரன் தாய் தங்கை முதலியவர்களிடம் சொல்லி விடைபெற்றுக்கொண்டு ஒருகுதி குதித்துத்தேரேறி அமர்ந்தான். அப்பொழுது உத்தரன் தங்கை உத்தரை, அவனைப்பார்த்து" அண்ணா! நான் வைத்து

விளையாடும் பொம்மைகளுக்குத் துணிகள் சுற்றப்பகைவர்களுடைய பொற்றுகிலைக் கொண்டுவருக" என்ருள். அவன், என் அன்புள்ள தங்கையே! அங்ஙனமே கொண்டு வருகின்றேன்" என்று மொழிந்து, சாரதியை நோக்கித் தேர் விடச்சொல்லினன்.

சாரதி, உத்தரன் வாயிலிருந்து தேர்விடு என்னும் வார்த்தை முழுவதும் வெளிவருவதற்குள்ளேயே தேரை வாயுவேக மனோவேகமாகச் செலுத்தி உத்தரதிசை கொண்டுவந்து நிறுத்தி "வில் எடு" என்றனள்.

---

## அத்தியாயம் 14.

### மாற்ருனுக் கிடங்கோடேல்.

அருச்சுனபேடிசெலுத்தியதேர்அதிவேகமாகரீங்காரமிட்டுக் கொண்டு துரியோதனன் போர் முனையைக் கிட்டும் பொழுது, இராகவன் குலத்துதித்த உத்தரன், தன்முன் கொஞ்ச தூரத்தில் ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் பரவியது போலவும், அளவிடுதற்கரிய கடற்கரை மணல் போலவும் கண்களுக்கெட்டிய தூரம் வரையில் விரிந்து நிற்கும் சேனையைக் கண்டு பயந்து சாரதியை விளித்து "ஏ! பேடி! இரதத்தை நிறுத்து! நிறுத்து!! பொறு! பொறு!! அவசரப்படாதே! நீ யோட்டும் தேர் விறு விறு என்று ஓடுகிறது. என் தலை கிறு கிறு என்று சுழல்கிறது! பூமி கீழும் மேலும் புரள்கிறது. என்சித்தம் மெத்தப்பிரமை கொள்ளுகிறது! எதிரில்நிற்கும் சேனைகளைப் பார்த்தால் என் கண்கள் சுழல்கிறது! வயிறு குழம்பு

15

கிறது! நிறுத்து! நிறுத்து!! தேரை ஓட்டாதே. அடிபாவி! நான் என்ன சொன்னாலும் இரதத்தை ஓட்டிக்கொண்டேயிருக்கின்றாயே! அடி சதிகாரி! எதிரில் பார்! பார்!! யானை எத்தனை எத்தனை கோடியோ? குதிரை எத்தனை எத்தனை கோடியோ? சேனை எத்தனை எத்தனை கோடியோ? தேர்கள் எத்தனை எத்தனை லக்ஷமோ? கணக்கிட முடியுமா? என் கர்ப்பங் கலங்குகிறதே, தேரை நிறுத்து! நிறுத்து!! என்று கூவி உள்ளங்கலங்கிக்,

கைந்நடுங்கவுங் கானடுங் கவும்கருத் தழிந்து
மெய்ந்நடுங்கவும் நாப்புலர் துயிர்ப்பு மேல் விஞ்சிச்
சொன்னடுங்கவும் சுடர்முடி நடுங்கவும் சோர்ந்தான்
மைந்நெடுங்களிற் றானுடை விராடர்கோன் மைந்தன்.

அங்ஙனம் பிதற்றிச் சோர்ந்து தேர்மீது சாய்ந்த உத்தர குமாரனைப்பேடி யெடுத்துத் தன்னிருகையாலணைத்து, முத்து முத்தாக வழிந்தோடும் வேர்வையைத் துடைத்துத் தாக மளித்துச் சோபந்தீர்த்துத் தேற்றி அவன் முகம் நோக்கி, "ஏனப்பா! இங்ஙனம் பயந்தாய்! பயப்படாதே! பயப்படாதே!! நானிருக்கின்றேன்" என்று தேறுதல் கூறி "அப்பா! அரச குமாரனே! நீ இப்படையைப் பார்த்துப் பயந்தனையா? சண்டைக்கு வந்தால் பகைவரீட்டத்தைக் கண்டு பயப்படலாமா? பகைவரை நாம் அடுதலோ அல்லது பகைவர் கையில் நாம் படுதலோ இரண்டிலொன்று பார்த்து விடவேண்டும். இதுவே சுத்த வீரரின் துணிவு. இதைவிட வேறொன்றுமில்லை. நீ வீணாய்ப் பயப்படாதே. நீ உன் அன்னையிடம் வீர வார்த்தைகள் பேசி இவ்வுத்தர திசை வந்து இன்னும் ஒரு நாழிகை கூட ஆகவில்லையே;

இதற்குள் அதனை மறந்தாயோ?—நீ வில்லெடுத்துப் போர் புரிந்து சிறிது காயமாவது பட்டு வீட்டுக்குத் திரும்புவையேல் சிலராவது உன்னைப் புகழ்வார்கள். அப்படியல்லாமல் இப்பொழுதே வீட்டுக்கு ஓடிப்போகின்றேனென்றால் உன்னைக் காணும் சிற்றாடை சுற்றிய சிறு பெண்களும் கலுக்கென்று நகைத்துக் கைகொட்டிப் பரிகசிப்பார்கள். இதை விட அவமானம் வேறொன்றும் வேண்டுமோ? மானங்கெட்டு உயிர்வாழ்தல் மண்ணுக்குச் சுமையல்லவா? பயப்படாதே தைரியமாய் இரு. அதைரியப்படாதே மாற்றானுக் கிடங் கொடாதே. நானிருக்கும்வரை உனக்குப் பயம் வேண்டாம்.

உற்ற விடத்தில் உயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ ?—கற்றூண்
பிளந்திறுவ தல்லாற் பெரும்பாரம் தாங்கில்
தளர்ந்து வளையுமோ ? தான்.

நீ எதிரிக்குப்பயப்படாமல் தைரியமாக நின்று, பெரிய மலையைக் குறியாகக் கொண்டு அடிப்பதுபோல், பெருங் கூட்டமாகவுள்ள சேனைகளின்மீது மொத்தமாகப் பாணங் களைத் தூற்றிவிட்டால், அவை கும்பலிற் கோவிந்தம் போடுவதுபோல் இன்னார் இனியாரென்று பாராமல் யாவர் மீதும் பாய்ந்து எல்லோரையும் கொன்றுவிடும். ஆண்மையில் வல்ல அரசர்களும் இதற்குப் புறமிட்டோடுவர். எவரும் எதிர் நில்லார்; ஆதலால் நீ ஆண்மையுடன் வில் எடு; அம்பைத் தொடு'' என்று உற்சாகமான பல வார்த்தைகளையும் வீராவேசத்தைத் தரும் ஆண்மை மொழிகளையும் கூறினான்.

இம்மொழிகளெல்லாம் உத்தரனிடத்தில் விழலுக் கிறைத்த நீர்போல் பயன்படாதொழிந்தன. அவன் தான்

கொண்ட பயத்தை நீக்கிலன். பேடியாகிய சாரதி தைரியம் கூறும்போதெல்லாம் சேனையைப் பார்ப்பதும், சாரதி கூறுவதைக் கேட்பதுமாயிருந்து பின்பு சாரதியை நோக்கி "என்ன சாரதி! உனக்கு ஒன்றும் தெரியவில்லை. அதோ பார்; அவைகளெல்லாம் கோடிக்கணக்கான குதிரைகள்; அதற்கப்புறம் பார்! மதங்களைப் பொழியும் கோடிக்கணக்கான யானைகள்; அதற்கு அடுத்துப் பார்! இலக்ஷக்கணக்கான தேர்கள்; சற்றுத் தூரத்தில் பார்! விண் மீன்கள் போற் பரவிய காலாட்படைகள். இவைகளை யெல்லாம் நீ நன்றாய் நோக்கிப் பாராமல் மிகவும் தைரியமாய் சண்டைபோடு! என்கின்றாய். நீ எதிரி பலத்தையும் தன்பலத்தையும் நன்றாகச் சீர்தூக்கிப்பார்க்கவில்லை. ஆழத்தைப் பார்க்காமல் காலிடுவது கூடாது. கௌரவமாக வீட்டை நோக்கி ஓடிப்போவதே உறுதி. தேரைப் போர்முகம் திருப்பாமல் ஊர் முகம் திருப்பு. ஒன்றும் யோசியாதே. வேறொன்றும் சொல்லாதே என்னை வீட்டில் கொண்டுபோய் விடு. அப்படி விட்டால் உனக்கு வேண்டிய வெகுமதிகளைத் தருவேன். உன் உதவியை மறவேன். 'நீதான் என்னைப்பெற்ற தாய்' என்றான்.

இங்ஙனம் பயந்து கூறிய உத்தரன் மொழிகேட்டுப் பேடி கலகலவென்று நகைத்து, அவனைப்பார்த்து, "அரசிளங்குமாரனே! நீ சேனைகளைக்கணக்கிட்டுச்சித்தங்கலங்காதே; இதைப்போல் எழுமடங்கு சேனைகள் வந்தாலும் வரட்டும்; ஒருகை பார்த்து விடுகின்றேன்; என்று நீ துணிவு கொள். நான் உனக்கு அபாயம் வாரதபடி துணை புரிகின்றேன். நீ பயப்படாதே. வீணே பயந்து வீட்டிற்குச் செல்வையானால், உன் பிதா இதுவரையில் சம்பாதித்த

புகழை நீ போக்கடித்தவனாகின்றாய்; அன்றியும் உன்னைப் பெற்றெடுத்த சுதேட்டிணையும், உனக்கிளையாளாகிய உத்தரையும், உன்பந்துமித்திரவர்க்கங்களும், மற்றும் நகரத்திலுள்ள எல்லா ஜனங்களும், நமது இளவரசனாகிய உத்தரகுமாரன் சிங்கக் குட்டிபோல் சினந்து போருக்குச் சென்றிருக்கின்றான்; நமது பசு நிரையை மீட்டு வருவான; பகைவரை யொழித்து வருவான்; வெற்றி மாலைசூட்டி வருவான்;விஜயன் பேர் பெற்று வருவான்'' என்று எண்ணி எக்களிக்கும் அவர்கள் எண்ணத்திற்கு ஏமாற்றத்தையும் தந்தவனாகின்றாய். உன் குலத்திற்கு என்றும் பெரும்பழியைத தேடினவனும் ஆகின்றாய். ஆதலால் நீ இவற்றிற்கெல்லாம் ஆளாகி அவமானப்படாமல் ஆண்மையுடன் எதிரிகளின்மீது அம்புகளைத் தொடு. அடுபோரில் இவனே அரியேறு என்று கூறும்படி பேரெடு. உன் தாய்தந்தையர்க்கு, 'இவ்வீர சிகாமணியைப் பெற இவன் பெற்றோர் என்ன தவமியற்றினரோ' என்று உலகம் புகழ்தலாகிய நல்லிசையைக் கொடு. வில்லை எடுத்து அம்பைத்தொடு. உனக்கு ஒரு கெடுதியும் வராது. நானிருக்கின்றேன். நீ புறமுதுக்கு கொடாமல் போர்கொடு. நொடிப்பொழுதில் இப்பகைஞரெல்லோரும் தனித்தனியோடச் செய்கின்றேன். பசுமந்தையையும் மீட்டு விடுகின்றேன்'' என்றுகூறிப்போர் முகத்தை நோக்கிக் குதிரையைத் தட்டிவிட ஆரம்பித்தான்.

அப்பொழுது உத்தரகுமாரன், "அடிபழிகாரபேடி! என்னை அநியாயமாய்க் கொல்ல நினைத்தாயா? நான் எப்படிப்போனால் உனக்கென்ன? எங்கள் தேசம் எப்படியானால் உனக்கென்ன? தேரை ஓட்டாதே; என் உயிரை

வாட்டாதே; அடிபாவி! நீ எங்கிருந்து வந்தாய் எனக்கு நமனாய்; ஐயையோ! அரவக் கொடியோன் சேனையை நோக்கும் போதே என் அங்கமெல்லாம் பதறுகிறதே. நிதானித்து நீ அச்சேனையைப்பாரடி. நான் சொல்வதைக் கேளடி. நாம் ஏறிவந்ததேரும் முரியாமல், குதிரையும் இறவாமல், நீயும் மடியாமல், என் கை வில்லும் அழியாமல், நானும் அடிபடாமல் க்ஷேமமாய் ஊர்போய்ச்சேருவோம்'' என்று கண்ணீர் விட்டுப் பலவிதமாகப் பேசி, 'இனி இந்தப் பேடி நம்மை உயிரோடு விடமாட்டாள் போலிருக்கிறதே' என்று எண்ணிக் கையிற் பிடித்த வில்லையும் அம்பறாத் தூணியையும் தேர்மேலே போட்டுவிட்டுப் பின் புறமாகப் பூமியில் குதித்துப் பாதம் பிடரியிற் படும்படி வெகுவேக மாக விராட நகரத்தைநோக்கி ஓடினான்.

அப்படி ஓடிய உததரனைப் பேடிகண்டுபச்சாதாபப்பட்டுக் குதிரையின் கடிவாளத்தைத் தேர்க்காலிற் கோத்து விட்டு நிலத்திற் குதித்துப் போர்முனை கண்டு விரைந்தோடு கின்ற உத்தரகுமாரனைப் பின்தொடர்ந்தோடி மறித்து, "ஓ! இராஜகுமாரனே! நீ நல்ல வேலை செய்தாய்! உன்னைப் போல் இப்படிப்பயந்து ஓடியவர்களை நான் இதுவரையிலும் கண்டதில்லை. இது ஆண் பிள்ளையின் செய்கை யாமா?'' என்று கூறி அவன் ஓட்டத்தை நிறுத்தினன்.

உத்தரன் தன்னை மறித்து நிற்கும் பேடியைக் கால தூதனெனக் கொண்டு மனம்விண்டு "ஐயோகுடிகேடிபேடி! நீ எங்கிருந்து வந்தாய்; எனக்கு அஷ்டமத்தில் சனியன் போல உன்னைக் கண்டாலே என்னுள்ளங் கலங்குகிறதே; என்னைச் சும்மா விட்டு விடடி! உனக்கு வெகு கோடி

புண்ணிய முண்டு'' என்று பற்பலவாறு வேண்டித் தப்பி யோடுவதற்கு முடியாமல் கண்ணை மிரள மிரள விழித்துத் திகைத்து நின்றனன்.

அவன் அங்ஙனம் கூறித் திகைத்து நிற்கவே, பேடி, 'இனி நாம் என்ன கூறினும் போர் செய்ய அவன் முன் வாரான். மிகப்பயந்து விட்டான். ஆனால், வேறொரு விதத்தால் அவன் மனந்தேறச் செய்து அவனைப் போர் முகத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும்' என்று தனக்குள் சிந்தனைசெய்து தீர்மானித்துக் கொண்டு, உத்தரன் முகம் பார்த்து, "அரசிளங்குமர! பகைவரோடு வில்லெடுத்துச் சண்டைசெய்ய உன்னால் கூடாதாயினும் நான் இப்பொழுது கூறுவதையாவது ஒப்புக் கொண்டால் உனக்கு மிகுந்த புகழுண்டாகும். பகைவர்கள் கவர்ந்த பசு நிரைகளும் மீளும். ஏன் இப்படிப் பயப்படுகின்றனை'' என்றான்.

"என்ன கூறப் போகின்றாய்? அதை முன்னதாகவே கூறு; அதன் மேல் என் மனச் சம்மதியைத் தெரிவிக்கின்றேன். ஆனால் வில்லெடுப்பது தவிர வேறு எந்தக் காரியமாயினும் செய்யத் தயார்''

"நானும் அதைத் தவிர்த்து வேறு காரியத்தைத் தான் குறிப்பிக்கப் போகின்றேன்''

"அங்ஙனமாயின் தெரிவி.''

"நான் வில்லெடுத்துப் பகைவரோடெதிர்த்துப் போர் புரிகின்றேன்; நீ சாரதியாயிருந்து பரிகளைத்தூண்டு''

உத்தரன் இம்மொழி கேட்டதும், 'சனியன் விட்டும் சங்கடம் தொலையவில்லை' என்பார்கள். அதைப்போல் நாம் வில்லெடுத்துப் போர் புரிதலாகிய தொழிலை நீக்கியும் போர்முனை செல்வது விடவில்லையே. என்செய்வது? நான்

இதற்கு உடன்படேனென்றால் நமன் போலிருக்கும் பேடி நம்மை இலகுவில் விடமாட்டாள் போலிருக்கிறது. மேலும் இவள் பேடியாயிருந்தும் போருக்கஞ்சாமல் 'நான் வில்லெடுத்துப் போர் செய்கின்றே'னென்று கூறும்போது நாம் ஆண்பிள்ளையாயிருந்து சாரதியாய் இருப்பதற்குக் கூடச் சம்மதியாதிருப்பது தகுதியன்று. இனிப் போர்முனை கண்டு பயப்படுவதைவிட்டுத் தெய்வம் விட்டவழியாகிறது என்று புறப்படுவதே தகுதியான காரியம் என்று தனக்குள் சிந்தித்து மனத்திடங்கொண்டு பேடியைப் பார்த்து "அங்ஙனமே சாரதியாக இருந்து குதிரைகளைத் தூண்டுகிறேன்" என்றான். அவன் அவ்வாறு சம்மதித்ததும், அருச்சுனன் அவனை அழைத்துக்கொண்டு தேரினிடஞ் சென்று உத்தரனைச் சாரதியாக அமரச்செய்து தான் தேரின்மேலேறிப் போர் வீரனாகநின்று, சாரதியைப் பார்த்து "உத்தர குமரனே! நீ நமக்கு நேர் வடக்கிலிருக்கும் மயான பூமியில் சாமுண்டீஸ்வரி சந்நிதானத்திற் கருகிலிருக்கும் வன்னி மரத்திற்கு நேராகத் தேரைச் செலுத்து'' என்றான்.

அங்ஙனமே உத்தரனும் தேரை வெகு விரைவாகச் செலுத்தி வன்னி மரத்தண்டை, கொண்டுபோய், நிறுத்தினன். அருச்சுனன் தேரினின்றும் இறங்கி வன்னி மரத்திலேறி, முன்னாள் மறைத்து வைத்த ஆயுத முடிப்பையவிழ்த்துத் தனக்குரிய வில், வாள், வேல் முதலியவைகளை எடுத்துக்கொண்டு பழையபடி அம்முடிப்பை அத்தருவிலேயே பொதித்து விட்டு இரதத்திலேறினன்.

அப்பொழுது உத்தரன் அருச்சுன பேடியைப் பார்த்து "ஓ! பேடியே! நீ இப்பொழுது பிடித்திருக்கும் இந்தப் படைகள் யாருடையது?" என்று வினவினன்.

அதற்கு அருச்சுனன், புன்முறுவல் கொண்டு "இப் படைகள் வனவாசஞ்செய்யும் பாண்டவரில் வீமனுக்கு இளையோனை அருச்சுனனுடையனவை" என்றனன்.

இதைக் கேட்டு உத்தரன் ஆச்சரியமடைந்து, "அருச் சுனன் படைகளா இவைகள்? அருச்சுனன் எங்குளன்? அருச்சுனன் படைகள் இங்கிருப்பதற்குக் காரணம் என்ன?" என்று பேடியை நோக்கிக் கேட்டனன்.

பேடி, ஆச்சரியத்துடன் வினவும் விராட குமாரனைப் பார்த்து, "அரசிளங்குமர! பாண்டவர்கள் இப்பொழுது உனது நகரத்திலேயேதான் வதிகின்ருர்கள். அவர்களில் மூத்தோரான தருமபூபதி நின் தாதை யாசனத்தருகில் அந்தணர் பெருமானாய் வீற்றிருக்கின்ருர். அவருக்கிளை யோனை வீமன், பலாயனன் என்னும் புனைபெயருடன் அரண்மனை மடைப்பள்ளியிலிருக்கின்ருர். வீமனுக்கு இளை யோனை அருச்சுனன் பேடியுருக்கொண்டு இப்பொழுது நின்னுடன் பேசுகின்ருன். அவனுக்கிளைய நகுலன் தாமக் கிரந்தி எனப் பெயர் பூண்டு குதிரைப் பந்திகளுக்குத் தலைவனு யிருக்கின்ருன். அவனுக்கிளைய சகாதேவன் கோபாலனுக வேடங்கொண்டு ஆநிரைகளைக் காத்து வரு கின்ருன். நாங்கள் பன்னிரண்டு வருடம் வனவாசத்தி லும், ஒரு வருடம் அஞ்ஞாத வாசத்திலும் கழிக்கும்படி துரியோதனன் எங்களுக்கு உரைத்தவாறு பன்னிரண்டு வருடம் வனவாசத்திலிருந்து கழித்தோம். ஒரு வருடம் அஞ்ஞாத வாசத்தைக் கழிக்க உங்கள் நகரில் இவ்வேடத் துடனிருக்கின்ருேம். இன்னும் நான்கு நாழிகை சென் ருல் எங்கள் அஞ்ஞாத வாசத்தின் தவணையும் முடிவடை

கிறது அப்பொழுது நான் என் ரூபத்துடன் தோன்றுவேன். நான் இப்பொழுது ஏந்தியுள்ள படைகளையும் எங்கள் நால்வர் சகோதாருடைய படைகளையும், நாங்கள் வனவாசத்தைத் துறந்து இந்நகர் புகும்போது எவரும் அறியா வண்ணம் இம்மரத்தில் பொதிந்து வைததோம். இனித் தேரைப் போர்முகம் நோக்கிச் செலுத்து" என்றனன்.

உத்தரன், பேடியுருக் கொண்டிருப்பவன் அருச்சுனனென்றறிந்ததும் உடனே அவன் அருச்சுனனது தாள்களில் முடியுற வணங்கி எழுந்து "வில்லுக்கொரு தெய்வம் போன்ற வித்தக சிகாமணியே! உமது உண்மையறியாது இதுகாறும் உம்மை நான் சாதாரணமாக நினைத்து நடந்துகொண்டதற்கு மன்னிக்க வேண்டுகின்றேன். சிறியவன் செய்த சிறுபிழை யெல்லாம் பெரியோராகிய தாங்கள் பொறுத்தருள்புரிய வேண்டுகின்றேன்" என்று பிரார்த்தித்தனன். அருச்சுனனும் உததரனை ஆசீர்வதித்து நன்மொழிகள் கூறி மகிழச் செய்தனன். உத்தரன், காண்டற்கரிய விஜயசிகாமணியைத் தான் காணப் பெற்றதனல் உவகைகொண்டு அன்பு மேலிட்டுக் கையிற் கடிவாளம் பிடித்துத் தைரியத்துடன் அமர்ந்து தேரைப் போர்முகம் திருப்பிக் குதிரைகள் படபட வென்று நடக்க அவைகளைத் தூண்டி வெகு விரைவாகச் செலுத்தினன்.

---

## அத்தியாயம் 15.

### மேன்மக்கள் சோற்கேள்.

உத்தரன் விட்ட தேர் அத்தினபுரி மன்னர்கள் நிறைந்த போர் முகத்தை நோக்கி வெகு வேகமாகச் சென்றது. அப்பொழுது அருச்சுனனுக்கு அஞ்ஞாத வாசத்தவணையும் நீங்கியது. அது நீங்கவே அவன் உடலுக்கொரு தளைபோலிருந்து ஆண்மைத் தன்மைக்குத் துன்பஞ் செய்து வந்த பேடி யுருவம் மறைந்தது. அருச்சுனன் பழைய வடிவம் பெற்று நெடுஞ்சிலையும் கொடுங்கணையும் கைப்பிடித்துக் கௌரவ முதல்வன் சேனையிலுள்ள மன்னர்களும், மற்றவர்களும் நடுநடுங்கி, நாவறண்டு கிடுகிடுத்துப் போகும்படியாக அவர்கள் முன் தோன்றினன்.

அனுமக் கொடியோனாகிய அருச்சுனன் இங்ஙனம் தோன்றவே, அரவக்கொடியோன் படைவீரர்களுக்குத் தலைவரான வீடுமர், துரோணர், கிருபர், அஸ்வத்தாமர், விதுரர் முதலியவர்கள் அவனைக்கண்டு உள்ளம் கலங்கி வில்லும் அம்பும் சோர நின்றார்கள். அப்பொழுது வில்லாசிரியரான துரோணர் துரியோதனனைப் பார்த்து, "அரசர்க்கரசே! இதோ நம் முன் வரும் விஜயன், அன்று அத்தினபுரியிலிருந்த அவன்தானே என்று இலேசாக மதிப்பதற்கில்லை. இப்பொழுது அவன் அம்பிகாபதியைக் குறித்துத் தவம் செய்து அவரோடு போர் புரிந்து அவர் அன்புடன் அளித்த பல அரிய வெங்கணைகளைப் பெற்றிருக்கின்றான். அன்றியும் அவன் அமரருலகம்சென்று அமரர்பகைவர்களான நிவாதகவச காலகேயர்களைக் கொன்று

அமரர்களால் சிறப்புப் பெற்றுமிருக்கின்றான்; அமரேந்திர னோடும் சமமாக அமர்ந்து அன்ன முண்டு பெருமையும் அடைந்திருக்கின்றான்; இந்திரனால் கிரீடி யெனப் புகழும் பெற்றிருக்கின்றான். இத்தகையனை நாம் இலகுவில் வெல் வதற்கு முடியாது. ஆதலால் நாம் அருச்சுனனோடு எதிர்த் துப் போர்புரியாமல், மடக்கிய பசுக்கூட்டங்களை ஓட்டிக் கொண்டு பட்டணம் போய்ச் சேர்வோமாகில், நமக்கு இலாபமுண்டு. இப்படிச் செய்வதனால் நாம் பயந்து ஓடி விட்டோமென்றும் நம்மை யாரும் பழிக்க மாட்டார்கள். வேண்டுமாயின் இதற்கு இன்னொரு உபாயமும் செய்ய லாம். அஃதென்னெனில், நானும், அஸ்வத்தாமன், வீடுமர், கிருபர் முதலிய பலரும் இங்ஙனே யிருந்து எதிர் வருகின்ற விஜயனை மறித்துப் போர்புரிகின்றோம். நீ சில வீரர்களைக் கூட்டிக்கொண்டு பசு மந்தைகளை அத்தின புரியில் கொண்டுபோய்ச் சேர்த்து விடு. அப்பொழுது பார்ப்பவர் கள் அரவக்கொடியோன், அநேக படைகளைக் கூட்டிக் கொண்டுவந்து விராடனுடைய பசு மந்தைகளை மடக்கிக் கொண்டு போய்விட்டானென்று புகழ்ந்து பேசுவார்கள். இதனால் நமக்கு இருவிதத்திலும் நன்மை யிருக்கின்றது. இதுவே சிறந்த உபாயமாகும். இதை விட்டுப் போர் தொடங்குவோமானால் நமக்கு வெற்றியுண்டாகாது. இது நமக்குச் சுதேசமல்ல; நாம் நம் ஊரில் ஓர் ஆனைக்கு ஒப் பாயிருந்து காரியங்களை நடத்தினாலும், அயலூரில் நமது காரியங்கள் யாவும் பூனைக்கு ஒப்பான காரியங்களாகவே முடியும்'' என்றனர். விதுரரும் அவர் மொழியையே தாங்கி,

தந்நிலத்தினிற் குறுமுயல் தந்தியின் வலிதென்று
இந்நிலத்தினிற் பழமொழி யறிதிநீ இறைவ!

எந்நிலத்தினும் உனக்கெளி தாயினும் இவர்நம்
நன்னிலத்தினில் வர அமர் தொடங்குதல் நன்ருல்."

என்றனர். வீடுமர் கிருபர் அசுவத்தாமர் முதலிய பெரியோரும் இதுவே சிறந்ததென ஆமோதித்தனர்.

இதைக் கேட்ட துரியோதனன், துரோணரை நோக்கி, "ஆசிரியர் பெருமானே! தாங்கள் இவ்விதம் கூறுவது நியாயமல்ல. முன்னமே நாம் பாண்டவர்களோடு எதிர்த்துப் போர் புரிவதென்ற முடிவு செய்துகொண்டுதான் புறப்பட்டது. இப்பொழுது நம்மை நோக்கி வருபவன் யாராயிருந்தாலென்ன? அதற்கேன் நாம் அஞ்சவேண்டும். வருபவன் அருச்சுனனுயிருந்தால் இன்னும் விசேஷமாயிற்று. அவன், நாம் விதித்த அஞ்ஞாதவாசத்தின் தவணையையும் விதியையும் மறந்து நம்முன் வருகின்றுன். இப்பொழுதே எமது குலப்பெரியோராகிய வீடுமரைக்கொண்டு கணக்குப் பார்த்து அவனையும் அவனைச்சார்ந்த அவன் சகோதரர்களையும் மறுபடியும் பன்னிரண்டு வருடம் வனவாசம் செய்யும்படி ஏவி விடலாம். தாங்கள் இஃது உணராமல் ஏன் என்னை இவ்விதம் பயந்தோடச் சொல்லுகின்றீர். இதுவரையில் தாங்கள் எங்களுக்குப்'போர்முனையில் புறங்கொடாதீர்கள்' என்று கற்பித்தது சொல்லளவிலே நின்றதாகின்றது. செய்கையளவில் அவ்வுரை பயனில்லை. இதைத் தாங்கள் இப்பொழுது நிரூபித்துக் காட்டி விட்டீர்கள் இவ்விதம் உரைப்பீரென்று நான் கனவிலும் கருதவில்லை" என்று கூறி, மிகவும் கடுகடுத்துக்கொண்டு தன் சகோதரர்களையும், கர்ணன் சகுனி முதலியவர்களையும் பார்த்து,

"இவர் அந்தணரானதால் இவ்விதம் கூறுகின்றுர். உண்டு உடுத்துப் படுத்துறங்குவதே உயர்ந்த சுகமெனக்கருதுவது

அவர் இயல்புக்கு ஏற்றதே. நாம் க்ஷத்திரியரானதால் அவ்விதமிருத்தல் தகாது. இப்பொழுதே நம்முன்வரும் அருச்சுனனோடு போர் புரிவதற்கு நீங்கள் தயாராக இருங்கள்'' என்று மொழிந்தனன்.

அவன் அவ்வாறு கூறியதும், துரோணருடைய புதல்வரான அசுவத்தாமரென்னும் வீரர் துரியோதனனை உறுத்துப்பார்த்து "கௌரவகுலாதிபரே! என் தந்தையை என்ன உரைத்தீர். அவர் இதுவரையில் கற்பித்து வந்தது சொல்லளவிலா நின்றது? உண்டு உறங்குவதோ அவருக்கு உற்ற சுகம்? நன்று சொன்னீர்! நன்று சொன்னீர்!! இப்பொழுது அவர் உம்முடன் வந்து பசு நிரைகளை மடக்கியதும், படை வீரர்களை அணி வகுத்து நிறுத்தியதும் ஜெயம்பெறுவதற்கோ அல்லது அபஜயம் அடைவதற்கோ? யோசித்துச் சொல்லும். நீர் இதற்கு முன் எந்தப் போர் முகத்திற்குச் சென்று வெற்றியடைந்திருக்கின்றீர்? இப்பொழுது விராடநகரம் வந்து பசு மேய்க்கும் இடையர்களை விரட்டிப் பசுக்களைக் கவர்ந்தீர். இது ஒரு ஜயம். முன்னம் சுகமாயிருந்த பாண்டவர்களை அழைத்து மோசச் சூதாடி அவர்களைக் காட்டிற்கு ஓட்டிவிட்டீர். அது ஒரு ஜயம். இவை இரண்டன்றி நீர் வேறு கண்டதுண்டோ? நீர் பேசுகின்ற வீரவார்த்தைகளைக் கவனித்தால் பல பெரிய யுத்தங்கள் செய்து வீரர்களை வென்று வெற்றிமாலை சூடி கோட்டை கொத்தளங்களை முற்றுகையிட்டவர் மிக இறுமாந்து பேசுவதுபோல் காண்கின்றது. இதென்னவீரம்! உமது புகழை நீரே எடுத்துப் பேசுவது மிக நன்றாயிருக்கின்றது. அரசனிடமிருக்கும் பெரியோர்கள், எதிரி பலத்தையும்

தனது அரசனுடைய பலத்தையும் சீர்த்தூக்கிப் பார்த்து அரசனுக்கு அனுகூலமான உபாயங்கள் சொல்லி அவனை உய்விக்கச் செய்வதே அவர்கள் கடமையாகும். அவரும் அம்முறையையே அனுசரித்து உமக்குச் சொன்னார். உமக்கு அவ்வார்த்தையைக்கேட்கச் சம்மதமிருந்தால் கேளும். இல்லையேல், நீர் எதிர் வருகிற வீரனோடு வில்லெடுத்துப் போர் புரியும். இதைத்தடுப்பார் எவருமில்லை. உமக்கோ உங்கள் அம்மான் சகுனி மாமா உற்றதுணையாயிருக்கின்றார். அவர் கையிலே பன்னிரண்டு எட்டு இருகால் (தொகை) என்று சொல்லப்பட்ட ஆயுதங்களிருக்கின்றன. அவற்றால் கட்டு வெட்டு குத்து என்று வீரவார்த்தைகள்பேசி விசயனை வென்று விடுவார். அவர் பிடித்த ஆயுதங்கள் அடுத்தவரை அக்கணமே கெடுக்கும் ஆற்றலுடையன. அத்தகைய ஆயுதங்களைக் கையிலேயுடைய அம்மானிருக்கும்போது அன்னத்தைப் பரிந்துண்ணும் அந்தணர்களாகிய எங்கள் துணை உமக்கு எதற்கு? நாங்கள் உண்டு உடுத்து உறக்கங்கொள்ளுகிறவர்கள் தான். நீங்கள் வில்எடுத்துத் துறக்கங் கொள்ளுகிறவர்கள் தான். இதிலொன்றுஞ் சந்தேகமில்லை. எங்களால், கங்கைதரித்த சடைமுடியானையுங் கலங்க அடித்து அவனருள் பெற்ற காண்டீவக்கரத்தினனை வெல்வதும் முடியாத காரியந்தான், சென்ற போர் முகங்களிலெல்லாம் அடிபடாமல் முடி கொடாமல் புறங்கொடாமல் முற்றுகையிட்டு வெற்றிபெற்ற உமக்கு அது முடியுங் காரியந்தான். முப்புரி நூலையணிந்த எங்கள் அப்பா சொல்லியவை முழுவதும் தப்பிதந்தான்'' என்று இகழ்ந்தும் வஞ்சனையாகப் புகழ்ந்தும் கூறினான்.

அங்ஙனம் கூறிய அசுவத்தாமனையும், மற்றுமுள்ள அரசர்களையும் நோக்கிக் கர்ணன், "நாம் அத்தின

புரத்தை விட்டுப் புறப்படும் பொழுதே இந்த விராட மன்னனது ஆநிரைகளை மடக்குவதென்றும், அதனை மீட்கப் பஞ்ச பாண்டவர்கள் விராடமன்னனுக்குத் துணைபுரிய வருவார்களேயானால் அவர்களைப் போருக்கிழுத்து அம்பலத்தில் நிறுத்தி மீண்டும் அவர்களை அடவி யோட்டுவதென்றும் தீர்மானித்தல்லவோ வந்தோம். அங்ஙனமிருக்கப் பன்னிரண்டு வருடமாகத் துருப்பிடித்த சொத்தை வில்லையேந்திவரும் அருச்சுனனை இவ்வாறு அசுவத்தாமர் புகழ்ந்துரைத்தல் ஆண்மையாகுமா? குந்திதேவிமைந்தனதுகொடுங் கணைக்குப் பயப்படுகிறவர்கள் வெகு பிரயாசத்துடன் இவ்வளவு தூரம் ஏன் வரவேண்டும்; அங்ஙனம் வந்தவர்கள் வாய் வாளாமை மேற்கொண்டிராமல் வாய்க்கு வந்தவாறு அருச்சுனனை அம்பிகாபதி வரம்பெற்ற எம்பியென்றும், அசுரரை மாய்த்த அசுரகாலனென்றும் ஏன் வாய்ப்பறை யறைய வேண்டும். நாமெல்லோரும் ஆண்பிள்ளைகளல்லவா? பூனை கண் மூடிக்கொண்டு பூலோகமெல்லாம் இருளாயிருக்கின்றது என்று எண்ணுவது போல இவர்கள் தன்னால் அவ்வருச்சுனனை வெல்ல முடியாதென்பதைக்கொண்டு எல்லோரும் தங்களைப்போலவே ஆண்மையற்றவர்கள் என்று எண்ணுகின்றார்கள். இது எவ்வளவு மதியீனம். கௌரவர் பக்கத்திற்குப் பரிதிபோல் விளங்கும் என் முன் அப்பார்த்தன் எம்மாத்திரம். பரிதிமுன் பனிபோலவும், மின் மினி போலவும் அவன் என்னிடம் தனது வலியை இழப்பதை இப்பொழுதே ஒரு நொடிக்குள்ளே காட்டி விடுகின்றேன். நீங்களெல்லோரும் என்னைச் சுற்றி

யிருந்து வேடிக்கைப் பாருங்கள்'' என்று சண்டப்பிரசண்டமாய் வீரவார்த்தைகள் பல பேசிக் கொட்டினன்.

அப்பொழுது வில்வன்மையிலும் சொல்வன்மையிலும் நிகரற்ற கிருபர் அங்கர்கோனுகிய கர்ணனை நோக்கி "அங்கர் குலாதிப! அவனியையாளும் அரசர்கள் சாம பேத தான தண்டமென்னுஞ் சதுர் வித உபாயத்தர்களாயிருக்க வேண்டுமென்று அற நூற்கள் கூறுகிற்கின்றன. அவற்றில் நீயோ தண்டோபாயத்தையே கைகண்ட உபாயமெனக் கொண்டிருக்கின்றுய்; அதுவோ தாமத குணத்தினர் செய்கையாகும்; சத்துவ குணமுடையோர் அதனை விரும்பார்; அவர்கள் எப்பொழும் முற்கூறிய மூன்று வித உபாயத்தினலேயே எக்காரியத்தையும் முடிக்க வழிபார்ப்பார்கள். உன்னைப் போல எடுத்ததற் கெல்லாம் தண்டம் எடுத்து முண்டிதஞ் செய்ய முன் வாராரகள். தரணியைத் தன்னடிப்படுத்தி ஆள அரசனுக்குப் பொருந்திய வழிகள் இரண்டு உண்டு. அவற்றில் முதலாவதான தோள்வலி அரசனுக்கு அழகினைத் தருவதொன்றுபினும், இரண்டாவதான சூழ்ச்சியே அதனினும் சிறந்தது. அதனை யுடையார் தோள்வலிமை யில்லாத மகளிரே யாயினும் அவர்களும் அரசாகளாவார்கள்.

ஊழ்வர வன்னதேனும் ஒருவகைக் கருமமெல்லாஞ்
சூழ்பவர் சூழ்ந்துசூழுஞ் சூழ்ச்சியுட் டோன்றுமன்றே
ஆழ்பகர்ந் தினியதீஞ்சொ லமிர்தனு ரேனுஞ் சூழ்ச்சி
வாழ்பவர் வல்லராயின் மன்னராய் மலர்பவன்றே.

ஆதலின் சூழ்ச்சியே தண்டோபாயத்தினுஞ் சிறந்தது. அதுவே தோள் வலிமையையும், துணை வலிமையையும்

தந்து நிற்கும். அத்தகைய சூழ்ச்சியினைத் தெரிந்துரைக்கும் பெரியோர்களை அரசன் உதாசினஞ் செய்வதாகாது.

செறிந்தவர் தெளிந்த நூலா சிறந்தவை
தெரிந்து சொன்னல்
அறிந்தவை யமர்ந்து செய்யும் அமைதியான்
அரச னவான்

என்பது நீதிசாஸ்திரம். நீ இவற்றை யெல்லாம் ஓராமல் வெல்வதே கருமமென்று வீர வார்த்தைகள் பேசுகின்றாய். பெரியோர்கள் எப்பொழுதும் எதிரி பலத்தையும் தன்பலத்தையுமே நோக்கிப் பேசுவார்களே யன்றி, எதிரி விரட்டலுக்கும் மிரட்டலுக்கும் பயந்து பயனற்ற வுரைகளைப்பேசுபவர்களல்லர். நமக்கு முன் வருகிறவன் ஒற்றைத் தேரேறி ஒருவர் துணையுமின்றி வருகின்றானே, இவன் நமக்கு எம்மாத்திர மென்று கருதுகின்றனையோ? காக்கை பல கோடி கூடினும் அவை ஒரு கல்லின்முன் எதிர் நிற்குமோ? கரிகள் பல கூடினாலும் அவை ஒரு அரியேற்றின் முன் நிற்குமோ? சிவபெருமான் ஒருவனே சென்று திரிபுரத்தையும் தகனஞ் செய்யவில்லையா? அத்திரிபுராந்தகனையே அருச்சுனன் ஒருவனாக நின்று நாணறுந்த வில்லால் அவனை நன்றாயடித்து மயங்க வைக்கவில்லையா ? எதிரி ஒருவன் தானே என்று எளிதாக எண்ணுதல் கூடுமோ ? எப்பொருளிலும் குணம் பெரிதே யன்றி கணம் பெரிதல்ல. நமது பக்கம் கூட்டம் அதிக மிருப்பினும் அவை யெல்லாம் அருச்சுனன் முன்னே யாது செய்யும்? அவனோ வீரம் பேசுகிற உனையும், விசேஷ படைகளிருக்கின்றதென்ற அகங்காரங் கொண்ட அரவக்கொடியோனையும், வில்லாசிரியர் துரோணரையும் விண்ணவரும் மண்ணவரும் திண்ணிய புயவலியான்

இவனே என்று புகழும் வீடுமரையும், விவேகமெடுத்துரைக்கும் என்னையும் வீறு பெற்றுயர்ந்த அசுவத்தாமனையும் ஒரு பொருளாக மதியாமல் வேழக்கூட்டங்களை நோக்கி வரும் வயமாப் போலவன்றோ வருகின்றான். அவனுக்கு எதிர் நின்று போர்புரியும் ஆற்றலுள்ளார் நம் பக்கத்தில் யாரிருக்கின்றார். விரல்விட்டுச் சொல்லும் முன்னே பாஞ்சாலியின் திருமணத்தின் போது முந்நீருலகு காக்கும் முடிமன்னர் திறமையையும் உங்கள் வலிமையையும் நான் கண்கூடாகப் பார்த்தவனன்றோ? எனது முன்னிலையில் நீ வீரம்பேசுவது ஏளனத்திற் கிடமல்லவா ?

காணாமல் வேணதெல்லாங் கத்தலாங் கற்றோர்முன்
கோணாமல் வாய்திறக்கக் கூடாதே—நாணாமல்
பேச்சுப்பேச் சென்னும் பெரும்பூனை வந்தக்கால்
கீச்சுக்கீச் சென்னுங் கிளி.

என்றாற் போல, நீ அவனைக் காணாத விடத்து வானத்தை வில்லாய் வளைப்பே னென்றும், மணலைக் கயிறாய்த் திரிப்பே னென்றும் வாய்வளப்பம் பேசலாம்; அவனைக் கண்ட விடத்திலன்றோ உன்றன் திறமை தெரியும். நீ இங்ஙனம் பேசுவதின் காரணமென்ன? உனது நண்பன் துரியோதனனைச் சந்தோஷிப்பிக்கவன்றோ? அவன் உள்ளம் உவக்குமாறு செய்வது இங்ஙனமா ? நீ அவனுடைய உண்மையான நண்பனாயிருந்தால் அவனுக்கு இந்தச் சமயத்தில் உறுதிபயக்கும் வார்த்தைகளை யுரைத்து அறிவுச் சுடர் கொளுத்தி கொற்றம் பெறும் வழியைக் காட்டு. அங்ஙனமில்லையேல் வாயை மூடிக்கொண்டு அடக்கமாயிரு. தனுர் வித்தையின் நிலை கண்டுணர்ந்த ஆசிரியர் துரோணரையும், அவரது புத்திர சிகாமணி அசுவத்தாமாவையும், நீ இங்

நனம் இகழ்ந்து மறுத்துரைத்தல் எத்துணையும் பொருந் தாத செய்கையாகும். அவர்கள் முக்காலமுமறிந்த முது மறையோர். நீயோ ஒரு காலத்தின் செய்கையையும் ஓரா முக்குண வயத்தன். உனக்கும் அவர்களுக்கு மிருக்கும் தார தம்மியம், மலைக்கும் மண்ணாங்கட்டிக்கு முள்ள ஏற் றத் தாழ்வு எத்துணையோ அத்துணையா யிருக்கிறது. நீ அவர்களுரையை மறுப்பதற்கு அருகனோ? அருச்சுன னுக்கு ஒப்பான மாயோன் மருகன் முருகனோ?'' என்று திறம்படக் கர்ணனை இகழ்ந்தும், துரோணர் அசுவத்தா மரைப் புகழ்ந்தும் உரைத்தனர்.

கிருபர் அவ்வாறுரைத்தமைக்குக் கர்ணன் கண்கள் சிவக்கக் கடுங்கோபங் கொண்டு அங்குள்ள காவலரை நோக்கி, "முடி மன்னர்களே! வணங்கா முடி மன்னன் பாதுகாப்பில் ஒரு குறையுமின்றி மிடி பெருமையாய் வாழுமவர்கள் போர்முகத்தில் வந்து அன்னமிட்டவரை இகழ்ந்தும் கன்னமிட்ட சத்துருவைப் புகழ்ந்தும் உரைப்பதினால் நாம் ஒரு குறைவையும் அடைய மாட் டோம். அவர்கள் நமது பக்கல் பரிந்து பேசாததனாலேயே நமக்கு வெற்றி கிடையாமற் போமா? நானிலத்தில் நன் னெறி நிலையாமற் போமா? வான் வளமாரி பொழியாது பொய்த்துப் போமா? கோள் நிலைதிரிந்து பகற்பொழுது குறைந்துபோமா? ஆ! ஆ! அவர்கள் பேசும் வார்த்தைகள் நன்றாயிருக்கின்றது. நம்மை எதிர்த்து வரும் அருச்சுனனை மிகுந்த திறவானென்று புகழ்ந்துபேசி இங்கிருப்பதில்யாது பயன்? ஒண்டியாய் வருகிற பஞ்சைப்பார்த்தனுக்குச் சண் டையில் துணை புரிகிறோமென்று அவனுக்கு நல் வரவு கூறி

வரவேற்று அவன்மீது தங்களுக்கிருக்கும் அன்பை வெளிப் படுத்துகிறது தானே; வேண்டாமென்று தடுத்து நிறுத் தியவர்கள் யாவர்? அங்ஙனம் பலர் எதிரில் இதனைச் செய்வது நாணமாயிருந்தால், ஒருவருக்குஞ் சொல்லாமல் தங்கள் தங்கள் கிருகஞ் சேர்ந்து புத்திர மித்திரர்களுடன் சுகித்து வாழ்கிறது தானே; அதனையும் தடுப்பார் யாவரு மில்லையே. இவ்விருவகையுஞ் செய்யாதவர்கள் வீணே ஏன் பார்மன்னரையும் படை வீரரையும் பயமுறுத்த வேண்டும். அவர்கள் தங்கள் அகத்திற்குச் சென்று அன்ன முண்டு அகமகிழ்ந்திருக்கட்டும். நானொருவனே அப் பஞ் சைப்பார்த்தனை ஆடிக்காற்றிலகப்பட்ட பஞ்செனப்பறக்க அடித்து வெற்றி பெற்று, அவர்களுக்கும் இச் செய்தியை தூதுவர் மூலம் ஓலை போக்கித் தெரிவிக்கின்றேன்; துரி யோதனனுக்கும், அவர்களுக்கும் உவகையைத் தருகின் றேன்" என்று கறுத்து உரத்துக் கூறினன்.

அங்ஙனம் துரியோதனனும் கர்ணனும், அந்தணர் சிரேஷ்டர்களாகிய துரோணர் கிருபர் அசுவத்தாமர் முத லியவர்களின் மனம் புண்ணுகுமாறுரைத்த மாண்பிலாப் புன் சொற்களைக் கேட்டுக் கொண்டிருந்த வீடுமர் துரியோ தனனைப் பார்த்து "திங்கள் மரபிற்றோன்றிய மங்கள முக சுந்தரனே! சிலையாசாரியராகிய துரோணர் சொல்லிய யாவும் நலத்தைத் தரத்தக்கனவே; சகல கலைகளிலும் வல்ல அவரது திருக்குமாரர் அசுவத்தாமா எடுத்துரைத்தவை களனைத்தும் அமைவுடையனவே; நீதிக் கொரு இருப்பிட மாய் விளங்கும் கிருபர் மொழிந்தவைகள் பலவும் முறை மையுடையனவே. பெரியோர்கள் எக்காரியத்தையும்தீர்க்கா லோசித்தே செய்வார்கள். எவ்விஷயங்களையும்முன்னுக்குப்

பின் முரணில்லாமலுரைப்பார்களே யன்றி சிறியோர்களைப் போல முன்னாலோசனையின்றி அவசரப்பட்டு எதையும் உரையார்கள். அவர்கள் ஒரு காரியத்திற் பிரவேசித்தார்களானால் பின்னே அவமானம் அடையமாட்டார்கள். 'பழம் புண்ணாளி பாதி பரிகாரி' என்பதுபோல் அனுபவம் வாய்ந்த இப் பெரியோர்கள் கூறும் மொழிகளொன்றும் பயனில்லாமற் போகா. அவர்கள் இவ்வளவு வற்புறுத்திக் கூறுவதும் நமது நன்மைக்கே யன்றி வேறல்ல. தன்னலங்கருதாப் பெருந்தகையாளருக்கு நீங்கள் பிழை செய்தல் எவ்வளவும நீதியாகாது. 'பெரியோரைப் பிழையேல்' என்று நீதி சாஸ்திரங்கள் முறையிடுவதை நீங்கள் கருத்திலிருத்தி நடவாதது பெரும் பிழையே. இனியாவது நீங்கள் உங்கள் பிழையை யுணர்ந்து இப் பெரியார்கள் அடிகளில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுங்கள்" என மொழிந்தார்.

இங்ஙனம் வீடுமர் அவ்வந்தண ஆசிரியர்களைப் புகழ்ந்துரைத்ததும், துரியோதனனும், கர்ணனும் 'நாம் என்ன பிழை செய்து விட்டோம். வீடுமரோ விவேகத்திற் சிறந்தவர்; வீரத்தில் வீறு பெற்றவர். இவருக்கு இணையாயுள்ளவர் மண்ணிலுமில்லை; விண்ணிலுமில்லை; இவரே இம்முதுமறையாளரை இங்ஙனம் புகழ்ந்துரைத்தால் நாம எம்மாத்திரம். நாம் இவ்வந்தணாளர் மகிமை யறியாமல் என்னென்னவோ இகழ்ந்து பேசி விட்டோமே. இதற்கு என் செய்வது ?" என்று மனம் துடித்தவர்களாய் அவ்வந்தணாளர் பாதங்களில் விழுந்து "சிறியோர் செய்த பெரும் பிழையைப் பொறுத்தருளப் பிரார்த்திக்கின்றோ" மென்றனர்.

அந்தணாளர் ஆன்றோராதலின் அவர்கள் தாங்கள் கொண்ட பெருஞ் சினத்தை நீர் கிழியவெய்த வடுப்போல அக்கணமே மாற்றி அவர்களுக்கு ஆசி கூறினர்.

அதன் பின் துரோணர், வீடுமரை நோக்கி "வித்தக! இப்பொழுது நம்மை நோக்கி வருபவன் விஜயன் என்பதில் யாதொரு ஐயப்பாடு மில்லை. அவன் மொத்தத்தில் நமது படையை நோக்கி வந்தாலும், துரியோதனன் மீதே இலக்கு வைத்துப் போரிடுவான். நாம் எதிரிட்டாலும் எதிரிட்டுப் போர் செய்யான். பண்டு துரியோதனன் மீது வைத்த பகையை முடிக்கவே அவன் பெரிதும் முயற்சிப்பான். கடைசியில் துரியோதனன், அருச்சுனன் கையால் அடிபட்டான்; பிடிபட்டான், வில்லாசிரியர்களும் வீடுமரும் விதுரரும் இருந்தும் என்ன பயன்? என்று உலகம் கூறுவாறு நாம் முன்னெச்சரிக்கையாக அருச்சுனனை வளைத்துப் போர் செய்வதோ, அல்லது அஞ்ஞாத வாசத் தவணை கழியு முன்னம் பாண்டவர் வெளிப்பட்டார் என்ற குற்றத்தைச் சாட்டுவதை முக்கியமாகக் கொண்ட அரவக்கொடியோனது எண்ணப்படி கணக்குப் பார்த்து அவர்களைக் காட்டுக்கு ஓட்டுவதோ! இரண்டிலொன்று செய்ய முயல வேண்டும். காரியம் விஞ்சியபின் கண்கலங்கி விழிப்பதில் பயனில்லை'' என்றார்.

வில்லாசிரியர் அங்ஙனம் புகன்றதும் வீடுமர் துரியோதனனை நோக்கி, "குருகுலச் செல்வ! அஞ்ஞாதவாசத் தவணைக்கு முன்னேயே அவசரப்பட்டுப் பாண்டவர்கள் வெளித் தோன்றினார்கள் என்ற குற்றத்தைச் சாட்டி, அவர்களை மீண்டும் அடவிக் கோட்டி விடலாம் என்று நீ மனோராச்சியஞ் செய்வது வீணேயாகும். பாண்டவர்கள்

கணக்குத் தெரியாத பாலர்களல்லர். அவர்கள் வான சாஸ்திரம் சோதிடசாஸ்திரம் நீதிசாஸ்திரம் முதலியவைகளை ஐயந்திரிபற ஓதி யுணர்ந்தவர்கள்; உன்னைப்போலநாட்களை விரல் விட்டு எண்ணுபவரல்லர்; விநாடி நாழிகைகளையும் அவற்றின் பாக அம்சத்தையும் விடாமல் கணக்கிடும் வித்தகர்கள்; அவர்கள் அறியா மூடரல்லர். அவர்களை மீண்டும் நீ அடவிக்கோட்டநினைப்பது அறியாமையேயாகும். உனது விருப்பப்படியே அஞ்ஞாதவாசத் தவணையைக் கணக்கிட்டுப் பார்த்தாலும், கிரகசார தினசார பேதங்களினால் ஐந்து வருடத்திற்கு ஒருமுறை நாட்கள் அதிகப்படும் கணிதப்படி இரண்டு மாதமும் பன்னிரண்டு நாட்களுகம் அதிகப்பட்டிருக்கின்றன. அந்த அதிக நாட்களைக் கூட்டினால் நேற்று உதயமே பதின்மூன்று வருடங்களும் பூர்த்தியாயின. இதைக் கணக்கிட்டே அருச்சுனன் இன்று நம் முன் தோன்றினன். பாண்டவர்கள் எப்பொழுதும் சத்தியந் தவறி நடவார்; சொற்சோர்வுபடார்; நன்றி மறவார்; தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக் கொள்வார்; பொறுமையில்லார்; புறங்கூறார்; புலமையுடையார்; நலமே நாளும் நாடுவார்; நன்மை கடைப்பிடிப்பார். சிறியோரினஞ் சேரார்; பெரியோரைத் துணைக் கொள்வார். அவர்கள் இத்தகைய நல்ல குணங்களைப்பெற்றிருந்ததனால் தான், நீ வஞ்சகச் சூதாடி அவர்கள் பொருளைக் கைப்பற்றியதோடமையாமல், பொற்பில் இலக்குமியையும் கற்பில் அருந்ததியையும் நிகர்த்த பெண்பெருமாள் திரௌபதையை அரசவையில் கைப்பற்றி இழுத்துத் தப்பித்துக்கொண்டனை. அதுபொழுது அவர்கள் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டுத் தடைப்பட்ட பாப்புபோல் இருந்தனர். அங்ஙனமிலாது

உன்னைப்போல அவசரப்பட்டவர்களா யிருந்தால் உன் கதியும் உன்னைச் சேர்ந்தவர்களின் கதியும் யாதாயிருக்கும்? இதிலிருந்தாவது அவர்களுடைய பொறுமையின் பெருமையை அறியலாகாதா? இனியாவது நீ அவர்கள் மீது வைத்த பகையை மாற்றி அன்பாய் நடந்துகொள். ஆதியிற் கூறியபடி அவர்கள் பதியையும் பாக்கியத்தையும் தந்துவிடு. உனக்கு இதனால் புகழுண்டு. அரசபுத்திரர் தருமத்தையும் நீ நிறைவேற்றியவனாவாய்'' எனச் சமாதானமான சில புத்திமதிகளைக் கூறினார்.

இங்ஙனம் கூறிய வீடுமரது விவேகத்தைத் தரும் விழுமிய மொழிகள் யாவும் துரியோதனனிடத்தில் விழலுக்கிறைத்த நீர்போலப் பயன்படாதொழிந்தன. அவன் இம்மொழிகளால் மனவமைதி கொள்வதற்குப் பதிலாகச் சினத்தையே மிகுதியும் கொண்டு, பிதாமகராகிய வீடுமரைப் பார்த்துத் "தாதையே! தாங்களுரைத்த மொழிகளொன்றும் எனக்குச் சம்மதத்தைத் தரவில்லை. பாண்டவர்கள் நான் பண்டு உரைத்தபடி பதின்மூன்று வருடங்களைக் கழித்து வந்தாலும் அவர்களை மீண்டும் அடவிக்கு ஓட்டுவேனேயன்றி, அத்தினபுரியில் தங்க அணுவளவும் இடந்தரமாட்டேன். தாங்கள் அவர்களுக்காகப் பரிந்து அஞ்ஞாதவாசத் தவணையைப் பார்க்கவும், பார்த்து அதனைப் பெருக்கவும் வேண்டியதில்லை. இனி நடக்கிறது நடக்கட்டும். இருதிறத்தாருடைய ஆண்மையையும் இதில் பார்த்துவிடுவோம்'' என்றான்.

வீடுமர் அதற்குமேல் ஒன்றுஞ் சொல்ல மனமில்லாதவராய், மனதிற்குள் 'நட்புப் பிரித்தல், பகை நட்டல், ஒற்றிகழ்தல், பக்கத்தார் யாரையும் ஐயுறுதல், தக்கார் நெடு

மொழி கோறல், குணம் பிறிதாதல் ஆகிய இவைகள் கெடுவது காட்டுங்குறியாதலின் இவனும் இதற்கு இலக்காகவே நமது உரையை மறுத்துக் கூறுகின்ருன். கெடுமதி கண்ணுக்குத் தோன்ருதல்லவா? 'ஆனைவரும்பின்னே மணியோசை வரும் முன்னே, கேடு வரும் பின்னே மதிகெட்டு வரும் முன்னே' என்ற ஆன்ரோர் மொழி பொய்த்துப் போமா?' இனி இவனுக்கு நீதிகளெடுத்துரைப்பதில் யாது பயன்?' என்று கொண்டு வாளாவிருந்துவிட்டார்.

---

## அத்தியாயம் 16.

### ஆநிரை மீட்சியும், போரும்.

மேன் மக்கள் சொற்கேளாத துரியோதன் இங்ஙனம் விடுமரது விழுமிய உரைகளை மறுத்ததும், துரோணர் அவனைப்பார்த்து "அரவக் கொடியோய்! அறமே உருக்கொண்டு பிறந்த ஐவருக்கு நீ நாடு கொடுக்க மறுப்பையேல் அவர்கள் உனக்கு நிச்சயமாய் ஓடு கொடுப்பார்கள்; அந்தகனோலை வாங்கிக் கொடுப்பார்கள். இதிலொன்றுஞ் சந்தேகமில்லை. நீ இப்பொழுது கூறியது நிச்சயமான வார்த்தைகளானல் இனி ஒரு கணமேனும் தாழ்த்தாது நான் முன் கூறியபடி ஆநிரைகளை அத்தினபுரிக்கு ஓட்டிக்கொண்டு போ. இங்ஙனம் செய்தால் நீ உத்தேசித்தபடி விராடனது பசுமந்தைகளை ஒருவிதத்தில் வெற்றியுடன் கவர்ந்தவனுவாய். இல்லையேல், நாம் மடக்கிய மாட்டையும் வளம் பொருந்திய குருநாட்டையும் இழப்பதல்லாமல், உயிரையும் இழக்க நேரிடும். ஆதலால், இக்கணமே

நமது சேனைகளை இருகூறுக்கி ஒருபாகத்தை ஆவினங்களுக்குக் காவலாக அழைத்துக்கொண்டு நீ அத்தினபுரஞ்செல். எங்களை நம்பி நீ இங்கே தங்கியிராதே. நாங்கள் மிகுதியாயுள்ள பாதி சேனைகளைப் பக்கத்துணையாக வைத்துக்கொண்டு, வரும் பார்த்தன் உன்னைத் தாக்காவண்ணம் பார்த்துக்கொள்ளுகிறோம். நாங்களும் முடிவில் சமயம் பார்த்து நகரத்தை வந்தடைகிறோம். அங்ஙனம் தட்டுக்கெட்டுத் தடுமாறி அத்தினபுரம் சேர்ந்தாலும், விராடபுரத்திற்குப்போய் ஆநிரைகளைக் கொண்டுவந்தோமென்றுவது பெருமை பாராட்டிப் பேசிக்கொள்ளலாம். அப்பொழுது நம்மை இழிவென்பது எட்டிப்பாராது" என்று முன் கூறியதையே வற்புறுத்திக் கூறினர்.

வித்தகச் சிகாமணியான வீடுமரும் கிருபரும், துரியோதனனது விடாப் பிடிவாதத்தையும், ஆங்குள்ள அரசபுத்திரர்கள் அதுகாலை அவன் அபிப்ராயத்தையே தாங்கி நிற்பதையும், மற்றும பிறவற்றையும் நோக்கித் துரோணுசாரியார் கூறிய உபாயமே சிறந்ததெனக்கொண்டு, கரி பரி தேர் காலாட்களாகியநால்வகைப்படைகளையும்இருகூறுக்கி ஒரு கூற்றைத் துரியோதனனுக்குத் துணையாக அனுப்பினர். துணைக்குப்பிரிந்த பாதிப்படைகள் இருபாகமாகி ஓர் பாகம் துரியோதனனையும் மற்றோர்பாகம் பசுக்கூட்டங்களையுஞ் சூழ்ந்து காவல் புரிந்தன. துரியோதனன், தனக்கு அனுகூலமாகச் சூழ்ந்து சொன்ன ஆசிரியர் துரோணரது மொழிகளையும், வீடுமர் கிருபர் முதலிய பெரியோர்களின் மனசம்மதத்தையும் தள்ளாமல், அவர்கள் பகிர்ந்தனுப்பிய பாதிச் சேனையைத்துணையாக அழைத்துக்கொண்டு விராடனது ஆநிரைகளை அத்தினபுரம் நோக்கி ஓட்டிச்சென்றுன்.

அரவக்கொடியோன், அங்ஙனம் சென்றதும், வீடுமர், விதுரர், கிருபர், துரோணர், அசுவத்தாமர், கர்ணன் முதலானோர் தங்களுடனிருந்த சிறிது சேனைகளைக் கடல் போற் பெரியதாகக் காட்டும்படி பெருக்கி அணிவகுத்து அருச்சுனனுக்கு எதிராக நாற்றிசையும் பரவி நின்றனர்.

அருச்சுனன், தனக்கெதிரில் அரவக்கொடி கட்டிய தேரும் ஆநிரைகளின் கூட்டமும்காணப்படாமல்தனது ஆசிரியரும், அவரது புதல்வரும் அன்புள்ள தாதை முதலியவரும் தோன்றியதால் பசுமந்தைகளைப் பாந்தட் கொடியோன் கவர்ந்து சென்றனன் என்பதை யூகித்தறிந்தான். அங்ஙனம் அவன் அறிந்தபின், 'நாமோ விராடர்கோனது பசுமந்தைகளை மீட்பதே நோக்கமாகக்கொண்டு வந்தோம். ஆநிரைகளோஇப்பக்கத்திற் காணப்படவில்லை; அவைகளை அரவக்கொடியோன் அத்தினபுரி புக்க ஓட்டிச் சென்றிருக்க வேண்டும்; அவைகளை நாம் இப்பொழுது கவனித்து விரைந்து மீட்காமல் நம்முன் நிற்போரிடம் போர்தொடங்குவோமாகுல் ஆநிரைகளெல்லாம் அத்தினபுரஞ் சென்று விடும்; அவற்றை யிழந்துவிட்டு அறநெறிவழுவாத பெரியோர்களிடம் அமராடுவதில் யாது பிரயோசனம்? அங்ஙனம் அவர்களை அமருக்கிழுப்பதும் நமக்குக் கருத்தல்ல. மேலும் அது பாவச்செய்கையுமாகும்!' என்று எண்ணி முதலில் ஆநிரைகளை மீட்பதற்காக அவைகளின்குளம்படிகளைப் பின்பற்றித்தேரை விரைவாகச் செலுத்தும்படி உத்தரனுக்குக் கட்டளையிட்டனன். உத்தரன் பரிகளைத் தூண்டி விட்டுக் கடுகத் தேரைச் செலுத்திக் காவலோடு செல்லும் பசுக் கூட்டங்களின்முன் கொண்டுபோய் நிறுத்தினன்.

காண்டீபன் பசுக்கூட்டங்களின் முன்னே சென்றதும், காண்டீபச்சிலையைக் கையிற் பிடித்து நாணேறிட்டுக் கொடுங்கணைகள் பலதொடுத்து, பசுக்களைக் காத்துச் செல்லும் சேனு வீரர்மீது சோனுமழையெனப் பொழிந்தனன். அவ்வீரர்கள் அம்பிகாபதியின்மீது அம்பு தொடுத்துப் போர்புரிந்த அருச்சுனன் விடுங் கணைகளுக்கு ஆற்ருது நாற்றிசையும் பறந்தோடிப் பதுங்கினர்.

அது சமயம் உத்தரன், துரியோதனனது சேனுவீரர்களின் காவலுக்குக் கட்டுப்பட்டிருந்த கோவலர்களை நோக்கி, "கோவலர்களே! இனி உங்களுக்கு யாதொரு தடையுமில்லை; உங்களை எதிர்க்கப் படையுமில்லை; நீங்கள் இனி உற்சாகத்துடன் பசுநிரைகளை நமது நகருக்கு ஒட்டிச் செல்லலாம். செல்லுங்கள்! செல்லுங்கள்!!" என்று உரத்துக்கூவி இரு கரங்களையும் வீசினுன்.

கோபாலர்கள், தங்கள் அரசகுமாரன் தோன்றி இங்ஙன முரைத்தவுடன் கடல்மடை திறந்த வெள்ளம்போல மகிழ்ந்து ஆரவாரித்து "நமது அரசிளஞ்சிங்கம் நம்மையும் நமது ஆநிரைகளையும் மீட்டார்! நமக்கு இனி என்ன குறை! வெற்றி நமதே! வெற்றி நமதே!!" எனக் கூவிப் புல்லாங்குழலெடுத்து ஊதினர்; வழக்கப்படி பசுக்களுக்கு வாய் குவித்துக் கூவிச் சமிஞ்ஞை யோசையைக் காட்டினர்.

அவைகளெல்லாம் அக்குறிப்போசை கேட்டுத் தலையெடுத்துப் பார்த்து,வாலெடுத்தாட்டிக் காலசைத்து உடல் குலுக்கிக் கொம்புகளைத் தாழ்த்திக் கும்மாள மிட்டுக் குதித்து மானென மச்சநாட்டை நோக்கி யோடின. ஆயர்களும் அவைகளைப் பின்தொடர்ந்தோடி விராட நகரத்தின்

புறத்தேயடைந்து "நமது அரசிளஞ்சிங்கம் வெற்றி பெற்ருர்; எங்களையும் ஆநிரைகளையும் மீட்டார்" என ஆங்குள்ளோரிடங்கூறி ஆரவாரித்தனர். அச்செய்தி அந் நகரெங்கும் காற்றினுங்கடிது பரவிற்று.

அதற்குப்பின், ஆநிரைகளை மீட்டோட்டிய அருச்சுனன், தனக்குரித்தாகிய அநுமக்கொடியைத் தேரின் கூம்பில் கட்டிப்பறக்கவிட்டு, எவரும் தன்னை அறிந்து கொள்ளும் வண்ணம் வழக்கப்படி யணியும் அணியாடைகளை அணிந்து அரியேறென விளங்கினுன். அங்ஙனம் விளங்கிய அவன், விஜய காண்டீப வில்லை நாணேறிட்டு இடியேறென நாணொலி எழுப்பினன். வாயிற் சங்கை வைத்து ஊதிப் பேரொலி செய்தனன்; சிங்கம்போற் கர்ச்சித்துச் சிங்கநாதத்தொனி கிளப்பினன். இவ்வாறுன ஒலியை அருச்சுனன் எழுப்பியதும், அரவக்கொடியோன் பக்கலில் கரிபரிதேர் மிசையிருந்த காவலரும் வீரரும் உருமுகேட்ட நாகமெனக் கலங்கினர்; அருச்சுனனுடைய தேரைச் செலுத்திய சாரதியாகிய உத்தரகுமாரனும் சித்தங்கலங்கித் துரகங்களைத் தூண்டும் செயல் மறந்து அத்தேரின்மீதே சாய்ந்தனன்.

உத்தரன் மீண்டும் செயல் மறந்து வீழ்ந்ததைக்கண்ட விஜயன், அவனுக்குப்பல தைரியத்தைத்தரும் வார்த்தைகளைச் சொல்லித் தேற்றித் தேரை அரவக்கொடியோன் அருகுசெலுத்தும்படி கூறினன். அவன் அருச்சுனன் மொழிகளால் தேறுதலுற்று அசுவங்களைத் தூண்டினுன். அவைகள் காற்றெனப் பறந்து அரவக்கொடியோன் தேருக்கெதிரே போய் நின்றன.

அப்பொழுது அருச்சுனன், வஞ்சகச்சூதாடி வனத்திற்கு ஓட்டிய கொடியோனைக்கண்டு சில வார்த்தைகள்

பேச அவாக்கொண்டான். அங்ஙனம் கொண்ட அவாவுக்கு அரவக்கொடியோன் தேரில் கட்டியிருந்த அசுவங்கள் தலை நிமிர்ந்து அவன் முகத்தைத் தெரியவொட்டாமற் செய்தன; சாரதியும் அவ்வாறேயிருந்தான். அதனால் அருச்சுனன் வில்லில் ஓர் அம்புதொடுத்து அபிமந்திரித்துவிட்டான். அவ்வம்பு அசுவங்களையும் சாரதியையும் போக்கித் துரியோதனன் முகம் நன்றாய்த் தெரியும்படி வெட்டவெளியாக்கியது. அதுகாலை உத்தரகுமாரன் கையிற்பிடித்திருந்த கடிவாளங்களை உலுக்கிப் பின்னுக்கிழுத்துக் குதிரைகளை முன்னுக்குச் செல்ல ஓர் அடியடித்தான். என்றும் அடிபடாத அவைகள் அலறிக்கனைத்துத் துடிதுடித்து எழும்பி அரவக்கொடியோன் தேர்த்தட்டின் மீது கால்களை வைத்தது.

இச்செய்கையினைக்கண்ட துரியோதனன், வேடன் வலையிற் பட்ட விலங்கு விடுபட்டு மீண்டும் அவ்வலையிற் பட்டாற்போல உளங்கலங்கித் தன்னை யறியாமல் மயங்கி, இது என்ன நினைவோ கனவோ என்றேங்கி நின்றனன்.

அங்ஙனம் நின்றதுரியோதனனைப் பார்த்து அருச்சுனன், "ஏ அத்தினபுரி மன்ன! நீ எங்கே அவசரமாகச் செல்கின்றாய். இவ்வளவு அவசரமாக ஓட வேண்டிய காரணம் என்ன? போருக்கென்று புறப்பட்டு இங்ஙனம் நீ புறந்தந்து போவது உனது ஆண்மைக்கு அழகாகுமா? உனக்கு விற்றிறமையில் வல்ல ஆசிரியர் பெருமான்களும், வீடுமர் முதலிய பெரியோர்களும், தம்பியர் தொண்ணூற்றென்பதின்மரும், மாயச் சூதாடும் மாமனும், கீர்த்திவாய்ந்த கர்ணனும், மற்றும் காவலரும், கரிபரிதேர் காலாட்களாகிய

நால் வகைப் படைகளும் துணையாயிருக்க, ஆண்மையற்றவர்கள் போல மெய்விதிர்த்துப் புறங்காட்டி யோடுதல் ஏன்? இங்ஙனம் நீ அத்தினபுரம் போனாலும், அரசவீதியிலுள்ள பெண்மக்கள் உன்னை மதிப்பார்களா? நகையன்றோ ஆடுவார்கள். அரசர்க்கரசனாயுள்ள நீ அமர்க்களம் குறுகிப் பின்பு அகம் வேர்த்து அரிவையரைப் போலப் புறங்காட்டி யோடுவது உனது நிலைமைக்குப் பொருந்துமா? நீ நல்ல வேளையாய் இப்பொழுது என்னிடம் அகப்பட்டாய். இக்கணமே உன்னையும் உனதுசகோதரரையும் எனது விஜயகாண்டீபத்தால் வீழ்த்தி எமபுரம் அனுப்புவேன். ஆயினும் எனது அண்ணனார் வீமன்கூறிய சபதம் பொய்த்துப்போமே என்ற காரணத்தினாலும்,

இரவலர் இளையவர் ஏத்துநாவலர்
விரவிய தூதவர் விருத்தர் வேதியர்
அரிவையர் வெஞ்சமர் அஞ்சுவோர் பெருங்
குரவரென் றிவர்களைக் கோறல் பாவமே

என நீதி கூறுகின்றதாலும் இதுகாலை நான் உன்னை வாளாவிட்டுச் செல்கின்றேன்'' என்று இது போன்ற பற் பல உரைகளைக் கூறினான்.

அவ்வாறு அவன் அரவக் கொடியோனை இகழ்ந்து பேசும் பொழுது, துரோணர் கிருபர் வீடுமர் விதுரர் அசுவத்தாமர் கர்ணன் முதலானவர்கள், அருச்சுனன் தொடுத்த கொடுங்கணைகளுக்கு ஆற்றாது புறங்காட்டி யோடிய வீரர்களாலும், ஆநிரைகளும் ஆயர்களும் விராட நகரத்தை நோக்கிக் களிப்புடன் துள்ளி ஓடுகின்றவற்றாலும் அருச்சுனன் கையில் அரசர்க்கரசன் அகப்பட்டு விழிக்

கின்றானென்பதை அறிந்து, படைகளுடன் விரைந்தோடிச் சென்று அருச்சுனனைச் சூழ்ந்துகொண்டார்கள்.

அப்பொழுது அங்கதேசத்தரசனான கர்ணன் வெகுண்டெழுந்து, தனது தேரை அருச்சுனன் முன்னே கொண்டு போய் நிறுத்தி அவனைப் பார்த்து, "அருச்சுனா! மேகத்தினிடையே தோன்றும் மின்னலுடன் மின்மினிப் பூச்சி வெகுளுவது போல, எவ்வளவுக்கும் பற்றாத நீ எங்கள் அரசர்க்கரசரை இகழ்ந்து பேசுவது எட்டுணையும் பொருந்தாது. நீ அரசபுத்திரனும் ஆண்மையுள்ளவனுமானால் இப்பொழுதே என்னுடன் வந்து மலைவாய்" என்றனன்.

அங்க நாட்டுக் காவலன் அங்ஙனம் கழறலும் அருச்சுனன் சினந்து, ஆனையைவிட்டு அரியின்மீதுசெல்லும் ஆளியைப் போல, அரவக் கொடியோனை விட்டுப் போருக்கு அறை கூவியழைக்கும் அங்கர் குலாதிபனாகிய கர்ணனுக்கு எதிரே தனது தேரைச் செலுத்தி அவன்மீது பலகணைகளை ஏவினன். கர்ணனும் சிலையிற் பல கணைகளைத் தொடுத்துத் தூவினன்; தூவிய அம்புகளை யெல்லாம் அருச்சுனன் எதிரம்பு கோத்துத்தடுத்தனன். அங்கர் கோனும் அங்ஙனமே செய்தனன். இங்ஙனம் அவர்கள் வெற்றி தோல்வியின்றி நெடுநேரம் போர் செய்தனர். கடைசியில் காண்டீபன் ஒரு கணத்தில் மூன்று விறலுடைய கணைகளை வில்லிற் கோத்துச் சுடச் சுட ஒன்றின்பின் ஒன்றாக விட்டனன். அக்கணைகள், கர்ணனது தேரிற் பூட்டிய துரகங்களையும், அத்துரகங்களைத்தூண்டிநடத்திய சாரதியையும், மாய்த்துத் தேரையும் நிலத்தின்மீது குப்புற வீழ்த்தின.

அருக்கன் புதல்வன் அவைகளை யிழந்து சிறிது வருந்திப் பின் வேறொருதேர் மிசை ஏறி விடுவிடெனப் பல

அம்புகளை ஏவினன். அவற்றை யெல்லாம் அருச்சுனன் எதிரம்பு கோத்துத் தகர்த்து ஒழித்து மீண்டும் அவன்மீது பல வெங்கணைகளைத் தொடுத்தனன். அப்பொழுதும் அக் கணைகள் அசுவங்களையும் சாரதியையும் இரதத்தையும் ஒழித்தன. மீளவும் வேறொரு தேரேறி வந்தனன். அது காலையும் அருச்சுனன் அவ்வாறேயாக்கி அங்கர் கோன் அங்கங்களையும் தொளைபடச் செய்தனன். மும்முறையும் இவ்வாருன கர்ணன் இனி இவனுடன் போரிடுதல் கூடாத காரிய மெனக்கொண்டு வேறொரு தேரேறி வருவான் போன்று அமர்க்களம் நீங்கி முதுகு காட்டியோடினன்.

அங்ஙனமோடும் கர்ணனை அசுவத்தாமன் வழி மறித்து, "ஏ கர்ண! 'ஒற்றைத்தேரேறிச் சொத்தை விற் பிடித்து வரும் அருச்சுனனுக்கு எவரும் அஞ்சுதல் வேண்டாம்' என முன் இகழ்ந்துரைத்த நீ இப்பொழுது போருடைந் தோடுதல் போதுமோ ? இப்பொழுதாவது,

"சொல்லலாம் இருந்துழிச் சொன்ன சொற்படி
வெல்லலாம் என்பது விதிக்கும் கூடுமோ?
மல்லல் ஆளியைப்பல வளைந்து கொள்ளினும்
கொல்லலா யிருக்குமோ குஞ்சரங்களால்"

என்பதை யுணர்ந்தாயா?" எனக்கேட்டனன். முன்னம் வாய் வளப்பம் பேசிய அவன் அம்முது மறையாளனிடம் ஏதும் மொழிவதற்கு நாணித் தலைகுனிந்த் வண்ணமே ஓர புறம் ஒதுங்கி இளைப்பாறினன்.

கர்ணன் அவ்வாறு போருடைந்துசென்றதைக்கண்ட துரோணர், அருச்சுனனோடு போர் தொடுப்பதற்குத்தேரை

விரைவிற் செலுத்தி அவனெதிரே கொண்டு வந்து நிறுத்தினர். அருச்சுனன், தனது ஆசிரியர் எதிரே வந்ததும் அன்பு மிக்குடையவனாய் அவர் பாதங்களில் விழுந்து வணக்கஞ்செய்து எழுந்து அவரைநோக்கி “ஆசிரியர் பெருமானே! ஈராறாண்டு அடவியிலும் ஓராண்டு இவ் விராட நகரத்திலும் இருந்து தங்களாசீர்வாத பலத்தால் யாதோரிடுக்கணுமின்றிக் கழித்தோம். நெடும் பகலாய்த் தங்கள் தரிசனமில்லாமல் வாடிய எங்களுக்கு இன்று நல்ல தரிசனம் கிடைத்தது. அதனால் மிக்க மகிழ்வெய்தினேம். ஆயினும் அம்மகிழ்வுக்கு மாறாகத் தாங்கள் இப்பொழுது அமர்க்களம் புகுந்து என்னோடு போர் புரிய வந்திருக்கின்றீர். தேவரீர் அமருக்கு வந்தாலும் அடியேன் தங்களுடன் மலைவது நீதியாமா? ஒன்றும் அறியாத என்னை, ‘வில்லிலும் மற்றும் படைகளிலும் வல்லார் இவனுக்கு இணையானோர் இம் மேதினியில் எவரும் இலர்’ என்று புகழும்படியாக்கிய தெய்வமல்லரோ தாங்கள். தங்களோடு எதிரம்பு கோப்பது நியாயமா? அங்ஙனம் செய்தல் பாவமன்றோ?

> “ஓரெழுத் தொருபொருள் உணரக் கூறிய
> சீரெழுத் தாளரைச் சிதையச் செப்பினோர்
> ஊரிடைச் சுணங்கனாய் ஓர்யுகம் பிறந்து
> பாரிடைக் கிருமியாய்ப் படிவர் மண்ணிலே.”

என்பது நீதியாதலின் தங்களோ டெதிர்த்துப் போர் புரியேன். மற்றும் கிருபர், அசுவத்தாமர், பிதாமகர் வீடுமர், விதுரர் முதலியோரோடும் அமர்மலையேன். இது பாவம்! பாவம்!! நான் இப்பாவச் செய்கைக்கு எவ்வளவும் உடன் படேன். பாவமே ஓர் உருவெடுத்தாற் போன்ற

பாந்தள் கொடியோனாகிய பார்த்திபனோடு அமர் புரிவதல்லால் உங்களோடு எதிர்நில்லேன்'' என்றனன்.

துரோணர், அவ்வாறு கூறிய அருச்சுனனை நோக்கி ''மாணவச்சிரேஷ்ட! நீ உரைத்த மொழிகள் யாவும் உண்மையே; நாங்களெல்லோரும் நாகக்கொடியோனது நல்லுணவைப் பெற்று வாழ்ந்து வருகின்றோமாதலின், அச் செஞ்சோற்றுக் கடன் கழிக்க அவனுக்காக உன்னோடு போர் தொடுக்க வேண்டுவது நியாயமாகவே யிருக்கிறது. நாங்களே உன் மீது போருக்கு முனைந்து வரும்பொழுது அதில் நீ எங்களுக்குச் செய்யும் பிழை யாதுமில்லை. அன்றியும் நீ என்னை விட்டுப் பிரிந்து அம்பிகாபதியின் கண்ணும் கலங்கும்படி போர்புரிந்து அவர் அருளால் பல அஸ்திரங்களைப் பெற்றிருக்கின்றாய்; அமரேந்திரன் பகைவர்களையும் ஒழித்திருக்கின்றாய்; இப்பொழுது நீ என்னை விட வில் வன்மையிற் சிறந்து விளங்குகின்றாய். அத்திறத்தை நான் கண்கூடாகக் கண்டு களிக்க வேண்டும். ஆதலால், நீ என் முன் வில்லை வளைத்து அம்புகளைத் தொடுப்பாய்'' என்றனர்.

குருமொழி தட்டாக் குருகுல வேந்தன், குருவின் மொழிப்படி வில்லை நாணேறிட்டுப் பலபகழிகளைத் தொடுத்தனன். அவரும் பல அம்புகளைச் சிலையிற் கோத்து விட்டனர். அவர்கள் இங்ஙனம் ஒருவர் மாறி ஒருவர் விட்ட அம்புகள், கோடிக்கணக்குக்கு மேலும் பெருகிச் சூல் கொண்ட மேகம் கால் கொண்டு பொழிந்த மழையென நிகர்த்தன. அவர்கள் ஒருவருக்கொழிவர் விடுத்த பகழிகள் யாவும் எதிர் எதிர் கோத்தனவேயன்றி ஒருவர்மீதும் பட்டில. ஆசிரியர் தொடுக்கும் எல்லா அம்புகளையும் அருச்

சுனன் மாற்றுக் கணைகளால் மறித் தொழிக்கின்ருன். வில்லாசிரியர் கைசோர்ந்து, நாம் 'பண்டு பயிற்றுவித்துக் கண்ட கூற்றிற்குப் பதின்மடங்காக விளங்குகின்ருன் விஜயன். இவனிடமிருந்து இனி நாம் கற்க வேண்டிய வில் வித்தைகள் பல விருக்கின்றன' என்று எண்ணினுர். அருச்சுனன் முதற்கணை அவரை வணங்கியதற்கதிசயித்தார். அச்சமயத்தில் அருச்சுனன் தொடுத்த அம்புகள் ஆசிரியர் ஏறியிருந்த தேரையும் அதிற்பூட்டியிருந்த கலிமாக்களையும், அவ்விரதத்தின்மேல் பறந்த வேதக்கொடியையும், சாரதியையும் அறுத்தெறிந்தன. அவற்ருேடு நில்லாமல் அவர் கையினுல் பற்றியிருந்த வில்லின் நாணையும் அறுத்தன. அதினுல் அவ்வந்தணர் மீண்டும் அருச்சுனனேடு மலைவதற்குநாணி முதுகுகாட்டி அமர்க்களத்தினின்று நீங்கினுர்.

அவர் அங்ஙனம் நீங்குதலைக்கண்ட அவரது குமாரன் அசுவத்தாமன், தந்தை போரழிந்துபோனமைக்கு அகம் வெம்பி அருச்சுனனேடு எதிர்த்தான். அதற்குப்பின் அவ்விருவரும் சிறிது நேரம் வெற்றி தோல்வி யின்றிப் போர்புரிந்தனர். கடைசியில் அசுவத்தாமன் ஓர் அம்பை விட்டு அருச்சுனனது வில்லின் நாணறும்படிச் செய்தனன். அருச்சுனன் அச்சாபத்தை விடுத்து வேருெரு சாபமெடுத்துச் சாதாரண பகழிக்கெல்லாம் இவன் பின்வாங்கானென்றெண்ணிச் சந்திரமௌலி தந்த சாயகத்தைத் தொடுத்தனன். அவ்வெம்பகழிக்காற்ருத அசுவத்தாமன் 'இனி என் செய்வேன்' என்றுகூறிக்கொண்டு புறமுதுகிட்டான்.

கிருபர், அசுவத்தாமன் அருச்சுனனேடு போர் புரிவதற்கு இயலாது புறமிட்டதைக் கண்டு, தான் போய்

அவனேடெதிர்த்தார். அவரையும் அருச்சுனன் அடலாண்மைகொண்டு அசுவத்தாமன் சென்ற வழியே செல்லச் செய்தனன். அவருக்குப் பின் அநேக அரசர்கள் வந்து எதிர்த்தனர். அவர்களையும் அங்ஙனமே செய்து ஒற்றையாழிப் பரிதியே போல உச்சநிலை யடைந்தான்.

பார்த்தன், பலமன்னர்களையும் விற்போர்வன்மையிற் சிறந்த ஆசிரியர்களையும், மற்றும் வீரர்களையும் புறமிட்டோடச் செய்து கொற்றம் பெற்று நின்றதைக்கண்ட, வீடுமர் விதுரர் சுயோதனன் சிந்துராயன் முதலியோரும், மற்றும் பல அரசிளங்கோக்களும் நாற்றிசையும் பரவி, அவனைச் சூழ்ந்து ஆயிரக்கணக்கான அம்புகளை அவன்மீது எய்தனர். அவையெல்லாம் தன்மேல் தைக்காமல், கௌரிபங்காளனது நெற்றிக் கண்ணையுங் காணும்படி கணைகள் ஏவிய காண்டீபன் விடுத்த கணைகளால் மோதுண்டு,

"குடதிசை மகவான் வாளி, குணதிசை வருணன் வாளி;
வடதிசை மறலி வாளி, தென்றிசை மதியின் வாளி,
அடலுற இமைப்பின் ஏவி, அவரவர் மார்பும் தோளும்,
படருறப் படைகள் நீறு படபடப் பரப்பினனே"

என்னுமாறு போயது. அருச்சுனன் எதிரம்பு கோத்துச் சுயோதனன் படையிலுள்ளோர் ஏவிய கணைகளை யெல்லாம் தகர்த்தெறிந்தபின், மோகனம் என்னும் கணையொன்றை ஏவி அப்படையிலுள்ளோர் யாவரும் மயங்கி, முடிகள் மண்ணிற்பட வீழும்படி செய்தனன். அவர்கள் யாவரும் மாய்ந்தார் போல மணிமுடி நிலத்திற் பட வீழ்ந்தனர்.

வீரர்களெல்லோரும் மயங்கி வீழ்ந்தபின், விஜயன் உத்தரகுமாரனைப் பார்த்து "அரசிளங்குமர! உன் தங்கை நீ புறப்படும்பொழுது சொல்லியது கவனத்தில் இருக்கிறதா?" என வினவினன். உத்தரகுமாரன் இவ்வினவைக்கேட்டு மனந்திடுக்கிட்டு 'நாம் போருக்குப் புறப்படும் பொழுது இவரைப் பேடியென்று இகழ்ந்திருக்கின்றோம். அதையே மனத்திற்கொண்டு தங்கை ஏதாவது இகழ்ந்து கூறினளோ? அல்லது கைகொட்டிச் சிரித்தனளோ?' என்று ஐயங்கொண்டு பயந்து ஒன்றுஞ் சொல்லக்கூடாதவனாய் விழித்தான். இக்குறிப்பையறிந்த விஜயன் உத்தரனைப்பார்த்து "உத்தரகுமர! உனக்குக் கவனமில்லையோ? உனது தங்கை வைத்து விளையாடும் பதுமைகளுக்கு அணிவதற்காகப் பகைவரது அணியாடைகளைக் கொண்டு வரச் சொன்னதை ஞாபகப்படுத்திப்பார்" என வும், உத்தரகுமாரன் "ஆம்! ஆம்! பெரும் போரினிடை அகப்பட்டதால் நான் மறந்துவிட்டேன்" என்றனன்.

அதற்குப் பின் அருச்சுனன் மாய்ந்தாற்போல வீழ்ந்து கிடக்கும் பகைவர் இடத்திற்குச்சென்று பல அரசர்களுடைய பொற் சரிகையாலான மேலுத்தரீய ஆடைகளையும் தலையிற்கட்டிய தலைப்பாகைத் துணிகளையும், மற்றும் சிறந்த ஆபரணங்களையும் பொறுக்கியெடுத்து மூட்டை கட்டிக்கொண்டு தனது தேருக்குவந்து சேர்ந்தனன்.

அவ்வாறு அச்சமில்லாமல் அருச்சுனன் பகைவர் அணிவகுப்பிலே நுழைந்து துணிகளைக் கொண்டுவந்த மூன்றேமுக்கால் நாழிகைக்கெல்லாம், விஜயன் மோகனாஸ்திரத்தால் வில் வாள் வேல் முதலிய படைகளைத்துறந்து வெறுங்கையராய்த் தளர்ந்து வாடி முடிசாய்ந்த மன்னரும்,

மற்றும் வீரரும் நஞ்சொழிந்த நரரேபோல் மயக்கந் தெளிந்து கண்களை விழித்துப்பார்த்தனர் அப்பொழுது தான் அவர்களுக்குத் தங்கள் நினைவுவந்தது. அதுவரையில் கள்ளுண்டாரைப் போன்று மயங்கிக் கிடந்தனர். மயக்கந் தெளிந்தபின் அவர்கள் அருச்சுனனது சாமர்த்தியத்தை வியந்து, "இது இந்திரஜால வித்தையோ, அலது தந்திரஜால வித்தையோ" எனப்புகழ்ந்து "இனி அச்சூரனுடன் போர் புரிவ தெங்ஙனம்" எனக் கலக்கங்கொண்டிருந்தனர்.

அப்பொழுது வீடுமர் அவர்களது நினைவைக் குறிப்பாலறிந்து அவர்களை நோக்கி "அரசபுத்திரர்களே! வீரர்களே! இனி அருச்சுனனுடன் போர்புரிவதென்னும் எண்ணத்தை விட்டு விடுங்கள்; அவனை எதிர்க்கத் திரிமூர்த்திகளாலும் ஆகாது. போர்புரியும் திடமும் சூழ்ச்சியும் அருச்சுனனுக் கன்றி வேறொருவருக்கும் வராது. அவனை வெற்றிகொள்வோம் என்ற வீண் எண்ணத்தை இன்றோடே விடுங்கள். கிரக சார பலத்தால் அறிவிழந்து அவனோடு எதிர்ப்பீர்களானால் நிச்சயம் நீங்கள் உயிரிழப்பீர்கள். இதிலொன்றும் ஐயமில்லை. இதனை நீங்கள் ஐயமில்லாமலே இப்பொழுது அனுபவத்தில் கண்டறிந்திருக்கிறீர்கள். அஃதெங்ஙனமெனில், அருச்சுனன் சிறிது நாழிகைக்கு முன் ஏவிய மோகனக் கணையால் நீங்களெல்லோரும் உயிரிழந்தீர் போல ஆயினீர்களன்றோ? அப்பொழுது அவன் உங்களிடத்திலிருந்து உங்கள் மேலுத்தரீயத்தையும், தலைப்பாகையையும் கொண்டுபோனதை நீங்கள் அறிந்தீர்களா? தலைப்பாகையைக் கொண்டுபோனவன் உங்கள் தலையைக்கொண்டுபோவது கடினமா? இப்பொழுது உங்கள் தலையைத் தடவிப்பாருங்கள்" என்றார்.

அங்ஙனமே எல்லோரும் தங்கள் தங்கள் தலையைத் தடவிப் பார்த்ததுமல்லாமல், ஒருவர் தலையை ஒருவர் பார்த்து, "உன் தலைத்துணி எங்கே? என் தலைப்பாகை எங்கே? உன் உத்ரீயமெங்கே? என் மேலாடை எங்கே?" என்று கூறிக்கொண்டு "தலைத்துணியைக் கொண்டுபோனவன் தலையைத் துணித்துக்கொண்டு போவது வெகு கடினமா? மிகச்சுலபத்தில் முடித்துக் கொள்ளலாமே. அந்த மட்டும் சிரத்தைத் தறிக்காமற் போனது நமது தாய் தந்தையா செய்த புண்ணியமும், மனைவி மக்கள் செய்த நல்வினையுமாகும்" என்று கூறிக்கொண்டு வீடுமரைப் பார்த்து "வித்தகச் சிகாமணியே! தேவரீர் உரைத்ததற்கு வேறுபாடு ஒன்றுமில்லை. எல்லாம் சரியாகவே யிருக்கின்றது. இனி நாம் செய்யுங்காரியம் யாது? அதனைச் சூழ்ந்து சொல்லுங்கள் அங்ஙனமே செய்யக்காத்திருக்கிறோம்" என்றனர்.

அதற்கு வீடுமர், "நமக்கு அருச்சுனன் உயிர்ப்பிச்சை கொடுத்தானென்று அவனை வாழ்த்தி நாம் அத்தினபுரஞ் செல்வதல்லது வேறு காரியம் என்ன இருக்கிறது" என்றார். எல்லோரும் அதுவே சிறந்ததெனக் கொண்டு அருச்சுனனால் அழிந்தொழிந்துபோனவைகள் தவிர எஞ்சியமற்றைப் படைகளுடன் அத்தினபுரம் நோக்கி நடக்கலானார்கள்.

அப்பொழுது அருச்சுனன், அத்தின புரத்தை நோக்கிச் செல்லும் அரவக்கொடியோனை நோக்கி "ஏ வணங்கா முடி வேந்தனே! ஏ துரியோதனனே! சொன்னசொல் தவறி யொழுகும் மன்னனே! உனக்கு மாயச்சூதாடக்கற்ற மாமன் சகுனி யிருக்கின்றான், பதிவிரதைகளுக்கு அபராதம் இழைக்கும் பதிதனாகிய துற்சாதனனிருக்கின்றான். வாய்ப்பறையடிக்கும் தேர்ப்பாகன் வளர்ப்புப்பிள்ளை

கர்ணனிருக்கின்றான். உனக்கும் போதுமான வன்மையும், சத்திய நெறி தவறிப் பேசுஞ் சாமர்த்தியமுமிருக்கிறது. அத்துணைப் பலமும் அவலமாகும்படி ஏன் ஓடுகின்றாய்! பண்டு அத்தினபுரத்து அரசவையில், இரத்தின முடிதரித்த உன் தலையாட, காதில் குழையாட, வாயிலடங்கிய நாவாட, மார்பில் மதாணி பதக்கமாட, கட்டுரைகள் பேசி வாதாட சொக்கட்டாணுட்டத்தில் எங்களை ஜெயித்துக் காட்டி லோட்டிய நீ, இப்பொழுது வெற்றிபெறுமல் இறைக்க விறைக்க ஏன் ஓடுகின்றாய். போரில் புறமுதுகு காட்டி ஓம்வதிலும் சாவது மேலல்லவா? போரில் மாண்டால் வீர சுவர்க்கம் கிடைக்குமே. அதை விட்டு அத்தினபுரத்து அரசமாதர்கள் நகைக்க நீ அங்கே செல்வது நன்மை யாமா? அரவக்கொடியோய்! நீ இப்பொழுது ஆவியிழக் காமற் செல்வது உனது ஆண்மையாலென்று கருதாதே. அது எனது அண்ணனுர் வீமசேனருடைய வஞ்சினம் முடிக்கும் காரணத்தாலென்று கருது. வாளா கூறுகிறே னென்று எண்ணுதே. வேண்டுமாயின் பரீட்சார்த்தமாக உனது சிரத்தை மாத்திரம் விட்டு, அதில் அணிந்திருக்கும் இரத்தினமழுத்திய கிரீடத்தைமாத்திரம் போக்குகின்றேன் பார்" என்று கூறி ஓர் அம்புவிட்டு அதனைக் குறி தவறு மல் இரண்டுகாத தூரத்துக்கப்பால் பெயர்த்தெறிந்தனன்.

துரியோதனன் முடியிழந்து வெறுந்தலையனுய் அருச்சுனன் வீரத்தையும் தீரத்தையும் மனத்திற்குள் வியந்து, அவன் முன் ஏதும் பேசுவதற்கு நாணி முகங்கோணி ஊர் மீது நாட்டம் வைத்து ஓடிச்சென்றான்.

அவனும் அவன் துணைவர்களும் அத்தினபுரியின் திசையில் நாட்டம் வைத்துச் சென்றதும் அருச்சுனன்

தேரைத்திருப்பிக் காளிகோயில் சென்று அம்பருத்தூணி யையும் வில்லையும் பண்டுபோல் வன்னிமரத்தில் பொதிந்து வைத்துப் பேடியுருவம் தாங்கி உத்தரகுமாரனைப் பார்த்து, "குமர! நீ தேர்த்தட்டிலேறி அமர்வாய்; நான் பழைய படி சாரதித் தொழிலை மேற்கொள்ளுகிறேன்" என்றான்.

உத்தரகுமாரன், அம்மொழிகேட்டு அருச்சுனனை நோக்கி "அண்ணலே! தாங்கள் என்னைச் சோதித்தல் கூடுமோ? தங்கள் மகிமையறியாமல் நான் எனது தாயின் முன்னம் தங்களைப் பேடி யென்று இகழ்ந்து கூறியதை மனதில் வைத்துக்கொண்டு இப்பொழுது என்னைப் பரி சோதிக்கிறீர்களோ? சிறியேன் செய்த இப்பிழையை மன் னித்தருளல் வேண்டும். எவ்வளவுக்கும் பற்றாத என்னைத் தலைமை வகிக்கும்படி கூறுவதைவிட்டு வேறு கூறுங்கள்" என்று பணிவுடன் வேண்டிக்கொண்டான்.

அவன் அங்ஙனம் விண்ணப்பிக்க, அருச்சுனன் அவ னைப் பார்த்து "அரசபுத்திர! நீ கருதுகிறபடி நான் உன்னை ஒன்றும் பரிசோதிக்கவில்லை. நான் அருச்சுனன் என்ப தைப் பேடியுருவத்துட னிருந்தபோது நீ எங்ஙனம் அறி தல்கூடும். அறியாமற் கூறியது பிழையல்ல. அதற்காக நீ வருந்தவேண்டாம். முன்னமே உனக்கு எங்கள் சரித்திரத் தைக் கூறியுள்ளேனல்லவா? எனது சகோதரர்கள் யாவ ரும் உருமாறியிருக்கும் பொழுது நான் மாத்திரம் முன்ன தாக உண்மைச் சொரூபத்துடன் தோன்றுவது முறையா காது. நாங்களெல்லோரும் இன்னும் சிறிது நேரத்திற்குள் நிசரூபத்தை யடைவோம், அப்பொழுது நீ எங்களிடம் நடந்து கொள்ளும் முறைமைப்படி நடந்துகொள்ளலாம்.

இப்பொழுது நான் கூறுகிறபடி இரதத்தின் மேற்ருனத்தில் கூசாது நீ அமருவாய்'' என்றனன்.

அரசபுத்திரன் அம்மொழியைக் கடக்கமாட்டாதவனுய் நாயக ஸ்தானத்திலேறி அமர்ந்ததும் அருச்சுன பேடி கடிவாளத்தைப் பிடித்துப் பரிகளைக் கடுகத் தூண்டி விராட நகரத்து வடமேற்குத் திசையிலிருந்த தண்ணிய பொழிலிடை வந்து அங்கே சிறிதுநேரம் உத்தரகுமாரனுடன் இளைப்பாறி யிருந்தான்.

---

## அத்தியாயம் 17.

### கோபம் பாவத்திற் கஞ்சாது.

விஜயனும் விராட நகரத்து வேந்தன் புத்திரனும் பச்சென்று தழைத்த தருக்கள் சூழ்ந்த பொழிலினிடைத் தங்கிப் பூர்வோத்திர வரலாற்றைக் குறித்துச் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில், விராடநகரத்து ஒற்றர்கள் அரசபுத்திரனின் போரின் செய்தியறிய அவ்வழியே வந்தனர். வந்தவர்கள், அரசனது புத்திரன் உத்தர குமாரனும், பிருகந்நளைப் பேடியும் சோலையிற்றங்கி யிருப்பதைக் கண்டு, அங்கே யோடிவந்து இருவரையும் பார்த்து, "போரின் முடிவ்யாதாயிற்று?'' என அவசரமாக வினவினர்.

அவருக்கு அருச்சுனன், "ஒற்றர்காள்! பேடியைச் சாரதியாகக் கொண்டு தேரேறிச் சென்ற பிள்ளையும் பெரும்போர் வென்று கோடித் தேரை முதுகு கண்டு கோநிரை மீட்டான் என்று ஓட்டமாயோடி உங்கள் அரசற்குத் தெரிவியுங்கள்'' என்று விடையிறுத்தனுப்பினன்.

அவர்கள் அம்மங்கல மொழி கேட்டு உளம் பொங்கி, அரசற்கு இச் சுப செய்திகூற, ஓட்டமும் பெருநடையுமாய் நகரத்தை நோக்கி ஓடி வந்தார்கள்.

விராட வேந்தன், தனது குமாரன் உத்தரதிசைப் போருக்கு எழுவதன் முற்பகலே தக்கிண திசைசென்று திரிகர்த்தனோ டெதிர்த்துக் கொற்றம் பெற்று, அத்தென் றிசைப் பக்கமே கங்குற் பொழுதும் கண்படை யின்றிக் கழித்தனன் என்று முன்னம் கூறியுள்ளோ மல்லவா? அவ்வேந்தன் கங்குல் கழிந்ததும் கதிரவன் குணதிசையில் உதயமானதும் ஜெயக்கொடி துலங்கத் தன் படை வீரர்களுடன் தன் அரண்மனை வந்து நண்ணினன்.

அரசன் அரண்மனை யடைந்ததும், அவன் மனைவி சுதேட்டிணை எதிர் கொண்டழைத்துச் சென்று, போரின் செய்தியை வினவி யறிந்து, பின்பு தன் பதியை நோக்கிப் "போரேறே! தாங்கள் தக்கிண திசை நிரை மீட்சியின் பொருட்டுச் சென்றதும், 'கௌரவ சேனைகள் உத்தர திக்கு வந்து வளம் பொருந்திய வயல்களையுஞ், சோலைகளையும் அழித்து ஆநிரைகளையும் மடக்கிச் சென்றன, என்று கோபாலர்கள் கூச்சலிட்டனர். அக்கூச்சலைக் கேட்டு நான் மனம் வருந்தி யிருக்கின்ற காலத்து, நமது சிறுவன் உத்தர குமாரன் என் முன் வந்து 'நான் அக் கௌரவ சேனையை அழிக்கின்றேன். தாங்கள் மனக்கவலை கொள்ள வேண்டாம்' என்று கூறிச் சிறந்த சாரதி யொருவனில்லையேயென வாடினன். அப்பொழுது விரதசாரணி, பிருகந்நளைப்பேடி சாரத்தியஞ் செய்வதில் வல்லவளென்று கூறி அத் தொழிலுக்கு அவளை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தினள். நமது குமா

ரனே வேண்டா வெறுப்பாய் அப்பேடியைச் சாரதியாகக் கொண்டு தேரேறி உத்தர திசை சென்றான். சென்றவன் செய்தி இது காறும் ஒன்றும் தெரியவில்லை'' என்றனள்.

மன்னன் செவியில் இச்செய்தி புகுந்ததும், அவன் மதி கலங்கி மண் மீதிற் சாய்ந்து, "பால் மணம் மாறாத பாலனே! நீ வேல் கொண்டு கௌரவ விறல் வேந்தரை வெல்வ தெங்ஙனம்? இந் நேரம் என் அருமந்த செல்வா! நீ என்னானையோ? இனி யென்செய்குவேன்!'' என்று கூறிக் கொண்டு புத்திரசோகத்தால் மூர்ச்சித்தனன்.

அவன் அங்ஙனம் மூர்ச்சித்தலும், அரசனுடைய பரி ஜனங்கள் அவனை வாரி யெடுத்து முகத்தில் தண்பனிநீர் தெளித்து மூர்ச்சை தெளிவித்தனர். அரசன் அவ்வுபசரணை யால் ஒருவாறு தேறிய போது கங்கபட்டரென்னும் அந்த ணாளர் அவனைக் கிட்டி "அரசனே! தேரூர்ந்து சென்றவள் அந்தப் பிருகந்நளைப் பேடியேயாகில் நமது இளங்கோ திண்ணமாய் வெற்றி பெற்றே வருவானென்று எண்ணுங் கள்'' என்று உறுதி கூறித் தேற்றினர்.

வேந்தன் அவ்வேதியர் மொழியால் மனந்தேறியிருக் கின்ற காலத்து, அமுததாரை செவிகளிற் செறிந்த தென்னுமாறு, ஒற்றர் ஓடி வந்து "வேந்தர் பெரு மானே! நமது இளங்கோ ஒற்றைத் தேரேறி உரகக் கொடியோன் உள்ளிட்ட கௌரவ வீரர்களையும், மற்றும் மன்னர்களையும் புறமுதுகு காண வெற்றிபெற்று, கோநிரை களையும் மீட்டார். கொற்றம் நமதே? கொற்றம் நமதே''

எனக் கூறினர். அரசன், பின் பனிக்காலத்தில் பட்டமரங் கள் வசந்தம் வந்ததும் தளிர்த்துத் துளிர்த்துப் பூத்துக் காய்த்துக் கனியுமாறுபோலக் களிப்பெய்தி, நால்வகைச் சேனைகளுடன் தன் குமாரனை எதிர்கொள்ளும் படியும், நகரத்தை நன்கு அலங்கரிக்கும் படியும் அறிவித்தனன்.

அமமைச்சர் முதலானோர் அரசனாணைப்படியே, பூழி களடக்கிச் செம்பொற் பூரண கும்பம்வைத்து, வாழையுங் கமுகும் நாட்டி, மணியொளித தீப மேற்றிச் சூழ வன் பதாகை கட்டித் தோரணம் பலவும் நாட்டி, ஏழுயர் மாட மூதூர் எங்கணும் சோதித்தார். நகரம் நாகலோகமே யென்னும்படி எழில் பெற்று விளங்கியதும் அரசனொழிய மற்றையோரெல்லோரும் மன்னன் குமாரனை எதிர்கொண் டழைக்கச் சென்றனர். நகரமுழுதும் கொண்டாட்டமா யும் விழாக் கூட்டமாயுமிருந்தது.

விராடவேந்தன். தனது குமாரன்வலிமைபெற்றகௌர வரைப்புறங்காண வெற்றிபெற்றானென்ற உவகை மேலீட் டினால், கங்கபட்டரென்னும் அந்தணரையழைத்து, "அந்த ணர் பெரும! உமது ஆசீர்வாத வாக்கின்படி எமது அருமைப்புதல்வன் கொற்றம் பெற்று வருகின்றானென ஒற்றர் வந்து உரைத்தனர். அச்செல்வன் வெற்றிக்கோலத் துடன் இவண் வருகிறவரையில் நாமிருவரும் சொக்கட்டா னுடுவோம் வாரும்" என்றான். தரும பூபதியாகிய அந்த ணரும், "அங்ஙனமே ஆடலா" மென இசைந்தனர்.

அந்தணர் இசைந்ததும், அரசன் அவ்வாட்டத்திற் குரிய பொருளனைத்தும் கொணர்ந்து, கட்டம் அமைந்

துள்ள பலகையை இருவருக்கிடையில் வைத்துக்காய்களைப் பரப்பிப் பாய்ச்சிகையை உருட்டினான், அந்தணர் வேடம் பூண்டொழுகும் தரும பூபதி இவ்வாட்டத்தில் கைவரப் பெற்றவராதலின் பாய்ச்சிகையை எடுத்து நல்ல பந்தயங்கள் போட்டுப் பல ஆட்டங்களையாடித் தானே வெற்றி கொண்டார்; இவ்வாறு அவர் அடுத்துப் பலவெற்றி கொள்ளும்பொழுது அரசன் பாய்ச்சிகையை எடுத்து, "அந்தணரே! எனது குமாரன் போருக் காற்றாது புறமுதுகுகாட்டியோடிய கௌரவ வீரர்களைப் போல, உம்மை இந்த ஆட்டத்தில் விட்டு அடித்து வெற்றி கொள்ளுகின்றேன் பாரும்" என்று கங்கபட்டரைப் பார்த்துக் கூறி உருட்டினான். அரசன் அங்ஙனம் கூறி மனப்பால் குடிப்பதைக்கண்டு நகைத்து, அவனை நோக்கி, "அரசே! பேடியாகிய இரத சாரதியானவள் வெற்றிகொண்டு வருகின்ற பெருமையைப்போல வெற்றி கொள்வேனென்று கூறிப் பாய்ச்சிகையையுருட்டினால் அது மிகப் பொருத்தமாயிருக்கும். அதைத் தவிர்த்து, உத்தர குமாரன் வெற்றிபோல் என்று கூறுவது எவ்வளவும் பொருத்தமாயிராது. அஃதேனென்பீர்களோ, பிருகந்நளை யென்னும் பேடி, காண்டாவனமெரித்த காலைக்குத் தேரூர்ந்து, தேவர்களுக்குப் பகைவரான அசுரர்களை வென்று, தேவசகாய விஜயையென்று சிறப்புப் பெயர் பெற்றிருக்கின்றாள். விறலும் திறலும் படைத்த அப்பேடியே இவ்வெற்றிக்குக் காரணமுடையவளாயிருக்கவேண்டும். உமது சிறுவன் வெற்றிவேந்தர் குழுவிய அப்போருக்கு ஆற்றுவான் அல்லன்" என்றார்.

அரசன் அதுகேட்டு மனம் பொறாமல் அவ்வந்தணரை நோக்கிப் "பூசுரரே! நீரென்ன அறியாமற் பேசுகிறீர்.

கோடானுகோடி குருசேனைகளைப் பேடியை இரதசாரதியாகப் பெற்ற என் புதல்வனே, ஓடியோடி யடித்து வெற்றி பெற்று நிரைகளை மீட்டானென்று உமது கண் முன்னேயே தூதர் வந்து கூறியிருக்கும்பொழுது, நீர் அந்தப் பேடியைப் புகழ்ந்து பேசுகின்றீர். இஃதென்ன பிடிவாதம். உண்மை மொழியையே இவ்வளவு திண்ணமாய் மறுத்துரைத்தால் கண்ணிற் காணுதவைகளையும், காதிற் கேட்டறியாதவைகளையும் எத்துணைக் கற்பனை செய்து உரைக்கமாட்டீர்! மேலும் இத்தகைய அரசவையில்,

> புன்னவை யான மாற்றம் புகன்றனர் எனினும் கேட்டாங்
> இன்னவை நன்று நன்றென் றிதம்பட மொழிவ தல்லான்
> மன்னவை யிருந்து நாளும் வழிபடும் மாந்தர் மன்னர்
> சொன்னவை மறுத்து மாறு சொல்வரோ? சுருதி வல்லார்

நீர் பேடிக்கும் கிரீடிக்கும் பேதமறியாமல் நன்ருய்ப் பேசுகின்றீர். உமது கட்டுரையை நிறுத்தும்! என்ருன்.

எனினும், அந்தணர் அரசன் கூறுவதற்கு விட்டுக் கொடுக்காமல் மீண்டும் அவனை நோக்கி, “முடியுடை வேந்தே! கொடைக்கரத்தஞன கர்ணனையும், படைக் கொருவரெனச் சிறப்புப் பெயர் தாங்கிய வீடுமரையும், வில்வீரர் விதுரரையும், தனுர்வேத ஆசிரியர் துரோணரையும், நீதினெறியோர்ந்த கிருபரையும், வித்துவ மகத்துவமுடைய அசுவத்தாமனையும் வெல்ல நினது புத்திரன் வல்லனே? சற்றுப்பொறு; இப்பொழுது வந்து சொல்லப் போகிருர்கள்; அப்பால் நீர் எண்ணியது தப்பென்று உமது மதியே உமக்கு ஒப்பச் சொல்லும்; இப்போது

நான் என்ன உரைப்பினும் அது உனக்குத் தப்பாகத்தான் தோன்றும். உண்மை வெளிப்படும்போது பேடியின் பெருமையை நன்கு உணரப்போகின்றாய்'' என்றார்.

தருமபூபதி பிடிவாதமாய்ப் பேடியையே புகழ்ந்து பேசித் தனது குமாரனை அவ்வாறு மகிழ்ந்து பேசாததற்காக மன்னன் அவர்மீது சினங்கொண்டு அவரைப்பார்த்து, "ஓ வேதியரே! வில்லாண்மையிற் சிறந்த எனது குமாரன் விறலுந் திறலும் படைத்த கௌரவரை விட்டி, மேட்டிமையாக வெற்றிபெற்று மாட்டையும் மடக்கி ஓட்டி வருகின்றானெனத் தூதர்கள் சற்று முன் சொன்னதையும் மறந்து, 'மண்ணோரம் பேசேல்' என்னும் நீதியையும் துறந்து, என்னிடஞ் சேவிக்கும் இயற்கையையும் ஓராமல் நீர் என்னை வாதிட்டு முரண்படப் பேசலாமோ? ஆண்மை யில்லாத பேடியைப் புகழும் நீர் எனது ஆண் மகனைப் புகழ்ந்து பேசுதல் கூடாதோ? இத்துணைப் பொறாமை உமக்கு எழுந்ததன் காரணமென்ன?'' என்று நாகஞ் சீறுவதைப்போல் சீறிக் கூறி, கையிலிருந்த பாச்சிகையை நிலத்தில் மோதியடித்துக் கோப நகை கொண்டு நின்றனன்.

அரசன் அவ்வாறு அதிக கோபத்தால் விட்டெறிந்த அக்கவறுகள் பூமிமேற்பட்டுத் தெறித்து, நேரிலிருந்த கங்கபட்டர் நெற்றியிலிடித்துக் குங்குமக் குழம்பாற் படிந்த திலகம் போலக் காயப்படுத்திக் குன்றிமணி இரத்தம் குபீரென்று கொப்பளிக்கச் செய்தன.

அப்பொழுது அரசவையில் உத்தரகுமாரனது க்ஷேமவிஷயத்தைக் குறித்து என்ன பேசுகிறார்கள்! போர்முனையிலிருந்து ஒற்றர்கள் வந்து யாது செய்தி கூறுகின்றனர்!

என்பதை யறிய சுதேட்டிணை விரதசாரணியை ஏவியிருந்த னள். விரதசாரணி அவ்வப்பொழுது சபையில் பேசும் விஷயங்களை யறிந்து தெரிவித்துக்கொண் டிருக்கும் பொழுது, வேதியர் வடிவம் தாங்கிய தனது பதியாகிய தருமபூபதிக்கு அரசனுல் ஏற்பட்ட நெற்றியின் காயத்தைக் கண்டு மனம் பதைத்துக் கண்ணீர் விட்டுக் காயத்திலிருந்து இரத்தம் வெளியாகி நிலத்திற் சிந்துமுன் தான் முந்தி, தனது முன்றுனையால் அதை மாற்றினள்.

அரசன் அதுகண்டு அகங்குழைந்து "ஆ! ஆ!! என்ன தவறு செய்துவிட்டோம். கோபம் பாபத்திற்கு அஞ்சாது என்பதை இப்பொழுதே யுணர்ந்தோம். பொல்லாக் கோபத்தினுல் பூசிக்கப்படும் பூசுரர்க்குக் கல்லாத கசடர் கள் இழைக்கும் பிழையை இழைத்து விட்டோமே. எண்ணமும் செயலும் வேருய் என்செய்தோம்! என்செய் தோம்!!" என்று தன்னை நொந்து கோபம் பாவமெனா வெறுத்து அவர் காயத்துக்குவேண்டிய சிகிச்சை செய் வித்துக்கொண்டு மனம் வருந்தினன்.

ஆதவனும், அறமகனுக்கு நேர்ந்த துன்பத்தையும், கொடுஞ்சினத்தாற் குற்றம் செய்து வருந்தும் மன்னனது மனேதுக்கத்தையுங்கண்டு ஆற்றுதவன் போலச் சரே லென்று அத்தகிரி போய் மறைந்தான்.

## அத்தியாயம் 18.

### உரு வெளிப்பாடு.

அதிப்படி யிருக்க, உத்தரகுமாரனை எதிர்கொண் டழைக்கச்சென்ற நால்வகைப் படைகள் சூழ்ந்த மந் திரி முதலியோரும், மற்றும் பெரியோரும் பலவகை மங்கல

வாத்திய முழக்குடனும், வரிசைகளுடனும், பொழிலுக்குச் சென்று இளங்கோவைக்கண்டு வாகைமாலை சூடி வாழ்த்தி நகருக்கு அழைத்தனர். அரசபுத்திரன், 'வெற்றியும் வீரமும் விஜயசிகாமணிக்கு உரித்தாயிருக்க, நாம் அதனையுடையவன்போல்நடித்துவாகைசூடும் சிறப்பைப்பெறுகிறோமே' என்ற மனக்கூச்சத்துடன் எதிர்கொண்டழைக்க வந்தவர் செய்த சிறப்புக்கள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு அவர்களுடன் நகரத்துள் பிரவேசித்தனன்.

உத்தரகுமாரன் இங்ஙனம் வாகைசூடி வெற்றிக் கோலத்துடன் வீதிவலம் வருகின்றதைக்கண்டு அந்தண மாதர் முதலாகவுள்ள மங்கலப் பெண்கள் அனைவரும் உத்தர குமாரனுக்கு ஆலஞ்சுற்றித் திருஷ்டிகழித்து 'அரசிளங்கோ வாழ்க' என வாழ்த்துக்கூறினர். நாட்டியக் கனிகையர் பரதநாட்டிய மாடினார். இத்தகைய சிறப்புடன் விராட குமாரன் சந்திரால வட்டக்குடை மேல்நிழற்ற வெண்சாமரை அருகிரட்ட அரண்மனையைக் குறுகினன்.

அரசபுத்திரன் அரண்மனையைக் குறுகுதலும், அரசன், அயில் வேல் விடுக்கும் மயில்வாகனரான ஆறுமுகக் கடவுளைக்கண்டு மகிழும் அரவாபரணனைப்போல ஆனந்தங் கொண்டு புத்திரனை எதிர்கொண்டு தேரேறித்தழுவி உச்சிமோந்து உளங்களித்தனன். அந் நற்புத்திரனும் பிதாவின் பாதத்தில் விழுந்து வணங்கித் தேரினின்று மிழிந்து அரண்மனை புகுந்து கொலுமுகத்தில் தனியே வீற்றிருக்கும் அந்தணராகிய கங்கபட்டர் பாதத்தில் சிரம்படத் தண்டனிட்டு அவர் வதனத்தை நோக்கினன்.

நோக்கின வளவில், அவரது திருநுதலில் ஓர் வடுவைக் கண்டான். கண்டதும் அவன் பதைக்க அவ்விரை

நோக்கி "அந்தணர் பெருமானே! தேவரீரது திருநெற்றியில் இவ்வடுச் செய்தவர் யாவர்?" என வினவினன். அதற்கு அவனது தந்தை விராடவேந்தன் முன் நிகழ்ந்தமையைக் கூறினன். அதுகேட்டு அப்புத்திரன் மனந்துடித்துத் தந்தையை நோக்கி "எந்தையே! இவரை யாரென்று கருதினீர். இப்பெருமானைப் போலும் பொறையில் மிக்கவர் இப்புவியிலுண்டோ? வேந்தர்க்கு வேந்தனாய் விளங்கும் வித்தகச் சிகாமணியன்றோ இவர்; இம் மன்னர் மன்னனுக்கு இப்பிழை இழைத்தலுங் கூடுமோ?" என்று அவர் பெருமையைக் கூறித் தந்தையின் அறியாச் செயலுக்காக நெருப்பில் விழுந்த புழுவென வருந்தினன்.

மைந்தன் அங்ஙனம் கூற, மன்னன் மணிமுடி நிலத்திற்பட அந்தணாளரது அடித்தாமரைகளை வணங்கி,

"செறுப்பது பெருமையன்று; சிறியவர் செய்த தீமை
பொறுப்பதே பெருமை" யென்று .....................

போற்றி மன்னிப்பு வேண்டினன். அவன் குமாரனும் அவன் பின் அப்பூசுரன் பாதம் பணிந்து, "அறியாமற் செய்த பிழையைப் பெரியோர் பொறுத்தருளல் வேண்டும்" என்று குறையிரந்து நின்றனன்.

பொறையிற் பூமியை நிகர்க்கும் புண்ணிய மூர்த்தியாகிய தரும பூபதி, சினமென்பதையே மனத்தில் எட்டுணையுங் கொள்ளாமல் அகமகிழ்வுடன் அவர்களை ஆசிர்வதித்து மேல் நிகழ்வன புரியும்படி யுரைத்தனர்.

அங்ஙனம் ஆசிர்வதிக்கப்பெற்ற உத்தர குமாரன் தனது தந்தையுடன் மற்றுஞ் சில பெரியோருடனும் அர்ஜ்ஜுனனிருக்கும் அந்தப்புரத்தை யடைந்து அவனிணைபடி

களில் முடிபட வணங்கினன். அன்னை சுதேட்டிணை அவ னைக் கண்டு, உள்ளம்பூரித்து ஆனந்தமேலிட்டு,

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன் மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

என்பதற் கிணங்க மகிழ்வடைந்து மகனை வாரி யெடுத்து முத்த மிட்டுப் பலபல ஆசி கூறினள்.

தாய் தந்தையரிருவரும் உத்தர குமாரனைப் பார்த் துப் பூரண சந்திரனைக் கண்ட ஆரணம் பொங்குமாறு போல உள்ளம் பொங்கிப் பூரித்து மகிழ்ந்திருக்கின்ற காலத்து, உத்தர நிரை மீட்சிக்காக இரத சாரதியாகச் சென்ற பிருகந்நளைப்பேடி, உத்தரை வைத்து விளையாடும் வண்டற்பாவைக்கெனப் பகைவரது சிரத்திலிருந்து பறித்த பட்டாடைகளை உத்தரை முன் போட்டுச் சுதேட்டிணை யின் பின்னே வந்து நின்றனள்.

பேடி வடிவந்தாங்கிய விஜயன் அங்ஙனம் நிற்க, உத் தர குமாரன் நீர் பூத்த நெருப்பைப் போல விளங்கும் விஜயனைச் சுட்டிக் காட்டி "இவரை யாரென்று நினைத்தீர்; உத்தர நிரை மீட்சியின் விஜயம் எவராலாயிற்று என்று கருதுகின்றீர்" என்று கூறிப் பெற்றோரைத் தனியிடத் திற்கு அழைத்துச்சென்று, தான் குருசேனையைக்கண்டு மெய்ந் நடுங்கித் தேர் விட்டிழிந்து விராட நகரத்தை நோக்கியதையும், பேடி வடிவம் பூண்ட விஜய சிகாமணி பின் தொடர்ந்தோடி வந்து தன்னைப் பற்றித் தைரியங் கூறிப் பழையபடி தேரிலமரச்செய்து போர்புரிய உரைத் ததையும், அதற்கு உடன் படாது தான் சாரதியாயிருக்கச் சம்மதித்ததையும், பின்பு பேடி, பேடிவடிவம் விட்டு விஜ

யனுப் விளங்கி வன்னிமரத்திற் பொதிந்து வைத்திருந்த வில்லேயும் அம்பருத்தூணியையும் எடுத்ததையும், அதற்குப் பின் அரவக் கொடியோன் கவர்ந்துசென்ற ஆநிரைகளே மீட்டதையும், அதன்பின் தன்னே வளேந்த தார்வேந்தரை யெல்லாம் புறமுதுகு காட்ட அடித்துக் கொற்றம் பெற்றதையும் பின்பு மோகனுஸ்திரத்தை விடுத்து அவர்களே மயங்கவைத்து அவர்களது தலேத்துணிகளேப் பறித்ததையும் முதலான வரலாறுகளே யெல்லாம் ஆதியோடந்தமாக ஒன்றுவிடாமற கூறித் தந்தையை நோக்கிப்பின்னும்

"எந்தையே! இப்பொழுதுநமது மனேயில் பேடிவடிவம் தாங்கிநிற்பவர் அடலாண்மைகொண்ட அருச்சுனனுகவேண்டும். தங்களேப் பிரியாது தங்களுக்கு உயிர் நட்பாயிருந்து அறமுரைக்கும் அந்தணுளர் தரும புத்திரராகவேண்டும். பூச்சூடுதலொழிந்த கூந்தல் விரித்த கொம்பனுள் பாஞ்சாலியாக வேண்டும். மற்போர் வல்லானேயும், மதிகெட்ட மைத்துனன் கீசகனேயுங் கொன்று மடைப்பள்ளியில் சமையற்றொழில் புரியும் பலாயனனே வீமனுகவேண்டும். அசுவசாலேத் தலேமைத் தானத்தை வகித்துவரும் தாமக்கிரந்திய நகுலனுகவேண்டும். ஆநிரைகளேக் காத்துவரும் கோபாலனுன தந்திர பாலனே சகாதேவனுகவேண்டும். இவர்கள தாம் பாண்டு மைந்தர்கள். இவர்கள் ஒரு வருட அஞ்ஞாதவாசத்தைத் தொலேப்பதற்காக இங்ஙனம் வேடம் பூண்டு, நம்மிடத்தில் சேவகம் புரிந்தார்கள். நேற்றே இவர்கள் அஞ்ஞாதவாசத் தவணேயும் ஒழிந்தது. இன்றுமுதல் இவர்கள், இரகசிய வாழ்க்கையைத் துறந்து வெளியாக வேண்டும். இவற்றை எல்லாம் விஜய சிகாமணியால் விவரமாயறிந்தேன். இது வரையில் நமக்கு

இவர்கள் பெருமை தெரியா திருந்ததல்லவா? நாம் இது காறும் இவர்களுக்கு ஏதேது பிழை செய்தோமோ? கோடாத நெறி யொழுகும் கோமான் தரும புத்திரருக்கு நீரோ மாறு வடிவுண்டாக்கினீர். மைத்துனன் கீசகனே மாசிலா மாதரசி பாஞ்சாலிக்குப் பங்கம் விளைக்க முயன்றனன். நானே விஜய சிகாமணியை வீரமிலாப் பேடியென இகழ்ந்துரைத்தேன். இவ்வாறு நாம் இழைத்த பிழைகள் எண்ணில. இவற்றிற்கு நாம் என் செய்வது?" என்றனன்.

இவ்வரலாற்றைக் கேட்ட விராடமன்னனும் அவன் தேவி சுதேட்டிணையும், புதைந்திருந்த பெரும் பொருள் குதித்து வெளிப்பட்டதைக் கண்டாற்போல ஆச்சரியத்துடன் "ஆ! ஆ!! பாண்டவர்களா இவர்கள்? பாஞ்சாலியா இப்பணிப் பெண்? ஓ! ஓ!! ஆண்டவனே" என்று கூறிக் கொண்டு மண்ணிற் சாய்ந்து மதிகலங்கி யிருந்தனர்.

அங்ஙனம் மதிகலங்கிய அன்னையையும், பிதாவையும் உத்தர குமாரன் வாரியெடுத்து தண்ணிய வாசனை நீர் தெளித்து, மதிக்கலக்கத்தை மாற்றி அவர்களைப் பார்த்து "எனது அன்புள்ள பெற்றோரே! நாம் இப்பொழுது இறந்த காலத்தில் நடந்தவற்றைக் குறித்து வருந்துவதில் யாது பயனுமில்லை. நாம் செய்த எல்லாக் குற்றங்களையும் மாற்றி நம்மீது அவர்கள் மனம் மகிழுமாறு செய்வதற்கு எது காரியமோ அதை நாடவேண்டும்" என்றான்.

பெற்றோர்:—"எங்கள் அரிய செல்வ! அவர்கள் மனம் மகிழ நாம் யாது செய்ய வல்லோம். எண்ணிய எண்ணி யாங்கடையும் திண்ணிய வலியாருக்கு நாம் கொடுத்துக்

களிக்கச் செய்யும் கனத்த பொருள் யாதிருக்கிறது? அவர்கள் எதனுற்களியுறுவர். நீ அறிந்திருப்பையானுல் அதைத் தெரிவி. இப்பொழுதே அங்ஙனம் செய்வோம்'' என்ருர்.

உத்தரகுமாரன்:—“இருமுதுகுரவரே! அவர்களைக் களிக்கச் செய்ய ஒரு பொருள் நம்மிடத்தில் உளது. அதைக் கொடுத்து அவர்களைத் திருப்தி செய்யலாம். அது என்ன என்பீர்களாயின். அம்பிகாபதி அருள் பெற்றவனும், தும்புரு நாரதர் முதலியோர் போற்றும் இந்திரனுல் புகழப்பெற்றவனும், சுந்தர மன்மத வேளைப் போன்ற அழகுடையவனுமான அருச்சுனனுக்கு எனது அன்புள்ள அரிய தங்கை உத்தரை என்னும் கன்னிகாரத்தினத்தைப் பாணிக்கிரகணஞ் செய்து கொடுப்பதேயாகும். இங்ஙனம் செய்தால் நாம் தெரிந்தும் தெரியாமலும் செய்த எல்லாப் பிழைகளும் தேனிற் கலந்த முக்கனியென இழைந்து இன்பத்தைக் கொடுக்கும்'' என்ருன்.

பெற்ருேர்:—“அருமந்த மகனே! அவ்வாறே செய்வோம். சமயத்தில் தக்கது ஆராயந்து சொன்னுய். இச் சம்பந்தம் நமக்கு மிகப் பெருமையைத் தருவதாகும். பொழுது புலர்ந்ததும் அங்ஙனமே செய்வோம்'' என்ருர்.

இது இங்ஙனம் நிற்கப் பாண்டவர்களும் பாஞ்சாலியும் ஒருங்கு கூடி விராட நகரத்துப் புறமாயுள்ள ஒரு சோலையையடைந்து கூடுவிட்டுக் கூடு பாய்கிறவர்கள் போலத் தாங்கள் கொண்ட வேற்று வடிவத்தை மாற்றிப் பழைய வடிவங்கொண்டு அறக் கடவுளைத் துதித்துப் பிரகாசமான அருணேதயத்தை எதிர் பார்த்துக்கொண்டிருந்தனர்.

## அத்தியாயம் 19.

### விராட நகரத்தின் இரகசியம் வெளியாதல்.

**வி**ராட நகரத்தின் இரகசியத்தை வெளியாக்குபவன் போல, விண்ணிலே தனது எண்ணிலாக் கிரணத்தைத் தகதகவென விரித்துக்கொண்டு சூரியன் குணதிக்கில் உதயமானன்.

அங்ஙனம் ஆதவன் உதயமானதும், பாண்டவர்கள் ஐவரும் பாஞ்சாலியும் தாங்கள் தங்கிய பொழிலைச் சேர்ந்த பொய்கையில் நீராடி நித்திய விதிகளை முடித்துத் தங்கள் குல குருவாகிய வேத வியாசரையும் வேற்று வடிவந் தாங்குவதற்கு நல்வரந் தந்த தரும தேவனையும் வணங்கித் துதித்து அறுவரும் ஓரிடத்திலமர்ந்தார்கள்.

அப்பொழுது அருச்சுனன், தனது அருமந்த அண்ணனாகிய தருமபூபதி, 'விராட வேந்தனிடத்திலடங்கி ஒருவருடம் இருந்துவந்தாரே, அதுகாலையில் அவரது மேனி வாடிற்றேவென்றும், ஒரு வருடகாலமாய் அண்ணனைக் கண்ணாரக்காண முடியாமற் போயிற்றே' என்றும் தருமபுத்திரரை உச்சிமுதல் உள்ளங்கால் வரை அவாவோடு நோக்கினன். அங்ஙனம் நோக்கும்பொழுது, அவரது நெற்றியில் சிந்தூரத்திலகம் போன்றிருந்த சிவந்த புண்ணைக்கண்டு திடுக்கிட்டு "அண்ணா! தேவரீருடைய திரு நுதலில் இப்புண்ணுண்டாக்கியவர்? யாவர்?"எனப் பரபரப்புடன கேட்டனன. தருமபுத்திரர் அக்கேள்விக்கு விடையொன்றும்பகராமல்புன்முறுவல்பூத்தபோது, பாஞ்சாலி"இது விராடவேந்தனுக்கும் நமது தருமபூபதிக்

கும் நேர்ந்த வாக்குவாதத்தாலுண்டாயது'' என்று விரைந்துகேட்ட பார்த்தனுக்கு விடைபகர்ந்தனள்.

அம்மொழி காதில் நுழையப்பெற்ற அருச்சுனன் நெடுமூச்செறிந்து அண்ணனைப்பரிந்து நோக்கி "அண்ணா! ஒரு வருடம் உம்மைப் பிரிந்திருந்ததனாலல்லவோ இத்தீங்கு உமக்கு நேர்ந்தது. ஆயினு மென்ன, இப்பொழுதே அம்மச்சநாடன் தலையை வாங்கிவைக்கின்றேன்'' என்றுநச்சரவம்போற் சீறி யெழுந்தனன். அவன் பின்னே, கனலுடன் காற்றுச் சேர்ந்தாற்போல வீமன் எழுந்து, "விராட வேந்தனுக்கு இச்சையான குலத்துடன் இப்பொழுதே நான் பச்சடி செய்கின்றேன்'' எனப் பதறித் தொடர்ந்தனன். நகுல சகாதேவரிருவரும் "விராட வேந்தன் விநாசத்தையா தேடிக்கொண்டான்'' என மெய்ம்மறந்து நின்றனர்.

சகோதரர் நால்வரும் தனது நெற்றியில் வடுச்செய்த விராட வேந்தன்மீது சினந்தெழுந்ததைக் கண்டு தருமபுத்திரர் "சகோதரர்காள்! பொறுமை கொள்ளுங்கள்! பொறுமை கொள்ளுங்கள்!! பொறுமை கடலினும் பெரிது என்றுகூறித் தமது திருத்தாமரைபோன்ற கையாலமர்த்தி,

ஒன்றுதவி செய்யினும் அவ்வுதவி மறவாமல்
பின்றையவர் செய்பிழை பொறுத்திடுவர் பெரியோர்
நன்றிபல வாகவொரு நவைபுரிவ ரேனும்
கன்றிடுவ தன்றிமுது கயவர் வினையாரே.

என்றபடி ஒருவன் ஓர் உதவி செய்து அதற்குப்பின் அவன் அநேகபிழைகளைச் செய்தாலும் பெரியோராயுள்ளோர் பொறுத்துக்கொள்வரேயன்றி, அவன் வெறுப்பன செய்யார். கீழ்மக்களோ வெனில் ஒருவன் பல நன்மைகள் செய்து பிறகு ஓர் சிறிய குற்றம் தவறிச் செய்வானானால்

அதையே பற்றுக்கோடாகப்பற்றி அவனைப்பகைத்து அவனுக்குப்பல தீங்கியற்றுவர். இதை நாம் பின்பற்றிப் பல நன்மைகள் செய்த மச்ச நாட்டுப் பார்த்திபனுக்குத் தீங்கிழைத்தல் நீதியாமா? செய் நன்றி மறக்கலாமா?

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் ; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

என்பது நீதியாதலின், இத்தகைய பாவகாரியத்திற் பிரவேசிப்பது பொருத்தமுடையதாமா? நீங்கள் முன்னம் அஞ்ஞாத வாசத்தைக் கழிப்பதற்காக எடுத்துச் சொன்ன நாடுகளில் மச்சநாட்டையும் அதையாளும் மன்னனையுமல்லவோ சிறப்பித்துக் கூறினீர்கள். நீங்கள் சிறப்பித்துக்கூறியதற் கிணங்கவே அந்நாடும், அந்நாட்டின் அரசனது குணமும் மிகச் சிறந்ததாகவே இருந்தது. இவ்வொருவருடத்தையும் நமது சொந்த நாட்டில் அனுபவிக்கும் சுகத்தைப் போலவே சகல சுகத்தையும் பெற்று இன்புற்றிருந்தோம். அம்மன்னனும் நம்மைத் தன்னைப்போலவே பரிந்து காத்து வந்தான். கடைசியில் எனது தீவினையின் காரணத்தினால் அவன்கையால் வடுப்பட நேர்ந்தது. அது அவன் மீது குற்றமின்று. அவ்வடுவும் அவன வேண்டுமென்று செய்ததல்ல. அன்றியும் அவன் தான் செய்தது குற்றமென்று எத்துணை வருத்தப்பட்டான் என்பதை நீங்கள் அறிவீர்களோ? தன் குற்ற முணரும் அப்பெருந்தகையானது தலையை வாங்குகிறேமென்று எழுந்தது பாவம்! பாவம்!!" எனக் கூறி, அவர்களிடையே புகைந்தெழுந்த சினத்தீயைத் தரும வுரையென்னும் தண்ணீரால் அறவவித்தார்.

முன்னவன் எடுத்துக் கூறிய முதுமொழியால் சீற்றங் கண்ட இளையவர் நால்வரும் சாந்தம் மேற்கொண்டு, படங் கரந்த நாகம்போல் அடங்கி நின்றனர்.

அங்ஙனம் அவர்கள் சினம் மாறியதும் தருமபுத்திரர் அவர்களை அழைத்துக்கொண்டு விராடநகரத்து வேந்தனது கொலுமண்டபத்தில் நுழைந்து, ஐந்து இந்திரர்கள் ஓர் இந்திராணியுடன் அமர்ந்திருப்பது போல் அங்கேயமர்ந்து விராடவேந்தனுக்குச் செய்தியனுப்பினர்.

விராடவேந்தன் அச் செய்திகேட்டு, "நாம் செய்த பிழையால் நமக்கு என்னவருமோ? ஏதுவருமோ' என்ற கவலையுள்ள சிந்தையனாய் மிகுந்தபொருள்களைத் திறையாக வும் மற்றும் பல பொருள்களை வரிசையாகவுங்கொண்டு சகலவித மரியாதைகளுடனும் பல பெரியோர்களுடனும் ஆங்குச்சென்று, தருமபுத்திரரைக்கண்டு தந்தையும் தனய னும் அவர் பாதத்தில் விழுந்து வணங்கினர். அங்ஙனம் வணங்கிய விராடர்கோனைத் தருமபூபதி உடனெழுந்து எடுத்துத் தழுவிக்கொண்டு ஆசீர்வசனம்கூறி, தனதுபக்கத் தேயிருத்தி "உன்னைப்போல் புகழ்படைத்தார் இவ்வுலகில் எவரேனும் உண்டோ?" என அவனைப் புகழ்ந்து பேசினர். அதற்கு அவன், இப்புவியில் பொறையுடையவர்க்கன்றி மற் றோர்க்கும் புகழுண்டோ?" என அவருக்குப் பதிலுரைத் துத் தான் அறியாமற் செய்த பிழைகளைப் பொறுத்தரு ளும்படி மீண்டும் வேண்டி நின்றனன்.

அங்ஙனம் வேண்டும் விராடமன்னனைப்பார்த்து தரும பூபதி "மச்சவளநாட! நாங்கள் காட்டைவிட்டகன்று இந் நாட்டிற் புகுந்து இத்திருநகரத்தில் எய்தியதும், எங்களுக்கு

எவ்விதத்துன்பமும் ஏற்படவில்லை; நாங்கள் இந்நகரை எங்களுடையநகரே எனப்பாவித்து நெடுநாள் வசித்தோம்; உம்மையே எங்கள் உற்றாரும் பெற்றாரும் எனக்கொண்டோம். உம்மிலும் உயர்ந்த உற்றாரை நாங்கள் வேறு எவரையுங் கண்டிலோம். நாங்கள் இவ்வொருவருடமும் உமது அரிய உதவி பெற்று இன்புற்றோம். இன்னமும் நீரும், உமது புதல்வரும், படைகளும் சேர்ந்து எங்களுக்குத் துணைபுரிந்தால், வஞ்சச்சூதால் வெற்றிபெற்று வனத்திற்கு ஓட்டிய அரவக் கொடியோனை வென்று நாங்கள் இழந்த வாழ்வைப் பெறுவோம்'' என்றார். விராடன் அம்மொழிகேட்டு, 'இப்பெருந் தகையாளர் இங்ஙனம் நம்மைப்புகழ்ந்ததுமன்றி நமது உதவியையுங் கோருகின்றனரே' என்று மகிழ்ந்தான்.

அப்பொழுது உத்தரகுமாரன், 'இதுதான் நமது விழைவை நிறைவேற்றிக் கொள்ளத் தக்க சமயமெனக் கொண்டு, தருமபுத்திரரைப்பார்த்து, "அண்ணலே! இந்நாடும் தேவரீருடையதே; நாங்களும் தேவரீருடைய ஏவலாளர்களே; இந்நாட்டுக்குரிய நால்வகைப்படைகளும் தங்களுடையனவே, இவையல்லாமலும் என தருமைச்சகோதரி உத்தரையும் அருச்சுனருக்கு உரியவளே'' என்றான்.

அருச்சுனன், உத்தரகுமாரன் அன்பொடு மொழிந்த வாக்கியத்தைக்கேட்டு, "ஆ! ஆ!! உத்தரகுமாரா அங்ஙனம் மொழியாதே. நான் உத்தரைக்குச் சிலநாள் ஆசிரியனாயிருந்தும் பரதநாட்டியத்தைக் கற்பித்தும் இருக்கிறேன்; அதனால் உத்தரை எனக்கு மாணவியாக வேண்டும். ஆதலால் நீ கொண்டிருக்கும் இவ்வெண்ணத்தை மாற்றிக்

கொள்; உனக்கு எங்கள் சம்பந்தத்தில் கலக்க, மிகுதியும் விருப்ப மிருக்குமேல் எனது குமாரன் அபிமன்னுவுக்கு உனது தங்கையைக்கொடு; இது சம்மதம்'' என்றுகூறினன்.

அதைக்கேட்ட அரசரும் அந்தணரும் "அதுவேதான் சரி! அதுவேதான் சரி!!" என ஒருமனதாய் மொழிந்தனர். அதற்குமேல் விராடமன்னன், மங்கல முரசை நகரெங்கும் முழக்குவித்து உத்தரகுமாரத்திக்கும் வித்தக விஜயசிகாமணி புத்திரன் அபிமன்னுவுக்கும் விவாகமென ஏவலாளரைக்கொண்டு அறிவிக்கச் செய்தனன். பல தேயத்து மன்னர்களுக்கும்' 'பாண்டவர்கள் விராடநகரில் உறைகின்றார்கள்; பாண்டவரில் பார்த்தன் புதல்வனை அபிமன்னுவுக்கும் எனது குமாரத்தி உத்தரைக்கும் விவாகம். இஷ்டமித்திர பந்துக்களோடு யாவரும் விஜயஞ்செய்து தம் பதிகளை ஆசீர்வதிப்பீர்களாக'' வென ஒரு முகூர்த்த நாளைக் குறிப்பிட்டுத் திருமணவோலை போக்கினன்.

---

## அத்தியாயம் 20.

### உத்தரை திருமணம்.

திருமண வோலை எடுத்துச் சென்ற தூதர்கள் துவாரகை முதல் பல தேயங்களுக்குஞ் சென்று ஓலை கொடுத்து விராடநகரத்திற்கு மீண்டனர்.

துவரைப்பதியோரான ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி திருமண வோலை கண்டதும், தனது அன்பர்களான பாண்டவர்கள் கஷ்டத்தோடு கழிக்க வேண்டிய பதின்மூன்று வருடங்களையும் கழித்து வெளித்தோன்றியதற்கும், தனது சகோதரி புதல்வன் அபிமன்னுவுக்கு விவாகம் நிச்சயமானதற்கும்

பேருவகைக் கடலுளாழ்ந்தார். இச்சுபசெய்தியைத் தனது தமையனுரான பலராமருக்கும், மற்றும் உறவினர்க்கும் தெரிவித்துச் சந்தோஷங் கொண்டாடினுர். பின்பு அப் பெருமான் பந்து மித்திரர்களை உடனழைத்துக்கொண்டு விராட நகரத்திற்குப் பிரயாண மானுர்.

கண்ணபிரான் பரிவாரங்களுடன் காடுமலை கான்யாறு முதலியவைகளைக் கடந்து விராடநகரத்தின் எல்லைப் புறம் வந்து நண்ணினுர். அப்பெருமான் அங்ஙனம் வருதலை ஒற்றர்களால் கேள்வியுற்ற பாண்டவர்களும் விராடமன்னனும், அவனது பரிஜனங்களும் எதிர் சென்று கடவுளைக் கண்டாங்குக் கண்ணபிரானைக் கண்டு வணங்கி நல்வரவு கூறி அரண்மனைக்கு அழைத்து வந்தனர்.

அவர் விராடன் மனையிற் புகுந்து அணிமண்டபத்திலமர்ந்ததும், அவரோடு வந்த அருச்சுனனது குமாரன் அபிமன்னு பாண்டவர் அடிகளிலும், விராடமன்னன் புத்திரன் சிவேதன் என்பவன் விராடன் பாதங்களிலும் விழுந்து நமஸ்கரித்தார்கள். பாண்டவர்கள் தங்கள் குமாரனை வாரி எடுத்து மார்புறத்தழுவி உச்சி மோந்து முத்தமிட்டுக்களித்தனர். விராடனும் தன்னை நெடுநாள் விட்டுப் பிரிந்து பின்பு வந்து கூடிய தனது புத்திரன் சிவேதனைக் கட்டியணைத்து முத்தமிட்டு ஆனந்தித்தனன்.

அங்ஙனம் ஆனந்தித்த விராடமன்னன் கண்ணபிரானைப் பார்த்து, "எம்பெருமானே! எனது அன்புள்ள இக்குமாரன் தேவரீரோடு எப்பொழுது சேர்ந்தான்? இவனை எப்பொழுது கண்டீர்கள்? இவன் இத்தனை நாட்களாக எங்கிருந்தான்? தேவரீர் அறிவீராகில் தெரிவிக்கப் பிரார்த்திக்கிறேன்" என்று கேட்டுக்கொண்டான்.

அதற்குக் கண்ணபிரான், "விராட பூபதி! நினது செல்வன், இமயமலைச் சாரலிற்றங்கி அமராபரணனை அகத்தியிருத்தி அருந்தவங் கிடந்து அவனருளால் அருந்திறற் படைகளைப் பெற்றுப் பெருமை யடைந்தான். இவன் இத்தகைய சித்திபெற்றதை யானறிந்து, எனது நகரத்திற்கு அழைத்து வந்து எனக்குப்பகைவராயிருந்தோரை யெல்லாம் இவன் சகாயத்தா லொழித்தேன். எனக்குற்ற பகைவர் ஒழிந்த பின் இவனை என் மனையிலேயே இருத்தி நல் விருந்து செய்து உபசரித்து வந்தேன். இங்ஙனமிருக்கின்ற போது உமது திருமண வோலை என் கையிற் கிடைத்தது. அதனை இவனுக்குக் காட்டி இவனையும் என்னுடன் அழைத்து வந்தேன்" என்றார்.

விராடன் தனது புத்திரன் வரலாறு கேட்டு மகிழ்ந்து, அவனைப்பார்த்து, "எனது அருந்தவக்குமர ! உன்னை நெடும் பகல் விட்டுப்பிரிந்து, நீ எங்குற்றனையோ? என்செய்கிறாயோ என்று கவலையுற்றிருந்தேன். அக்கவலையை இப்பொழுது ஒழித்து நீ மகிழ்ச்சியைத் தந்தனை. இம்மகிழ்ச்சியோடு பெற்றோர் பெரிதுவக்குமாறு சற்புத்திரனுமானாய். "மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை என் நோற்றான் கொல் லெனுஞ் சொல்" என்னும் இசையையும் உனது கடமை தவறாமல் எங்களுக்கு வாங்கிக் கொடுத்தனை" என்று புகழ்ந்து கூறி மகிழ்ந்தனன். சுதேட்டிணையும் அவ்வாறே கூறி மகிழ்ந்தாள். சிவேதனுடைய சகோதரர்கள், சகோதரவாஞ்சை மேலீட்டினால் அவனைப் பல காலும் புல்லி, அவன் சென்ற தேசங்களையும் தவஞ் செய்த வரலாற்றையுங் கேட்டுக்கேட்டு மகிழ்வடைந்தனர்.

அதன் பின்பு விராடமன்னனும் சுதேட்டிணையும் தங்கள் புத்திரிக்கு மிகப் பொருத்தமாய் நேர்ந்த மாப்பிள்ளை அபிமன்னுவைக் கண்டு அகங்களித்தனர்.

அவர்கள் அங்ஙனம் களிகொண்டிருக்கும் பொழுது, பாஞ்சாலதேசத்துப் பார்த்திபனும் இளம்பஞ்சபாண்டவர்களும், திருட்டத்துய்மனும், நால்வகைப் படைகளும், விராடநகரத்தை வந்து அடைந்தனர். பாண்டவர்களும் விராடமன்னனும் அவர்களை எதிர் சென்று கண்டு, சபா மண்டபத்திற்கு அழைத்துவந்து ஒருவரையொருவர் தழுவி க்ஷேமம் வினவி அவரவர் ஆசனத்தில் அமர்ந்திருந்தனர்.

அதற்குப்பின், குந்திபோஜகுல அரசரும், மந்திரதேசத்து மன்னரும், மகததேசத்து வேந்தரும், சேரசோழ பாண்டியரும் மற்றும் பலதேசத்துப் பார்த்திபரும் பந்துமித்திரவர்க்கங்களுடனும் நால்வகைப் படைகளுடனும் விராட நகரை வந்து நண்ணினர்கள். அவர்களை எல்லாம் விராட நகரத்து வேந்தனும் பாண்டவரும் அவ்வவ் வேந்தருக்குத் தக்கபடி எதிர்சென்று கண்டு முகமன் கூறி, சபாமண்டபத்திற்கு அழைத்துவந்து ஆசனமளித்து உபசரித்தார்கள்.

அவ்வேந்த ரெல்லோரும் பாண்டவரைக் கண்டு அளவளாவிக் கொண்டு "அன்பர்களே! நீங்கள் நெடுநாள் காட்டிலிருந்து கஷ்டத்தை அனுபவித்தீர்கள். உங்கள் வினை இருந்தவாறுதான் என்னே" என்று கூறி வருந்தினர்கள்.

அவர்களெல்லோரையும் தருமபூபதி அன்புடன்நோக்கி, 'அன்புகனிந்த அரசர்களே! வினையாரை விட்டது; வினைப் பயனை வெல்வதற்கு வேத முதலாம் அனைத்து நூலகத்

தும் இல்லை அன்றோ? நாங்கள் அதனைக்கடப்பதெங்ஙனம்? இனிச்சென்றவைகளைக் குறித்துப் பேசுவதில் யாது பயன்? நாங்கள் அருங்கானில் பட்ட துன்பமெல்லாம் அருளுடை மனத்தனான இவ்விராடவேந்தனது நகரத்தையடைந்ததும் ஒழிந்தன. இந்நாட்டில் நாங்கள் தங்கி இன்புற்றோம்.

ஆயினும், இன்னிசை எழுப்பி அசுணப்புட்களை இன்ப சாகரத்திலாழ்த்திப் பின்பு கர்ண கடூரமான பறை முழக்கி அவற்றைக் கையகப்படுத்தும் வேடர்போல, எங்கள்மூத்த பிதா ஆசைமொழிகூறி எங்களை அழைத்துப்பின்பு துரியோதனன் சூழ்ச்சியால் சூதாட்டம்வைத்து எங்களை யகப்படுத்திக் கானகமோட்டிய அவ்வஞ்சகரைவெல்லாமுன்னம்நாங்கள் பூர்ண இன்பம் பெறுவதெங்ஙனம்? உங்கள் அருள் இருக்குமேல் அப்பூர்ண இன்பத்தைப் பெற்றவராவோம். எங்கள் பூர்ண இன்பம் உங்கள் துணைபலத்திலிருக்கிறது'' என்று எல்லோரும் தங்களுக்குத் துணைபுரிய வேண்டுமென்று இதவசனங்களால் கேட்டுக்கொண்டார்.

அவர்களெல்லோரும், அப்போதே பதைபதைத்தெழுந்து ''இப்பொழுதே புறப்படுங்கள், அவ்வஞ்சக நச்சரவக்கொடியோனை நாசஞ்செய்து வருவோம்'' என்றனர்.

அப்பொழுது விராடர்கோன், பாண்டவர் சகாயத்தர்களாய்ப் பதைபதைத்தெழுந்த பார்த்திபரெல்லோரையும் நோக்கிக் கையமர்த்தி ''மணிமுடி மன்னர்களே! சற்றுப் பொறுமைகொள்ளுங்கள். அரவக்கொடியோனிடம் சண்டையிட்டு வளமுள்ள குருநாட்டைஉங்கள்அன்பர்களாகிய பாண்டவர்களுக்கு வாங்கிக் கொடுக்கலாம். நானும் நால்

வக்ைப் படைகளுடன்வந்து உங்களுடன் கலந்து அதற்குத் துணைபுரிகின்றேன். இப்பொழுது, உலக நாயகராய் விளங்கும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக்கு மருமகனாக வாய்ந்த அபிமன்னுவாகிய நற்குமரனே எனக்கும் மருமகனாகவாய்க்கும் நலத்தைப் பெறப்போகின்றேன். எனது அருந்தவச்செல்வி உத்தரையை அருச்சுனனது அருந்தவச் செல்வனான அபிமன்னுவுக்கு விவாகஞ் செய்து கொடுக்க விரும்பியுள்ளேன். நீங்களெல்லோரும் எனது இவ்விருப்பத்தை அங்கீகரித்து இத்தம்பதிகளின் திருமணவிழாவையும் இனிதிருந்து நடாத்தி இன்புற்றபின் நாமெல்லோரும் ஒன்றாய்த் திரண்டு பகைவன் மீது செல்லலாம்" எனக்கூறி வேண்டினன்.

அச்சுப செய்தியைக் கேட்டுக் கண்ணபிரானும், பலதேசத்துக்காவலரும் "மங்களம்! மங்களம்!! இச்சுபகாரியமே முன் செய்யத்தக்கதெனச் சம்மதித்து அதனை நடத்துதற்கு வேண்டிய காரியாதிகளில் முற்பட்டனர்.

அதுகாலே, பாண்டவரிடம் அருங்கானில் செலவு பெற்றுச் சென்ற அந்தணர் பன்னீராயிரவரும், புரோகிதர் தௌமியரும் ஆண்டு வந்து சேர்ந்தனர். அவர்களெல்லோரையும் பாண்டவர்கள் வணங்கித்துதித்து அவரவர்களுக்குத்தக்கவாறு விடுதியமைத்து இருக்கச் செய்தனர்.

அதன்பின்பு பாண்டவர்கள் விராடமன்னனால் தங்கள் வாசத்திற்கு என்று ஏற்படுத்தப்பட்ட வளம் பொருந்திய உபப்லாவியம் என்னும் நகரத்திற் குடிபுகுந்து அபிமன்னனது மணவிழாவின் நாளை எதிர்பார்த்திருந்தனர்.

மணவிழா நாளும் வந்தது. விராடநகரம் விண்ணுலகத்தில் விளங்கும் பொன்னுலகத்தையும் பின்னிடும் படி நல்லெழில் பெற்று விளங்கியது; நராதிபர்கள் விண்ணின் நாண்மீன்களெனக் குழுமினர்; வேதிய வித்தகர்கள் கணக்கிடவும் முடியாதபடி வந்து செறிந்தனர்; நாட்டுக் குடிகள் கூட்டங்கூட்டமாய் எண்ணிலடங்காதவராய் வந்து சேர்ந்தனர்; பலவகை மங்கல வாத்தியங்கள் தாம் தாமென முழங்கிற்று; மணப்பந்தலில் மாப்பிள்ளையும் மணப்பெண்ணும் வந்து அமர்ந்தனர்; வேதியர் விதிப்படி மந்திரங்களைப்படித்து அக்கினிக் கடவுளை எழுந்தருளும்படி செய்தனர். முறையே அந்தணர்கள் ஓமாக்கினிமுன் ஓதுவனவெல்லாம் ஓதித் திக்குப் பாலகரையும் மற்றும் தேவதைகளையும் இத்தம்பதிகள் முன் சாட்சியாக வைத்தனர். அத்தேவர்கள் முன்னிலையில் விராடமன்னன் தாரை வார்த்துத் தனது புத்திரியைக் கொடுக்கவும், அபிமன்னு, 'வாழ்விலும் தாழ்விலும் உன்னைப்பிரியாது காக்கின்றேன்' என்று வாக்குத் தத்தஞ்செய்து' உத்தரகுமாரத்தியின் கையைப்பற்றி மாங்கல்ய தாரணஞ் செய்யவும், மன்னரும் மற்றோரும் ஆசி கூறவும் மணவினை இனிது நிறைவேறியது.

திருமணம் இவ்வாறு சிறக்க முடிந்ததும், பாண்டவர்கள் அஞ்ஞாத வாசத்திற்கு முன்னர் வன்னி மரத்தில் பொதிந்து வைத்த கொற்றப் படைகள் யாவற்றையும் கைக்கொண்டு, விராடமன்னன் தங்கள் வாசத்திற்கென்று தந்த உபலாவியம் என்னும் நகரத்திலேயே மாயனுடனும், மற்று மன்னருடனும், தங்கள் குமாரர்களுடனும் புகுந்தனர்.

அங்ஙனம் புகுந்த அறநெறிவழுவாத பாண்டவர்கள் பரந்தாமனையும் பல தேசத்துப் பார்வேந்தரையும் பெரியோரையும் சபைகூட்டித் தாங்கள் இழந்த வளநாட்டையும் வாழ்வையும் பெறுமாறு எவ்வாறென ஆராயலுற்றார்.

"பாண்டவர்கள் யாதாமொரு தீங்குமின்றி அஞ்ஞாதவாசத்தைக் கழித்து வந்தாலும் அவர்கள் இருப்பதற்குங்கூட ஓரில்லுங் கொடுக்கத் துரியோதனன் சம்மதமில்லாதவனாயிருக்கிறான் என்று அறக்கடவுளே ஓர் வடிவெடுத்தாற்போன்ற தருமநந்தனர் அறிந்தபின்னருங்கூட எவ்விதத்தும்போரென்பதின்றி நாடுபெறுதற்கேற்ற வழிசெய்வதே நலமென்று கருதினாராகவே, அக்கருத்து முற்றும் கண்ணபிரானிடத்தும் குழுமியுள்ள மற்றை யரசர்களிடத்துங் கழறி, அதற்கு வேண்டிய பல இதவழிகளில் துரியோதனனைத்திருத்துமாறு செய்விக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். காகுத்தப் பிரானும் 'கூடுமானவரை அங்ஙனமே முயற்சிப்போம்' என்று சபையாரோடு கலந்து பேசி, மேல் நிகழ்த்துவன வற்றைப்பற்றி ஆராயப் புகுந்தனர்.

## வெண்பா.

நாடுகோடே னென்றுசமா நாடுதுரி யோதனனும்
கூடுபல வேந்தர்களுங் கூடவே—நீடுபுகழ்
பாண்டவர்கள் மீந்தார்கள் பார்முழுதும் நீதிபெற
ஆண்டவர்கள் மீந்தார்கள் ஆங்கு.

சுபம்! சுபம்!! சுபம்!!!